

EISSN 2456-5571

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 8 | SPECIAL ISSUE 1

SEPTEMBER 2024 | E-ISSN: 2456-5571

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

### தமிழ்த்துறை நடத்தும்

### தேசியக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

# தமிழர்களின் நீர் மேலாண்மையும் காடு போற்றலும்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் க. சிங்காரவேலு

முனைவர் நா. சிவகுரு

# BODHI

## International Journal of Research in Humanities, Arts and Science

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

Vol.8 Special Issue 1 September 2024 E-ISSN: 2456-5571

CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

**BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India

# சிறப்பிதழ் ஆசிரியர் குழு

**ஆலோசனை குழு**

**முனைவர் ப. பாமா**

தலைவர்(பொ), தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்லைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**முனைவர் மலை செந்தில்குமார்**

பேராசிரியர், தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**முனைவர் க ரவிச்சந்திரன்**

கவுரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**தொகுப்பாசிரியர்கள்**

**முனைவர் க. சிங்காரவேலு**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**முனைவர் நா. சிவகுரு**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

# வாழ்த்துரை

**‘நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு’ (திருக்குறள்-20)**

என்பது திருவள்ளுவரின் வாக்காகும். தமிழர்களின் நீர் மேலாண்மையும், அவர்கள் நீரைப் பாதுகாத்த விதமும் வருங்கால தலைமுறையினருக்கு வழிகாட்டுதலாகவே உள்ளன. நீரைச் சேமிப்பது ஒரு வகை என்றால் அதை சிக்கனமாக பயன்படுத்துவது மற்றொரு வகையாகும். நம் முன்னோர்கள் அரும்பாடுபட்டு சேமித்து வைத்த நீர்வளத்தை நாம் பராமரிக்க மறந்ததன் விளைவே இன்றைய நீர் பற்றாக்குறைக்கு காரணமாகும். நீர் வளம் பெருக மழை வளம் அதிகரிக்க வேண்டும். அதற்கு நாம் காட்டு வளங்களை பாதுகாப்பதும் அவசியமாகிறது. உழவுத் தொழிலிலும், மனித வாழ்வின் அனைத்துச் சடங்குகளிலும் நீரானது முக்கிய பங்கு வகிக்கின்றது. சங்க இலக்கியம், நீதி இலக்கியம் மற்றும் சித்தர் இலக்கியங்களில் நீர் குறித்த செய்திகள் காணப்படுவது போன்றே இக்கால இலக்கிய வகைகளான சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை ஆகியனவும் நீர் குறித்த பலதரப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. நீரின் மேன்மையையும், அதன் பல்வேறு வடிவங்களையும் அம்பையின் சிறுகதைகளின் வழியே அறிய முடிகிறது. ஒரு காலத்தில் வளமாகவும்,செழிப்போடும் ஓடிக் கொண்டிருந்த நீவாநதி என்ற பொன்னை ஆறு ஆந்திர அரசு கட்டிய அணையினாலும், தொழிற்சாலை கழிவுகளாலும் சிதைந்து போன நிலையையும், அப்பகுதி மக்களின் வாழ்வியலையும் விளக்குவதாக கவிப்பித்தன் அவர்கள் “நீவாநதி” என்ற நாவலை எழுதியுள்ளார். முனைவர் இறையன்பின் “இலக்கியத்தில் மேலாண்மை” என்ற நூலில் நீரின்றி அமையாது உலகு என்ற பகுதியானது தமிழர்களின் நீர் பண்பாட்டையும், பயன்பாட்டையும் விளக்குவதாக அமைந்துள்ளது. தமிழர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெயர்களை நீர்நிலைகளுக்கு சூட்டியிருந்தார்கள் என்பதையும், அக்காலத்தில் மழைநீரை எவ்வளவு நுட்பமாகச் சேமித்து வறண்ட காலங்களுக்கு பயன்படுத்தினார்கள் என்பதையும், இக்கருத்தரங்க நூல் வெளிப்படுத்துகிறது. கவிப்பேரரசு வைரமுத்துவின் “மகா கவிதை” என்னும் நூலானது நீர் மாசுபடுவதையும் மனித இனம் எதிர்கொள்ள இருக்கும் அவலங்களையும் சுட்டிக் காட்டுகிறது. இதுபோன்ற படைப்புகள் இயற்கை வளங்கள் குறித்த முக்கிய

பதிவாகவே காண முடிகிறது. இன்று நம் நாடு அறிவியல், தொழில்நுட்பங்களில் வளர்ச்சி அடைந்திருந்தாலும் இயற்கையை பாதுகாப்பதென்பது ஒவ்வொருவரின் கடமை என்பதும் இக்கருத்தரங்க ஆய்வுக் கோவையில் இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய சிறப்புமிக்க கருத்தரங்கினை திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் போதி பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் ஆய்விதழும் ஒருங்கிணைந்து நடத்துவது பாராட்டுக்குரியதாகும்.


வாழ்த்துகளுடன்,

**முனைவர் ப. பாமா**

தலைவர்(பொ)

தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்லைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

# நன்றியுரை

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று” (திருக்குறள்.11)**

எனும் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஐம்பூதங்களில் ஒன்றாக கருதப்படுவது நீர் ஆகும். அண்டத்திலுள்ளதே பிண்டம் என்பது சித்தர்களின் வாக்காகும். அண்டம் என்பது உலகத்தைக் குறிப்பதாகும். பிண்டம் என்பது மனித உடலைக் குறிப்பதாகும். உலகமானது முக்கால் பங்கு நீரும் கால் பங்கு நிலப்பகுதியையும் கொண்டுள்ளது. அதுபோல மனித உடலும் முக்கால் பங்கு நீராலும் கால் பங்கு தாதுக்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. நீர் இல்லையேல் உலகமானது வளம் பெறாது. உடலும் நீர் இல்லையேல் தூய்மை பெறாது. நீர் என்பது ஹைட்ரஜன் எனப்படும் மூலக்கூறும், ஆக்ஸிஜன் எனப்படும் மூலக்கூறும் இணைந்து உருவாகுவது நீராகும். நீரானது உடலுக்கு அமிழ்தம் போன்றதாகும். இனிமையைத் தருவதோடு உடலுக்கு வலிமையையும் தருகிறது. தமிழ்ப்பண்பாட்டில் முக்கிய கூறாக நீர் பயன்படுகிறது. நீரானது உண்ணும் உணவிற்கு உறுதுணையாக இருப்பது மட்டுமின்றி உடலுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்கும் பயன்படுகிறது. நீர் இல்லாவிட்டால் உலகம் இல்லை என்பதை உணர்த்த விரும்பிய திருவள்ளுவர்,

**“நீர்இன்றி அமையாது உலகு” (திருக்குறள்.20)**

**“தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்” (திருக்குறள்19)**

என்னும் திருக்குறள்களின் மூலம் நீரின் தன்மையை உலக மக்களுக்கு உணர்த்துகிறார். நீரை சேமித்து வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதை பட்டினப்பாலை குறிப்பிடுவதை,

**“குளம் தொட்டு வளம் பெருக்கி” (பட்டினப்பாலை.284)**

என்ற பாடலடிகள் உறுதி செய்கின்றன.

நீர்நிலைகள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணிகளுள் ஒன்றாகும். நீர்த்தேவையைப் பொறுத்து விவசாயம் செழிக்கும். நீர்நிலைகள் இல்லாத நாடு அழிவிற்கு வழிவகுக்கும் என்பதை,

**“ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” (நல்வழி.24)**

என வலியுறுத்துவதின் மூலம் நீரின் தேவையை அறிய முடிகிறது.

இவ்வாறு காலங்காலமாக நீரின் தேவையை புலவர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் தங்களது படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். நீர், நீரின் தேவை, நீர் சேமிப்பு, நீர் சேமிப்பதற்கான காரணங்கள், நீர் மாசுபாடு என்று அதன் கோணங்கள் விரிவடைந்து கொண்டே இருக்கிறது. நீர் வளம் பாதுகாப்பது இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்ல. நாளைய தலைமுறையினருக்கும் தேவையான ஒன்றாகும் என்பதை உணர்ந்து நீர்வளம் காக்க திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் போதி பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் ஆய்விதழும் இணைந்து நடத்தும் தமிழர்களின் நீர் மேலாண்மையும் காடு போற்றலும் என்னும் கருத்தரங்கிற்கு அனுமதி நல்கிய வள்ளுவன் வழி நடக்கும் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை த. ஆறுமுகம் ஐயா அவர்களுக்கும் சீர்மிகு செயலாற்றும் மதிப்பிற்குரிய பதிவாளர் செந்தில் வேல்முருகன் ஐயா அவர்களுக்கும் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ப. பாமா அவர்களுக்கும் மற்றும் பேராசிரியர்கள் முனைவர் ம. செந்தில்குமார் அவர்களுக்கும், முனைவர் நா. சிவகுரு அவர்களுக்கும், முனைவர் க. ரவிச்சந்திரன் அவர்களுக்கும் கட்டுரை வழங்கிய ஆய்வாளர்களுக்கும் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் முனைவர் க. ராஜ்குமார், இர. கீதா, இரா. பிரவீணா, ரா. டில்லிபாபு, கா. பிரியங்கா, வெ. சந்தியா, ம. சுகுணா ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியுடன்,


**முனைவர் க. சிங்காரவேலு**

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**முனைவர் நா. சிவகுரு**

இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**BODHI**
**INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 8** **Special Issue 1** **September 2024** **E-ISSN: 2456-5571**

**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research motivates all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view by assembling research groups and, consequently, projects, supporting publications with this inclination, and organizing programs. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through the quality of publications. The visibility of research is creating sustainable platforms for research and publication, such as a series of books, motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

## CONTENTS


| S.No. | Chapters | Page No. |
|---|---|---|
| 1 | சித்தர்கள் குறிப்பிடும் நீர் வகைகளும் - மருத்துவமும் **முனைவர் க. சிங்காரவேலு** | 1 |
| 2 | சங்க இலக்கியத்தில் நீரின் பயன்பாடுகள் **முனைவர் கோ. கவிதா** | 7 |
| 3 | சங்க இலக்கியத்தில் மழைநீர் **முனைவர் ஞா. சுஜாதா** | 12 |
| 4 | சமுதாயத்தில் நீர் பண்பாடு **முனைவர் மு. ரமேஷ்** | 18 |
| 5 | நீர் வள ஆதாரங்களும் திட்டங்களும் **முனைவர் க. சிங்காரவேலு & இர. கீதா** | 26 |
| 6 | ஊற்று நீர் மேலாண்மை: தமிழர் தொட்ட சுனைகள் **முனைவர் க. சிங்காரவேலு & இரா. பிரவீணா** | 30 |
| 7 | பழந்தமிழர் மருத்துவ முறைகளில் நீர் **முனைவர் மு. பாலமுருகன் & ச. சுந்தரேசன்** | 35 |
| 8 | குறுந்தொகையில் நீர் வளம் **கா. பிரியங்கா** | 44 |
| 9 | அம்பை சிறுகதைகளில் நீர் **வெ. சந்தியா** | 50 |
| 10 | பழந்தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை **இ. பிரியவதனா** | 58 |

| | | |
|---|---|---|
| 11 | மனித வாழ்வியலில் நீரின் செயல்பாடுகளும் முக்கியத்துவமும்<br>**முனைவர் இரா. சிவகுமார் & விஷ்ணு .வெ** | 64 |
| 12 | ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்து உணர்த்தும் வாழ்வியல்<br>**முனைவர் நா. சிவகுரு** | 71 |
| 13 | சங்கத்தமிழர் முல்லை நில வாழ்வியல்<br>**முனைவர் த. கார்த்திகேயன்** | 76 |
| 14 | நடந்தாய் வாழி காவிரி<br>**முனைவர் க. ரவிச்சந்திரன்** | 83 |
| 15 | சங்க சான்றோர்களின் ஆற்றுநீர் மேலாண்மை<br>**முனைவர் க. கோவிந்தராஜி** | 90 |
| 16 | சங்க இலக்கியத்தில் கடலலையின் பேரிடர் மேலாண்மை<br>**திருமதி போ. சித்ராதேவி** | 96 |
| 17 | சோழர் காலத்தில் நீர் மேலாண்மை<br>**கு. சரவணன்** | 101 |
| 18 | நீர்வழிப்படூஉம்<br>**நெறியாளர் முனைவர் க. சிங்காரவேலு & ஆய்வாளர் க. ராஜ்குமார்** | 108 |
| 19 | புறநானூற்றில் நீர் மேலாண்மையும் தொழில்நுட்பமும்<br>**ம. சுகுணா** | 114 |
| 20 | திருக்குறளில் நீரும் மரங்களும்<br>**வெ. சந்தியா** | 121 |
| 21 | திருக்குறளில் நீர் மற்றும் மரம்<br>**முனைவர் பீ. ரகமத்பீ** | 128 |
| 22 | இலக்கியங்களில் நீர் மேலாண்மை<br>**முனைவர். P. ஜெமிமா ஜெபசெல்வி** | 134 |
| 23 | நீர் மேலாண்மை<br>**தலைசால் கவிஞன் அரிமா முனைவர் ச. அய்யர்** | 137 |
| 24 | நான்மணிக்கடிகை காட்டும் நீர் மேலாண்மை<br>**ச. இனிதா** | 142 |
| 25 | தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை<br>**செ. தர்மசீலன்** | 148 |
| 26 | அகநானூற்றில் காட்டு வளம்<br>**நெறியாளர் முனைவர் ம. செந்தில்குமார் & ஆய்வாளர் சி. விஜயன்** | 154 |
| 27 | திருக்குறளில் குன்றி மணி மரமும் பனை மரமும்<br>**தா. சலீலா** | 160 |
| 28 | தமிழரின் தொழில்களும் சுற்றுப்புறச் சூழலும்<br>**முனைவர் ந. தர்மராஜ்** | 163 |
| 29 | திருக்குறளில் நீர் மற்றும் மரம்<br>**புலவர் சோணா மதியழகன்** | 168 |
| 30 | சோழர்களின் ஆட்சியில் நீர் மேலாண்மை<br>**கா. தாமரைச்செல்வி** | 175 |
| 31 | குறள் தரும் மழை<br>**முனைவர் சு. அந்தோணி செல்வகுமார்** | 180 |
| 32 | Water and Sanitary Practices in India for Sustainability<br>**Dr. S. Meenakshi** | 185 |

# சித்தர்கள் குறிப்பிடும் நீர் வகைகளும் - மருத்துவமும்

**முனைவர் க. சிங்காரவேலு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

ஐம்பூதங்களில் ஒன்றாக கருதப்படுவது நீர் ஆகும். அண்டத்திலுள்ளதே பிண்டம் என்பது சித்தர்களின் வாக்காகும். அண்டம் என்பது உலகத்தைக் குறிப்பதாகும். பிண்டம் என்பது மனித உடலைக் குறிப்பதாகும். உலகமானது முக்கால் பங்கு நீரும் கால் பங்கு நிலப்பகுதியையும் கொண்டுள்ளது. அதுபோல மனித உடலும் முக்கால் பங்கு நீராலும் கால் பங்கு தாதுக்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. நீர் இல்லையேல் உலகமானது வளம் பெறாது. உடலும் நீர் இல்லையேல் தூய்மை பெறாது. நீர் என்பது ஹைட்ரஜன் எனப்படும் மூலக்கூறையும், ஆக்ஸிஜன் எனப்படும் மூலக்கூறையும் இணைத்து உருவாகுவது ஆகும். நீரானது உடலுக்கு அமிழ்தம் போன்றதாகும். இனிமையைத் தருவதோடு உடலுக்கு வலிமையும் தருகிறது. தமிழ்ப் பண்பாட்டில் முக்கிய கூறாகவும் நீர் பயன்படுகிறது. நீரானது உண்ணும் உணவிற்கு உறுதுணையாக இருப்பது மட்டுமின்றி உடலுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்கும் பயன்படுகிறது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தமிழ் இலக்கியங்களில் நீர்

மனித உயிரினங்களுக்கு மட்டுமின்றி எல்லா உயிரினங்களுக்கும் இன்றியமையாததாக நீர் உள்ளது. நீரானது உயிர்களுக்கு அமிழ்தத்தைப் போன்றதாகும். நீர் இல்லாவிடில் உலகம் இல்லை என்பதையும்,

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"**
**(திருக்குறள்.11)**

**"நீர்இன்றி அமையாது உலகு" (திருக்குறள்20)**

**"தானம் தவம் இரண்டும் தங்காவியன் உலகம்"**
**(திருக்குறள்.19)**

எனவும், நீர் இல்லையெனில் தானம் தவம் இரண்டையும் மேற்கொள்ளவும் இயலாது எனக் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது. உணவு என்பது நீரையும் நிலத்தையும் அடிப்படையாகக் கொண்டது. நீர் தான் நிலத்தில் உணவை விளைவிக்கிறது. இவ்வாறே உடம்பும் உயிரும் உருவாகிறது என்பதை குடபுலவியனார் குறிப்பிடுவதன் மூலம்,

**"நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே"**
**(புறம்.18.22-23)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். நீர் சேமித்து வைப்பதன் மூலமே நாட்டின் வளத்தைப் பெருக்க முடியும் என்பதை,

**"காடுகொன்று நாடாக்கி**
**குளம் தொட்டு வளம் பெருக்கி"**

**(பட்டினப்பாலை.284)**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம். நீர் நிலைகள் ஊருக்கு அழகைச் சேர்ப்பதுமின்றி வளத்தையும் பெருக்கக் கூடியது. அரசனின் நிலையையும் உயர்த்தக் கூடியது என்பதை,

**"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்"**

**(நல்வழி.24.)**

**"குளங்கொட்டுகோடுபதித்துவழிசீத்து"**

**(சிறுபஞ்சமூலம்.)**

**"நீர் உயர நெல் உயரும்"**

**(நல்வழி.2.)**

என்ற பாடலடிகள் மூலம் நீரின் சிறப்பை அறியலாம். நீரின் சிறப்பை இளங்கோவடிகளும்,

**"மாமழை போற்றுதும் மாமழை**
**போற்றுதும்"**

**(சிலம்பு.1:7)**

என்று பாடியிருப்பதன் மூலம் நீரின் சிறப்பை அறியலாம்.

## தமிழர்களின் நான்கு வகை நிலங்களும் நீர்நிலைகளும்

பழந்தமிழர்கள் நிலங்களை அமைப்பு மற்றும் சூழல்களின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகை நிலங்களாகப் பாகுபாடு செய்து அங்கு உற்பத்தியாகும் நீர்நிலைகளைக் கொண்டு உணவுப்பொருட்களை விளைவித்து தங்கள் வாழ்க்கைமுறையை மேற் கொண்டனர். நான்கு வகை நிலங்களிலும் நீர் நிலைகளே உணவுப்பொருள் உற்பத்திக்கும் உடல் வலிமைக்கும் முக்கிய காரணியாக அமைந்தது. குறிஞ்சி நிலத்தில் அருவி நீர், சுனை நீரைக் கொண்டும் முல்லை நிலத்தில் ஆற்றுநீர் சிறிய சுனை நீரைக் கொண்டும், மருத நிலத்தில் குளத்து நீர் கிணற்றுநீர், ஆற்றுநீர் போன்றவற்றைக் கொண்டும், நெய்தல் நிலத்தில் உவர்நீர், உவர்நீர்க் கேணி நீர், ஆகியவற்றைக் கொண்டும் தங்களின் அன்றாட வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். ஒவ்வொரு நிலத்திலும் உற்பத்தியாகும் நீரானது வெவ்வேறு வகையான மருத்துவத் தன்மை கொண்டது. அந்நிலங்களில் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்காக நீர் அமைந்துள்ளது.

## நீரினால் ஏற்படும் நோய்கள்

நீர் என்பது நிலத்தின் நலத்தால் உருவாகிறது என மூதுரையிலும், நீரின் குணமெல்லாம் மண்ணின் குணத்தினால் உருவாகிறது என்பதை, தேரையர் தனது பொருட்பண்பு நூலில்,

**"தண்ணீர் குணமெல்லாம் தான் கேள் மடமயிலே**
**மண்ணின் குணமல்லால் மற்றுண்டோ?"**

**(தேரையர் வெண்பா.115)**

என்ற பாடலடிகள் மூலமும்,

**"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்"**

என்ற திருக்குறள் மூலமும், நீருக்கென்று தனிக்குணம் கிடையாது. நீர் தங்கும் நிலத்தைப் பொறுத்தே அதன் பண்பு மாறுபடுகிறது என்பதை அறிய முடிகிறது. ஒவ்வொரு இடத்திலும் தேங்கும் நீரானது ஒவ்வொரு மாற்றமடைந்து நோய்களை

ஏற்படுத்துவதை அறியலாம். பாறையில் தங்கும் நீரை அருந்துவதால் உடலானது குளிர்ச்சித் தன்மை அடைந்து இடைவிடாத காய்ச்சல் உண்டாகும். உண்கின்ற உணவுகளின் முடிவில் உவர்ப்புச் சுவை தோன்றும் என்பதை,

**"பாறைமீ தூறுகின்ற பானீர் தன்னையுண்டால்**
**ஏறு முடலமெல்லாம் மீரிப்பே வீறுகின்ற**
**வாதகோபத்துடனே மாறாச்சுரமுமெழும்**
**ஓதசனத் துண்டாம் உவர்ப்பு"**

**(ப.கு.சி.366)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். செம்மண்ணில் தேங்கிய நீரை அருந்துவதால் உட்சுரமும் வெம்மையும் உண்டாகும். ஆண்மைக்கான தாதுவும் கெடும் என்பதை,

**"காச பித்தத்தாற் காந்தியு மேகிடும்**
**ஊச லுட்டிண முட்சுரங் காந்தலாம்**
**நாச தாதுவும் நண்ணிடும் என்றுரை**
**வாச மிற்சிவப் பாம்புனல் வண்மையே"**

**(ப.கு.சி.369)**

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது. சுக்கான் பாறையில் தேங்கும் நீரை அருந்தினால் நீர்க்கடுப்பு, நெஞ்சில் சளி, மனப்பிணி போன்றவை ஏற்படும் என்பதை,

**"நீர்க்க டுப்பெழும் நெஞ்சினிற் சீழ்கட்டும்**
**பார்க்கிற் பித்தம் பலபிணி சூழ்வாதம்**
**தீர்க்க வாயுவைத் தீர்த்திடும் சிந்தைநோய்**
**தாக்கும் சுக்கான் தனிப்பாறைத் தோயமே"**

**(ப.கு.சி.368)**

என்ற பாடலடிகள் குறிப்பிடுவதன் மூலம் நீரினால் நோய் ஏற்படுவதில்லை நீர் தேங்கும் நில அமைப்பின் மூலமே நோய்கள் ஏற்படுகிறது என்பதை அறியலாம்.

## ஆற்று நீரின் சிறப்புத்தன்மை

நீரினை ஆற்றுநீர், அருவி நீர், சுனை நீர், ஓடை நீர், வயல் நீர், கடல் நீர் என சித்தர்கள் பாகுபடுத்தியுள்ளனர். ஒவ்வொரு நீருக்கும் ஒவ்வொரு மருத்துவத் தன்மை உண்டு. ஆற்றுநீர் முல்லை மற்றும் மருத நிலத்திற்குரியது. ஆற்று நீரானது வாதப் பிணி, பித்தப் பிணி, ஈளை, நீர் வேட்கை போன்ற நோய்களை நீக்கும் தன்மையுடையது என்பதை,

**"ஆற்றுநீர் வாதம் அனலம் கபத்தோடு**
**தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே ஊற்றமிகும்**
**தேகத்தி னோயையொலாஞ் சீறித் துரத்திவிடும்**
**போகத்திற் றாதுவுமாம் போற்று"**

**(ப.கு.சி.357)**

என்ற பாடலடிகள் மூலம் ஆற்று நீரின் தன்மையை அறிய முடிகிறது. மேலும், இந்தியாவில் முக்கிய ஆறுகளான யமுனை, சிந்து, கங்கை, தாமிரபரணி, நர்மதை, கோதாவரி, துங்கபத்ரா, வைகை போன்ற ஆறுகளின் நீரானது ஒவ்வொன்றும் வெவ்வேறான மருத்துவத்தன்மை கொண்டது என்பது சித்தர்களின் பாடல்களால் அறிய முடிகிறது.

## அருவி நீர்

அருவி நீரானது குறிஞ்சி நிலத்திற்குரியது. இது இரத்த பித்த ரோகத்தை நீக்கி உடலுக்கு பலத்தைத் தரும். பிற மேகத்தை நீக்கும் என்பதை,

**"அருவிநீர் மேகம் அகற்றும் கபத்தை**
**வருவிக்கும்ரத்தபித்த மாற்றும்பெருமிதம்**
**வேலை யுலகின் மிகுந்தபலம் உண்டாக்கும்**
**காலை மலர்முகத்தாய்!காண்"**

**(ப.கு.சி.362)**

என்ற பாடலடிகள் குறிப்பிடுவதை அறியலாம்.

### ஊற்று நீர்

இது மருதம் மற்றும் நெய்தல் நிலத்திற்குரியது. ஊற்று நீரானது மணற்பாங்கான இடங்களிலும், கடற்கரை ஒட்டிய பகுதிகளிலும் கிணற்றிலும் உற்பத்தியாகக் கூடியது. இனிப்புப் பொருந்திய ஊற்று நீரானது பித்தத்தை நீக்கும் தன்மையுடையதாகும். கிணற்றில் ஊரும் ஊற்று நீரானது சூளை நோய், குடல் ஒவ்வாமை, உடல் கடுப்பு, இடுப்பு குடைச்சல், ஈளை நோய் போன்றவற்றை நீக்கும் தன்மையுடையதை,

**"ஊற்றுநீர் பித்தம் ஒழிக்கும் இனிப்பாகும்**
**ஆற்றிவிடும் தாகத்தை அப்பொழுதேகூற்றுவிழி**
**கொம்ப ரிடையாய் குணாகுணங்களைத் தெளிவாய்**
**நம்பியுல கோரறிய நாட்டு"**

**(ப.கு.சி.363)**

என்ற பாடலாலும்,

**"ஆசாரக் கூபத் தறலால் அதிதாகம்**
**வீசாகச் சூடுபசி மெய்க்காத்தல்-மாசூலை**
**மெய்வலி சந்துளைப்பு வீழ்மயக்கம் சோபைபித்தம்**
**பையமீவரு மீளையறும் பார்"**

**(ப.கு.சி.364)**

என்ற பாடலடிகள் மூலம் நீரின் மருத்துவப் பயன்களைக் குறிப்பிடுவதை அறியலாம்.

### மழைநீர்

மழைநீரானது உடலின் தளர்ச்சியை நீக்கி உடலை வலுவாக்கும். ஆற்று நீரானது உடலுக்கு வனப்பைத் தரும். ஓடுகின்ற வரவும் போக்குமுள்ள குளத்து நீர் நோய்களை உண்டாக்காது. பாசி படிந்த நீரானது சுரத்தை உண்டாக்கும். ஓடாத குளத்து நீர் குடல் வாதத்தை உண்டாக்கும் என்பதை,

**"ஆற்றுத் தண்ணீர்க் கழகுண்டாம்**
**அடைந்த சுனைக்கு மகோதரமாம்**
**தூற்று மாரி மெய்யிறுகும்**
**துலையாக் கிணறே கயந்திரட்டும்**
**மாற்றுங் குளமே வியாதியில்லை**
**மாறாக் குளமே வியாதியுண்டு**
**தோற்றும் மதுர மொழிமயிலே!**
**துலங்குத் தண்ணீர்க் குணங்காணே"**

**"பாசித் தண்ணீர் நோயாக்கும்**
**பருத்த வோடைத் தெளிவூறல்**
**நேசித் திடவே பிணியில்லை**
**நிலைநீர்க் குண்டாம் குடல்வாதம்**
**மாசித் தண்ணீர் பித்தகற்றும்**
**வளர்க்குஞ் சுரத்தைச் சருகூறல்**
**தேசத் தண்ணீர்க் குணந்தன்னைத்**
**தெரியச் சொன்னோம் திண்ணமிதே"**

**(ப.கு.சி.370)**

என்ற பாடலடிகள் மூலம் பலவகை நீர் வகைகளையும், அவற்றினால் ஏற்படும் நோய்களையும் அவை தீர்க்கும் நோய்களையும் பற்றி அறிய முடிகிறது.

### வேர்கள் ஊறிய நீரும் மருத்துவமும்

பழந்தமிழர்கள் வேர்களை நீரில் ஊற வைத்து அதனைக் குடிக்கவும், குளிக்கவும் பயன்படுத்தியுள்ளனர். வேர்கள் மூலம் ஊறிய நீரானது மருத்துவத்தன்மை நிறைந்ததாகும். குறிப்பாக, நாவல் மரம், நாவல் மரத்தின் வேர், கருங்காலி மரத்தின் வேர், இலவம் மரத்தின் வேர் ஆகிய மரங்களின் வேர்களில் ஊறிய

நீரானது பலவகை நோய்களை நீக்கும் தன்மையுடையதாகும். நாவல் மரத்தின் வேரில் ஊறிய நீரானது குடல்வாதம் வெப்பு நோய், நீரிழிவு நோய், உடல் திறன் குறைவு போன்றவற்றை நீக்கும் தன்மையுடையது என்பதை,

"நாவல்வே ரூறுசல நாளுமதி சாரத்தை
மாவலியே மேகத்தை மாற்றுங்காண் பூவுலகில்"

(ப.கு.சி.372)

என்ற பாடல் மூலம் அறியலாம். கருங்காலி வேரில் ஊறிய நீரானது பித்த குன்மம், திமிர்வாதம், நீரிழிவு போன்ற வற்றை நீக்கும் என்பதை,

"குட்டங் கயரோகங் குன்மம் பெருவயிறு
நெட்டைப் புழுதிமிகு நீரிழிவும்-விட்டே"

(ப.கு.சி.373)

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது. இலவ மரத்தின் வேரில் ஊறிய நீரால் எண்வகைக் குன்மம், நீரிழிவு நோய் போன்றவை நீங்கும் என்பதை,

"அட்டகுன்மம் நீரிழிவும் அற்றிடுமே தேகத்திற்
கெட்ட விரணக் கிருமியறும்–மட்டலருங்"

(ப.கு.சி.373)

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

## இளநீரின் மருத்துவக் குணம்

தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் இளநீரானது வாத மிகுதி, நீர் பேதி, உடல் வெப்பம், பித்த கெடுதி போன்றவற்றை நீக்குவதோடு மனத் தெளிவு, கண் குளிர்ச்சி, நீர் பெருக்கி போன்றவற்றை ஏற்படுத்தும் என்பதை,

"இளநீரால் வாதபித்த மேகு மனமுற்
றெளிவாய்த் துலங்குமிரு திஷ்டிக்- கொளியுங்
குளிர்ச்சியுமுண் டாகுங் கொடியவனனீங்குந்
தளிர்த்தகன நொய்தாகுஞ் சாற்று"
"என்றுமிள நீர் நீரிறக்குங் கபமறுக்குந்
"துன்றனலாஞ் சீதமெனச் சொல்லுவர்காண் நின்றெழுப்பும்
பித்தமொடு வாந்தியுன்போம் பேதிகட்டி புண்ணுண்டாங்
கொத்தலரும் பூங்குழலாய்! கூறு"

(ப.கு.சி.374)

எனும் பாடலடிகள் மூலம் இளநீரின் மருத்துவத் தன்மையை அறியலாம்.

ஒவ்வொரு நிலத்திலும் உற்பத்தியாகும் இளநீருக்கு தகுந்தவாறு மருத்துவ குணங்களும் வேறுபடும் என்பதை சித்தர்கள் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

## முடிவுரை

உலகமும் உடலும் நீரால் நிறைந்தது என்பதை அண்டத்திலுள்ளதே பிண்டம் என்ற சித்தர்களின் வாக்கால் அறிய முடிகிறது. நீரும் நிலமும் போலவே உடலும் உயிரும் படைக்கப்படுகிறது என்பதை புறநானூற்றால் அறிய முடிகிறது.

நீரானது அமிழ்தம் எனவும், நீர் இல்லையேல் உலகம் இயங்காது என்பதையும் திருக்குறள் மூலம் அறிய முடிகிறது. ஊருக்கு அழகு சேர்ப்பதும், நாட்டை ஆளும் அரசனுக்கு உயர்வைத் தருவதும் நீரின் மூலமே என்பதை மூதுரை வலியுறுத்துவதை அறிய முடிகிறது.

காப்பிய நூலான சிலப்பதிகாரமும் வான் மழையைப் போற்றவதன் மூலம் மழைநீரின் தனித்துவத்தை அறிய முடிகிறது. நான்கு வகை நிலங்களில் வெவ்வேறான

நீர்நிலைகளைக் கொண்டு பழந்தமிழர்கள் நீரைச் சேமித்தும் பயன்படுத்தியும் உள்ளனர்.

நீருக்கென்று தனி குணமும் பண்பும் கிடையாது எனும் அறிவியல் சிந்தனையை சித்தர்களில் சிறந்தவரான தேரையர் நீரின் குணமெல்லாம் நிலத்தின் மாற்றத்தால் ஏற்படுவது என்று உணர்த்துவதை நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் என்ற திருக்குறள் மூலம் நீரின் பண்பு பற்றி அறிய முடிகிறது.

பாறை நீர், செம்மண் நீர், சுக்கான் பாறை நீர் போன்றவற்றில் தேங்கும் நீரானது நோய்களை உண்டாக்கும் என்பதை அறிய முடிகிறது. ஆற்று நீரானது வாதத்தையும், அருவி நீரானது மேக நோய்களையும் நீக்கும். ஊற்று நீரானது ஈளை நோயைப் போக்கும் என்பதை அறிய முடிகிறது.

மழை நீரானது உடலுக்கு வலுவைத் தரக்கூடியது. வலுவைத் தருவதோடு அழகையும் தருவதாகும் என்பதை அறிய முடிகிறது.

நாவல், கருங்காலி, இலவம் ஆகிய மரங்களின் வேர்கள் மூலம் ஊறிய நீரானது குட்டம், நீரிழிவு நோய், வெப்புநோய் போன்றவற்றைப் போக்கும் தன்மையுடையது என்பதை அறிய முடிகிறது.

இளநீரானது வாதம், உடல் வெப்பம், பித்தம் போன்றவற்றை நீக்குவதோடு கண் குளிர்ச்சி, நீர் பெருக்கி போன்றவற்றை ஏற்படுத்தும் என்பத அறிய முடிகிறது.

குறிப்பாக இவ்வாய்வின் மூலம் நீரினால் நோய்கள் ஏற்படுவதில்லை, நிலத்தின் மாறுபாட்டாலே நீர்த்தன்மை மாறுபட்டு அவற்றால் நோய்கள் ஏற்படுகிறது என்பதை திருக்குறள் மற்றும் சித்தர்களின் இலக்கியங்கள் மூலமாக அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. பதார்த்த குண சிந்தாமணி. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பதிப்பு – 2007.
2. கோ. துரைராசன். நோயில்லா நெறி, இந்திய மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம், சென்னை.பதிப்பு– 1986.
3. க.ச. முருகேச முதலியார், குணபாடம் மூலிகை வகுப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பதிப்பு – 1936.
4. இரா. தியாகராஜன், குணபாடம் தாது சீவ வகுப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பதிப்பு – 1952.
5. தேரையர் யமக வெண்பா, சித்த மருத்துவ பாடநுல் வெளியீட்டுப் பிரிவு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பதிப்பு – 1979.
6. சித்தர்களின் மூலிகை விரிவகராதி, ஶ்ரீமத் போகர் பழனி ஆதீனம், புலிப்பாணி ஆசிரமம், அடிவாரம், பழனி - 624 601. பதிப்பு – 2008.
7. தேரையர் வைத்திய காவியம், சித்த மருத்துவ பாடநுல் வெளியீட்டுப் பிரிவு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பதிப்பு – 1979.

# சங்க இலக்கியத்தில் நீரின் பயன்பாடுகள்

**முனைவர் கோ. கவிதா**
விரிவுரையாளர், தமிழ்த்துறை
வி.ஐ.டி., தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், காட்பாடி, வேலூர்

## முன்னுரை

**'நீரின்றி அமையாது உலகு'** என்ற திருக்குறளின் வரிகளுக்கேற்ப, இந்த உலகம் மூன்று பங்கு நீராலும் ஒரு பங்கு நிலத்தாலும் அமையப்பெற்றுள்ளது. இதனால் இயற்கை சீற்றங்களால் வரலாறு காணாத அளவு வெள்ளமும், மழையின்மையால் கடும் வறட்சியும் மாறி மாறி நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே **'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்'** என்னும் பழமொழிக்கேற்ப நீரின் அத்தியாவசியத்தை உணர்ந்து, மழை பெய்யும் காலத்தே நீர்த்தேக்கத் தொட்டிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் மூலம் பாதுகாத்து வறட்சிக் காலங்களில் பயன்படுத்த வேண்டும். ஆகவே ஒவ்வொரு துளி நீரும் மூச்சுக்காற்றினைப் போன்றது என்றெண்ணி, சங்ககால மக்கள் எவ்வாறு நீரை சேமித்து, அதை திறம்பட பயன்படுத்தினர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியலாம்.

## நீரே முதன்மை

பஞ்சபூதங்களில் ஒன்றானது நீர். அது இடத்திற்கு ஏற்றாற்போல் தன் நிறத்தையும் குணத்தையும் வடிவத்தையும் மாற்றும் பண்பு கொண்டது. அது தங்கும் இடத்தைப் பொறுத்து பல பெயர்களால் வழங்கப் படுகிறது. கூடல் நீர், ஆற்று நீர், குளத்து நீர், சுனை நீர், மடு நீர், கிணற்று நீர் போன்றவையாகும். உலகம் உயர்வதற்கு நீரே முதன்மைக் காரணம் என்பதை,

> **"நீரின் றமையா உலகம் போலத்**
> **தம்மின் றமையா நந்நயந் தருளி"**
>
> **(நற்.1)**

என்ற நற்றிணைப் பாடல் வரியும்,

> **"வார் சான்ற கூந்தல் வரம்பு உயர வைகலும்**
> **நீர் சான்று உயரவே நெல் உயரும் சீர்சான்ற**
> **தாவாக் குடி உயர தாங்கு அருஞ் சீர்க்**
> **கோஉயர்தல்**
> **ஓவாது உரைக்கும் உலகு"**
>
> **(சிறுபஞ்.46)**

நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர மன்னன் உயர்வான் என்பதை சிறுபஞ்சப்பாடல் வரி மூலமும் தெளிவுபடுத்துகிறது.

புலவர்கள், மன்னர்களை வாழ்த்திப் பாடிப் பரிசில் பெற செல்லும்போது அவர்கள் அதிகமாகக் குறிப்பிடுவது நீரையே ஆகும். அந்தவகையில், சேரமான் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதனின் புகழைப்பாடும் முரஞ்சியூர் முடிநாகனார் ஐம்பூதங்களின் தன்மையக் கூறி அவற்றுடன் மன்னனை ஒப்பிடுகையில்,

**“தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல**
**போற்றாப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்**
**வலியும் தெறலும் அளியும் உடையோ”**

(புறம்.2)

பகைவர் வணங்கினால் அவர்களை மன்னித்து அருள்செய்பவன் சேரலாதன். எவ்வாறெனில், நல்லவர் தீயவர் என்று பாராமல் அனைவருக்கும் உதவுவது நீரே என்பதுபோல, அவனுடைய அருளுக்கு நீர் உவமையாக்கப்பட்டுள்ளது.

### நீர் சுழற்சி

**“வான்முகத்த நீர் மழை பொழியவும்**
**மழைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**வாரி பெய்யும் பருவம் போல்**
**நீரின்றும் நிலத்து ஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்**
**அளந்து அறியாப் பல பண்டம்”**

(பட்டின.126:131)

என்ற பட்டினப்பாலையில், கடியலூர் உருத்திரங்கண்ணனார் கடல் நீர் ஆவியாகி, மேகமாக முகிழ்த்து பின் மழை பொழிகிறது. மறுபுறம், பெய்த மழை ஆறுகளில் ஓடிக் கடலில் கலக்கிறது. இதற்குப் புலவர் பண்டமாற்று முறையை உவமையாக விளக்கி நீரியல் சுழற்சியைப் புரிய வைக்கிறார்.

### நீரினைப் பயன்படுத்திய விதம்

வரலாற்றுக் காலந்தொட்டே மக்கள், குடி நீருக்காகவும், குளிப்பதற்கும் கால் நடைகள் நீர் அருந்துவதற்காகவும் பயன்பட்டு வந்த குளங்கள் நாடெங்கிலும் பராமரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சங்ககாலத்தில் கதிரவனின் வெப்பம் தாளாத பெண் யானை, அருகில் பாய்ந்தோடிய ஆழ்சுனை நீரில் களிற்றுடன் மகிழ்ந்ததை,

**“கடல் முகந்து கமஞ் சூல்மா மழை**
**சுடர் நிமிர் மின்னொடு வலன்ஏர்பு, இரங்கி,**
**என்றூழ் உழந்த புன் தலை மடப்பிடி**
**கைமாய் நீத்தம் களிற்றொடு படிஇய”**

**(அகம்.43)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். கதிரவனின் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள அன்று அனைத்து சிற்றாறுகளிலும் நீரோட்டம் இருந்ததற்கு, நீர் நிலைகள் முறையாக பராமரிக்கப்பட்டு வந்ததே காரணமாகும்.

ஒரு நாடு, வளமுடன் இருக்க வேண்டுமென்றால் நீர்வளம் சிறப்பாக இருத்தல் வேண்டும். வானத்திலிருந்து மழைத்துளி விழாமல், உலகத்தில் ஓர் அறிவு உயிராகிய பசும்புல்லும் முளைக்காது என்கிறார் வள்ளுவர். இதனை,

**“தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்**
**கிழங்குடைய வெல்லாம்முளைக்குமே ராற்றல்”**

(பழமொழி.நானூறு.97)

என்ற பாடல் வரி மூலம் அறியலாம்.

### உப்பு தயாரித்தல்

நெய்தல் நில மக்கள் மழையினை நம்பி இருக்காமல், மழை பெய்தாலும் பெய்யா விட்டாலும் கவலை கொள்ளாதவர்கள் என்று பெருமையுடன் கூறுவர். கடற் கரையிலும் கழிக்கரையிலும் உள்ள உவர் நிலத்தில், சிறுசிறு பாத்திகள் அமைத்து, அதில் கடல் நீரினைப் பாய்ச்சி, உப்பங்கழியை ஏற்படுத்தி அவற்றில்

உப்பினை விளைவிப்பர். சில இடங்களில், உவர் நிலத்திலேயே மிகுந்த உப்புச் சத்துள்ள நீரூற்றுகள் உள்ளன. அங்கெல்லாம் அந்நீரை வெளியே கொணர்ந்து பாத்திகளில் பாய்ச்சுவர். ஞாயிற்றின் வெம்மையால் நீர் வற்றி உப்புப் பூத்துக் காணப்படும். அவ்வாறு, உப்பு விளைந்ததும் அதனைப் பல இடங்களுக்கும் சென்று விற்பர். இவ்வாறான உப்புத் தொழிலை செய்பவர்கள் உமணர்கள் என அழைக்கப்பட்டனர். இதை,

**"நேர்கட் சிறுகுடி நீரின் மாற்றி**
**வானம் வேண்டா உழவின் எம**
**கானலஞ் சிறுகுடி"**

(நற்.254)

என்ற நற்றிணைப் பாடல் வரி சுட்டுகிறது.

மேலும் ஏர் பூட்டி உழாமல், இனிது விளையும் உப்பினை குன்றுபோலக் குவித்து, உப்பு வணிகரது வரவை எதிர்நோக்கி இருப்பவர் பரதவர். உமணர்கள் பிற இடங்களுக்கு சக்கர வண்டியில் சென்று உப்பு விற்றதனை,

**"............ உமணர்**
**வெண்கல் உப்பில் கொள்ளை சாற்றிக்**
**கணநீரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்**
**மணல் மடுத்து உரனும் லுசைக் கழனிக்**
**கருங்கால வெண்குருகு வெரூஉம்"**

(நற்.4)

என்ற பாடல் விளக்குகின்றன.

## நாட்டின் பாதுகாவலுக்கு நீர் அரண் ஆதல்

ஒரு நாட்டை பகை மன்னர்களிடமிருந்து காத்தல் ஆளுவோரின் கடமையாகும். நாட்டின் பாதுகாப்பு ஆதாரங்களில் இயற்கை ஆதாரங்களும் அடங்கும். அவற்றுள் மிகவும் அவசியம் நீர் என்பதை,

**"குரூஉக் கெடிற்ற குண்டு அகழி**
**வான் உட்கும் வடி நீள் மதில்**
**மல்லல் மூதூர் வய வேந்தே"**

(புறம்.18)

என்று புறநானூறும்,

**"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண்"**

(குறள்.742)

என்ற குறளும் சுட்டுகின்றது. மேலும் ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர்வளமும் தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர்வளமும் வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்கள் ஆகும் என்பதை,

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"**

(குறள்-737)

என்ற குறள் வழி சுட்டுகிறார்.

## வணிகத்தளமாக பயனளித்த நீர்நிலை

பொருள் நிலையை உயர்த்தும் வணிகத் தளமாகவும் நீர்நிலையினை சங்ககால மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

**"நனியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளி தொழில் ஆண்ட உரவோன் மருக"**

(புறம்.66)

இவ்வரிகள் தமிழர்களின் கடல் வாணிபம் கிழக்கிந்தியத் தீவுகள் வரை விரிந்திருந்தது என்பதனை காட்டுகிறது.

பட்டினப்பாலையிலும் பல வகையான பொருட்களை நிலத்திலிருந்து நீருக்கும் நீரிலிருந்து நிலத்திற்கும் ஏற்றி இறக்கும் செய்தி உள்ளது. இதனை,

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"**

(பட்டி.185-191)

புகார் நகரத்திற்குக் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட குதிரைகளும் சீனம், யவனம் முதலிய பல நாடுகளிலிருந்து வந்த பலவகைப் பண்டங்களும் பட்டினப் பாலையில் நிறைந்திருக்கும் எனக் கூறுவதிலிருந்து கடல் வழியாக வாணிகம் நடந்ததை அறியமுடிகிறது.

## பாசனத்திற்குப் பயன்படும் நீர்

மனித சமூகங்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வேளாண்மைத் தொழிலைச் செய்து வந்துள்ளனர். வேளாண்மையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு தட்பவெப்ப நிலைகள், பண்பாடுகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து மாறுபட்டு இருந்துள்ளது என்றாலும், வேளாண் தொழிலுக்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது நீரே ஆகும். அதில், எக்காலத்திலும் எவ்வித மாற்றமும் இல்லை என்பதே உண்மையாகும். அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் மக்களின் விவசாயத்திற்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர். அதனைச் செயல் வடிவாக்க வேண்டும் என நீரினை சேமித்து வைக்கும் பணியிலும் ஈடுபட்டனர். ஊரில் ஏரிகளையும் குளங்களையும் அமைத்து நீரைச் சேமித்தனர். ஆற்று நீரைத் தேக்க அணைகளைக் கட்டினர். மழைநீரை தேக்கக் குளம் அமைப்பது அக்காலத்தில் இன்றியமையாத பணியாக இருந்தது.

வெள்ளக்குடி நாகனார் என்ற புலவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனிடம்,

**"வருபடைத் தாங்குப் பெயர்புறத்து ஆர்த்துப்**
**பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"**

(புறம்.35)

போர்க்களத்தில் உனது படை எதிரியை வென்று, ஆர்ப்பரித்துக் கொண்டாடுவதற்கு மூலகாரணம் யாதெனில், உள்நாட்டு உழவர்கள் நிலத்தில் ஆழ உழுது விளைவித்த நெற்குவியலே ஆகும் என்கிறார். இக்கருத்து நாட்டினுடைய எல்லா வெற்றிக்கும் காரணம் வேளாண்மையே என்ற உண்மையைப் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

வணிகம், உணவு, விவசாயம், நாட்டின் வளம் என பல்வேறு நிலைகளில் பயன்பட்டு வரும் நீர், இன்று 1 லிட்டர் 20 ரூபாய்க்கு பணம் கொடுத்து வாங்கும்

நிலைமை ஏற்பட்டு வருகிறது. குடிப்பதற்கே இந்நிலை என்றால், மற்ற தேவைகளுக்கு என்ன செய்வது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நாட்டைப் பாலைவனமாக மாற்றிவிடாமல் மழை பெய்யும்போதே ஏரி, குளங்களில் நீரை சேமித்து வருங்கால சந்ததியினரையும் பாதுகாப்போம் என உறுதிகொள்வோம்!

**துணைநூற்பட்டியல்**


1. இராசாராம் துரை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி 1,2,3), முல்லை நிலையம், சென்னை. 1996.
2. சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரிஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. பதிப்பு – 2004.

# சங்க இலக்கியத்தில் மழைநீர்

**முனைவர் ஞா. சுஜாதா**
இணை பேராசிரியர், தமிழ்த்துறை
த.கி.மு. மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சாயிநாதபுரம், வேலூர்

## முன்னுரை

உலகம் செழிக்க அடிப்படையாய் விளங்குவது நீராகும். மனிதர்கள், உணவு உண்ணாமல் கூட சில நாட்கள் இருந்துவிட முடியும். ஆனால், நீரினை அருந்தாமல் இருப்பது மிகவும் அரிதான செயலாகும். உலகம் நிலைகொள்ளவும் உயிர்கள் வாழவும் மிக மிக அவசியம் தண்ணீர் தேவையாகும். பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன் வெள்ளம், ஆறு, ஏரி, வாய்க்கால் போன்ற நீர் நிலைகளில் கைகளாலேயே நீரினை அள்ளிக்குடிக்கக் கூடிய நிலை மக்களிடையே தொன்றுதொட்டு இருந்து வந்தன. ஆனால், இன்று அப்படி இல்லை. பாட்டில்களில் அடைக்கப் பெற்றத் தூய்மைப்படுத்தப்பட்ட நீரினை, பாலின் விலையைவிட அதிகமாக விலை கொடுத்து வாங்கி குடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நம் முன்னோர்களால் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த நீரை, நாம் மதிக்கத் தவறியதால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய நீர் தட்டுப் பாட்டுக்குக் காரணமாக அமைகின்றது. தற்பொழுது உள்ள சூழ்நிலைக்கு இவற்றை சரிசெய்யாவிட்டால் குடிக்க தண்ணீர் கிடைப்பதென்பதே வாய்ச்சொல்லாக போய்விடும். எனவே, மழைநீரை எவ்வாறு சேமித்துப் பயன்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## மழையின் இன்றியமையாமை

மனிதனின் தேவை மாற்றத்தை உருவாக்குகிறது. எது அதிகப் பயன் பாட்டில் உள்ளதோ, அதுவே தேவையை அதிகரிக்கும். நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட பழந்தமிழ்ப் புலவர்கள், மழையின் முக்கியத்துவத்தைப் பலவாறு அறிவுறுத்திக் கூறுகின்றனர். எதையும் நுணுக்கமாகப் பார்க்கும் கூர்மையான அறிவுடையவர்களாதலால், தம்மை சுற்றியுள்ள உலகத்தில் மழையின் செயல்பாட்டை பல்வேறு விதமாக உணர்த்தியுள்ளனர். அம்மழைநீர் விழும் அளவைக் கொண்டு அதைப் பல பெயரிட்டு அழைத்தனர். இத்தகைய அறிவைக் கொண்டு, பருவநிலை மாற்றத்தையும் அதற்கேற்ப அவர்கள் செய்த வேளாண்மை நிலையையும் சங்க பாடல்கள் பதிவு செய்துள்ளன. அதே நேரத்தில் நேர மேலாண்மையும் அறியப்படுகிறது. **'பருவத்தே பயிர் செய்'** என்பதற்கேற்ப

புன்செய்ப் பயிர்களை அவர்கள் விளைவித்தனர்.

மழையைக் குறிக்கும் **'பெயல்'** என்ற சொல் பல அடைமொழிகளோடு கூறியுள்ளார் கு.வெ.பாலசுப்பிரமணியன். “அதிர் பெயல், அழிபெயல், ஆர்பெயல், ஆர்தளி பொழிந்த வார்பெயல், இரு பெயல், இமிழ்பெயல், இரவுப்பெயல், உளர்பெயல், உரவுப்பெயல், உறுபெயல், தண் பெயல், தலைப்பெயல், தாழ்பெயல், துள்ளுப்பெயல், துளி தலைக் கொண்டகனி பெயல், மலிபெயல், மால்பெயல், மிகுபெயல், வண்பெயல், வம்ப் பெரும் பெயல்.” (குவ.பாலசுப்பிரமணியன், சங்க வானிலை, ப.103)

### மழை தோன்றும் விதம்

மழை உருவாக்கத்திற்குரிய நீர், பெரும்பகுதி நீண்டு விரிந்த கடலிலிருந்து பெறப்படுகிறது. அந்நீர் ஆவியாகி, மேலே சென்று மேகமாக மாறி, மேகத்தின் அடர்த்தியை பொருத்தே மிதமழை, கனமழை பொழிகிறது. பெருங்கடலிலிருந்து நீர் ஆவியாகி செல்வதை,

**“காலை வந்தன்றால் காரே”**

**(அகம்.138)**

**கடல் முகந்து கொண்ட காமஞ்சூல் மாமழை**
**சுடர்நிமிர் மின்னொடு வலன்ஏர்பு”**

**(அறம்.43)**

என்ற பாடல் வழி அறியலாம்.

### மழைநீர்

நீருக்கான மூலாதாரமாக விளங்கும் மழையே, இவ்வுலகின் அனைத்து உயிர்களுக்கும் உணவினை வழங்கிவருகிறது. தாவரங்களின் உற்பத்திக்கும் தேவையான நீரை வழங்குகிறது. இந்நீரைத் தரும் மழை பற்றிய அறிவையும் மழை மேகத்தைக் குளிர்வித்துப் பெய்விப்பதற்குக் காரணமாக விளங்கும் மலை, காடு போன்றவற்றின் அறிவையும் பண்டைத் தமிழர்களிடம் காண்கிறோம்.

மழையைப் போற்றும் விதமாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

**“மாமழை போற்றும் மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலியுலகிற்கு அவனளி போல்”**

**(சிலம்பு.பா.7-8)**

என்று போற்றுகிறார்.

மேலும், முகந்துக் கொள்ளப்படும் நீர் ஆவியாகி மேலே செல்கின்றது. அவ்வாறு மேலே செல்லும் மேகத்தின் அடர்த்தியைப் பொறுத்து, மேகங்கள் செல்லும் உயரத்தைக் கொண்டு இன்றைய அறிஞர்கள் அவற்றைக் குவியல் மேகம், தொடுவான மேகம், சுருள் மேகம் என வகைப்படுத்துவது கருதற்குரியது. நீர் கொண்ட தன்மையைக் கொண்டும், அவை தவழும் உயரத்தைக் கொண்டும் மேகங்களை இருவகைப்படுத்திச் சங்க புலவர்கள் சுட்டுயுள்ளனர் என்பதை,

**“பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழை**
**அகல் இரு விசும்பில் துவலை கற்ப”**

**(நெடுநல்.19-20)**

என்ற பாடல் வரி உணர்த்துகின்றது. மேலும் அதிக அளவு நீர்த்தன்மையற்ற மேகம் உலர்ந்து எழுந்து, சிறு தூவல் செய்து பெய்கின்றது எனக் கூறுவது ஒருவகை மேகமாகும். மற்றொன்று மேகத்தில் அதிக அளவு நீர்த்தன்மை இருக்குமாயின் அம்மேகம் தாழப் பறக்கின்றது என்பதை,

**"கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு**
**விசும்புஇவர் கல்லாது தாங்குபு புணரிச்**
**செழும்பல் குன்றம் நோக்கிப்**
**பெருங்கவி வானம் ஏர்தரும் பொழுதே"**

**(குறுந்.287)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகளில் சூலுற்ற மகளிரைப்போல, நீர் நிறைந்த மேகம் வானத்தின் உயரத்தில் செல்லாது தாழ்ந்து செல்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது. கதிரவனின் வெப்பத்தால் நீராவியாக மாறுகின்ற நீரானது மேலே சென்று மேகங்களாக மாறுகின்றது. இதனால், நீராவியின் அடர்த்தி அதிகரிக்கின்றது. இந்நிலையில் காற்றானது இம்மேகங்களைத் தம் போக்கில் அழைத்துச் செல்கின்றது. இவ்வாறு செல்லும் மேகங்களை மலைகள் தடுக்கின்றது. இம்மலைகளில் காணப்படும் தாவரச்சூழல் காரணமாக, அப்பிரதேசங்களில் குளிர்மை காணப்படுவதால் மேகங்களாகக் காணப்படும் நீராவியானது குளிர்ந்து மழையாகப் பெய்கின்றது.

## மழைநீரின் பயன்பாடு

நாவலம் தண்பொழில் என்று சொல்லக் கூடிய தமிழகத்தில் நீர் வளம் மற்றும் நீரின் அடிப்படை ஆதாரங்கள் சிறந்தோங்கி இருந்தன. அதோடு நீரின் முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால்தான் தொல்காப்பியர் நீர், நிலம், விசும்பு, தீ, வளி கலந்து உலகம் என்கிறார். முந்நீர் உடையது நாடு என புறநானூறு கூறுகிறது. வேளாண்மை தொழில்நுட்பத் துறையில் உலகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதற்கிணங்க, வள்ளுவர் விசும்பின் துளி இல்லையென்றால் நிலத்தில் பசும்புல்லும் தலைக் காண்பது அரிது என்பதை,

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்ப தரிது"**

**(குறள். 16)**

என்ற குறள் வழி விளக்குகிறார்.

## வேளாண்மை

மலையிலிருந்து கிடைத்த நீரினைத் தங்களுக்கு உணவாகப் பயன்படுத்திய தோடு, உடலைத் தூய்மை செய்தல், ஆடைகளைத் தூய்மை செய்தல், போன்றவற்றோடு முக்கியமாக உணவை ஆக்கித் தரும் வேளாண் தொழிலுக்கு இந்நீரைப் பயன்படுத்தினர். வேளாண் துறையே, மழைநீரை அதிகம் எதிர்பார்க்கும் துறையாகும். **'வானம் பார்த்த பூமி'** என்று சொல்வதைப் போல, வானம் பொய்த்தால் உலக உயிர்களுக்கு

ஆதாரமான வேளாண்மை பொய்த்துவிடும். அது பொய்த்தால் மக்கள் வாழ்வு பாழ் பட்டுப் போகும். இதனையே வள்ளுவர்,

**"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான் நல்கா தாகி விடின்"**

**(குறள்.17)**

இம்மழையென்னும் கருவி துணையில்லையெனில், ஏர் எடுத்து செய்கின்ற உழவுத்தொழில் சீர்கெட்டுப் போகும். இதற்குப் பண்டைச் சான்றோர்கள் வானிலை அறிவு கொண்டு பல விதி முறைகளைக் கணித்து வைத்திருந்தனர். அவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததால், தன்னைச் சுற்றியுள்ள சூழலில் ஏற்படும் மாற்றங்களை உற்றுக் கவனித்துத் தங்களுடைய வாழ்க்கை, உழவுத்தொழில் இவற்றை முறைப்படுத்திக் கொண்டனர். எந்த புற கருவிகளின் துணையும் இல்லாமல், அவர்கள் வகுத்து அமைத்திருக்கும் அனுபவ அறிவு இன்று உள்ளோரும் பின்பற்றக் கூடியதாக உள்ளது என்பதில் ஐயமில்லை. அனுபவ வெளியீடாக விளங்கும் பழ மொழிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

**"ஆடிப்பட்டம் தேடி விதை, அகல உழுவதை விட ஆழ உழு, அந்தி ஈசல் பூத்தால் அடமழை அதிகரிக்கும், எறும்பு முட்டைக் கொண்டு திட்டையேறின் மழைபெய்யும், கார்த்திகை பிறகு மழையில்லை, கர்ணனுக்கு பிறகு கொடையுமில்லை"** (கி.வா.ஜெகநாதன், தமிழ்ப் பழமொழி, ப.150).

**பருவநிலை மாற்றம்**

தமிழகத்தில் பொதுவாக சனவரி முதல் டிசம்பர் வரை எல்லா மாதங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. பருவநிலை மாற்றத்தின்படி அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் அதிக மழையும் சூன், சூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மாதங்களில் மிதமான மழையும் பெய்யும். ஆனால் உரிய காலத்தில் பெய்யும் மழை, பெய்யாது ஒழிந்தமையால் தனிமையுற்ற பாலை நிலம் போல் காணப்பட்டதை,

**"பெயல்மழை துறந்த புலம்புஉறு கடத்து"**

**(குறுந்.174)**

என வெண்பூதியார் குறிப்பிட்டுள்ளார்.

அகநானூற்றில் கோடைக்காலம் நீட்டித்து நின்று பசுமையற்று இருந்ததையும், மழை பெய்யாது பொய்த்தமையால் நாட்டில் வறுமை மிகுந்து இருந்ததையும் கலப்பைகள் யாவும் தொழிலற்றுக் கிடந்ததையும், குன்றுகளைப் போன்ற பெரிய கரைகளுடைய குளங்களில் வெயில் காய்ந்து, உள்ளே நீரின்மையால் பறவைகள் வந்து தங்காமல் போனதையும், அக்குளங்கள் யாவும் நிறையுமாறு ஒரு இரவில் பெரும் மழை பெய்ததையும், தலைவன் வருகையால் யான் பெற்ற மகிழ்ச்சி, இன்பம் மிக்க வைகறைப் பொழுதில், இரவு மழை பெய்தமையால் நீர் நிரம்பப்பெற்று விளங்கும் குளங்களைக் கண்ட ஊரவர் அனைவரும் அடைந்த மகிழ்ச்சியெல்லாம் ஒருசேர என்னுள்ளே

பெய்து வைத்தாற்போன்று இருந்தது எனத் தலைவி கூறியதை,

**"நாடு வறம்கூர, நாஞ்சில் துஞ்ச**
**கோடை நீடிய பைதுஅறு காலை**
**குன்று கண்டன்ன கோட்ட, யாவையும்**
**சென்று சேக் கல்லாப் புள்ள, உள்இல்**
**என்றூழ் வியன்குளம் நிறைய வீசி**
**பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறை"**

**(அகம்.42)**

என்னும் பாடலடிகள் மூலம் தலைவன் வரவும் மழையின் வரவும் தலைவிக்கும் ஊர் மக்களுக்கும் செய்த நன்மையை அறிய முடிகிறது.

## மழைநீர் பாதுகாப்பு

மழைப் பெய்வதால் வீணாகச் செலவழியும் நீரைக் கூட சேமித்து வைத்து, பின்னர் வேளாண் தொழிலுக்குப் பயன்படுத்தக் குளங்களை வெட்டியுள்ளனர். இக்காலத்தில் மழைநீரைச் சேமிக்க, வீடுதோறும் மழைநீர் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது அரசு. பண்டையக் காலத்தில் நீர்வளத்தை மேம்படுத்த, மழைநீர் சேமிப்புப் பணி நடத்தப்பட்டுள்ளது. மேலும், ஊர்ப் பொது குளங்களில் கரைகள் உயர்த்தப்பட்டு, மழைநீரை சேமிக்கும் விழிப்புணர்வு இருந்தமையால், கரைகள் உடைந்தால் ஏற்படும் சேதத்தினை உணர்ந்து, கரைகள் உடையா வண்ணம் இரவு பகலாகத் துயில் மறந்து காவலர்கள் விழிப்புடன் குளத்தை காவல் காத்தமையையும் தெரியவருகின்றது. இதனை,

**"ஈங்கைத்**
**துய்அவிழ் பணிமலர் உதிரவீசித்**
**தொழில் மழை பொழிந்த பாணாட் கங்குல்**
**எளிதிரைத் திவலை தூஉம் சிறு கோட்டுப்**
**பெருங்குளம் காவலன் போல"**

**(அகம்.252)**

என்ற அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது. இதன் மூலமாக தொடர்மழை பெய்து வருவதனால் சிறிய கரையினையுடைய பெரிய குளமானது கரை உடைந்தால் அதைக் காக்கவும் வீரர்கள் இருந்தனர். இத்தகைய குளம் காக்கும் காவலர்கள் கரை உடைந்தாலும், உடனே கல்லும் மரமும் வைத்து அதனை சரிசெய்ய வாளை பயன்படுத்தியமையை,

**"அன்னாய் வாழி வேண்டன்னை உவக்காண்**
**மாரிக் குன்றத்துக் காப்பாள் அன்னன்**
**தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்**
**பாசி சூழ்ந்த பெருங்கழல்**
**தண்பனி வைஇய வரிக்கச் சினனே"**

**(ஐங்கு.206)**

என்ற பாடல் விளக்குகின்றது. அதிக மழையினால், நீர்த் தேக்கங்களில் அளவு அதிகமாகும்பொழுது உபரி நீரைத் திறந்துவிடும் நிலை இன்று காணப்படும் முறையாகும்.

## முடிவுரை

மழைநீரின் அவசியத்தை அறிந்த பண்டைய மக்கள் எதிர்காலத்தை நோக்கியே அவர்களுடைய செயல்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும், அணைகள் கட்டி நீரைச் சேகரித்தமையும், அணைகள் உடைந்தால் ஏற்படும் சேதத்தினையும் உணர்ந்து அணைகள் உடையாமல் காக்க

அவர்கள் எடுத்த முயற்சியினையும் இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. இராசாராம் துரை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி 1, 2, 3), முல்லை நிலையம், சென்னை. 1996.
2. சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரிஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. பதிப்பு – 2004.

# சமுதாயத்தில் நீர் பண்பாடு

**முனைவர் மு. ரமேஷ்**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), ஓட்டேரி, வேலூர்

**முன்னுரை**

மனிதனுக்கு இயற்கை வழங்கிய கொடைகளில் ஒன்று நீராகும். இயற்கையாக ஓடும் ஆறுகள், அருவிகள், ஓடைகள், சுனைகள் ஆகியவற்றிலிருந்து நீரினைப் பெற்று தனது வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொண்டான். தன் தேவைக்காக நீரினைத் தேக்கி வைக்கத் தொடங்கினான். நீரினை பூமியின் உள்ளிருந்து வெளிக் கொண்டு வரவும் கற்றறிந்தான். மனித இனம் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. அதன் அடிப்படையிலேயே நாகரிகங்கள் அனைத்தும் நதிக்கரை ஓரங்களிலே உருவானது. நாகரிக வாழ்க்கை வாழ்ந்த மனிதன் பல கோயில்களை உருவாக்கினான். அக் கோயில்கள் நீர் ஆதாரங்களின் அருகிலே உருவாக்கி வாழ்ந்தான். நீர் மனித வாழ்வோடு தொடர்புடையதையும், மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து சடங்குகளிலும் நீர் முக்கியத்துவம் பெறுவதையும், பண்பாட்டிற்கு முன்னோடியாக விளங்குவதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நீர்**

“நீரின்றி அமையாது உலகு” என்கிறார் வள்ளுவர். நீர் உலகின் முக்கிய திரவமாக காணப்படுகிறது. மனிதனின் அனைத்து நிகழ்வுகளிலும் நீர் பங்களிக்கிறது. ஐம்பூதங்களில் மிகவும் முக்கியமானது நீராகும். இந்த உலகம் ஐம்பூதங்களால் இயக்கப்படுகிறது என்பதை,

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்”**

**(தொல்.மரபியல் – 635)**

என்னும் தொல்காப்பியர் நூற்பாவால் அறியமுடிகிறது.

பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை உலகிற்கு அறிமுகம் செய்வது நீர்தான். தூக்குச்சடங்கில் நீராட்டுவிழா, திருமணத்தில் பன்னீர் தெளித்தல், இறைவணக்கத்தில் நீர் விளாவுதல், இறப்பின் போது நீர்குடம் உடைத்தல், தலைமுழுகுதல், உறவு முறியும் போது தண்ணீர் கொடுக்காதது, உறவு சேரும் போது தண்ணீர் கலப்பது, சாபங்களை நீக்குவது, ரிஷிகளின் கமண்டலநீர் போன்ற செயல்களில் நீர் முக்கிய பங்கு வகிக்கிறது.

### மனித உடலில் நீர்

மனித உடல் உயிர் வாழ செந்நீர், கண்ணீர், சிறுநீர் ஆகிய மூன்று நீரும் அவசியமாகும். இவை மூன்றும் இல்லாமல் உடல் இயங்காது. எலும்பும் தசையும் உடன் சேர்ந்து ‘உரு’ ஆகி உணர்வை பிரதிபலிக்கும் இரத்த ஒட்டம் செந்நீராகும். மனித உயிர் உலகில் வாழும் வரை அவன் இன்பத் துன்பங்களை உணர்ச்சிகள் ததும்ப எடுத்துக் காட்டுவது கண்ணீராகும். மூன்றாவதாக சிறுநீர். இது மனித உடலில் கழிவு நீராகும். இந்நீர் சரிவர வெளியேறவில்லையெனில் இனம் தெரியாத நோய்கள் வந்து தங்கிவிடும். எனவே தான் இந்த மூன்று நீரையும் சரிவர கவனித்து நமது உடலில் நீரின் அளவினைத் தக்கவைத்துக் கொண்டால் நோயில்லா வாழ்வும், நீண்ட ஆயுளும் பெற முடியும்.

### சடங்குகளில் நீர்

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறையாகும். மனிதனும், மனித சமூகமும் வாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கம் ஆகும். புனிதத் தன்மையின்பால் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பே சடங்கு என்றும், நம்பிக்கைகளின் அடிப்படையில் மக்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் புனிதச் செயல்களே சடங்குகள் என்றும், புனிதப் பொருள்களின் முன்னிலையில் ஒரு மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை வரையறுக்கும் ஒழுக்க கோட்பாடுகளே சடங்குகள் என்றும் வரையறுத்துக் கொண்டனர்.

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் வளமும், நலமும், வேண்டி மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏன் மனிதன் இறந்த பின்பும் கூட பல்வேறு சடங்குகள் செய்யப்படுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கின் பின்னணியிலும் ஏதேனும் ஒரு காரண காரியம் இருக்கத்தான் செய்கிறது. சடங்குகள் அனைத்தும் மனித வாழ்வைப் பல தொடர்நிலைகளாக பகுத்து (பிறப்பு, திருமணம், இறப்பு) ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு மேற் கொள்ளப்படுவதாக அமைகிறது. மனித வாழ்வில் அடுத்தடுத்து நிகழும் ஒவ்வொரு நிலை மாற்றமும் ஏதேனும் ஒரு சடங்கு நிகழ்வதோடு பண்பாட்டு வயப்படுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இச்சடங்குகளில் நீர் மனித வாழ்வில் முக்கியமானது என்பதை விளக்குகிறது.

**பிறப்புச் சடங்குகள்**

மக்களின் வாழ்வில் மாபெரும் செல்வமாக போற்றப்படுவது குழந்தைச் செல்வமாகும்.

> **"பெறுபவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
> **மக்கட்பெறு அல்ல பிற"**
>
> **(குறள் – 61)**

என்று வள்ளுவர் மக்கட் செல்வத்தின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். மக்கட்செல்வத்தை காக்கச் செய்யப்படும் சடங்குகளே பிறப்புச் சடங்குகள். பிறப்புச் சடங்கில் சேனைதொடுதல், தொட்டில் கட்டுதல், காதுகுத்துதல் ஆகிய சடங்குகள் நாட்டுப்பற மக்களின் வாழ்வில் சிறப்பிடம் பெறுபவையாகும்.

**சேனை தொடுதல்**

"சேய், நெய், தொடுதல் என்பதே சேனைத் தொடுதல் என வழங்கப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் பெரியவர்களைஅழைத்துக் குழந்தையின் நாவில் இனிப்பு கலந்த நெய் தொட்டு வைக்கும் வழக்கமே சேனைத் தொடுதல் எனப்படுகிறது." சேனைத் தொடுதல் எனப்படுகிறது." சேனை என்பதை குழந்தை பிறந்தவுடன் புகட்டும் நீரும், இனிப்பும் கலந்த திரவ உணவு சேனை என்கிறது தமிழ் அகராதி. சேனை தொட்டு வைக்கும் பெரியோர்களின் குண நலன்கள் குழந்தைக்கு வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இச்சடங்கு செய்யப்படுகிறது.

**தொட்டிலிடுதல்**

குழந்தையை தொட்டில் கிடத்தித் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கும் பழக்கம் தமிழரின் தனிக் கலையும் பண்பாட்டுமாகும். குழந்தையை தொட்டிலிடுவது நாட்டுப்பற மக்களால் ஒரு சடங்காகவே மேற்கொள்ளப்படுகிறது. குழந்தை பிறந்த உடன் எந்த சடங்கும் இல்லையெனில் முதல் பதினைந்து நாட்களுக்கு தாயும், குழந்தையும் தூய்மையற்றவர்களாக கருதப்படுகிறார்கள். குழந்தையின் நெருங்கிய தந்தை வழி உறவினர்களும் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். பதினைந்து அல்லது பதினாறாம் நாட்களில் தாயையும் குழந்தையும் நீராட வைத்து புத்தாடை உடுத்தி தொட்டில் துணி, தொட்டில் கம்பு, தொட்டில் கயிறு, ஆகியவற்றைக் கொண்டு வந்து தொட்டில் கட்டி அதில் குழந்தையைக் கிடத்தி ஆட்டுதலே தொட்டிலிடுதல் சடங்காகும். தமிழரின் தொட்டில் சடங்கினை,

> **"பச்சை இலுப்பை வெட்டி – என் கண்ணே**
> **உனக்கு பால் வண்ணத் தொட்டில் கட்டி**
> **தொட்டிலிட்ட அம்மானும் என்கண்ணே**
> **தூர வழி போறோம்மா"**
>
> **(பண்பாட்டுப் பதிவுகள் ப.150)**

என்ற தாலாட்டுப் பாடலில் தொட்டிலிடும் சடங்கினை அறியமுடிகிறது.

**காதுகுத்தல்**

குழந்தைகள் தொடர்பான சடங்குகளில் சிறப்பிடம் பெறுவது காதுகுத்தல் சடங்காகும். பெண் குழந்தைக்கும், ஆண் குழந்தைக்கும் காது குத்துவதை வழக்கமாக மேற்கொண்டுள்ளனர். அவரவர் தம் குல தெய்வக் கோயில்களில் குழந்தைகளுக்கு காதுகுத்தும் சடங்கு நடத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு கருவில் உண்டான பாரம்பரியக் குறைகளை நீக்குவதற்காக இச்சடங்கு செய்யப்படுவதாக கூறப் படுகிறது. தாய்மாமன் மடியில் குழந்தையை அமரவைத்து மொட்டையடித்து காது குத்துதல் என்பது வழக்கமாக இருந்து வருகிறது. இச்சடங்கில் நீர் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பூப்புச் சடங்கு**

மண்ணின் பூப்பை மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுவதைப் போல் பெண்ணின் பூப்பையும் கொண்டாடுவது நாட்டுப்புற மக்களின் பண்பாட்டு மரபாகும். பெண்ணின் உடல் தாய்மைக்கு உரிய கன்னித்தன்மையை அடையும் நிகழ்வே பூப்படைதல் ஆகும். இப்பூப்பு காலத்தை ஒட்டிப் பெண்ணிற்கு (அ) நடத்தப்படும் சடங்கே மஞ்சள் நீராட்டு விழா (அ) பூப்பு சடங்கு என அழைக்கப்படுகிறது. கிராமங்களில் சுமங்கலிப் பெண்கள் கூடி மஞ்சள் கலந்த நீரால் பூப்படைந்த பெண்ணைக் குலவை இட்டு புனித நீராட்டுவது பூப்புனித நீராட்டுச் சடங்காகும்.

**திருமணச் சடங்கு**

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்று கூறப்படுவது உண்டு. ஒரு தனி மனிதனுக்கு சமூகத்தகுதியையும், சடங்கியல் வாழ்வில் பங்கேற்கும் தகுதியையும் அளிக்கும் அங்கீகாரமாகவும் விளங்குகிறது. திருமணத்தால் அமையும் வாழ்வே முழுமை பெற்ற வாழ்வு என்று நம்பப்படுகிறது. திருமணச்சடங்கில் பரிசம் போடுதல், முகூர்த்தக்கால் நடுதல், தாலி கட்டுதல் ஆகியவை குறிப்பிடத்தக் கவையாகும். இச்சடங்குகளில் நீர் முக்கிய பங்கினை வகிக்கிறது.

**பெண் பார்த்தல்**

பெண் பார்த்தலின் போது மணமகன் வீட்டார் பெண் வீட்டிற்கு சென்று பெண் பார்ப்பதாகும். பெண் பார்ப்பதில் முதலில் மணமகன் சுற்றத்தார்க்கு மணமகள் முதலில் நீர், மோர், தேநீர் முதலியவை கொடுத்து சபையில் வணங்கும் முறை இன்றைக்கும் நடைமுறையில் உள்ளது. மணமகன் மணமகள் பற்றி அறிமுகம் செய்து கொள்வதாக அமைகிறது. மணமகளுக்கு மணமகன் பிடித்திருந்தால் மட்டுமே அந்த வீட்டில் உண்ணும் வழக்கம் இன்றும் உள்ளது.

**நிச்சயத்தார்த்தம்**

மணமகன், மணமகள் வீட்டிற்கு நெருங்கிய உறவினர்களுடன் சென்றவுடன் நீர் கொடுத்து இன்முகத்துடன் வரவேற்பர். பின்பு இருவீட்டாரும் எதிரெதில் அமர்வர். பெண் கொடுக்க சம்மதம் தெரிவித்த பின் இரு வீட்டாரும் வெற்றிலைப் பாக்குத் தட்டினை மாற்றிக்கொள்வர். பெண் வீட்டு மங்கலப் பெண்களிடம் நீர் விளாவி தூபம் காட்டி மணமகன் வீட்டு தட்டைக் கொடுப்பர். இன்றும் நீர்கொடுக்கும் வழக்கம் இன்றுவரை நிலவி வருகிறது.

**மணமக்கள் அழைப்பு**

மணப்பெண் நேரடியாக திருமணம் நடைபெறும் இடத்திற்கு அழைத்து செல்வதில்லை. கோவிலில் மணப் பெண்ணை அமர வைப்பர். பின்னர் மணமகன் வீட்டார் வெல்லம் எடுத்து (பானகம்) பெண் வீட்டார் அனைவருக்கும் கொடுத்து மணமகன் மற்றும் மணமகள் இருவரையும் மேள தாளத்துடன் வரவழைப்பர். இது தமிழ் மக்களிடம் இன்றும் நடைபெறுகிறது. மாப்பிள்ளையின் சகோதரி மணமக்களுக்கு ஆரத்தி எடுப்பார். பின் வீட்டிற்குள் அழைத்து சென்று மணவிருந்து நடைபெறும். மணப்பெண் அழைப்பிற்கு நீர் மற்றும் மோர் கொடுக்கும் வழக்கம் நிலவுகின்றது.

**தாரை வார்த்தல்**

தாரை என்றால் நீர் எனப்பொருள். நீர் மந்திர நீருக்கு தீட்டில்லை. ஒலியின் அதிர்வை ஏற்கக் கூடியது. இப்படி தெய்வத்தன்மை வாய்ந்த நீரைத் தாரை வார்த்தலுக்குப் பயன்படுத்துகின்றனர். மணமகனின் வலது கைமேல் மணப் பெண்ணின் இடது கையை வைத்து ஒரு பணம் வைத்துப் பெண்ணின் பெற்றோர் தன் உறவினர் முன்னிலையில் தன் கையில் தண்ணீர் விட்டுத் தாரை வார்ப்பார்கள் பெண்வீட்டார் கொடுத்தோம் என்று சொல்ல, மணவீட்டார் கொண்டோம் என்று சொல்லுவார்கள் இனி மணமகள் பாதுகாப்பு மண மகனுடையதே என்பதை அறிவிக்க நடக்கும் சடங்காகும்.

**கணையாழி எடுத்தல்**

மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் மோதிரத்தை போட்டு மணமக்கள் தேடி எடுக்க சொல்வார்கள். இது மூன்று முறை நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையில் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

**மணமகளை வரவேற்றல்**

புகுந்த வீட்டில் நல்ல நேரம் பார்த்து மணமகன் வீட்டிற்கு மணப்பெண்ணை முதலில் மணமகள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். புகுந்த வீட்டில் மணமக்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள். இவ்வாறு பிறப்பு சடங்கிலும், திருமண சடங்கிலும் நீர் பெரிதும் பயன்படுகிறது நீர் இல்லாமல் எந்த ஒரு சடங்கும் செய்வதில்லை என்பது தெளிவாகிறது.

**இறப்பு சடங்கில் நீர்**

வாழ்க்கை வட்ட சடங்குகளில் இறுதியாக அமைவது இறப்பு சடங்காகும்.

> **"இறந்தவரை புதைத்தல் சடங்குமுறை வேளாண் நாகரிகத்தோடு உருவானதாகும். புதைத்தல் என்பது மண்ணுக்குள் புதைத்தல் என்பதற்கு இணையானதாகும். விதை முளைப்பது போன்று இறந்தவரும் மறு உயிர் பெறுகிறார் என்ற கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்."**
>
> **(தமிழர் மானுடவியல் ப.211)**

பிறந்த வீட்டுக் கோடி கொண்டு வருதல் என்னும் சடங்கின் போது உறவினர்களால் நெல், சீயக்காய், தண்ணீர். கோடித்துணி போன்றவை இறந்தவரின் பிறந்த ஊரிலிருந்து உறவினர்களால் கொண்டு வரப்படுகின்றது.

**நீர்மாலை கொண்டு வருதல்**

நீர்மாலை எடுத்து வரும் சடங்கில் பிணத்தை நீராட்டுவதற்காக குடங்களை எடுத்துக் கொண்டு நீர்நிலைக்கு செல்கின்றனர். நீர் நிரம்பிய குடங்களின் கழுத்துப் பகுதியில் கதம்பமாலை சுற்றப்படுகிறது. நீரின் மேலாக பூக்களும், மஞ்சள், திருநீரும் போடப்படுகிறது. இதனால் நீர் புனிதமாக மாற்றப்படுவதாக கூறப்படுகிறது. புனித நீரைக் கொண்டு வந்து இறந்தவருக்கு சடங்குகளை நடத்துகின்றனர்.

**மண்குடம் உடைத்தல்**

இறப்புச் சடங்கின் போது சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட சிறிய மண் கலயத்தை குடம் என்கிறார்கள். இறந்தவரை இடுகாட்டில் வைத்த பின்பு அவரது மகன் அல்லது மகளின் இடது தோளில் நீர் நிரம்பிய மண் கலயத்தை வைத்து மூன்றுமுறைப் சடலத்தைச் சுற்றச்செய்தும் ஒவ்வொரு முறைச் சுற்றும் பொழுதும் நாவிதன் அரிவாள் நுனியில் மண்குடத்தை துளையிடுகிறார் . இறுதியாக மண் குடத்தை வலபக்கம் கீழே போட்டு உடைத்த பின்னர் கோடித்துணி போட்டு திரும்பிப் பாராது அழைத்துச் செல்வர். இதேபோன்று குழிமேட்டில் கொள்ளி வைக்கும் மகனால் கொள்ளிக்குடம் உடைக்கப்படுகின்றது. சடலத்தை அடக்கம் செய்த பிறகு நீராடிவிட்டு வீடு வருவார்கள். வீட்டிற்கு

வந்தவுடன் இறந்தவரின் இடத்தில் விளக்கேற்றி வைத்திருப்பார்கள். வாசலில் இருக்கும் தண்ணீரில் கால்களை கழுவி விட்டு விளக்கு முகத்தில் முழிப்பர்.

**தண்ணீர் வைத்தல்**

செம்பு தண்ணீர் வைத்து அழும் சடங்கை கருமாதி நடைபெறும் நாள் வரை செய்கின்றனர். பிணத்தை வைத்திருந்த இடத்தில் மணலைப் பரப்பி அதன் மீது சொம்பு வைத்து பெண்கள் அழுகின்றனர். சொம்பில் வைக்கப்பட்ட நீரை இறந்தவர் மண்டியிட்டு குடிப்பார் என்றும் அதற்கு அடையாளமாக செம்பில் வைக்கப்பட நீர் சிறிது குறைந்தும், பரப்பிவைக்கப்ட்ட மணலில் இறந்தவரின் கைரேகை பதிந்துவிடும் என நம்பப்படுகிறது. இச் சடங்கின் மூலம் தெய்வ நிலை அடைந்து விட்ட இறந்தவரின் ஆவிக்கு தாகத்திற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது என்று நம்புகின்றனர். மீதமுள்ள நீரை சுவரில் அப்பி இருக்கும் சாணத்தின் மீது தெளிக்கின்றனர். அதிலும் எஞ்சிய நீரை வீட்டிற்கு வெளியே ஊற்றுகின்றனர்.

**மதங்கள் சடங்கில் நீர்**

பெரும்பாலான மதங்களில் நீர் தூய்மைப்படுத்தும் பொருளாகக் கருதப் படுகிறது. கிருத்துவம், இந்து மதம், இஸ்லாம் போன்ற மதங்கள் பல சடங்ககளை கொண்டுள்ளன. ஒரு நபருக்களிக்கப்படும் முழுக்கு கிருஸ்துவத்தின் முக்கிய திரவருட்சாதனமாகும். இந்த சடங்கினை நீரினால் செய்கின்றனர். இஸ்லாமில் அநேக தருணங்களில் உடலில் சுத்தமான நீரினால் கழுவிய பின்னரே தினசரி பிரார்த்தனை செய்வது வழக்கம்.

**கும்பாபிஷேக நீர்**

கல்லினால் திருவுருவத்தை (சிலையை) அமைத்துத் தானியவாசம், ஜலவாசம் வைத்து அந்த மகாதேவனுடைய மந்திரங்களை எழுதி மந்திரயந்திரத்தை 48 நாள் வழிபாடு செய்து அதை மூர்த்திக்கு கீழே வைப்பார்கள். யாகசாலை அமைத்து ஜோதியைக் கும்பத்தில் சேர்ப்பார்கள். கல்லினாலும் மண்ணினாலும் உருவாக்கப்பட்டவை விக்கிரகங்களாகும். அவற்றிற்கு தெய்வ சக்தியை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் கிரியைகளில் ஒன்றுதான் கும்பாபிஷேகம். இதைக் காண்பது என்பது வாழ்நாளில் கிடைப்பதற்கு அரிய ஒரு வாய்ப்பாகும். புனித அபிஷேகம் செய்வதால் மூலவர் விக்கிரகம் புதிய சக்தியைப் பெறும். அதனால் மக்களும் நன்மைகள் பெறுவார்கள்.

**நீர் விளாவுதல்**

நீரும் நீர் சார்ந்ததும் தான் மனித குலப் பண்பாடு. தமிழர் வாழ்வின் ஒவ்வொரு அங்குலமும் நீருடன் பிணைக்கப் பட்டுள்ளது. விரதங்களில் இறைவனை வணங்கும்போது நீர் விளாவுதல் முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

**முடிவுரை**

நீர் பஞ்ச பூதத்தில் ஒன்றாகவும், நீர் இல்லாமல் இவ்வுலகம் இயங்காது எனவும், நீரே உயிர்வாழ முக்கிய ஆதாரமாகவும் திகழ்வதை அறியமுடிகிறது. மனிதனை மனிதனாகவும், மனிதனின் முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்தது நீராகும். நீரை புனிதப்பொருளாக் கருதி நம் முன்னோர்கள் சடங்குகளிலும், பண்பாட்டிலும் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை நீரின் பயன்பாடு இல்லாமல் எச்செயலும் செய்ய இயலாது என்பதை அறியமுடிகிறது. மதச்சடங்குகளிலும், புனித நீர் தெளித்தலும், நீர் விளாவுதலும், இன்றும் நம் பண்பாட்டிற்கு நீர் முக்கிய பங்காற்றுவதை அறியமுடிகிறது.

# நீர் வள ஆதாரங்களும் திட்டங்களும்

**முனைவர் க. சிங்காரவேலு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**இர. கீதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்துக்கு இணங்க, ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. நீர்வளத்தைக் காப்பதும், அதனைப் பெருக்குவதும் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் இந்நாளின் நோக்கமாகும். நீர்வளத்தைப் பாதுகாக்க ஐ.நா.நிறுவனத்தின் திட்டம் என்ன? மேலும், இத்தீர்மானம் எதனடிப்படையில் தொடங்கப்பட்டது என்ற அடிப்படைக் காரண காரியங்கள் மற்றும் இந்திய நாட்டில் குடிநீர் திட்டங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை கால வரிசையில் ஆராயப்பட உள்ளன. மற்றும் சங்ககால மக்கள், நீரின் தரத்தை எவ்வாறு மதிப்பிட்டு அதன்படி வாழ்ந்துள்ளனர் என்பதைச் சான்று காட்டி நீரின் இன்றியமையாமையை அறிவுறுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## நீர்வளத் திட்டம்

பிரேசில் ரியோடி ஜெனிரோவில் 1992ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் அதன் வளர்ச்சிக் குறித்து 47ஆவது ஐ.நா.பேரவையில் கூட்டத்தொடர் நடைபெற்றது. அக்கூட்டச்செயல் திட்டத்தின்படி 1993 ஜனவரி 18ஆம் நாள் 193 தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்துடன் 1993ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 22ஆம் நாளும் உலக நீர்வள நாளாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

## நீர்வளத் திட்டங்களின் கருப்பொருள்கள்

ஒவ்வொரு ஆண்டும் நீர் நாளுக்கான ஐ.நா. நிறுவனம் எடுத்த கருப்பொருள்கள்.

2024 – அமைதிக்கான நீர்

2023– மாற்றத்தைத் துரிதப்படுத்துகிறது.

2022 – நிலத்தடி நீர், கண்ணுக்குத் தெரியாததைக் காணச்செய்தல்.

2021 –தண்ணீரை மதிப்பிடுதல்

2020 – நீர் மற்றும் காலநிலை மாற்றம்

2019 – யாரையும் நீரின்றி விட்டு விடாதீர்கள்.

2018 – இயற்கைக்காக தண்ணீர்

2017 – ஏன் நீரினை வீணாக்கக்கூடாது? போன்றவை சிறந்த முன்னெடுப்புகளாகும்.

**இந்தியாவின் நீர் ஆதாரங்கள்**

NIIT ஆயோக் படி, இந்தியாவின் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் 70% மாசுபட்டுள்ளது. இந்தியாவில் குடி நீருக்கான திட்ட முன்னெடுப்பின் காலவரிசை முறை, வரலாற்றின் பின்னணியைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகும். இதன் அடிப்படையில், உலக தண்ணீர் வாரம் 2023இல் ஜீவன் மிஷன் என்ற இத்திட்டத்தின் கீழ் 2024ஆம் ஆண்டுக்குள், அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் இணைப்புகளை வழங்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால், இந்த முறையை சரியாக செய்வதற்கு ஏற்கனவே தோல்வியுற்ற முயற்சிகளில் இருந்து நாடு கற்றுக் கொண்டதா? என்று அதன் வரலாற்றுப் பின்னணியைக் காண்போம்.

இந்தியா, தனது கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் முயற்சிகள் தோல்வியடைந்த நீண்ட வரலாற்றைக் கொன்டுள்ளது. 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசியலமைப்பு தண்ணீரை மாநிலப் படமாக்கியது. மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான குடிநீருக்கான உரிமையை வழங்கியது.

**முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56)**

1960 – எளிதில் அணுகக்கூடிய கிராமங்களில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டது.

1969 – யுனிசெப்பின் தொழில்நுட்ப ஆதரவைக் கொண்டு நாடு 1.2 மில்லியன் போர்வெல்களைத் தோண்டி 17,000 குழாய் இணைப்புகளை இத்திட்டத்தின் கீழ் வழங்கியது.

1972-73 – மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் அடிப்படையாகக் கொண்டது. இதன் மெதுவான் முன்னேற்றம் கொண்டது.

1977-78 – ARWSஐ மீண்டும் அறிமுகப்படுத்தியது.

1986 – ARWS தேசிய குடிநீர் இயக்கத்தின் உருவாக்கத்துடன் பணி பயணமுறையில் வைக்கப்பட்டது.

1991 – ராஜீவ்காந்தி தேசிய குடிநீர் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

73ஆவது அரசியலமைப்புத் திருத்தம் படி பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பை வழங்கியது.

இவ்வளவு செயல்முறைகளை பயன் படுத்தியும் கூட பல கிராமங்களில் தண்ணீர் விநியோகம் ஒழுங்கற்றதாக இருந்தது. பல மாநிலங்களில் அதிகபடியான இரும்பு, ப்ஃளூரைடு மற்றும் துர்நாற்றம் ஆகியவை தண்ணீரைக் குடிப்பதற்குத்

தகுதியற்றதாக மாறியிருந்ததை திட்டக் கமிஷன் கண்டறிந்தது. இதற்குக் காரணம், இந்தத் திட்டம் நீர் ரீசார்ஜ் செய்வதற்கான எந்தத் திட்டமும் இல்லாமல் நிலத்தடி நீரையே பிரதானமாக நம்பியிருந்ததே ஆகும்.

**நீர் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும்?**

இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆனது. ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. இதன் பிணைப்பில் ஒன்று பாதித்தாலும் மற்ற நான்கிலும் அதே பாதிப்பு ஏற்படும். நிலம், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் இவற்றின் இயல்பையும் அதன் அமைப்பு பற்றியும் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு முரஞ்சியூர் முடிநாகராயர் கூறிய செவியறிவுறா உடன் கூறும் வாழ்த்தியல் இதனை எடுத்தோதுவனவாக உள்ளன.

நிலத்தைப் போல் பொறுமையும் ஆகாயத்தைப் போல் விரிந்த அறிவும் காற்றைப்போல் வலியையும் நெருப்பைப் போல் அழிக்கும் திறனும் நீரைப்போல் அருள் செய்தலும் போன்று உதியன் சேரலாதன் பண்புகள் நிறைந்து விளங்குவதாகக் கூறப்பட்டுள்ளன. இதனை,

**"மணி திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு"**

**(புறம்.2)**

எனும் புறநானூற்றுப் பாடல் வழி அறியலாம். இதில், ஐம்பூதங்களின் தன்மைக்கு ஏற்ப ஒன்றினுள் ஒன்று அடங்கி இருப்பிட அமைப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**நீரும் நிலனும்**

புகழ்த்தேடி அலையும் அரசர்கள், அதன் அடிப்படையில் வீரத்தை நிலை நாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இக்குறிக்கோளுடன் நிலத்தையும் நீரையும் பாதுகாத்து, அதன் நீர் நிலைகளை உயர்த்த நாடு செழிக்கும். நாடு செழிக்க வைப்பது, உயர்ந்த புகழ் கொண்ட பெயருடன் நிலைத்து வாழ்வர் என பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு குடபுலவியனார் கூறியுள்ள முதுமொழியின் உண்மை தன்மையின் சிறப்பைக் கொண்டு நிலத்துக்கும் நீருக்குமான உறவினை அறிந்துக்கொள்ளலாம்.

நீர் இல்லை என்றால் பூக்கள் உயிர் வாழ இயலாது. நீரைக் கொண்டுதான் உணவைப் படைக்க இயலும். நீரும் நிலமும் சேரும் சேர்க்கையால் தான் உணவு உண்டாகிறது. உணவு தருவார் உயிர் கொடுப்பவர் ஆவர்.

மழைநீரையே நம்பி வாழும் பயிர்கள் செழிப்பது இல்லை. ஆதலால், மழைநீரைத் தேக்கிக் கட்டுப்படுத்தி அணைகள் இட்டு தளைப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். வெறும் நிலத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? நீரைத்

தேக்கித் தளைப்படுத்தினால்தான் வாழ்வியல் செழுமை காணமுடியும். இவ்வாறாக, மனித வாழ்நாள் செழிப் பாகவும் ‘வளமை’ யாகவும் வாழ்ந்து மேன்மையடையக் கூடிய வழிகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அடுத்ததாக நீருக்கும் வானமாகிய மேகத்துக்கும் உள்ள உறவைக் காணலாம்.

## நீரும் மேகமும்

நீருக்கும் மேகத்திற்கும் சுழற்சி முறையில் உள்ள உறவுமுறையின் தொடர்பினை முல்லைப்பாட்டின் வழி அதன் இயல்பை அறியலாம். அகன்ற இடத்தையுடைய இந்த உலகத்தை வளைத்துக் காக்கின்ற சக்கரம், சங்கு பொறிக்கப்பட்ட திருமகளைத் தாங்குகின்ற பெரிய கைகளையுடைய திருமால், மாபலி சக்கரவர்த்தி தாரை வார்த்த நீர் கையில் பட்ட அளவிலே நிமிர்ந்து எழுந்த தோற்றத்தைப்போன்று, மேகங்கள் அலையோசை முழங்கும் குளிர்ந்த கடல் நீரைப் பருகி, வலமாக உயர்ந்து எழுந்து, மலைகளில் தங்கி விரைந்து செல்கிறது. இதனை,

> **“நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு**
> **வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
> **நீர்செல நிமிர்ந்த மாஅல் போல**
> **பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு**
> **கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி”**
> **(முல்லைப்பாட்டு.1-5)**

என்ற பாடல் அடி வழி அறியலாம்.

இச்சூழலைப் பாதிக்கும் வகையில் மாசுபடுத்தி உள்ளோம். இதனால் இதற்கு உரிய பருவ நிலைகள் மாற்றம் அடைந்து வருவதை இன்று அனைத்து விதமான மக்களும் அறிந்துள்ளனர். அறிந்தால் மட்டும் போதாது, இயல்பு வாழ்க்கையில் நம்மால் முடிந்தவரை நம் கண்ணுக்குத் தெரிந்த நீரை மாசுபடுத்தும் செயல்களை தவிர்த்தல் வேண்டும் என உறுதியேற் போம்!

## முடிவுரை

நீருக்கும் நிலனுக்கும் நீருக்கும் மேகமாகிய வானத்திற்கும் இடையேயான இயைபு மூலம் அதன் பிணைப்பு விளக்கப் பட்டுள்ளது. இந்த பிணைப்பினை, பல்வேறு வரையறையற்ற செயல்முறைகளினால் ஐ.நா.சபை உள்ளடக்கத்தின் கீழ் பல்வேறு நாடுகள் ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டாலும், நீர் நிலைகளின் தன்மை பாதிப்படைந்துள்ளதையும் அதன் பின்விளைவுகளையும் இவ்வாய்வின் மூலம் எடுத்துக்கூறி, நீர் தூய்மையின் இன்றியமையாமை விளக்கப்பட்டுள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. டாக்டர் உ.வே.சாமிநாதையர், புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை. 1971.
2. பண்டிதர் நாகை வேதாசலம் பிள்ளை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, ராமநிலைய விவேகானந்த அச்சு இயந்திர சாலை, பதிப்பு 1911.

# ஊற்று நீர் மேலாண்மை: தமிழர் தொட்ட சுனைகள்

**முனைவர் க. சிங்காரவேலு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**இரா. பிரவீணா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

தமிழரின் வாழ்வியல் தமிழகத்து நிலப்பகுதியில் உள்ள நதி, ஆறு, குளம், சுனை, கிணறு ஆகியவற்றை ஒட்டியே பெரும்பாலும் இயங்கிவந்துள்ளது. நீர் நிலைகளை ஒட்டியே மக்கள் குடிபெயரவும் குடியமர்த்தவும் பட்டனர். வேளாண்மை பயின்றனர். நிரந்தர இருப்பிடத்தை அடைந்தனர். நீராதாரத்தைக் கொண்டு உணவினை விளைவித்தனர். உணவுக்காக இடம்விட்டு இடம்பெயர்வது மாறி குடியமர்தல் ஏற்பட்டதும் நீர்வளத்தை மேலாண்மை செய்ய பயின்றதன் விளைவே. நீர் மேலாண்மையில் பல நிலைகளும் வழிமுறைகளும் உள்ளன. நதியைத் தடுத்து அணைக்கட்டுதல், ஆற்றிணைப் பாசணத்துக்குத் திருப்புதல், குளம் அமைத்தல், கிணறு தோண்டுதல் போன்றன போக்கு(ஒழுக்கு) நீர் மற்றும் நிலத்தடி நீரினைப் பயன்படுத்த நம் மக்கள் கையாண்ட பல்வேறு முறைகளுக்குச் சான்றுகளாகும். அவற்றுள் சுனையாகிய ஊற்றுநீரை மேலாண்மை செய்த தன்மையைப் பற்றி தமிழகத்துக் கல்வெட்டுகள்வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### ஊற்று நீர்

நன்னீர் ஆற்றுநீராகவும் ஊற்றுநீராகவும் அருவிநீராகவும் காணப்படுகிறது. ஆற்றுநீர் நிலத்துக்கு மேலே ஓடும் நீராக இருக்கிறது. ஊற்றுநீர் என்பது நிலத்தில் இருந்தும் பாறைகளின் இடுக்குகளிருந்தும் ஊற்றுப் பெற்று சுரந்து வரும் நீர். ஆற்றின் பாதைகளிலிருந்து பிரிந்து மலை மீதிருந்து வழிந்து விழும்நீர் அருவி நீராகின்றது. ஆற்றுநீர், ஊற்றுநீர், அருவிநீர் இவை மூன்றுமே இயற்கையாக அமைந்த நீராதாரமாகும். இவற்றை உருவாக்கவியலாது. ஆனால் பாதுகாத்து மேலாண்மை செய்து தேவையான முறையில் பலவகையில் பயன்படுத்தலாம்.

### சுனை

ஊற்றுநீர் என்பது மண், பாறை, ஆகிய பகுதிகளிலிருந்து நிலத்தடி நீர் ஊற்று பெற்று வெளிவருவதாகும். அந்நீர்த்தேங்கும்

தேக்கங்கள் சுனைகள் எனப்படும். மண்ணில் ஊற்றுப் பெறும்போது கிணறு வெட்டுதல் என்னும் மேலாண்மை பணி மூலம் ஊற்று நீரை மக்களின் பயன் பாட்டிற்குக் கொண்டு வருகிறோம். பாறைகளில் ஏற்படும் ஊற்றுகள் இயற்கையாகவே சுனைகளாக – நீர்த்தேக்கங்களாகக் காணப்படுகின்றன. இச்சுனைகளே குறிஞ்சி, முல்லை, பகுதிகளின் நீராதாரமாக இருந்தன என்பதை நம்பியகப்பொருள்,

**நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்**
**(நம்பி.அ.பொ. 20)**

**குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை**
**(நம்பி.அ.பொ. 22)**

என்று குறிப்பிடுகின்றது. முறைமையில் திரிந்த முல்லை-குறிஞ்சி நிலமான பாலை நிலத்திற்கும் வற்றிய சுனையையே நீராதாரமாகத் நாற்கவிராசநம்பி குறிப்பிட்டுள்ளார்.

**குழிவறுங் கூவல் குராஅ மராஅ**
**(நம்பி.அ.பொ. 20)**

சுனை என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 101 இடங்களில் காணப்படுகின்றது. நீர்நிரம்பிய தளமாகவும் நீர் வற்றிய வாடிய இடமாகவும் இருவேறாக சுனை குறிப்பிடப்பட்டுள்ளது. ஊற்றெடுத்த சுனை அல்லாது வெட்டப்பட்ட சுனையைப் பற்றிய செய்தியும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

**நிலம் நீர் அற்று நீள் சுனை வறப்ப…**
**கடல்நீர் உப்பின் கணம் சால் உமணர்**
**உயங்கு பகடு உயிர்ப்ப அசைஇ, முரம்பு இடித்து**
**அகல் இடம் குழித்த அகல் வாய்க்கூவல்**
**(அகம். 295)**

“குடிநீர் சுனையானது வற்றிப் போன நிலையில் அவ்வழியே செல்லும் உமணர் கிணறு தோண்டினர். உமணர் அவ்வழியே செல்லும் வழிப்போக்கர் தாகம் தீர்க்க இக்கிணற்றை வெட்டினர். நீர்த்தேவையின் காரணமாக ஒரு நிலையான கிணற்றைக் குன்றுகளுக்கிடையே அமைக்கும் நுட்பத்தை உமணர்கள் அறிந்திருக்க வேண்டும்” என்ற செய்தியை ஆய்வாளர் மு. கலையரசன் அவர்கள் குறிப்பிடுகிறார் (பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் காவிதி). சங்க கால உமணர்கள் ஊற்றுகளைக் கண்டறிந்து கிணறு வெட்டி நீரைப் பயன்படுத்திய செய்தி இதன் மூலம் அறியப்படுகிறது.

தமிழகத்தின் சிலவிடங்களில் இச்சுனைகளைப் பயன்பாட்டிற்கு ஏற்ப அமைத்த செய்திகளைப்பற்றி தமிழி, வட்டெழுத்து, பிற்காலத்தமிழ் கல்வெட்டுகள் வழி எடுத்துரைக்கப்படுகிறது.

## தமிழி கல்வெட்டில் காணப்படும் சுனை

தமிழரின் தொல்பழந்தமிழ் எழுத்து வடிவம் என்று ஏற்கப்பட்ட வடிவம் தமிழி எழுத்துவடிவம். தமிழில் எழுதப் பட்ட கல்வெட்டுகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று தமிழரின் நீர்வளத்தில் ஒன்றான சுனையைக் குறிப்பிட்டுள்ளது.

சேலம் மாவட்டம் அம்மன் கோயில் பட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட பொ.ஆ. நான்காம் நூற்றாண்டில் வெட்டப்பட்டது

எனக் கருதப்படும் தமிழிக் கல்வெட்டானது, பரம்பன் கோகூர் என்ற ஊரின் கிழாரின் மகன் வியக்கன் கோபன் க(ண்)ணதேவன் என்பான் அவ்விடத்தில் சுனையை(1.1) தோண்டுவித்தான் என்ற செய்தியைக் கூறுகிறது (1.2). (கணதேவன்-கண்ணதேவன் என்று வாசிக்கப்பட்டுள்ளது).

**"பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன்**
**கோபன் கணதேவன் தொட சுனை"**

(தமிழ்-பிராமி கல்வெட்டுகள் 28:1) இதில் தொட - தொட்ட என்பதனை வெட்டிய என்று கல்வெட்டறிஞர்கள் பொருள்கொள்கின்றனர். இச்சுனை தேப்பாலி என்று அம்மக்களால் இன்று வழங்கப்படுகின்றது. சுனை என்பது இயற்கையாக அமைந்த நீர்நிலைப்பகுதி. அதனை வெட்டவேண்டியதன் அவசியம் கோகூர் கணதேவனுக்கு ஏற்பட்டதெதனால் என்று பார்க்கும்போது, அதற்கு அம்மன் கோயில்பட்டிக்கு அருகே அமைந்த பெரியதொரு சுனை (பாலி) பதில் நல்குகிறது. இச்சுனையானது இன்றும் அரசால் பாதுகாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காகப் படிகள் ஆகியன கட்டப்பட்டு மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது(1.3). அம்மன் கோயில்பட்டி சுனை ஆழமானதாக மக்கள் இறங்கி பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இல்லாமல் இருந்ததைச் கோகூர் கணதேவன் பயன்பாட்டிற்கு எளிதானதாக மாற்ற சுனைவாய்ப் பகுதியை வெட்டி கொடுத்துள்ளான் என்பதை அறிய முடிகிறது. இதனையே கணதேவன் தொட்ட சுனை என்று பொறித்துள்ளனர்.

## வட்டெழுத்துக் கல்வெட்டில் காணப்படும் சுனை

தமிழகத்தின் கலைப்படைப்புகளில் முதன்மை வகிக்கும் சித்தன்னவாசல் குகையோவியம் உள்ள குடைவரைக்குப் பக்கத்தில் அமைந்த சுனைக்கு மேலே ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. அக்கல்வெட்டு பழந்தமிழ் எழுத்து வடிவமான வட்டெழுத்தில் காணப் படுகிறது.

**"சிதிமலி**
**சுனைக்குளம்"**

என்று அக்கல்வெட்டில் எழுத்துகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு அங்குள்ள சுனையைச் சுனைக்குளம் என்று குறிப்பிடுகிறது (2.1). நீர் நிலைகளைப் பற்றிக் குறிப்பிடும் பழங்காலக் கல்வெட்டுகளில் இக்கல்வெட்டும் இடம் பெறுகிறது.

## பிற்காலத் தமிழ்க் கல்வெட்டில் சுனை

கிருஷ்ணகிரி மாவட்டம் மலையாண்டள்ளியில் உள்ள ஏழுசுனை என்னும் பகுதியில் ஏழுசுனைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சுனைக்கு மேலே பாறையில் சுனையைப் பற்றிய கல்வெட்டு ஒன்றினை அண்மையில் அவ்வூரினைச் சேர்ந்த சிவக்குமார் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தினரால்

வாசிக்கப்பட்டது. அக்கல்வெட்டில், தோமப்ப உடையார் மடத்தில் மாரப்பன் என்பவரால் வெட்டப்பட்ட சுனை என்றும் அதனைப் பாதுகாப்பவனைப் போற்றுவேன் என்றும் பிற்காலத் தமிழ் எழுத்துகளாலும் கிரந்த எழுத்துளாலும் கலந்து பொறிக்கப்பட்டுள்ளது(3.1).

**"ஸ்வஸ்திஶ்ரீ ஹேவிளம்பிவ**
**ருஷத்து பங்குனி ஆதின**
**தோமப்ப உடையார் மட**
**ப்பத்தில் மாரப்பன் சைத**
**இந்தச் சுனை மார(ராம)**
**ஸமுத்ரம் இது ரக்ஷி**
**பான் பாதம் தலை மே**
**லே"**

(மார ஸமுத்ரம் என்றும் வாசித்துள்ளனர்) இக்கல்வெட்டானது 350 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கூறுகின்றனர். நீர்த்தேவைக்காகத் தோமப்ப உடையார் மடத்தில் மாரப்பன் என்பவரால் சுனை வெட்டப்பட்டதும் வெட்டப்பட்ட சுனையைப் பாதுகாக்கத் வலியுறுத்தியிருப்பதுமான செய்திகள் கிடைத்துள்ளன.

## தொகுப்புரை

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் பல்வேறு காலத்தைய கல்வெட்டுகளில் நீர்நிலைகளைப் பற்றிய செய்திகள் விரவி காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் நீர் நிலைகளின் அருகிலேயே காணப் படுகின்றன. அக்கல்வெட்டுகளுள் சுனைகள் வெட்டியதற்கான செய்திகளைக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. அவற்றுள் நீர் மேலாண்மையில் ஒரு வகையான ஊற்றுநீர் மேலாண்மை முறையில் சுனைபெறும் பங்கு பற்றியும், அச்சுனை இயற்கையாக அமைந்த விடத்தும் அமையாதவிடத்தும் அதற்கு பயன்முறை வசதிகளை ஏற்படுத்தியவர்கள் பற்றிய செய்திகள் பற்றியும், சுனையைப் பற்றி தமிழி, வட்டெழுத்து, பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் பற்றியும் இக்கட்டுரையின் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன.

## துணைநூற்பட்டியல்


1. ஶ்ரீதர், தி.ஶ்ரீ. (ப.ஆ), தமிழ் – பிராமி கல்வெட்டுகள், 2006, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை: சென்னை.
2. கிருஷ்ணமூர்த்தி, இரா., தமிழ் வட்டெழுத்து, 1990, மனோரமா பிரஸ்: சென்னை.
3. கலையரசன், மு., பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் காவிதி, உங்கள் நூலகம் (மலர் -14, இதழ் -02,மே 2022)
4. நாற்கவிராச நம்பி, நம்பியகப்பொருள், சுபாஷ் சந்திர போஸ் (உ.ஆ.) 2022, இயல் பதிப்பகம்.
5. www.tamilconcordance.in
6. www.tamilsurangam.in
7. KHRDT – KISHNAGIRI HISTORY திருமாறன் தமிழ்ச்செல்வன் வலையொளிப் பக்கம்.

**பின்னிணைப்பு**

**1.1 அம்மன்கோயில்பட்டி**



**1.2 அம்மன்கோயில்பட்டி தமிழிக் கல்வெட்டு**



**1.3 அம்மன்கோயில்பட்டி அருகே அரசு மேலாண்மையில் உள்ள பாலி**



**2.1 சித்தன்னவாசல் வட்டெழுத்துக் கல்வெட்டு**



(புகைப்பட உதவி: மு. கலையரசன் முனைவர் பட்ட ஆய்வாளர்)

**3.1 மலையாண்டஹள்ளி ஏழுசுனை பிற்காலத்தமிழ்க் கல்வெட்டு**



(புகைப்பட உரிமம்: KHRDT – Kishnagiri History திருமாறன் தமிழ்ச்செல்வன் வலையொளிப் பக்கம் தகவல் உதவி: நா. தீபக், தொல்லியல் ஆய்வாளர்)

# பழந்தமிழர் மருத்துவ முறைகளில் நீர்

**முனைவர் மு. பாலமுருகன்**
இணைப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை

**ச. சுந்தரேசன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை

**ஆய்வுச் சுருக்கம்**
இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தவர்கள் சங்க காலத் தமிழர்கள். அவர்தம் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துக் கூறும் வரலாற்றுப் பெட்டகமாக அமைவன சங்க இலக்கியங்களாகும். அச்சீர்மிகு இலக்கியங்களின் வழியும், பிற தமிழிலக்கியங்கள் வழியும் அக்கால மக்களின் மருத்துவ முறையில் நீர் பெற்றிருந்த இடத்தையும், நீரின் இன்றியமையாமையையும் இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**திறவுச் சொற்கள்:** யாக்கை- உடல், புனிறு- குழந்தை பெற்ற ஈரம் காயாத நிலை, காடி-புளித்த நீர், புளித்த பழச்சாறு.

## முன்னுரை

நாடோடியாக வாழ்ந்த மனிதனின் நிலையற்ற வாழ்க்கைக்குக் காரணம் உணவுத் தேடலே ஆகும். நிலையான வாழ்க்கையை வாழ்வதற்கு அவன் திட்டமிட்டு மேலாண்மை செய்த முதல் இயற்கைக் காரணி தண்ணீராகும். நீரின் அவசியத்தை அறிந்து தேவையான இடத்தில் தேக்கம் செய்தும் மிகுதியாகப் பாய்கின்ற இடத்தில் ஆறுகளைத் திசை மாற்றியும் மேலாண்மைச் செய்து வந்துள்ளனர் பழந்தமிழர்கள். நீர் ஒரு மனிதனுக்கு உணவு உற்பத்தி செய்யும் முதன்மைக் காரணியாக மட்டுமல்லாமல் தானே ஒரு உணவாகவும் இருந்து வருகிறது. இக்கருத்திற்கு,

> **"உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே"**
>
> (புறம் :18-21)

என்ற புறநானூற்றுப் பாடலடியும்,

> **"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
> **துப்பாய தூஉம் மழை."**
>
> (குறள்:12)

என்ற திருக்குறளும் சான்று பகர்கின்றன. அந்த வகையில் உயிர்காக்கும் உன்னதச் செயலைச் செய்யும் தண்ணீரானது, உடல் நலம் காக்கும் மருத்துவத்தில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையே இக்கட்டுரை ஆராய முனைகிறது.

**நீரே உயிர் காக்கும் முதல் மருந்து**

பழந்தமிழர்களின் மருத்துவ முறைகள் உடல்நல மருத்துவம், மனநல மருத்துவம் என இரண்டு வகையில் அமைகின்றன. உடல் நல மருத்துவத்தில் உயிர் காக்கும் முதன்மை மருந்து தண்ணீரே ஆகும். இன்றைக்கும் நாம் உட்கொள்ளும் மாத்திரை, மருந்துகள் அனைத்தையும் நீரிலேயே உட்கொள்கிறோம். மேலும் நீரே ஒரு அருமருந்தாகவும் அமைகிறது. நமது உடலில் 60முதல் 70 சதவீதம் நீரால் ஆனது, எலும்பு உட்பட அனைத்து பாகங்களும் நீர் சத்தினையே கொண்டுள்ளது என்று கூறுகிறது நவீன மருத்துவம்.

தாகம் எடுக்கும் போது நீரைப் பருகுவது தாகத்தைப் போக்குவதற்காக மட்டுமல்ல உடலின் நீர் சமநிலையைச் சரியான அளவில் வைப்பதற்கும் ஆகும். நமது உடலில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரால் ஆனது. அத்தண்ணீர் அளவு குறைந்தால் தோல் சுருக்கம், தசை பலவீனம், களைப்பு, எரிச்சல், தலைச் சுற்றல், தலைவலி போன்றவை ஏற்படுகிறது.

நாம் எந்த வேலை செய்கிற பொழுதும் வேலை நடுவே களைப்பு, மன இறுக்கம் சோர்வு ஏற்படும் போது திடப்பொருளை உண்பதில்லை மாறாக நீர், தேநீர், பழச்சாறு, இளநீர் போன்ற திரவப் பொருள்களையே பருகுகின்றோம். இதயம் தொடர்பான நோய்கள் வருவதற்கும் குடிக்கும் தண்ணீருக்கும் நெருங்கியத் தொடர்பு உள்ளதாக இன்றைய அறிவியல் உலகம் கண்டுபிடித்துள்ளது. குறைந்த அளவு தண்ணீர் குடிப்பதால் ரத்தத்தின் அடர்த்தி அதிகமாகிறது, இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுகிறது என்கிறார்கள் மருத்துவர்கள். தண்ணீர், பழரசம் போன்ற நீர்ம உணவுகளை அதிகம் உட்கொள்பவர்களுக்கு இதய நோய்கள் வருவதில்லை என்று உறுதி செய்கின்றனர். மேலும் மலச்சிக்கல் மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் போன்ற நோய்கள் மனிதனை அண்டாமல் இருக்க போதுமான அளவு தண்ணீர் உடலில் தேவைப்படுகிறது என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர். அதேபோல் ரத்தத்தில் உப்பு அளவு அதிகம் உள்ளவர்கள் காலை எழுந்தவுடன் நீர் பருகி வந்தால் உப்பின் அளவு குறைந்து சிறுநீரகங்களின் இயக்கம் சிறப்பாக இருக்கும் என்றும், மேலும் 30க்கும் மேற்பட்ட நோய்களைத் தடுக்க முடியும் என்றும் கருதுகின்றனர். எந்த ஒரு மருந்து பொருளோ வேதியல் பொருளோ இல்லாமல் காலையில் நீர் அருந்தி வருவது மட்டுமே பல்வேறு நோய்களைத் தீர்க்கும் என்பதிலிருந்து நீரின் மருத்துவத் தன்மையை அறிய முடிகின்றது. எனவே உயிர் காக்கும் மருந்தெனக் கருதப்படுவது நீரே என்பதினை உணரமுடிகின்றது.

ஒருவர் மயங்கி விழுந்தால் அவர் எந்த நோயால் பாதிக்கப்பட்டு விழுந்தார் என்பதைக் கண்டறியும் முன் அவர் மீது தண்ணீர் தெளித்து அவருக்குப் பருகுவதற்கு நீர் வழங்கப்படுவது நாம் அனைவரும்

அறிந்த ஒன்றாகும். களைப்பில் உள்ள ஒருவருக்கோ அல்லது நா வறட்சி உள்ள ஒருவருக்கோ எந்த திட உணவையோ அல்லது மருந்தையோ வழங்குவதில்லை நீரே முதலில் வழங்கப்படுகிறது. மனித உடலைப் புத்துணர்ச்சியாக்கி இயங்கச் செய்யும் ஆற்றல் ஊக்கியாகச் செயல்படும் அருமருந்து தண்ணீரே ஆகும். நீர் இல்லாமல் இந்த உலக உயிர்களின் உடல் இயக்கம் இல்லை என்ற உண்மையை,

**"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்"**

(புறம் :18-18)

என்னும் புறநானூற்றுப் பாடலடி வழி அறிய முடிகின்றது. மேலும் இன்றளவும் மருத்துவர்கள் வழங்கும் மருந்துகளில் நீர்மருந்துகள் பெரும்பான்மை என்பது கண்கூடான ஒன்றாகும்.

## உடல் வெப்பம் தணிக்கும் நீர்

மனித உடலியல் கூற்றின் அடிப்படையில் உடல் அதிக வெப்பமானால் வியர்வை சுரப்பிகள் நீரை வெளியேற்றி உடலைக் குளிரச் செய்கின்றது. இயற்கையில் மனித உடலில் ஒரு சிறந்த மருத்துவராகச் செயல்பட்டு உடலைக் குளிர்விக்கிறது. சில நேரங்களில் அதிக உடல் வெப்பத்தின் காரணமாக சுரம் ஏற்பட்டால் நெற்றியில் வெண் துகிலினை நீரில் நனைத்து பத்து போடும் வழக்கம் இன்றும் உள்ளது. இச்செயல்பாடு உயிர் காக்கும் மிக முக்கிய மருத்துவ முறையாகும். உடல் உறுப்புகள் அனைத்தும் அதிக வெப்பத்தின் காரணமாகவே செயலிழக்கின்றன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். குறிப்பாக மூளை மற்றும் இருதயம் ஆகிய இரண்டு உறுப்புகளும் மிக இன்றியமையா தவைகளாகும். ஆகவே அதிக சுரம் அடிக்கின்ற போது அந்த வெப்பம் மூளையைச் சென்றடையாமல் இருக்கவே ஈரத் துணியை நெற்றியில் போடுவர். அவ்வாறு பத்து போடும் போது அது மூளைக்கு செல்லும் ரத்த நாளங்களைக் குளிரச் செய்து மூளை பாதிப்படையாமல் இயங்கச் செய்ய உதவுகின்றது. அனைத்து நோய்களுக்கும் மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்ட இந்த காலத்திலும் ஈரத் துணியைப் பயன்படுத்தி உடல் வெப்பத்தைக் குறைக்கும் வைத்திய முறை உள்ளது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே ஆகும்.

**"தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"**

(புறம் : 2-4-5)

என்னும் புறநானூற்றுப் பாடல் அடி மூலம் நெருப்புக்கு எதிரானது என்றும் வெப்பத்தைக் குறைக்க வல்லது நீர் என்ற கருத்தினைத் தெளியமுடிகின்றது. உடலின் வெப்பத்தால் ஏற்படும் நோய்களுக்கு நீர் அல்லது நீர் மருந்துகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர் பழந்தமிழர்கள்.

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று**

(குறள் : 941)

எனும் குறட்பாவில் மனித உடலில் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும்

சமநிலையில் இருக்க வேண்டும். சமநிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது நோய் உண்டாகிறது என்கிறார் வள்ளுவர்.

மருத்துவர்கள் நாடியைச் சோதித்து உடல் நிலைக்கு ஏற்றார் போல் மருந்துகள் வழங்குகின்றனர். அந்தச் சோதனையில் உடலில் பித்தம் என்பது வெப்பத்தை ஏற்படுத்தும் சுரப்பியாகும். பித்தம் மிகுந்திருந்தால் காய்ச்சல் போன்ற வெப்ப நோய்கள் ஏற்படும் அந்த நோய்களுக்கெல்லாம் நீர்மப் பொருளே மருந்தாக வழங்கப்படுகின்றன.

நாம் தினசரி உடலைத் தூய்மை செய்யும் பொருட்டு, குளிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளோம். உண்மையில் குளித்தல் என்பது உடலில் உள்ள அழுக்கை நீக்கும் செயலாக மட்டும் நடைபெறுவதில்லை, உடலின் வெப்பத்தைக் குறைத்து குளிர்விக்கும் செயலே ஆகும். குளித்தல் என்ற சொல் குளிரவைத்தல் – குளிர்த்தல் - குளித்தல் என மருவியிருக்க வேண்டும். குளித்தல் என்பதற்கு உடலைக் குளிர் விப்பதே சரியான பொருள் என்று கூறுகின்றார் ஆய்வாளர் தொ.பரமசிவம் அவர்கள். மேலும் உடலின் அழுக்குகளை நீக்கும் செயல்பாடாகக் குளித்தல் நடைபெறுகின்றது என்று எடுத்துக் கொண்டால் அழுக்குகளை நீக்கி ஆரோக்கியத்தை வழங்கும் நீர் ஒரு அரிய மருந்தாகவே திகழ்கின்றது. இக்கருத்தை வள்ளுவர் **"புறந்தூய்மை நீரால் அமையும்"** என்று பாடுகிறார். குளிக்கும் செயலைச் சங்க இலக்கியங்களும் பிற இலக்கியங்களும் நீராடுதல், புனலாடுதல், கடல் ஆடுதல், மங்கள நீராடுதல், நீரணி விழா என்றெல்லாம் பதிவிடுகின்றன. மகப்பேறு அடைந்த குலப்பெண்கள் குழந்தையை ஈன்ற புலால் நாற்றம் நீங்கவும், குழந்தைக்கு பால் சுரக்கவும் குளத்தில் நீராடுகின்றச் செய்தியினை,

> **"பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊறப்**
> **புலவுப் புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு,**
> **வளமனை மகளிர் குளநீர் அயர"**
>
> (ம.கா:601-603)

என்னும் மதுரைக்காஞ்சிப் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

ஆற்றில் புது வெள்ளம் பெருக் கெடுத்து வருகிற பொழுது மக்கள் மகிழ்ச்சியோடு அந்நீரினை வரவேற்று அந்த நீரிலே புனலாடுகின்றனர். இது நீரின் வரவை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவது என்று மட்டுமல்லாமல், மலைகளிலே துவங்கி அடர்ந்த காடுகளின் வழி பெருக்கெடுத்து வரக்கூடிய அந்த நீரானது பலவகையான இலைச் செடி கொடிகளில் மோதி மருத்துவ தன்மையோடு பாய்ந்து வருவதாகவும், வரக்கூடிய தண்ணீர் பல நோய்களுக்கு மருந்தாக அமையும் என்ற எண்ணத்திலே பழந்தமிழர்கள் புனலாடி மகிழ்ந்துள்ளனர். இக்கருத்தினை,

> "முளி இலை கழித்தன முகிழ்
> இணரொடு வரும்
> விருந்தின் தீம் நீர் மருந்தும் ஆகும்"
>
> (நற்: 53-6-8)

என்னும் நற்றிணைப் பாடலடி தெளிவுபடுத்துகின்றது. மேலும் பரிபாடல், புறநானூறு, பட்டினப்பாலை போன்ற சங்கப் பாடல்களில் மிகுதியாகவே பதிவு செய்துள்ளனர். இதிலிருந்து பலவகை நோய்க்குக் குறிப்பாக, 'மெய்யின் நடுக்கம்' போன்றவற்றுக்குக் 'கான்யாற்று நீராடல்', அக்காலத்து அருமருந்தாக அமைந்திருந்ததை அறியலாம். இன்றும் நரம்புத் தொடர்பான நோய்களுக்குக் குற்றாலம் போன்ற கான்யாற்று அருவிகளில் குளிக்கும் பழக்கம் அருமருந்தாகக் கருதப்படுவது ஈண்டு ஒப்பு குறிப்பிடும் "நீராடும் மருத்துவ நெறி"க்கு ஏற்ப அமையும் சங்க காலக் 'கான்யாற்று நீராடல்' பழக்கம் அரிய மருத்துவப் பயனுடையதாகும்.

காவிரி ஆறு கடலோடு கலக்கின்ற கழி முகப்பகுதியிலே நெய்தல் நில மக்கள் கடலாடுகின்றனர். கடல் உப்பாகிய உவர் அழுக்குப் போகும்படி ஆற்றிலே பெருக் கெடுத்து வரக்கூடிய நன்னீரிலே நீராடித் தங்கள் உடலில் இருக்கும் அழுக்குகளைத் தூய்மை செய்துள்ளச் செய்தியினை,

**"தேறு நீர் புணரியோடு யாறு தலை மணக்கும்**
**மலி ஓதத்து ஒலி கூடல்**
**தீது நீங்க கடல் ஆடியும்**
**மாசு போக புனல் படிந்தும்"**

(பட்: 96-100)

எனும் பட்டினப்பாலை பாடல் வழி அறிய முடிகிறது.

அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் நீராடுவதால் உடல் ஆரோக்கியம் பெற்று நோயற்ற வாழ்வு வாழ முடிகிறது என்பதையே ஆண்டாள், மாணிக்கவாசகர் மற்றும் திருஞானசம்பந்தர் போன்ற பக்தியாளர்களின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

### நீர் மருத்துவம்

பல்வேறு வாழ்வியல் விழுமியங்களைக் கொண்டு வாழ்ந்து வந்த பழந்தமிழர்கள் தாங்கள் படைத்துள்ள இலக்கியங்களில் அக்கால மக்களின் மருத்துவ முறைகளையும் அம்மருத்துவ முறைகளில் நீரின் பயன்பாட்டையும் பாடிச் சென்றுள்ளனர். இக்கருத்தை,

**"மருந்தாகும் தீம் நீர் மலிதுறை மேய"**

(பரி: 23-4)

என்று பரிபாடல் பாடல் அடி கூறுகிறது. தலைவிக்கு இனிமையான நீரே மருந்தாக அமையும் என்பதே இப்பாடல் அடியின் பொருளாக அமைகிறது. மேலும்,

**"காடி ஆட்டி தராய் சாறும் கன்னல் மணியும்**
**நறு நெய்யும்"**

(சிந்தா:13 2703-1)

என்னும் சீவகசிந்தாமணி பாடலில் பெண்களே வீட்டில் உள்ள பொருட்களைப் பயன்படுத்திக் குழந்தைகளுக்கு மருந்துகளைச் செய்து அளித்துள்ளனர் என்னும் செய்தியினை உணர முடிகின்றது. அவர்கள் செய்யும் மருந்தில் காடி என்னும் சாறு மருத்துவப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அச்சாறு மூலிகைகளைத் தண்ணீருடன் சேர்த்து அரைத்து எடுத்து நொதிக்கச் செய்த நீர்ம

மருந்தாகும். இலக்கியங்களில் காடி என்பது புளித்த தண்ணீர் அல்லது புளித்த சாறு அல்லது புளித்த பழரசம் என்று குறிப்பிடுகின்றது. இதன் மூலம் மருந்துகள் தயாரிப்பில் நீர் இன்றியமையாத ஒன்றாக அமைவதை நம்மால் தெளிய முடிகின்றது.

## நீர் வேட்கையும் நெல்லிக்கனியும்

அதிக நீர் வேட்கையின் காரணமாக உடல் சோர்வுற்றிருப்பவர்கள் நீர் அருந்துவதற்கு முன் நெல்லிக்கனியை உண்டு பின் நீரினைப் பருகிய செய்திகளைச் சங்க இலக்கிய பாடல்களின் வழி அறிய முடிகின்றது.

> "விருந்தின் வெங்காட்டு வருந்தி வைகும்
> அத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்"
>
> (அகம்: 241.12-13)

மேற்கண்ட பாடல் அடிகள் பாலை வழியில் செல்பவர்களின் நீர் வேட்கையைப் போக்கும் வகையில் நெல்லி மரங்கள் அமைந்திருந்தச் செய்தியினை எடுத்து இயம்புகின்றன. இதே கருத்தினை,

> **"நெடுஞ் சேண் வந்த நீர் நசை வம்பலர்**
> **செல் உயிர் நிறுத்த சுவைக் காய் நெல்லிப்**
> **பல் காய் அம் சினை அகவும் அத்தம்**
> **சென்று, நீர் அவணிர் ஆகி,"**
>
> (அகம்: 271.6-9)

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளும் கூறுகின்றன. பாலை நிலத்தின் வழியாகச் செல்வோரின் நா வறட்சியைப் போக்கும் வகையில் நெல்லி மரங்கள் காய்த்து இருக்கின்ற செய்தியினை இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது. வறண்ட நாவில் மீண்டும் உமிழ் நீரைச் சுரக்கச் செய்யும் நுட்பமான மருத்துவ குணத்தை அறிந்து மேலாண்மை செய்து நீர் வேட்கை உள்ளவர்கள் நெல்லிக்கனியை உண்கிற செய்தி பழந்தமிழர்களின் மேலாண்மை மற்றும் மருத்துவ அறிவைப் படம் பிடித்து காட்டும் வகையிலே அமைகின்றன. அவ்வாறே பாலை நிலத்தின் வழியாகச் செல்லும் தலைவனும் தலைவியும் நீர் வேட்கை மிகுதியால் அப்பாலை அந்நிலத்தில் உதிர்ந்திருக்கின்ற சுவையுடைய நெல்லிக்கனியினை உண்டு பின் அங்குள்ள சுனையில் நீரினைப் பருகியச் செய்தியினை,

> **"சுவைக் காய் நெல்லிப் போக்கு அரும் பொங்கர்**
> **வீழ் கடைத் திரள் காய் ஒருங்குடன் தின்று,**
> **வீ சுனைச் சிறு நீர் குடியினள்"**
>
> (நற்: 271-5-7)

என்னும் நற்றிணை பாடல் வழி அறிய முடிகிறது. வறட்சியான பாலை வழியில் கிடைக்கும் நீரானது கலங்கி இருக்கலாம் அல்லது தூய்மையற்று, சுவையற்று இருக்கலாம் எனவே நெல்லிக்கனியை உண்டு பின் நீர் அருந்துவதால் நீர் சுவையாக இருக்கும் என்பதை அறிந்து, நீரினைப் பருகி வந்துள்ளமை சிறப்பான ஒன்றாகும். மேலும் பழந்தமிழர்கள் குடிக்கப் பயன்படுத்தும் குளம் மற்றும் ஊரணிக் கரைகளில் நெல்லி மரங்களை நட்டு வளர்க்கும் வழக்கம் குறிப்பிடத் தக்கதாகும். அவ்வாறு கரைகளில் வளர்க்கப்படும் மரங்களின் வேர்

குளத்தின் அடியில் பரந்து தண்ணீரைத் தூய்மையானதாகவும் சுவை மிகுந்ததாகவும் மாற்றும் என்கிற மேலாண்மைச் சிந்தனை வியப்புக்குரியது.

### தமிழ் மருத்துவத்தில் நீர்

பழந்தமிழர்களின் மருத்துவ முறைகளை நெறிப்படுத்தி சூத்திரங்கள் செய்தவர்கள் சித்தர்கள் ஆவர். உலகில் உள்ள பெரும்பான்மை நோய்களுக்கு தமிழ் வைத்திய மரபில் மருந்துகள் உள்ளன. அம்மருந்துகள் பொடி, சூரணம், பற்பம், சுரசம் களி, அடை, பிட்டு, வடகம், வெண்ணெய், மணப்பாகு, இளகம், கடுகு, பக்குவம், ஊறல், தேனூறல், மெழுகு, ஓமம், குழம்பு, பதங்கம், சுண்ணம், குளிகை, ரசாயனம், குடிகா, குடிநீர், வடிநீர், கசாயம், சாறு, ஆகிய பெயர்களில் பல்வேறு தன்மைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் எந்த மருந்தினை உட்கொள்வதற்கும் நீர் அல்லது பால் போன்ற நீர்மங்கள் இன்றியமையதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேலும் சில மருந்துகள் நீர்மமாகவே உட்கொள்ளப் படுகின்றன. பலவகையான மூலிகைகளை இடித்து பொடித்து கொதிக்க வைக்கும் கசாயம் மற்றும் குடிநீர் போன்றவை நீர்ம மருந்தாகவே வழங்கப்பட்டு வருகின்றன. அறிவியல் வளர்ச்சி பெற்ற இருபத் தொன்றாம் நூற்றாண்டிலும் **சிக்கன் குனியா, பன்றிக் காய்ச்சல், கொரோனா, டெங்கு** போன்ற கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்குப் **பப்பாளி இலைச்சாறு, நிலவேம்பு குடிநீர், கபசுர குடிநீர்** மற்றும் சுக்கு, மிளகு, வெற்றிலை, திப்பிலி என பல்வேறு ரசாயனங்களும், குடிநீர்களும் பயன்படுத்தினோம் என்பது கண்கூடான ஒன்றாகும். அந்த வகையில் தமிழர் மருத்துவ முறையில் எழுவது சதவீதத்திற்கும் மேற்பட்ட மருந்துகள் நீர்மருந்துகளாகவே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### அமுரி நீர் வைத்தியம்

அமுரி மருத்துவம் என்பது சிறுநீரை மருந்தாக உட்கொள்ளும் முறையாகும். வைத்திய நூல்கள் அமுரி நீரை "சிவநீர்" என்று குறிப்பிடுகின்றன. மேலும் வானநீர், ஆகாய கங்கை, அமுத நீர், உவரி, தேறல், மது, கள், மலைநீர் என்பன வெல்லாம் அமுரியைக் குறிக்கும் பல சொற்களாகும். திருமந்திரம் மூன்றாம் தந்திரத்தில் அமுரி தாரணை என்னும் தலைப்பில் இம்மருந்து குறித்து ஆறு பாடல்கள் அமைந்துள்ளன. அமுரி நீரைப் பருகினால் ஒரு வருடத்தில் அறிவு மிக தெளிவாகும் உடலில் எந்த ஒரு நோயும் இல்லாமல் அனைத்து நோயும் தீரும் என்றும் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து எடுத்தால் உடலானது பொன் போல் அழகு பெற்று விளங்கும் என்று கூறுகிறார் திருமூலர். இக்கருத்தினை,

> **"தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்**
> **ஒளிதரும் ஓராண்டில் ஊனம்ஒன்று இல்லை**
> **வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்**

**களிதரும் காயம் கனகமது ஆமே“**

(திரு: 846)

என்னும் திருமந்திரப் பாடல் வழி அறிய முடிகின்றது.

## முடிவுரை

நீர் மேலாண்மை என்பது திட்டமிட்டு நீரினைத் தேக்கி மேலாண்மை செய்வது என்று எடுத்துக் கொண்டாலும் அந்நீரின் தேவையைக் கருதி மேலாண்மை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் நீரானது உயிர் காக்கும் முதல் மருந்து என்ற கருத்தின் அடிப்படையிலேயே பழந்தமிழர்கள் நீரினை மேலாண்மைச் செய்து வந்துள்ளமையை இக்கட்டுரை வழி அறியமுடிகின்றது. தமிழர்களின் நீர் மேலாண்மைச் சிந்தனைகளிளும், தமிழர் தம் வைத்திய முறையில் நீரின் இன்றியமையாமையும் அக்கால இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. பிறந்த குழந்தைகளின் நாவில் தங்களின் நிலத்தில் கிடைக்கின்ற நீரில் இனிப்புக் கலந்து கொடுக்கின்ற முறை சடங்காக நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. இச்சடங்கினை ஆராய்து நோக்கினால் இவ்வவுலகிற்கு வரும் மகவுக்கு முதல் இயற்கை மருந்தாக அமைவது தண்ணீரே என்பதைத் தெளியமுடிகின்றது. இன்றைய ஆங்கில மருத்துவத்திலும் மாத்திரைகள் தவிர்த்து அனைத்து மருந்துகளும் நீர் மருந்தாகவே வழங்கப்படுகின்றன. அதிக சோர்வு உள்ளவர்களுக்கு அல்லது அதிக காய்ச்சல் அடிப்பவருக்கு நரம்புகள் வழியாக சுத்திகரிக்கப்பட்ட நீர்(குளுகோஸ்) ரத்தத்தில் செலுத்தப்படுகிறது. அது ரத்தத்தை நீர்த்துப்போக செய்யும் வேகமாக பாயச் செய்யும் உடலின் உறுப்புகளைச் சிறப்பாக இயங்கச் செய்யும். மேலும் மருந்துகள் வழங்கும் முறைகளை உற்று நோக்கினால் மாத்திரைகள் அளவு மிளகு அளவாகவே இருக்கும், ஆனால் உட்கொள்ளப்படும் நீர் மருந்துகளின் அளவு அதிகமாக இருக்கின்றன. அதற்கு காரணம் நீர் உயிர் காக்கும் உன்னத மருந்து என்பதும், நீர் இல்லாமல் எந்த உயிரும் இல்லை என்பதே ஆகும். அந்த வகையில் தற்காலத்தில் ஹைட்ரோ தெரபி **(Hydro therapy)** என்னும் நீர் மருத்துவம் தோன்றியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

## துணைமை நூல்கள்

1. கதிர்முருகு.முனைவர் - பத்துப் பாட்டு மூலமும் உரையும் முதல் பதிப்பு ஜீன் - 09, சாரதா பதிப்பகம் சென்னை -14
2. கருணாநிதி.மு- திருக்குறள், திருமகள் நிலையம், முதல் பதிப்பு, அகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ் 13, சிவப்பிரகாசம் சாலை, சென்னை – 17
3. சாமிநாதையர் உ.வே - குறுந்தொகை மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு – 1955, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு.
4. சுப்பிரமணியன் ச.வே - அகநானூறு தெளிவுரை முதல் பதிப்பு – டிச.2009,

5. சுப்பிரமணியன் ச.வே - சங்க இலக்கிய மூலமும்உரையும், தொகுதி 2 கலித்தொகை முதல் பதிப்பு 2 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 18.
6. புலியூர்க்கேசிகன் - பரிபாடல் மூலமும் உரையும் முதல் பதிப்பு – அக் 2013, ஜீவா பதிப்பகம், சேப்பாக்கம் சென்னை-05,
7. பரமசிவம் தொ. - பண்பாட்டு அசைவுகள் காலச்சுவடு பதிப்பகம்.
8. மாணிக்க வாசகன். ஞா-திருமந்திரம் மூலமும் உரையும் உமா பதிப்பகம்.

# குறுந்தொகையில் நீர் வளம்

**கா. பிரியங்கா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

சமூகத்தின் தேவையை முன்வைத்து கலை, இலக்கியங்கள் உருவாகி வருகின்றன. குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்தில் தோன்றும் இலக்கியங்களின் பாடுபொருள், காலப் போக்கில் மாற்றமடைகின்றது. சங்க இலக்கியங்கள் சங்க கால மக்கள் வாழ்வியலை காட்சிப்படுத்துபவை. சங்க காலத்தில் சமூக நடத்தைகளாக இருந்தவை இலக்கியங்களில் மிகைப்படுத்தப்படாமல் பண்பாட்டுச் சூழலுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஐந்திணைகளில் உள்ள கருப்பொருட்களின் இயல்புகளுடன் மக்களது செயல்பாடுகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இயற்கையில் இவ்வுலகமும் உள்ளடங்கியது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலைமுகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறுகளும், மரங்களும், மலர்களும், உயிரினங்களும் அதன் நிலைக்களன்கள் ஆகும். சங்க கால மாந்தர்களின் வாழ்வு நிலத்தையும் நீரையும் நம்பி இருந்தது. இக்கட்டுரை குறுந்தொகையில் கூறப்பட்டுள்ள நீர் வளங்களின் முக்கியத்துவம் சார்ந்த தகவல்கள் குறித்து ஆராய்வதாக அமைகிறது.

## நீரும் மனித வாழ்வும்

உலக நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் முன்னோடியாக திகழ்வது தமிழரது நாகரிகமும், பண்பாடும் ஆகும். தமிழரது பண்பாட்டில் நீருக்கு முக்கிய இடம் உண்டு. மனிதனின் பிறப்பு முதலாக இறப்பு ஈராக அனைத்து அசைவுகளிலும் நீரின் பங்களிப்பு இருந்துள்ளதை சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. **திருமந்திரம், தேவாரம், திருவாசகம்** முதலானவற்றில் ஐவகைப் பருப்பொருள்கள் குறிப்பிடப்பட்டு அவற்றுள் நீரின் சிறப்புகள் விளக்கப் பட்டுள்ளன.

இனிமையும், எளிதில் புழங்கும் தன்மையும் நீரின் பண்புகளாகும். இப்பண்புகள் பண்பாட்டின் கூறுகளாக உள்ளன. **'தாயைப் பழிப்பினும் தண்ணீரைப் பழிக்காதே'** எனும் முதுமொழித் தாயை விட நீரினை உயர்வாக எண்ணியதை உணர்த்துகின்றது. பழந்தமிழர்கள் வாழ்வில் நீராடுதல் என்பது முக்கியமான சடங்காகக் கருதப்படுகிறது. நீர் உடலைத் தூய்மைப்படுத்துவதோடு உள்ளத்தையும் செம்மைப்படுத்தும் இயல்புடையதாகும். நீர் வாழ்வின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானது. இது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்தது ஆகும்.

தொல்காப்பியர் ஐம்பெரும் பூதங்களில் நீரினை மூன்றாவதாகக் குறிப்பிடுகிறார்.

**"நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"**

**(தொல்.பொருள். 1581)**

என்ற தொல்காப்பிய நூற்பா இதைத் தெளிவ்படுத்துகிறது. இவ்வாறு, தமிழர்களின் வாழ்க்கையில் நீரானது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப் படுகின்றது. உலகம் உருவாகவும், உயிர்கள் தோன்றவும் அடிப்படையாக அமைவது நீராகும். இந்நீரினைத் தமிழர்கள் உயிரினும் மேலானதாகக் கருதியதுடன் பாதுகாத்துப் பராமரித்தும் வந்துள்ளனர். சங்க இலக்கிய நூலான குறுந்தொகையில் நீர் என்ற சொல் 56 இடங்களில் கையாளப்பட்டுள்ளது. (சங்க இலக்கியச் சொல்லடைவு, பெ.மாதையன், ப- 421 )

**நீர் வளங்கள்**

தமிழர்களின் சிறந்த தொழிலாக உழவுத் தொழில் விளங்கியது. உழவுக்கு நீர் மேலாண்மை ஆதாரமாகும். இதன் காரணமாக, நமது முன்னோர் பருவம் தவறாமல் பெய்யும் மழைநீரைத் தேக்கி வைக்க நீர்நிலைகளை உண்டாக்கி, அவற்றிலிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தியுள்ளனர். இயற்கையின் கொடையான நீர் வளமானது சங்ககாலத்தில் மிகவும் செழித்திருந்ததைக் குறுந்தொகைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. குருகுகள் உறங்குவதற்கு குளிர்ச்சியான நிழலைத் தரும் புன்னை மரமானது கரையைச் சாரச்சார உடைகின்ற அலைகளால் வீசப்படும் துளியால் அரும்புகின்ற நீர்பரப்பு,

**"வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை**
**உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்"**

**(குறுந்.5:)**

என்ற வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியை விளக்குவதற்குக் கையாண்டச் சொற்களை வைத்து இவற்றின் வளமை அறியப்படுகிறது. தலைவன் நீண்ட நாட்களாக தலைவியை மணந்துக் கொள்ளாமல் காலம் தாழ்த்துகிறான். இதனால் வருந்தியத் தலைவி, தமது களவு வாழ்க்கைக்குச் சான்றாக இருந்தது குருகு மட்டுமே என்று கூறுகிறாள். இதனை கூறும்போது,

**"தினைத்தா ளன்ன சிறுபசுங் கால**
**ஒழுகுநீ ராரல் பார்க்கும்**
**குருகு முண்டுதான் மணந்த ஞான்றே"**

**(குறுந்..25)**

என்கிறாள். இதில் ஆரல் மீன் இருக்கும் நீர் பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. மற்று மொரு பாடலில் நீல மணியின் நிறத்தை ஒத்த கரிய நீரை உடைய கடற்கரையின் தலைவன் என்பதை,

**"அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப"**

**(குறுந்.49)**

என்ற வரிகளில் பெற முடிகிறது. நீர்நிலை தலைமக்களின் நட்பின் ஆழத்தைக் குறிப்பதற்குரிய உவமையாகவும், குறியீடாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது தெளிவாகின்றது.

**"சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**
**நீர் ஓரன்ன சாயல"**

**(குறுந். 95)**

என்ற பாடலடிகளால் தலைவியின் சாயல் நீருடன் ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. மக்கள் விருந்தினர்களை அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதைக் கடமையாகப் போற்றினர். கார்காலத் தொடக்கத்தில் குறிர்காற்று வீசும் வேளையில் பிச்சைக் கேட்டு வந்தவர்களுக்கு வெண்சோற்றுடன் செம்புநிறைய வெந்நீரைத் தந்து உபசரித்துள்ளதை அறிய முடிகிறது.

**நீர் ஆதாரங்கள்**

மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என அனைத்து உயிர்களுக்கும் நீரை அளிக்கும் மூலங்களாக நீர் ஆதாரங்கள் உள்ளன. நிலத்தடிநீர், மேற்பரப்பு நீர், ஆற்றொழுக்கு நீர் என பல்வேறு மூலங்களிலிருந்தும் நமக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. இத்தகைய நீராதாரங்களிலிருந்து நீரைப் பயன்படுத்திக் கொண்டு, எஞ்சிய நீரைப் பாதுகாத்தல் என்பது நீர் மேலாண்மைக்கு உதவுகிறது. சங்க கால மக்களின் நீரியல் சார்ந்த அறிவினை சங்கப் பாடல்கள் தெளிவுற எடுத்துக் காட்டுகின்றன. குறுந்தொகையில்,

**"தீம்நீர்"**

(குறுந்.5:3)

**"ஒழுகுநீர்"**

(குறுந்.25:4)

**"மாநீர்"**

(குறுந்.49:2)

**"குண்டு நீர்"**

(குறுந்.91:2)

**"நெடுநீர்"**

(குறுந்.107:5)

**"தெண்நீர்"**

(குறுந்.196:3)

**"பெருநீர்"**

(குறுந்.345:7)

முதலான சொற்கள் கையாளப்பட்டுள்ளதன் வழி இனிமையான, ஓடுகின்ற, பெரிய, அகலமான, நீண்ட, தெளிந்த, அகன்ற நீர் நிலைகள் இருந்துள்ளதை அறிய முடிகிறது. இவற்றுள் 'குண்டுநீர்' என்ற சொல்லாட்சியானது, பள்ளத்திலிருக்கும் நீர் (107), சுனைநீர் (291), ஆழமானது (300) என்று மூவிடங்ககளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. எனவே, 'ஆழமான' என்னும் பொருளினைக் குறிக்க 'குண்டு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை இதன்வழி அறியலாம்.

முல்லை நிலம் வளமான நீர்நிலைக் கொண்டதாக இருந்துள்ளது. நீர் ஒழுகும் பூக்களிலிருந்து ஒழுகும் நீரானது சேவலின் பிடரியிலும், புதரிலும் ஒழுகுகின்ற மணம்வீசும் முல்லை நிலத்தை,

**"புதல் நீர் வாரும் பூ நாறு புறவில்"**

(குறுந்.242)

என்ற பாடலிலும், மேகங்கள் சூழ் அகன்ற முல்லை நிலத்தை,

**"கார் புறந்தந்த நீர் உடைலியன் புலத்து"**

(குறுந்.162:1)

என்ற பாடலிலும் அறிய முடிகிறது. அருவியின் தோற்றத்தைக் குறிப்பிடுகையில், மலைச்சாரலில் வீழ்ந்து வளைந்து செல்லும் அருவி, தரையில் வளர்ந்தோடும் பாம்பு போல் தோற்றம் அளிக்கிறது என்பதனை,

**"கல்பொருள் இரங்கும் கதழ்வீழ் அருவி**
**நிலங்கொள் பாம்பின் இழிதரும்"**

(குறுந்.134)

என்ற பாடலடி குறிப்பிடுகிறது. பாம்பு என்பது ஒருவர் கண் இமைக்கும் நொடியில் தொலைதூரத்தில் ஊர்ந்து செல்லும் தன்மை கொண்டது. இங்ஙனம் பாம்பினை அருவியுடன் ஒப்பிடுவதால் நீரின் அளவு, அழுத்தம், வேகம் அதிகம் என்பதும், மலைப்பகுதி என்பதால மக்களுக்கு இதம் நல்கும் என்பதும் குளிரான தட்ப வெப்பநிலையும் நிலவியது என்பதும் அறிய முடிகிறது.

மேகமானது ஓயாத அலைகளுடன், குளிர்ச்சி பொருந்திய பெரிய கடலானது வற்றிப் போகுமளவிற்கு நீரை முகந்து அதன் பாரம் தாங்க முடியாமல் பெரும் சப்தத்துடன் மழையாகப் பொழிந்தது. அயராது மழை பொழியும் போது நிலத்தினைக் காண முடிவதில்லை. அத்தகைய அளவிற்குப் பெருமழையாகப் பொழிந்தது. இதை,

**"நீர்பரந் தொழுகலின் நிலம் காணலரே"**

(குறுந்.355)

என்ற பாடலடி வழி உணர முடிகின்றது. இதன்மூலம் பெரும் மழையினால் ஏற்படக்கூடிய காட்டாறு, முல்லை நிலத்திற்கு இயற்கை நீர் ஆதாரமாக அமைகின்றது. மிகுதியான அளவில் நீரைத் தேக்கி வைக்க ஏதுவாகச் சங்க காலத்தில் அணைகள் இருந்துள்ளன. அணைக் கட்டுகள் தண்ணீரைச் சிறைப் படுத்துவதாலும் கற்களால் கட்டப்படு வதாலும் சங்க இலக்கியங்களில் அணைக் கட்டுகள் 'கற்சிறை' என்று குறிப்பிடப் பட்டுள்ளன. இதனைத் தொல்காப்பியரும்,

**"வருவிசைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமையானும்"**

(தொல்.பொருள்.புறத்.1011)

என்று குறிப்பிட்டுள்ளார். அணை அமைத்து நீரைச் சேமித்திருப்பதை,

**"வருத்திக் கொண்ட வல்வயக் கொடுஞ்சிறை**
**மீதுஅழி கடுநீர் நோக்கி"**

(குறுந். 346)

என்ற அடிகள் எடுத்துரைக்கிறது. எனவே, நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்த வளைவான கரைச்சுவர்களை அமைத்துள்ளனர். அணை, அரண் இரண்டுமே பொங்கி வரும் காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி நீரைத் தேக்கி வைக்கும் செயற்கை நீர் நிலையாகும். அணையில் தேக்கி வைக்கப் படும் நீரானது ஏரி, குளம், ஊருணிக்கு நீர் ஊட்டும் வாய்க்காலாக அமைகிறது.

**"ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே**
**இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்**
**துன்னல் போகின்றால் பொழிலே யாம்எம்**
**கூழைக்கு எருமணம் கொணர்கம் சேரும்**
**ஆண்டு வருகுவள் பெரும் பேதையே"**

(குறுந்.113)

எனும் பாடல் ஊருக்கு அண்மையில் பொய்கையும் அதனருகில் காட்டாறும் உள்ளது. அவ்வாற்றங்கரைக்கு வெள்ளிய நாரை மட்டுமே வரும். வேறு எவரும் அங்கு வரமாட்டார்கள். நீ வந்து அங்கு தலைவியைச் சந்தித்துக்கொள் என்று தோழி தலைவனுக்கு குறியிடத்தைச் சுட்டுவதாக அமைகிறது. பனிக் காலங்களில் குளிர்நீர் உண்ண விரும்பாதபோது வெந்நீர் பருகியுள்ளனர் என்பதை,

**"அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்**
**சேமச் செப்பல் பெறீஇயரோ"**

(குறுந்.277)

இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. சுடவைத்த நீரை வெப்பம் குறையாமல் பாதுகாக்கச் ‘சேமச்செப்பு’ என்ற கலத்தைப் பயன்படுத்தியுள்ளதைத் தெளி வாக்குகின்றது. இதன்மூலம் சங்க கால மக்கள் குடிநீர்ப்பராமரிப்பு முறைகளில் தேர்ந்தவர்களாக இருந்தமையை உணர முடிகிறது.

நெய்தல் நிலத்தின் வளம்பொருந்திய நீர்நிலைக் காட்சியை நமது கண்முன்னே நிறுத்து பாடலாக 304 –ம் பாடல் உள்ளது. உலர்ந்த மூங்கிலின் வலிமையுள்ள கழியை தாங்குதற்கரிய நீர் வழியில் வீசி எறிந்து, பரதவர்கள் கொம்புடைய சுறா மீனைப் பிடிக்க முயல்கின்றனர். நீளமான கடற்கரையில் அன்னமும், கடற்கரைச் சோலையில் பூக்களும் நிரம்பிய நீர்நிலைக் காட்சியானது,

**“கொல் வினை பொலிந்த கூர் வாய் எறி உளி**
**முகம் பட மடுத்த முளி வைதிர் நோன் காழ்**
**தாங் அருநீர் சுரத்து எறிந்து வாங்கு விசை”**

(குறுந்.304:1-3)

என்ற பாடலில் இடம் பெற்றுள்ளது. தலைவியின் கண்களுக்கு ஒப்புமைக் கூற வந்த புலவர், மலர்களைச் சுற்றும் வண்டுகள் போல் உள்ளதை குறிப்பிடும் போது அம்மலர்களின் பிறப்பிடமாக, ஆழமான நீரையுடைய பசுமையான சுனையைக் குறிப்பிடுகிறார். மலைச்சாரலில் இருந்த ‘சுனை’ எனும் நீர்நிலையைப் பற்றிய சான்றாகும் பாடல்,

**“குண்டு நீர் பைம் சுனை பூத்த குவளை”**

(குறுந்.291:6)

என்பதாகும். இச்சுனை இருந்த இருப்பிடத்தை நாம் அறிந்துகொள்ள,

**“பாரி பறம்பில் பனி சுனை தெண்நீர்”**

(குறுந்.196:3)

என்ற பாடல் உதவுகிறது. பாரி மன்னனின் பறம்பு மலையில் இருந்த ‘சுனை’ எனும் நீர்நிலைக்கு இப்பாடல் சான்றாகிறது.

## நீரில்லா நீர்நிலைகள்

நீரைத் தேவையான நேரத்தில் பயன் படுத்திக் கொள்ள உருவாக்கப்பட்டவை நீர் நிலைகளாகும். கால மாற்றம், பருவ மாற்றம், சூழல் மாற்றங்களால் ஏதேனும் ஒரு காரணத்தால் நீர்நிலைகளில் உள்ள நீர் இல்லாமலிருக்கும் நிலை உருவாகிறது. பெரிதாக பாலை நிலத்தில் காணப் படும் வெப்ப மிகுதியியைப் நீர் நிலைகளில் நீர் இருப்பது அரிது. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாலைத் திணைப் பாடல்களில் நீரில்லா நீர் நிலைகளைப பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றை,

**“நெடும் கழை திரங்கிய நீர்இல் ஆரிடை**

(குறுந்.331:1)

**“நெடு மூது இடைய நீர் இல் ஆறே”**

(குறுந்.283:8)

**“வறும் கயம் துழைஇய இலங்கு மருப்பு யானா”**

(குறுந்.215:4)

**“நீர் இல் வைப்பின் சுரன் இறந்தோரே”**

(குறுந்.211:7)

என்ற பாடல்கள் மூலம் அறியலாம். நீரில்லாமல் வறண்ட நேரத்தில் தாகம் எடுக்கும்போது, மரப்பட்டையை மென்று தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டிய நிலை உருவாகியதை,

**“நீர் நசை வேட்கையின் நற் மென்று தணியும்”**

(குறுந்.274:5)

என்ற பாடலில் அறிந்து கொள்ள முடிகிறது.

### நீரொழுகும் பூக்களும் கண்களும்

கண்களில் நீர் ஒழுகுவது இயல்பான ஒன்று. கண்களில் நீர் வடிதலை 'கண்ணீர்' என்பர். பூக்களில் வடியும் நீருக்கு எப்பெயரை வழங்க முடியும்? நீரொழுகும் மலர்களை குறுந்தொகைக் காட்டுகிறது. மழைக்காலத்தில் மலரும் பச்சிப்பூவின் அரும்புகளிலிருந்து நீர் ஒழுகும் காட்சியினை,

**"மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை"**
**(குறுந்.168:1)**

**"மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்"**
**(குறுந்.222:5)**

என்ற பாடல்களில் காணமுடிகிறது. இவ்விரு பாடல்களையும் சிறைக்குடி யாந்தையார் எனும் புலவரே பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நீரினுள் உள்ள மலருக்கு ஒப்பாக, மலர் போன்ற கண்களிலிருந்து வழியும் நீர் கூறப்பட்டதை,

**"தெண்ணீர் நிகர்மலர் புரையும்**
**நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே"**
**(குறுந்.329:6-7)**

என்ற பாடல் தெளிவுபடுத்துகிறது. நீர் ஒழுகும் பூக்களையும், நீர் ஒழுகும் கண்களையும் குறுந்தொகைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

### முடிவுரை

நீருடனான மனித வாழ்வு பிரிக்க இயலாத ஒன்றாகும். நீர் வளத்தின் சிறப்பை உணர்ந்த பண்டைத் தமிழர்கள் அதனைப் பயன்படுத்துவதுடன் பாதுகாப்பதற்கான வழிகளையும் சிந்தித்துள்ளனர். செழிப்பான நீர் வளங்கள் அன்றைய காலத்தில் இருந்துள்ளதை குறுந்தொகை வழி அறியமுடிகிறது. நீரில்லாமல் வறண்ட நீர்நிலைகளும் குறுந்தொகையில் பதிவிடப்பட்டுள்ளன. நீரைக் குறிப்பிட வேண்டிய இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அடைகள் வழியாக நீர்நிலைகளின் அளவு பதிவாகியுள்ளதை அறியமுடிகிறது.

### பார்வை நூல்கள்


1. மாணிக்கவாசகன், ஞா. தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், 2017, சென்னை – 01.
2. சாமிநாதையர், உ.வே. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம், எண் 2, அருண்டேல் கடற்கரை சாலை, பெசன்ட் நகர், 2017, சென்னை.

# அம்பை சிறுகதைகளில் நீர்

**வெ. சந்தியா**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**ஆய்வுச் சுருக்கம்**

சிறுகதை இலக்கியமானது கூற வந்த கருத்துக்களை எளிதாகவும், விரைவாகவும் மக்களிடையே கொண்டு சேர்க்கும் படைப்பாகும். தமிழர் பண்பாட்டில் நீரானது மனித வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை முக்கிய அங்கமாகத் திகழ்கின்றது. தமிழ் இலக்கியங்களில் காணலாகும் சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான நீர் குறித்த பதிவுகள் மூலம் நீரின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது. அத்தகைய நீரானது அம்பை சிறுகதைகளில் பெற்றுள்ள சிறப்புகள் மற்றும் நீரின் பல்வேறு விதமான வடிவங்கள் ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய உள்ளது.

**முன்னுரை**

மனித குலத்திற்கு இயற்கையின் வரப்பிரசாதமாக கிடைத்திருப்பது நீர் ஆகும். மனிதன் மட்டுமில்லாமல் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கும் நீரானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகவே உள்ளது. நம் முன்னோர்கள் குளங்கள், ஏரி போன்றவை அமைத்து நீர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். இத்தகைய நீர் தேக்கங்களை அழிக்காமல் பாதுகாப்பது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும். மனித உடல் ஆரோக்கியத்திற்கும், உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் ஊட்டச் சத்துக்களை கொண்டு சேர்க்கவும் நீர் பயன்படுகிறது. விவசாயத் தொழிலில் உணவு உற்பத்தி செய்யவும் நீர் பயன் படுகிறது. இத்தகைய தன்மை கொண்ட நீரின் இயல்புகளை அம்பை சிறுகதைகளின் வழியே ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழரும் நீரும்**

பஞ்சபூதங்களில் ஒன்றான நீரானது மனித வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. நீர் கிடைப்பதற்கு பல வழிகள் இருந்தாலும் மழைதான் பெருமளவில் நீரினைத் தருகின்றது. “ஒரு நாடு நில வளத்தாலும், நீர் வளத்தாலும் பெருமை பெறுகின்றது. மலை வளத்தாலும், கனிம வளத்தாலும், கானக

வளத்தாலும் அது உயர்வும் மாண்பும் பெறுகின்றது". (எ.கு.தி.சிவகுமார்-2004-ப.5). தமிழர்களின் பண்பாட்டில் நீரானது சடங்குப் பொருளாகவும், வழிபாட்டிற்கு உரியதாகவும் விளங்குகின்றது. நீர்நிலைகளை கடவுளாக வணங்கும் வழக்கமும் தமிழர்களிடத்தில் உள்ளது. மக்கள் வழிபாடு செய்யும் கோயில்களில் நீரின் பயன்பாடு என்பது இன்றியமையாததாகவே இன்றளவும் இருக்கின்றது. நீரோடு தொடர்புடைய விழாக்களான தை நீராடல், ஆடிப்பெருக்கு போன்றவை தமிழர்களின் பாரம்பரிய விழாக்களாகும். மேலும் தமிழகத்தில் பல்வேறு வகையான நீர்நிலைகள் இருந்துள்ளன. அவற்றின் பெயர்களையும் விளக்கங்களையும் கீழே காணலாம்.

**தமிழகத்தின் நீர்நிலைப் பெயர்களும் விளக்கமும்**

**அகழி** - கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்.

**அருவி** - மலை முகட்டுத் தேக்கநீர் குத்திட்டுக் குதிப்பது.

**ஆழிக்கிணறு** - கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு.

**ஆறு** - இரு கரைகளுக்கிடையே ஒடும் நீர்ப்பரப்பு.

**இலஞ்சி** - பல வகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்.

**உறைக்கிணறு** - மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு,

**ஊருணி** - மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை

**ஊற்று** - அடியிலிருந்து நீர் ஊற்றுவது

**ஏரி** - வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

**கட்டுக்கிணறு** - சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு.

**கடல்** - அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும்பரப்பு.

**கண்மாய்** - பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்.

**குண்டம்** - சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை

**குண்டு** - குளிப்பதற்கேற்ற சிறு குளம்

**குமிழி ஊற்று** - அடிநிலத்து நீர், நில மட்டத்திற்குக் கொப்புளித்து வரும் ஊற்று.

**கூவல்** - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை

**கேணி** - அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு

**புனற்குளம்** - நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.

**பூட்டைக்கிணறு** - கமலை நீர்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

**(தமிழ்நாடு அரசு – ஒன்பதாம் வகுப்பு – தமிழ்- ப.36)**

## அம்பை சிறுகதைகளில் நீரின் சிறப்புகள்

### நீரின் தன்மை

நீரின் தன்மையை உணர்த்தும் வகையில் ஒரு பெண் குழந்தைக்கு ஆற்றின் பெயர் வைக்கப்பட்டுள்ளதை "அன்னங்களும் பட்சிகளும் நெய்யப்பட்ட ஒரு ரோஜா வண்ணப் புடவை" என்ற சிறுகதை பதிவு செய்துள்ளது. அலக்நந்தா என்பது இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தில் சிவாலிக் மலையில் உற்பத்தியாகும் ஒரு ஆறாகும். இந்த அலக்நந்தா ஆற்றின் பெயரை கொண்ட நான்கு வயது பெண் குழந்தையின் இயல்பை "அவள் எந்தச் சேறும், சகதியும், பாசியும் சேர்க்காமல் ஒடிக் கொண்டே இருப்பவள். தொடக்கம், முடிவு இல்லாதவள்" என அவளது வளர்ப்புத் தாயான கீதா கூறுவதிலிருந்து ஆற்றின் தன்மையும், குழந்தையின் இயல்பும் ஒன்றாக இருப்பதை கதை உணர்த்துகிறது. மேலும் பெண் குழந்தைகள் அதிக அளவில் அனாதையாக்கப்படும் சூழலையும் இக்கதை வலியுறுத்தியுள்ளது. அலக்நந்தாவை டில்லியின் அனாதை ஆசிரமத்திலிருந்து தத்தெடுத்து தன் மகளாக்கி கொண்ட கீதாவின் தாயுள்ளத்தையும் கதை வெளிப் படுத்தியுள்ளது. [அம்பை-2000-பக்.111-116].

### நீரின் மேன்மை

மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் நீரானது மனித உயிர் பிரிந்த பின்பும் இறந்தவர்களின் அஸ்தியை கரைப்பதற்கான இயற்கையின் சக்தியாக இருப்பதை "மஞ்சள் மீன்" என்ற சிறுகதையின் மூலம் அறிய முடிகின்றது. இறந்த குழந்தையின் அஸ்தியை கரைப்பதற்காக கடலுக்கு வந்திருக்கும் தாய்க்கு மீனவர் வலையில் இருந்து விழுந்த ஒரு மஞ்சள் மீனானது அவளது குழந்தையை நினைவூட்டுகிறது. குழந்தையின் அஸ்தி கரைக்கப்பட்ட கடலில் மீனவப் பையன் மூலம் மஞ்சள் நீரானது கடலில் சேர்க்கப்பட்டு அந்த தாயால் காப்பாற்றப்படுகிறது. குழந்தையை இழந்த தாயின் வருத்தமும், வேதனையும் அந்த மஞ்சள் மீனை காப்பாற்றுவதன் மூலம் ஈடு செய்யப்படுவதாக கதை அமைந்துள்ளது. நிலத்தில் உயிர் வாழ முடியாத மஞ்சள் மீன் நீரின் மூலம் வாழ்க்கைப் பெறுவதிலிருந்தும், குறை மாதத்தில் பிறந்து இறந்த குழந்தையின் அஸ்தி நீரில் கரைக்கப்படுவதிலிருந்தும் நீரின் மேன்மையை இக்கதையின் வழியே உணர

முடிகின்றது. மேலும் ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு தருணத்திலும் நீரானது முக்கியப் பங்கு வகிப்பதையும் கதை வெளிக்கொணர்ந்துள்ளது. [அம்பை-1988-பக்.135-137]

### அம்பை சிறுகதைகளில் நீரின் வடிவங்கள்

### ஆறும் கடலும்

ஆறுகளைப் பற்றி அதிகம் தெரியாத தரூவிற்கு பத்து வயதில் காவிரியின் மூலமாக ஒரு சிறு சதுரக்குழியின் கீழே ஓடிய நீரைக் காண்பித்துள்ள நிகழ்வை "ஆறு" என்ற சிறுகதை குறிப்பிடுகிறது.. காவிரி ஆறு தமிழகத்தின் தாய் தமிழகத்தைப் பன்னெடுங்காலமாக வளப்படுத்தி வருவது காவிரி. குடகுமலைச் சாரலில் பிரம்மகிரிப் பகுதி தலைக் காவிரியில் காவிரி தோன்றுகிறது. சுமார் 802 கி.மீ. நீளமுள்ள காவிரி கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு, புதுவை மாநிலங்களின் வழியாக ஓடி அலை கடலை அடைகின்றது. சோழ வள நாட்டை நெற்களஞ்சியமாக மாற்றி அங்குக் கலைகளை, காவியத்தை வளரச் செய்து தமிழ் பண்பாட்டை காத்து வந்தது, காத்து வருவது காவிரி ஆகும். சோழர்கள் காவிரிக்குக் கரை கட்டினர். கல்லணை கட்டினர் காவிரியைப் பராமரிக்க காவிரிக்கரை விநியோகம் என்னும் வரி விதித்தனர்." கங்கையின் சிறப்பை தமிழ் நாட்டில் காவிரி பெற்றுள்ளது. காவிரி நீரும் அது அணைத்துச் செல்லும் மண்ணும் இணைந்து விளைந்தவை நம் பண்பாடும், கலை மிக்க வாழ்வும்" (எஸ்.ஆர்.சுப்ரமணியம் -2018-பக்.221-239) காவிரி மட்டுமில்லாமல் அம்பையின் சிறுகதைகளில் தமிழ்நாட்டின் தாமிரவருணி ஆறும் இடம் பெற்றுள்ளது. இந்திய ஆறுகளான கங்கை, யமுனை, கோதாவரி, அலக்நந்தா, சந்திரபாகா முதலிய ஆறுகளும், பிரேசில் நாட்டில் பாயும் பொம்பா நதியும் அம்பையின் சிறுகதைகளில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சென்னையின் மெரினா கடற்கரையும், மும்பையின் வெர்சோவா கடற்கரையும் அம்பையின் கதைகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### காடும் நீர்நிலைகளும்

கணவனின் வியாபார முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்து அந்த வியாபாரத்தில் கூட்டாளியாக பங்கு கிடைக்காத போது காட்டுக்கு போக விரும்பும் செந்திருவின் வனப்பயணத்தை 'அடவி' என்ற சிறுகதை விவிரிக்கின்றது. செந்திருவின் மனதில் இருந்தவை உண்மைக் காடுகள் அல்ல. அகநானூற்றுக் காடுகள் இருபுறமும் பெரிய பாறாங்கற் களிலிருந்து தேன்கூடுகள் தொங்க,

இடையே பால்போல் அருவி விழும் காடுகள், செந்திருவிற்கு வாகன ஒலிகள், பேச்சொலிகள், நடை ஒலிகள், வீடுகளில் இயங்கும் மின்கருவி ஒலிகள் இவற்றை எல்லாம் விட்டுத் தூரத்தே ஒரு காட்டுக்கு செல்ல வேண்டும். வன இலாகா அதிகாரியைத் தொடர்பு கொண்டு அவள் செய்திருந்த விண்ணப்பத்துக்கு அந்த வனத்தின் அரசு விருந்தினர் விடுதியில் அவள் தங்கலாம் என பதில் வந்துவிட்டது. செந்திருவின் வனப்பயணத்துடன் சீதையின் அயணமும் சீதாயணமாக இக்கதையில் புனைந்து கூறப்பட்டுள்ளது. செந்திருவின் காட்டு வழிப் பயணம், இராமயணத்தில் சீதை தன் கதையைத் தானே புனைந்து கொள்வதாக அவள் எழுதும் கதை, காட்டுவாசி பெண்களோடு செந்திருவுக்கு ஏற்படும் அனுபவங்கள் என கதை அமைந்துள்ளது. இச்சிறுகதையில் காடானது அருவி, காட்டருவி, தடாகம், நீரோடை, சுனை, குளம், குட்டை, ஒடைகள், சிற்றருவி, நீர்வீழ்ச்சி முதலிய நீர்நிலைகளை உடையதாக இருப்பதை கதை பதிவு செய்துள்ளது. (அம்பை- 2000-பக்.155-191)

**அம்பை சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள நீர் தொடர்புடைய சொற்களின் பட்டியல்**

| வ. எண் | சிறுகதைத் தலைப்பு | நீர் தொடர்புடைய சொற்கள் |
|---|---|---|
| 1 | ஸஞ்சாரி | மழை, யமுனை, நதி, மழைத்துளி, மழை நீர் |
| 2 | வல்லூறுகள் | கங்கை, ஜலத்தின் |
| 3 | வெளிப்பாடு | ஆத்துல, தாமிரவருணிக்கு, சமுத்திரம், கடல், ஓவியக்கடல். |
| 4 | வீட்டின் மூலையில் ஒரு சமையலறை | வெள்ளக்காடு, நீரில், ஏரி |
| 5 | புனர் | மழை, நீர், தண்ணீர் |
| 6 | அணில் | மெரினா கடற்கரை |
| 7 | மஞ்சள் மீன் | கடல், ஜலத்திலிருந்து, நீரை, சமுத்திரத்தில் |
| 8 | ஆறு | ஆறு, காவிரி |
| 9 | பயணம் 2 | தாமிரவருணி |
| 10 | ஒட்டக சவாரி | கடற்கரையில், அலைகள் |
| 11 | திக்கு | பாற்கடல், கடற்கரை |

| | | |
|---|---|---|
| 12 | மினுங்கு | சொட்டுமழைநீர், அகாலமழை, பனிபொம்மை, தூறல், தண்ணீர், மழைச்சரங்கள், வெள்ளப் பெருக்கு, மழைத்துளி முத்துக்கள், பனியில். |
| 13 | ஆரம்பக் கால கவிதைகள் | கடல், நீர் |
| 14 | வாகனம் | ஆவேச மழையாக, கடல், கடலலைகள். |
| 15 | காட்டில் ஒரு மான் | சின்ன ஆறு, அருவி |
| 16 | பிரசுரிக்கப்படாத கைப்பிரதி | கங்கை, சிறிய தூறல், வெள்ளத்தே, கடல், சுடு தண்ணீர் |
| 17 | கடற்கரையில் ஒரு காவிப் பிள்ளையார் | கடற்கரையை, கடல் |
| 18 | அன்னங்களும் பட்சிகளும் நெய்யப்பட்ட ஒரு ரோஜா வண்ணப் புடவை | அலக்நந்தா (ஆறு), ஆற்றின், கங்கை, வெள்ளத்தின் |
| 19 | ஓர் எலி, ஒரு குருவி | கிணற்றின், தண்ணீர் |
| 20 | அடவி | அருவி, காட்டருவி, தடாகம், நீரோடை, ஓடைகள், சுனை, குளம், குட்டை, சிற்றருவி, நீர் வீழ்ச்சி, நீர், வெந்நீர் |
| 21 | வற்றும் ஏரியின் மீன்கள் | தண்ணீர், குளம், ஏரி, மழை, மழைத்துளிகள், பனிமுகடுகள். |
| 22 | பயணம் 10 | நீச்சல் குளத்தில் |
| 23 | மரத்தடியில் திருவள்ளுவர் | நீர், கடற்கரை, நீரூற்று, பனியும், மழையும் |
| 24 | பயணம் 14 | தண்ணீர் பாட்டில், தண்ணீர் |
| 25 | நிலவைத் தின்னும் பெண் | வெண் நுரையாகவும், அலையாகவும், நதியாகவும், தொட்டி நீரில், ஓடும் ஆற்றின் |
| 26 | அசர மரணங்கள் | கோதாவரி, நதியில் |
| 27 | பயணம் 20 | மழை, மழைச்சாரல், மழைத்தண்ணீர் |
| 28 | தொண்டை புடைத்த காகம் ஒன்று | பாணீ (தண்ணீர்) |
| 29 | சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை | ஆழ்கடல், கடற்கரை, கடல், தண்ணீர், கங்கை, குளிர்ந்த நீரில் |
| 30 | வில்முறியாத சுயம்வரங்கள் | கடல், பெருங்கடல், மழை, கங்கா, பொம்பா, சந்திரபாகா (நதிகள்) |

| | | |
|---|---|---|
| 31 | பொய்கை | பொய்கை, நீர் |
| 32 | குதிரைக்காரி | ஜில் தண்ணீர், வெர்சோவா கடற்கரை |
| 33 | பயணம் 22 | தண்ணீர், பனி, கடல் , கருங்கடல்,. |

## முடிவுரை

தமிழரின் வாழ்வில் நீரானது முக்கியப் பங்கு வகித்துள்ளதையும், தமிழர்கள் பயன் படுத்தியுள்ள பல்வேறு நீர்நிலைகளையும் இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. அம்பையின் சிறுகதைகளின் வழியே நீரின் தன்மையையும், மேன்மையையும் உணர முடிகின்றது. தமிழகத்தின் தாயான காவிரி ஆற்றின் சிறப்பினையும் கதைகளில் இடம்பெற்றுள்ள இந்திய கடற்கரை மற்றும் ஆறுகளையும் இக்கட்டுரை வெளிக் கொணர்ந்துள்ளது. காடு என்பது மரம், செடி என்பதை கடந்து எத்தகைய நீர்நிலைகளை யெல்லாம் பெற்றுள்ளது என்பதை 'அடவி' என்ற சிறுகதையின் வழியே அறிய முடிகின்றது. அம்பையின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள பலதரப்பட்ட நீரின் வடிவங்கள் நீரைப் பற்றிய புதுமையான தொரு சிந்தனையை உருவாக்குவதாக அமைந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் நீர் பற்றாக்குறை பெருகி வருவதால் அதனை நிவர்த்தி செய்ய மரங்களை அதிகளவில் வளர்த்து மழையைப் பெற்று நம் நாட்டின் நீர் வளத்தை பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

## பார்வை நூல்கள்


1. அம்பை - சிறகுகள் முறியும், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதற்பதிப்பு -1976
2. அம்பை - வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -1988.
3. அம்பை - காட்டில் ஒரு மான், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -2000.
4. அம்பை - வற்றும் ஏரியின் மீன்கள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -2007.
5. அம்பை - ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -2013.
6. அம்பை - சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -2019.

7. சிவகுமார், எஸ்.தி - மனித நலனில் நீரின் பங்கு, அன்பு நிலையம், 43, நடுத்தெரு, பொதட்டூர்பேட்டை-631208. முதற்பதிப்பு-2004.
8. சுப்ரமணியம், எஸ்.ஆர். - தேசிய நீர் வளமும் நதிநீர் இணைப்பும், ஏசியன் பிரிண்டர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600014. முதற்பதிப்பு-2013.
9. பள்ளிக் கல்வித்துறை - தமிழ் – ஒன்பதாம் வகுப்பு. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு அரசு முதற்பதிப்பு -2018.

# பழந்தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை

**இ. பிரியவதனா**

முனைவர் பட்ட ஆய்வாளர், வேளாண் விரிவாக்கத்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

## முன்னுரை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"**

**(குறள் - 1033)**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் தொழில் வேளாண்மையாகும். அதில் முதன்மையானது மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வது. அதற்கு அடிப்படையாக வேளாண் தொழில்நுட்பம் நீர் மேலாண்மை, அணைக்கட்டு கால் வாய் வரத்துக்கால்வாய் மாறுகால் கவிங்கு ஏரிகள் குளங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வேளாண்மையில் தொழில்நுட்பம்

வேளாண் தொழில்நுட்பம் அக்ரி டெக் என்று அழைக்கப்படுகிறது. இது விவசாய உற்பத்தியை மேம்படுத்த உதவுகிறது. வேளாண் தொழில்நுட்பம் விவசாய பயிர் சுழற்சி பணியை திறமையாகவும் செழிப்பாகவும் செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் புதிய கண்டுபிடிப்புகள் விவசாயத் துறையில் வளர்ந்து வருகிறது இது செலவுகளைக் குறைக்கவும் உற்பத்தியை அதிகப்படுத்தவும் உதவுகிறது. சரியான நேரத்தில் தாவரங்களின் ஊட்டச் சத்து குறைபாட்டைக் கண்டறிதல் மற்றும் தேவையான உரம் அளவு ஆகியவற்றை விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேளாண் தொழில்நுட்பம் உதவுகிறது இன்றைய உலகம் வியக்கத்தக்க வகையில் பழங் காலத்தில் வேளாண்மை தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றதாக இருந்தது வேளாண்மை துறையில் பல தொழில்நுட்பக் கூறுகள் பழந்தமிழ் மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. இவற்றை பழந்தமிழ் இலக்கியங்களில் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.

## வேளாண்மை துறையில்,

- மழைநீர் சேமிப்பு குளம் அணை ஏரி போன்ற நீர் நிலைகளை ஏற்படுத்துதல்
- நீர் மேலாண்மை சேமித்த நீரை முறையாகப் பயன்படுத்துதல்
- தரிசு நிலங்களைப் பயன்படுத்துதல்
- சுழற்சி முறையில் பயிரிடுதல்
- மானாவரி பயிர்கள்

- வேளாண் கருவிகள் பயன்படுத்துதல்

**நீர் மேலாண்மை**

நீரின் இன்றியமையாமையை,

> **"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
> **வான்இன்று அமையாது உலகு" [1]**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப நீரை சேமித்து வேளாண்மைக்கு பயன்படுத்தும் முறையை நீர் மேலாண்மை என்கின்றோம். நிலம் வளமாக நல்ல மகசூல் அளிக்க நீர் இன்றியமையாதது என்பதை,

> **உணவெனப் படுவது நிலத்தோடு நீரே [2]**

என்ற அடிகள் உணர்த்துகிறது.

நிலத்தில் நீர் நிலைகளை ஏற்படுத்தி நீரினையும் நிலத்தினையும் ஒன்றிணைத்து வேளாண்மையை செழிக்கச் செய்கின்றனர். இச்செயலானது உடலையும் உயிரையும் படைத்தமைக்கு சமம் என்பதை,

> **நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு உடம்பும்**
> **உயிரும் படைத்திசினோரே [3]**

என்ற வரிகளால் அறியலாம்.

நாட்டில் விவசாயத்திற்கு தேவைப்படும் இடங்கள் எல்லாம் நீர் நிலைகளால் நிரம்பி இருந்த செய்தியை,

> **நிலநெறி மருங்கின் நீர்நிலை பெறுகத்**
> **தட்டூர் அம்மா இவண் தட்டோரே**
> **தள்ளா தோர் இவண்; தள்ளாதோரே [4]**

என்ற பாடல் உணர்த்துகிறது. வேளாண்மையின் பல்வேறு வித பயன்பாட்டிற்கேற்ப பல்வேறு தன்மைகளுடன் பல பெயர்களில் நீர்நிலைகள் உருவாக்கப்பட்டன.

**பிறை நிலவு வடிவிலான குளம்**

மழை நீரை ஓதாமல் தடுத்து நிறுத்தி, நீர் தேக்கங்களை ஏற்படுத்தி, மழை நீரை சேகரித்தனர், இதனை,

> **அறையும் பொறையும் மணந்த தலைய**
> **எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரத்**
> **தெண்ணீர்ச் சிறுகுளம் [5]**

என்பதால் அறியலாம். இதில் பாறைகளையும் சிறிய சுவடுகளையும் இணைத்துக் கட்டப்பட்ட எட்டாம் நாள் தோன்றும் பிறை நிலவைப் போன்று வளைந்த கரையை உடைய குளம் கட்டப்பட்டுள்ளது. திரிகடுகத்தில்,

> **பாய் நன்கமையா குழலும் வயிறார**
> **தாய் முலை உண்ணா குளவியும் சேய்**
> **மரபில் கல்வி மாண்பில்லாத மாந்தரும்**
> **இம்மூவர் நல்குரவு சேரப்பட்டார் [6]**

என்று நீர் வரும் வரத்து கால் நன்கு அமையாது குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

**அணைக்கட்டு**

அணை எனப்படுவது ஒரு நீரோட்டத்தின் குறுக்கே கட்டப்படும் ஒரு அமைப்பாகும் இது நீரோட்டத்தை தடுக்கவும் திசை மாற்றவும் பொதுவாக நீரை சேமிக்கவும் பயன்படுகின்றன. இதை பொதுவாக வெள்ளத்தை தடுப்பிற்கும் நீர் பாசன

திட்டங்களுக்கும் நீர் மின் சக்தி திட்டங்களுக்காகவும் கட்டப்படுகின்றன.

**நீர் போகும் வாயில் அல்லது கால்வாய்**

ஆற்றில் இருந்து கால்கள் பிரித்து வெட்டி அவற்றின் வாயிலாக நீர் பாய்ந்தால் அது கால்வாய் எனப்படும். அந்த கால்வாயில் இருந்து வயலுக்குள் கால்கள் பிரித்து வெட்டினால் அது வாய்க்கால். நீர் பாசன கால்வாய்கள் மூன்று பிரிவுகளாக உள்ளன

- வரத்துகால்வாய்
- மாறு கால்வாய்
- கழனி கால்

**வரத்துகால்வாய்**

ஆறுகள் வளைந்து செல்லும் இடங்களில் மட்டுமே இக்கால்வாய் வெட்டப்படும். ஆரம்ப இடம். தலைப்பகுதி எனப்படும். இதில் காணப்படும் நீர் மேலாண்மை என்னவென்றால் வரத்து கால்வாய் வெட்டப்படும் அமைப்பில் நீர் மட்டுமே கால்வாய்க்குள் செல்லும் அதே நேரம் மணல் புகாமல் தடுக்கப்படும் அமைப்பு காணப்படும். இவ்வண்ணம் ஆற்றில் நீர்வரத்து குறைந்தாலும் வரத்து கால் வாய்க்குள் தடையின்றி நீர் சென்று கொண்டிருக்கும் வரத்து கால்வாய்க்கு வைகை ஆற்றில் இருந்து வடையேறிக்கு தண்ணீர் எடுத்துச் செல்லும் கால்வாயாக குறிப்பிடலாம்.

**மாறு கால்**

இதை வெள்ள வடிகால் கால்வாய் என கூறுவர் வெள்ளம் அதிகரிக்கும் கால் வாய்களில் ஏரிகளில் உபரி நீரை கழிந்து வழியாக வெளியேற்றும் கால்வாய் தான் மாறு கால் எனப்படும் இவற்றின் கொள்ளளவும் ஏரியின் நீர் வரத்து கால்வாயின் கொள்ளளவும் சமமாக இருக்கும் நீர் வரத்தும் நீர் வெளியேற்றமும் சரிசமமாக அமைந்த வெள்ளப்பெருக்கை தடுக்க உதவும் கழனி கால் ஏரி மடையின் வெளிப் புறத்தில் அமைக்கப்பட்ட இக்கால்வாய் மூலம் பாசான நிலங்களுக்கு தண்ணீர் பிரித்து அனுப்பப்படும்.

**கால்வாய்**

தமிழர்கள் நீர்நிலைகளில் தேக்கி வைக்கப்பட்ட நீரினை கால்வாயின் மூலமாக வேளாண்மை நிலங்களுக்குப் பயன்படுத்தியதை

> **ஓம்பா ஈகை மாவேள் எவ்வி**
> **புனல் புதவி மிழலையொடு கழனி [7]**

என்று செய்தி புறநானூற்றில் சொல்லப் பட்டுள்ளது பாசனத்திற்காக நீர் திறக்கும் போது எழுமோசையினை

> **இழுமென ஒலிக்கும் புனலம் புதவின் [8]**

என்ற செய்தி புறநானூற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**மதகு**

காலத்தில் நீரை வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. இந்த

மதகு அமைப்பே குமிழித்தூம்பு என்பதாகும் பலன் தமிழர்களின் நீர் மேலாண்மை செயற்பாட்டில் இந்த குமிழித்தூம்பு அறிவியல் சார்ந்த மிக நுட்பமான நேர்த்தியான பயன்பாடு உடைய படைப் பாகும் வெள்ளப் பெருக்கம் அதிகமாக அதிக வேகத்துடன் வரும் நீரை குறுக்கே தடுப்பணை அமைத்து தடுப்பதற்கு மிகுந்த தொழில்நுட்ப அறிவு தேவைப் படும். வருகின்ற நீரை கற்கள் கொண்டு தடுப்பதால் இதற்கு தடுப்பணை கற்சிலை என்று அழகு தமிழ் சொல்லால் வழங்கப்படும் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் பெருகிவரும் படையை ஒரு வீரன் தடுத்து நிறுத்தி போராடுவது போல ஆற்று வெள்ளத்தை கற்சிலை தடுத்து நிறுத்துகிறது என்று கூறுகிறார்

**"கற்சிலை போல ஒருவன் தாங்கிய" 9**

என்று குறிப்பிடுகிறது.

இந்த மதகு அமைப்பில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாக விளங்குவது தேரோட துறைகள் ஒவ்வொரு வருடமும் மழைநீர் அதிகமாகும் போதும் அடியில் வண்டல் மண் படியும் அதை வெளியேற்றாமல் அப்படியே விட்டுவிட்டால் மண் மேடாகி விடும். அல்லது ஒவ்வொரு வருடமும் தூர்வார வேண்டும். அதற்கு அதிக செலவாகும். அப்படி தரை மட்டத்தில் சேகரமாகும் வண்டலை நீரோடு கலக்கி தேரோடின் கிளைகள் மூலம் வெளி யேற்றுவது ஒரு சிறந்த தொழில்நுட்பம் மேலும் பாசன நீரில் வண்டல் கலப்பதால் வயல்களுக்கு நல்ல உரமாகும்.

**கவிங்கு**

நீர் தேக்கப்பட்ட இடங்களில் மிகுதியான நீர் வெளியேறுமிடம் கவிங்கு எனப்படும் ஏரியின் கொள்ளளவை கணக்கிட்டு ஏரியில் இயற்கையாக பள்ளமான பகுதியில் சிறு வடிகால் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அக்கால மக்கள் நீரை வெளி யேற்றினர் இவ்வாறு வெளியேறும் நீர் கால்வாய் வழியாக ஓடி மற்றொரு ஏறியிலோ குளத்திலோ ஆற்றிலோ கலக்கும்படி அமைப்பர் ஏரியின் கொள்ளளவை விட அதிகமான நீர் கவிஞர் வழியாக வெளியேற்றப்படுவதால் கரை உடையாமல் ஏறி பாதுகாக்கப் படும். இது மிகப் பெரிய தொழில் நுட்பமாகும்.

கல்வெட்டுகளில் ஏரியின் உயரம் அகலம் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற செய்தியும் ஏரி குளத்தைச் சுற்றி குறிப்பிட்ட தூரம் வரை குளத்திற்கு சொந்தமான பகுதியாக கருதப்படும் என்பதும் ஏரிக்கரையில் என்னென்ன மரங்களை நட்டு பராமரிக்க வேண்டும் என்பது முதலான செய்திகளோடு ஏரிகளை பராமரிக்க ஏரி வாரியம் அமைக்கப்பட்ட செய்தியும் காணப்படுகிறது சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில்

**பெருங்குள மருங்கில் சுருங்கை சிறு வலி**
**இரும்பெரு நீட்டம் வருவது போல நல்லறம்**
**உளமோ வகையோடு உயர் குல புகுவோம்** [10]

என்னும் அடிகளால் விளக்குகிறார்.

காரியாசான் என்பவர் சிறுபஞ்ச மூலத்தில் குளம் அமைக்கும் முறை பற்றி கூறுகிறார். அதில் ஒதுக்கிணறு அமைத்தல் வரத்துக்கால் மதகுகள் மிக நீர் வெளியேறும் கவிங்கு தூம்பு போன்றவைகளை அமைப்பவர் சொர்க்கம் செல்லுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சுருங்கை என்பது பூமிக்கு அடியில் செல்லும் சிறிய குழாய் இதன் வழி செல்லும் நீர் மக்களுக்கு அளவற்ற பயன் தருவது போல செவிவழி வரும் அறக்கருத்துக்கள் உள்ளத்திற்கு நன்மை செய்யும் என்பது பொருள்.

**ஏரிகள்**

ஏரிகள் என்பது நான்கு புறமும் நிலத்தால் சூழப்பட்டு நடுவில் மட்டும் நீர் நிரம்பி இருக்கும் ஒரு நீர் நிலை ஆகும் இந்த அமைப்பு உலக வரைபடத்தில் வடபகுதியின் அறைக்கோளத்தில் உயர்ந்த பகுதிகளில் காணப்படுகின்றன இத்தகைய ஏரிகள் நன்னீரால் நிரம்பி உள்ளன. இவை சிறிய கடல் என கூறப்படும் வகையில் மிகப் பெரியதாக காணப்படுவதாக தகவல்கள் உள்ளன.

கபிலர் புறநானூற்றில்,

**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரத்**
**தெண்ணீர்ச் சிறுகுளம் தீர்வது மாதோ 11**

என குறிப்பிடுவதின் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் அதாவது எட்டாம் பிறை வடிவத்தில் நீளம் குறைவாகவும் கொள்ளளவு அதிகமாகவும் உள்ள அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏறி இருந்தால் ஏற்படும் இது ஏரி வடிவமைப்பில் முக்கியமான ஒன்று சான்றாக அமைவது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கவிநாட்டு பேரறிஞர்.

ஏரிக்கரை நீளம் குறைவாகவும் அதிக நீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும் போது தான் ஏற்படும் இது ஏறி வடிவமைப்பில் மிகவும் சிக்கலான வடிவமைப்பாகும் மிகுதியாக வரும் ஆற்று வெள்ள நீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டுக்கு சிறப்பு தரும் என்பதை,

**“யாரும் அடங்கும் குலமுல விருசால்”**

என்று நான்மணிக் கடிகையில் குறிப்பிடப்படும் சொற்றொடர் நீர் மேலாண்மை திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடு. பெரும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் மழை நீரை உரிய முறையில் சேமித்து வறட்சி காலங்களில் பயன் படுத்தும் முறையை இச்சொற்றொடர் சுட்டுகிறது கண்மாய் குளங்கள் முறையாக பராமரிக்கப்பட்ட செய்தி.

அடங்கும் குலமுல விவசாயி என்ற இடத்தில் மிகுதியான நீரை தன்னுள் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் ஒரு நாட்டிற்கு சிறப்பு என குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் ஆறு உள்ளடங்கும் குளம் என்பது நீர் மேலாண்மையின் முக்கிய அம்சமாகும் வெள்ளை நீரை உரிய முறை உரிய முறையில் சேமித்து வறண்ட காலங்களில் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை இது எடுத்துரைக்கிறது. காவிரி வெள்ளத்திற்கு வடிகாலாக கொள்ளிடம் பேராற்றில் நீர் பெருக்கு ஏற்படும் பொழுது சேமிப்பதற்காக பரந்தகச் சோழன் வீராணம் ஏரியை வெட்டி ஆறு உள் அடங்கும் பெருங்குளமாக அமைத்தான்.

வீராணம் ஏரி கவிநாட்டு பேரறி போன்ற பெரும் ஏரிகளை ஆழப்படுத்தி அவற்றிற்கிடையே இணைப்புக் கால் வாய்கள் வெட்டி பெருகும் வெள்ள நீர் சேமிக்கப்பட்டால் அதுவே மிகப்பெரிய நீர் மேலாண்மைக்கு அடித்தளமாக விளங்கும்.

**பெரும் குல காவலன் போல அடுத்த**
**அருங்கடி அன்னையும் துயில் மறந்த நிலை** [12]

என அகநானூற்றில் தாய் குழந்தையை கண்ணுக்குள் வைத்து காப்பது போல ஏரியை பாதுகாக்கும் காவலன் செயலும் இருந்தது என குறிப்பிடப்படுகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தை சமூக பயன்பாட்டு இலக்கியம் எனலாம் மழை நீர் தொடங்கிய அனைத்து உலக நீர்நிலைகளையும் பயன் பாட்டு முறையில் எடுத்து இயம்புவதால் காலம் கடந்த இலக்கியப் பெட்டகமாக சங்க இலக்கியம் திகழ்கிறது. அந்த சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை அதாவது நீர் சேமிக்கப்பட்ட முறை நீர் பாதுகாக்கப் பட்ட முறை நீர் பயன்பாட்டு முறை ஆகியவை குளங்கள் ஏரிகள் அணைக் கட்டுகள் வாய்க்கால்கள் தூங்கு கவிங்கு வழியாக பராமரிக்கப்பட்ட செய்தி இக்கட்டுரையில் ஆராயப் பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. திருக்குறள் -20
2. புறநானூறு – 18;:18-21
3. புறநானூறு – 18;:22-23
4. புறநானூறு – 18;:27-29
5. புறநானூறு – 118:1-3
6. திரிகடுகம் - 84
7. புறநானூறு –24:18,19
8. புறநானூறு – 176-5
9. தொல்-பொருள் - 725
10. மணிமேகலை - 79-82
11. புறநானூறு – 118;:1-3
12. அகநானூறு – 25

# மனித வாழ்வியலில் நீரின் செயல்பாடுகளும் முக்கியத்துவமும்

**முனைவர் இரா. சிவகுமார்**

இணைப் பேராசிரியர் & நெறியாளர், முதுகலை & தமிழாய்வுத் துறை

முத்துரங்கம் அரசினர்கலைக் கல்லூரி(தன்னாட்சி), வேலூர்

**விஷ்ணு .வெ**

முனைவர் பட்ட ஆய்வாளர்*(முழு நேரம்)*, முதுகலை & தமிழாய்வுத் துறை

முத்துரங்கம் அரசினர்கலைக் கல்லூரி*(தன்னாட்சி)*, வேலூர்

(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரி)

## முன்னுரை

உலக உயிர்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. வள்ளுவரும் **"நீரின்றி அமையாது உலகு"** என்று கூறுகிறார். நீரானது உலக உயிர்கள் அனைத்திற்கும் உணவாகவும், உணவுப் பொருட்களை உருவாக்குவதற்கும் அடிப்படை ஆதாரமாகவும் உள்ளது. அந்நீரானது மனிதனிடத்தில் உணவாக மட்டுமல்லாது பிறப்பு முதல் இறப்பு வரையிலும் அவனுடைய வாழ்வில் ஓர் முக்கிய இடம் பெறுகிறது. மனிதனுடைய சடங்குகளில் நீர் இல்லாமல் எதுவும் நடைபெறு வதில்லை. மனிதன் பிறருக்கு வாக்குறுதி அளிக்கும் பொருட்டும், தெய்வத்திடம் அருள் வேண்டுமிடத்திலும் நீரையே பயன்படுத்துகிறான். மனிதன் தெய்வத்தை வழிபடுமிடமான கோயில்களையும் நீர் நிலைகளுக்கு அருகில் அமைத்து வழிபட்டமை அவன் நீருக்கு அளித்த முக்கியத்துவம் இதனால் புலப்படுகிறது. மனிதனிடத்தில் நீர் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதையும் என்பதையும் மனிதனின் வாழ்வியல் சடங்குகளில் நீரின் பங்கு எத்தன்மையது என்பதையும் நீருக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு என்ன என்பதையும் பின் வருமாறு இக்கட்டுரையில் காண்போம்.

## மனிதனிடத்தில் நீர்

மனிதன் வாழ்வதற்கு ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குவது நீர் ஆகும். அந்த நீரினை மனிதன் அமிழ்தமாக போற்றியதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

**"வான் நின்று உலகம் வழங்கி வருதலான்**
**தானமிழ்தம் என்றுணரல் பற்று"**

**(குறள்.11- )**

சங்ககாலத்தில் புலவர்கள் அரசனை வாழ்த்துவதற்கு முன்பு அந்நாட்டின் இயற்கைவளத்தையே முதலில் வாழ்த்தினர். பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள பாடல்களின் தொடக்கத்தில் பெரும்பாலும் நீரைக் குறித்த செய்திகளே இடம்பெற்றுள்ளன. மதுரைக் காஞ்சியில் பாட்டுடைத் தலைவன் பாண்டிய நெடுஞ்செழியனுடைய நாட்டின் வளத்தைக் கூறும்போது நீர் நிலைகளின் வளத்தைக் கூறிய பின்பே நாட்டின் வளத்தை கூறுகிறார் புலவர் மாங்குடிமருதனார்.

**"ஓங்குதிரை வியன்பரப்பின்**
**ஒலிமுந்நீர் வரம்பாக**
**தேன்தூங்கும் உயர்சிமைய**
**மலைநாறிய வியன்ஞாலத்து"**

**(மதுரைக்காஞ்சி.1-4)**

மாங்குடிமருதனார் உழவுத் தொழில் செய்யும் மருதநிலத்தைச் சேர்ந்தவர். உழவுக்கு அடிப்படைத் தேவையாக விளங்குவது நீராகும். எனவே அந்நீரானது பாண்டியர் ஆட்சி காலத்தில் வற்றாமல் செழிப்புடன் இருந்ததனால் உழவுத் தொழில் தடையின்றி நடைபெற்றது. அதனைப் போற்றும் விதமாக இவ்வரிகள் அமைந்துள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் மழைப் பொழிவை முருகனோடு ஒப்பிட்டுள்ளமை, சங்ககால மக்கள் நீரைக்கடவுளாகப் போற்றியது இதன் மூலம் புலனாகிறது.

**"விசும்பொடு பறவை வீழ்ப்பதிப் படர**
**நிறையிரும் பௌவம் குறைபட**
**முகந்துகொண்டு அகவிறு வனத்து வீசுவலி**
**கலாவளின் முரசதிர்ந் தன்ன இன்குரல்**
**ஏற்றொடு நிறைசெலல் நிவப்பின் கொண்மூ**
**மயங்கி இன்னிசை முரசின் சுடர்பூண் சேஎய்**
**ஒன்னார்க் கேந்திய இலங்கிலை எஃகின்**
**மீன்மயங்கு கருவிய கண்மிசை பொழிந்தென**
**அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு**
**தெண்ணீர்"**

**(குறிஞ்சிப்பாட்டு, 46-54)**

நீரானது மனிதனுக்கு முக்கிய தேவையாக இன்று வரையிலும் உள்ளது கிராமப்புறங்களில் இன்றும் கூட மழை வேண்டி மக்கள் கூழ் ஊற்றியும் பொங்கலிட்டும் வழிபாடு செய்கின்றனர்.

### சடங்குகளில் நீரின் பங்கு

ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் முக்கிய நிகழ்வுகளைச் சடங்குகள் என்கின்றனர். குழந்தை பிறந்து, அக்குழந்தை வளர்ந்து, அவனுக்கு திருமணம் நடத்தி, அவன் இறந்து போன பின்பும் அவனுக்குப் பல சடங்குகளை நிகழ்த்தி வந்தனர். அவ்வாறு மனிதன் வாழ்வில் நடைபெறும் சடங்குகளில் நீர் எவ்வாறு இடம்பெறுகிறது என பின்வருமாறு காண்போம்.

குழந்தை பிறந்தவுடன் ஈன்றணிமை நாட்களுக்குப் பிறகு தாயும் குழந்தையும் எண்ணெய் தேய்த்து புனித நீராடிய பின்பே குழந்தையைத் தொட்டிலில் போட்டுப் பெயர் சூட்டுகின்றனர். தொல்காப்பியத்தில், தலைவியும் புதல்வனும் ஈன்றணிமை நாட்களுக்குப் பிறகு புனித நீராடுவதைத் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

**"புதல்வன் பயந்த புனிறுத்தீர் பொழுதின்**
**நெய்யணி மயக்கம் புரிந்தோள்"**

(தொல்.கற்பு.-144)

**"கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி"**

(தொல்.கற்பு.-145)

பெண் குழந்தைகள் வளர்ந்து பூப்பெய்திய போது, அவர்களைத் தனி குடிசையில் அமர வைத்து அவர்களுக்குப் புனித நீராட்டிச் சடங்குகளை நிகழ்த்து கின்றனர். இதனை பூப்புனித நீராட்டு, மஞ்சள் நீராட்டு என்றும் அழைக்கின்றனர். அவ்வாறு பருவமடைந்த பெண் வீட்டினுள் பிறர் கண் படாமல் இருக்கிறாள், அவளை நீராட்டி அமர வைத்துள்ள குடிலானது, நறிய அகில் புகைத்து மணமூட்டப் பட்டிருக்கிறது என்று புறநானூற்று வரிகள் தெரிவிக்கின்றன.

**"பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய**
**துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென**
**அகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய**
**கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு**
**மனைச்செறிந் தனளே வாணுதல் இனியே"**

(புறநானூறு 337)

பூப்படைந்த பெண்ணை முக்காலியில் அமரவைத்துச் சுமங்கலிப் பெண்கள் மூன்று அல்லது ஐந்து பேர் சேர்ந்து நீராட்டுவார்கள். சல்லடையை அப் பெண்ணின் தலைக்கு மேல்பிடித்துக் கொள்வார்கள். பிறகு, குவளையில் இருக்கும் மஞ்சள் கலந்த நீரை சல்லடையில் ஊற்றுவார்கள். அந்தத் தண்ணீர் பெண்ணின் தலையில்பட்டு உடல் முழுவதும் நனையும். பிறகு தூய்மையான தண்ணீர் மூலம் பெண்ணை நீராடச் செய்வார்கள். புத்தாடையை உடுத்தி அதன்பின்பு அலங்காரம் செய்து பந்தலில் உள்ள நாற்காலியில் பெண்ணை அமரவைத்து மாமன் வாங்கி வந்த மாலையைக் கழுத்தில் போட்டுச் சடங்கு தொடங்கும் என்று பூப்புச்சடங்கு என்னும் கட்டுரையில் முனைவர் சி.சுந்தரேசன் கூறுகின்றார்.

பிள்ளைகள் திருமண வயதை அடைந்து, அவர்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கும் போது நலங்கு வைத்து நீராட்டிய பின்பே திருமணத்தை நடத்துகின்றனர். இதனை சங்க காலத்தில் வதுவைச் சடங்கு என்று அழைத்தனர். இது குறித்தச் செய்திகளை அகநானூறு நமக்குத் தெரிவிக்கின்றது.

**"கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆகஎன,**
**நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி பல்இருங்**

**கதுப்பின் நெல்லொடு தயங்க, வதுவை**
**நல்மணம் கழிந்த பின்றை"**

**(அகநானூறு-86)**

இப்பாடலில் ‘கற்பினின்றும் வழாது தற்காத்துத் தற்கொண்டானெனப் பேணும் தகைசிறந்தாள் ஆகுக' என்று வாழ்த்தி நீரோடு நெல்லும் மலரும் கலந்து மணமகளின் கூந்தலில் தூவினர் என அகநானூறு வரிகள் கூறுகிறது. மங்கல மகளிர் தலைவிக்கு மனநீராட்டினர் என்று இன்னொரு பாடலின் வழியே அகநானூறு குறிப்பிடுகிறது.

**"படுமண முழவொடு பரூஉப் பணைஇமிழ**
**வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று"**

**(அகநானூறு-136)**

வீட்டில் உள்ள பெரியவர்கள் அறுபது வயதினை அடையும்போது, அவர்களுடைய அறுபதாம் பிறந்தநாளில் புனித நீராட்டினை நிகழ்த்தி அறுபதாம் திருமணம் நடத்தி வைக்கின்றனர். அந்நாளில் இளையவர் களும் குழந்தைகளும் அவர்களை வணங்கி வாழ்த்துக்களைப் பெறுகின்றனர். இந் நிகழ்வைத் தொல்காப்பியர், அரசனுடைய பிறந்த நாளில் அவனுக்கு புனித நீராட்டி பகைவர் மீதுள்ள சினத்தை விட்டொழித்துத் தமக்கு அருளுமாறு மக்கள் வேண்டுவதாக குறிப்பிடுகிறார்.

**"சிறந்த நாளில் செற்றம் நீங்கி பிறந்த**
**நாள்வயின் பெருமங்கலமும்"**

**(தொல்.புறம்.-88)**

மனிதன் தன் வாழ்வில் அனைத்து இன்பங்களையும் கண்ட பிறகு வயது முதிர்ந்த காலத்தில் உலக வாழ்வில் இருந்து நீங்கி தேவர் உலகம் அடைந்த இறப்பு நிகழ்விலும் இறந்தவர் உடலை புனித நீராட்டிய பின்பே மயானத்திற்கு எடுத்துச் செல்கின்றனர். அந்நீராட்டினை **"நீர் மாலை"** என்று கிராமப்புறங்களில் இன்றும் அழைக்கின்றனர். இறந்தவரின் இல்லத்திற்கு அருகில் உள்ள நீர் நிலைகளிலிருந்து ஐந்து குடங்களில் தண்ணீர் எடுத்து வரப்பட்டு இறந்தவர் உடலுக்கு புனித நீராட்டுநிகழ்த்துவதாக இறப்புச் சடங்கு என்னும் கட்டுரையில் முனைவர் சி.சுந்தரேசன் என்பவர் கூறுகின்றார்.

குழந்தை வளரும் பருவத்தில் அதற்கு அம்மை நோய் வந்து விட்டால் மஞ்சள் வேப்பிலை கலந்த நீரில் நீராட்டுகின்றனர். எனவே நீரானது மனித வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாக விளங்கியமை இதன் மூலம் புலனாகிறது.

மனிதனுடையவாழ்வியல்சடங்குகள் அனைத்திலும் நீரினை ஒரு முக்கிய பொருளாக வைத்துள்ளமை நம் முன்னோர்கள் நீருக்கு அளித்த முக்கியத்துவம் இதன்மூலம் புலப்படுகிறது.

## நீரும் நம்பிக்கையும்

இன்றைக்கு எண்ணற்றப்பல நவீன ஊடகங்கள் தோன்றி மனிதப் பயன்

பாட்டில் இருந்தாலும், கிராமப் புறங்களில் ஒருவர் மற்றொருவருக்கு நம்பிக்கை வாக்குறுதி அளிக்கும் பொருட்டு வானம், பூமி, கதிரவன், நீர், தீ, மண் முதலியவற்றை சாட்சிகளாகக் கொண்டு வாக்குறுதி அளிக்கின்றனர். மனிதனின் வாழ்வில் நடைபெறும் முக்கியமான நிகழ்வான திருமணமும் அக்னி சாட்சியாகத்தான் நடைபெற்றது என சிலப்பதிகாரவரிகள் மூலம் அறிய முடிகிறது.

**"மாமுது பார்ப்பான் மறை வழிகாட்டிட**
**தீ வலம் செய்வது காண்பார் கண்நோன்பு**
**என்னை"**

**(சிலம்பு.-54-55)**

அதுபோலவே நம் முன்னோர் பிறருக்கு வாக்குறுதி அளிக்கும் பொருட்டு நீரை பயன்படுத்தியமை சங்கப் பாடல்கள் மூலம் புலனாகிறது.

வாமன அவதாரத்தின் போது அந்தணர் வடிவில் வந்த திருமாலுக்கு மூன்றடி நிலம் தருவதன் பொருட்டு மாவலி சக்கரவர்த்தி நீரை வார்த்து உறுதி அளித்ததாக நப்பூதனார் முல்லைப் பாட்டில் பின்வருமாறு கூறுகின்றார்.

**"நனந்தலையுலகம்வளை, நேமியொடு**
**வலம்புரி பொரித்தமா தாங்கு தடக்கை நீர்**
**செல நிமிர்ந்தமா அல் போல"**

**(முல்லைப்பாட்டு, 1-3)**

மேலும், குறிஞ்சிப்பாட்டில் தலைவன் குறிப்பிட்ட நன்னாளில் தன் சுற்றத்தாறுடன் வந்து தலைவியை மணந்து கொள்வதாக நீரைக் குடித்துச் சூளுரைத்தான் என்று கபிலர் கூறுகின்றார்.

**"அறம்புணையாகத் தேற்றிப்பிறங்கு மலை**
**மீமிசை கடவுள் வாழ்த்திக்கை தொழுது**
**ஏமுறுவஞ்சினம் வாய்மையின் தேற்றி**
**அந்தீந்தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து**
**அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி"**

**(திருமுருகு. 218-226)**

மலை உச்சியின் மேல் உறையும் முருகனை வாழ்த்தி கை தொழுது அம்மலையின் அருவி நீரைக் குடித்து சூளுற்றுத் தெரிவித்தமையை கபிலர் கூறுகின்றார். மனிதன் நீரின் மேல் வைத்திருந்த நம்பிக்கை இதன் மூலம் நமக்குப் புலப்படுகிறது.

## தெய்வ வழிபாடுகளில் நீர்

மனிதன் நீரினை சடங்குகளில் மட்டும் பயன்படுத்தாமல், தெய்வங்களை போற்றி வணங்கும் வழிபாடுகளிலும் பயன் படுத்தியுள்ளான். இன்றும் கூட புதிய கோயில்களை எழுப்பி வழிபாடு செய்யும் பொருட்டு, அக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படுகிறது. அக்குடமுழுக்கும் நீரை சார்ந்தே அமைந்துள்ளது. கோயிலின் மேல் உள்ள கலசத்திற்கு வேள்வியில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட நீரையே ஊற்றி குடமுழுக்கு நிகழ்த்துகின்றனர். வழிபாடுகளில் மனிதன் நீரை எவ்வாறு பயன்படுத்தியுள்ளான் என்பதை பின்வருமாறு காண்போம்.

மக்களால் வழிபடப்படும் தெய்வங்கள் மற்றும் அவற்றிற்கான கோயில்கள் பெரும்பாலும் நீர்நிலைகளுக்கு அருகிலே அமைக்கப்பட்டுள்ளன. இன்றைய பொழுதிலும் ஏழு கன்னிமார் கோயில்கள், அம்மன் கோயில்கள், அய்யனார் கோயில்கள், இன்னும் பல சிறு தெய்வ கோயில்கள் அனைத்தும் ஏரிக் கரையிலும் குலத்தங்கரையிலும் நீரோடைகளுக்கு அருகிலும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். திருமுருகாற்றுப்படையில், முருகப்பெருமான் எழுந்தருளி அருள் புரியும் இடங்களாக நீர் நிலைகள் அமைந்திருப்பதை நக்கீரர் பின்வருமாறு கூறுகின்றார்.

**”காடும்காவும்கவின் பெறுதுருத்தியும்**
**யாறும்குலனும் வேறு பல்வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்**
**மன்றமும் பொதிலும் கந்துடை நிலையினும்”**

**(திருமுருகு.208-212)**

இவ்வரிகளில் அழகு பெற்ற ஆற்றிடைக்குறை, ஆற்றங்கரை, குளக்கரை முதலிய நீர்நிலைகளில் முருகன் கோயில் கொண்டு அருள் புரிவதாக நக்கீரர் கூறுகின்றார். முருகக்கடவுள் மட்டுமல்லாது இன்னும் பிற தெய்வங்களும் நீர் நிலைகளில் கோயில் கொண்டுள்ளமையை இன்றளவும் நாம் காண இயல்கிறது. எனவே நம் முன்னோர்கள் நீர் நிலைகளில் கோயில் அமைத்து தெய்வங்களோடு நீரையும் வாழ்த்தி வழிபட்டு வந்துள்ளனர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

புதியதாகக் கட்டப்பட்ட கோயிலில் குடமுழுக்கு செய்யும்போது அதற்கு முந்தைய நாட்களில் கோயிலின் மூலவர் சிலையை நீரில் இட்டு நீர்ப்படுத்து கின்றனர். இந்த நீர்ப்படுத்தும் முறையானது தொல்காப்பியர் காலத்தில் இருந்துள் ளமையை தொல்காப்பிய வரிகள் புலப் படுத்துகின்றன.

**“காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்**
**சீர்த குமரபில் பெரும்படை வாழ்த்தலென்று**
**இரு மூன்று மரபிற்கல்லோடு புணர”**

**(தொல்.புறம்-63)**

போரில் வீர மரணம் அடைந்த மறவனுக்காக நடுகல் எழுப்பி வழிபடும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லை நடுவதற்கு முன்பு நீரிலிட்டு நீர்ப்படுத்தியதாகத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

திருமால் கோவில்களில் நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளன்று நடத்தப் படும் “**சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி**” என்னும் நிகழ்வு, திருமாலின் சுதர்சன சக்கரத்திற்கு புனித நீராட்டி வழிபாடு செய்வதாகும். தொல்காப்பியர் காலத்தில் அரசனின் ஆயுதமான வெற்றி வாளுக்கு புனித நீராட்டி வழிபட்டு வந்தமை, இன்று தெய்வத்தின் ஆயுதங்களுக்குப் புனித நீராடுகின்ற நிகழ்வாக மாறியுள்ளது.

பகையரசர்களை மன்னன் வெற்றி பெற்ற பிறகு பகைவரை அழித்து ஒடுக்குவதற்கு காரணமாக அமைந்த வீரவாளினை புனித நீராட்டி வழிபடுவதாக தொல்காப்பியர் கூறுகின்றார்.

**"வென்ற வாளின்மண்ணு"**

**(தொல்.புறம்.-12)**

**"மாணார்ச்சுட்டியவாள்மங்கலம்"**

**(தொல்.புறம்-30)**

**முடிவுரை**

உலக உயிர்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதனவாக விளங்கும் நீரானது, மனிதனுடைய வாழ்வில், குறிப்பாக உழவர்களுடைய வாழ்வில் நீக்க முடியாத முக்கிய இடம் பெறுகிறது. உழவர்கள் நீருக்கு அளித்த முக்கியத்துவம், புலவர்கள் நீரைக் கடவுளுடன் ஒப்பிட்டுள்ளமை ஆகியனவற்றால் நம் முன்னோர்கள் நீரை உயர்ந்த பொருளாக வைத்துப் போற்றி வந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. மனித வாழ்வியல் சடங்குகளிலும் நீர் நீக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. மேலும் நீரானது மருத்துவ குணம் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. வாக்குறுதி அளிக்கும் பொருட்டு ஏற்படும் நம்பிக்கைக்குரிய பொருளாகவும் நீரானது கருதப்படுகிறது. தெய்வங்களை வழிபடும் இடங்களிலும் நீரின் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. எனவே மனித வாழ்வியலில் நீரின் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இக்கட்டுரையின் மூலம் புலனாகிறது.

# ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்து உணர்த்தும் வாழ்வியல்

**முனைவர் நா. சிவகுரு**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

## முன்னுரை

அகத்துறைப் பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ள நூல்களில் நிலம் சார்ந்த 500 பாடல்களைக் கொண்ட நூல். குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும். அது காலத்தையும் நன்கு உணர்த்தும். தலைவன் வரைவு நீட்டித்த வழி தலைவி அச்சம் கொள்ளுவாள். அவள் உடல் அளவில் மாற்றம் ஏற்படும். அதனை உணர்ந்த செவிலி வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த முயற்சி மேற் கொண்டு அதற்கான ஏற்பாடுகளை செய்வாள். அச்சமயத்தில் தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்பாள். தலைவன் தலைவி இருவரும் மேற்கொண்ட களவொழுக்கத்தினை எடுத்துக்கூறி தலைவியை தலைவனோடு சேர்த்து வைத்து விட்டால் தலைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் மாறிவிடும் என்று எடுத்துரைக்கின்றாள். ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்தில் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பினைத் தோழி வெளிப்படுத்தி கற்பு வாழ்விற்கு தலைவியை உட்படுத்துமாறு உணர்த்துகின்றாள். மேலும் வெறி என்பதற்கு மணம் என்ற பொருள் உண்டு. ஆதலால் இங்கு வேலன் வெறியாட்டினைத் தவிர்த்து தலைவனுக்குத் தலைவியை மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதைக் காணலாம்

எச்செயலுக்கும் ஒரு காலம் உண்டு. காலம் கடந்து செய்யும் செயல்கள் நன்மையினைப் பயப்பது இல்லை. காலம் என்பதற்குப் பருவம் என்ற பொருள் உண்டு. தலைவிக்கு உரிய பருவம் வரும்பொழுது பாலது ஆணையின் காரணத்தினால் உடலும் மனமும் மாறும். அப்பருவத்தில் தலைவன் மீது அன்பு அதிகரிக்கும் மனம் தலைவனை நாடும் ஆனால் நாணமும் பயிர்ப்பும் அதை வெளிப்படுத்தாது மறைக்கும். அது செயலில் வெளிப்படும். உள்ளமும் உடலும் எச்செயலிலும் நாட்டம் கொள்ளாது. உடலில் பசலைப் படர்ந்து மெலிவு ஏற்பட்ட உடன் செவிலி வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்திட விழைகின்றாள்.

அச்சமயம் தோழி தலைவியிடம் இவ்வாறு செய்வதால் நம்முடைய நோய் தீர்ந்து விடுமோ என்று தன் உள்ளக் குறிப்பினைத் தலைவியிடம் எடுத்துக் கூறுகின்றாள். இப்பத்துப் பாடல்களில் காலத்தின் முக்கியத்துவம் எவ்விதம் தோழி மூலம் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### வெறிப்பத்து விளக்கம்

வெறி என்பதற்கு மணம் என்று விளக்கம் தருவார் ஔவை. துரைசாமிப்பிள்ளை. மேலும் அழகும் ஒளியும் இளமை நலமும் திகழும் செடி கொடிகளின் பூக்களிடைச் சிறந்து நிற்கும் மிகுமணம் வெறியென்ற சொல்லால் வழங்கப்படுவதாயிற்று என்று ஔவை துரைசாமிப்பிள்ளை விளக்கம் தருவார் (ஐங்குறுநூறு உரை)ஐங்குறு நூறு வெறிப்பத்தில் அமைந்துள்ள பத்துப் பாடல்களை,

1. வேலனின் அறியாமை
2. வெறி நிகழ்தல் உணர்த்தியமை
3. தோழியின் அறத்தொடு நிற்றல்

என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம்

### வேலனின் அறியாமை

தலைவி தலைவனுடன் களவு வாழ்க்கை மேற்கொள்கின்றாள். தலைவன் அவளை விட்டு பிரிகின்றான். தலைவியின் உடலில் மாற்றம் ஏற்படுகின்றது. பசலை ஏற்பட்டு உடல் மெலிவு தோன்றுகின்றது. இதனைக் கண்ட தலைவியின் தாய் அவளை இற்செறிப்பு செய்கின்றாள். இற் செறிப்பினால் தலைவியின் உடல் மேலும் பொலிவு இழந்து விடுகின்றது. தலைவியின் தாய் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த முனைகின்றாள். அவ்வாறு வரும் வேலன் நாம் நம் தலைவன் மீது கொண்ட காதலை அறிந்து உணர்த்து வானோ? என்று வினா எழுப்புகின்றாள் தோழி. இந்நிகழ்வு நிகழும் நடைபெறும் நிலம் குறிஞ்சி. இதன் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும். தலைவனும் தலைவியும் மெய்யுறு புணர்ச்சி மேற் கொள்கின்றனர். அதன் விளைவினால் தலைவியின் உடலில் மாற்றம் நடைபெறுகின்றது. இதனை வேலன் அறியமாட்டான் என்று வேலனின் அறியாமையை தோழி எடுத்துக் கூறு கின்றாள். இதனை,

> **"நம்உறுதுயரம் நோக்கி அன்னை**
> **வேலற் றந்தனள் ஆயின் அவ்வேலன்**
> **வெறி கமழ் நாடன் கேண்மை**
> **அறியுமோ தில்லை? செறி எயிற்றோயே"**
>
> **(ஐங், பா.241)**

என்பதால் உணரலாம்.

மற்றொரு பாடலில் "நம்நோய்க்குரிய காரணம் இப்பருவத்தில் காதலாக இருத்தல் சாலும் என்பதனை அறியாமையினால்

மயங்கினள்" என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. (அ.தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு உரை, ப.516). தாய் தன் மகளின் துயரத்திற்குக் காரணத்தை அறியாது இருக்கின்றாள். தலைவியின் பசலைக்குக் காரணமானவன் குறிஞ்சி நிலத்தின் தலைவன் மலைநாடன் என்பதை அறியாது உள்ளாள். வெறியாட்டு நிகழ்த்த வரும் வேலனும் இதனை அறியான் என்று தோழி உணர்த்துகின்றாள்.

இதனை,

> **"அறியாமையின் வெறி எனமயங்கி**
> **சேய் மலை நாடன் செய்த நோயே"**
>
> **(ஐங்.பா. 242)**

என்பதால் உணரலாம்.

### வெறி நிகழ்தல் உணர்த்தியமை

தலைவன் தலைவியோடு களவு மேற் கொண்டு பிரிந்து செல்கின்றான். அதனால் தலைவிக்கு உடலில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனை அறிந்து தாய் இற்செறிப்பு செய்கின்றாள். அதனால் நோய் மேலும் வளர்கின்றது. பின் ஊர் முது வேலனை அழைத்து அவன் வைத்துள்ள கழங்கு கொண்டு தலைவியின் நோய்க்கு முருகன் காரணம் என்று கூறுவான். அது பொய் என்று எனக்குத்தெரியும். ஆதலால் விரைவில் தலைவியை வரைவு கடாவுதல் வேண்டும் என்று தலைவன் கேட்க சிறைப்புறமாக இருந்து தோழி கூறுகின்றாள்.

இதனை,

> **"பொய்யா மரபின் ஊர் முதுவேலன்**
> **கழங்கு மெய்ப்படுத்து கன்னம் தூக்கி**
> **முருகு என மொழியும் ஆயின்**
> **கெழுதகைகொல் இவள்**
> **அணங்கியோற்கே?"**
>
> **(ஐங்.பா.245)**

என்ற வழி உணரலாம்.

மேலும் மற்றொரு பாடலில் தலைவன் தலைவியைச் சந்தித்துக் களவு மேற் கொண்டு செல்வதால் தலைவி உடலில் மாற்றம் நடைபெறுகின்றது. அவள் இல்லத்தில் வெறியாட்டு நிகழ்த்துகின்றனர் என்பதை களவொழுக்கம் மேற்கொள்ள வந்த தலைவனிடம் தோழி சிறைப் புறமாக நின்று எடுத்துக் கூறுகின்றாள். மலைநாட்டில் புன்செய் நிலப் பயிர்களைக் காக்க பொய்த் தோற்றத்தில் புலி உருவம் செய்யப்பட்டு வைக்கப்படும். அது போன்று தலைவியின் உண்மையான வருத்தம் அறியாது வேலன் வெறியாட்டு நிகழப் போகின்றது. வேலன் அனைத்திற்கும் முருகன் காரணம் என்று பொய் கூறுவான் என்று தோழி கூறுகின்றாள்.

இதனை,

> **"வெறிசெறிந்தனனே வேலன் கறிய**
> **கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ**
> **புன்புலம் வித்திய புனவர் புணர்ந்த மெய்ம்மை**
> **அன்ன பெண்பாற் புணர்ந்து மன்றில் பையுள்**

***தீரும் குன்ற நாடன் உறீஇய நோயே"***

**(ஐங்.பா. 246)**

என்பதால் அறியலாம்.

## தோழி அறத்தொடு நிற்றல்

தலைவியின் களவு வாழ்வை செவிலிக்கு எடுத்துக் கூறுபவள் தோழி. அவள் நடந்ததை எடுத்துக் கூறி தோழியின் பிரதி பலிப்பாக விளங்குவாள். வெறியாட்டு நிகழ்த்துவதால் எந்தப்பயனும் இல்லை கழங்கு ஆடி ஒன்றும் நிகழாது. மலையையும் வானையும் வென்ற முருகனின் வேலைக் கையில் ஏந்திய வேலன் வெறியாட்டு நிகழ்த்தி அறிவது ஒன்றும் இல்லை என்று தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். இதனை,

**"பெய்ம்மணல் முற்றம்……..**
**மலைவான் கொண்ட சினைஇயவேலன்**
**கழங்கினான் அறிகுவது என்றால்**
**நன்றால் அம்ம நின்ற இவள் நலனே!"**

**(ஐங்.பா.248)**

என்பதால் அறியலாம்.

தலைவியின் மேனி வேறுபாட்டை நீக்குவதற்கு நடத்தப்படும் வெறியாட்டு வீண். இவள் மனம் கவர்ந்த தலைவனை அறிந்து அவனுக்கு இவளை திருமணம் செய்து கொடுத்தால் மட்டும் இதற்குத்தீர்வு உண்டு என்று தோழி குறிப்பினால் உணர்த்துகின்றாள். மேலும் தலைவியன் உடல் மெலிவிற்கு நோய் முருகனால் வந்தது என்று கழங்கு பொய் கூறுகிறது என்று எடுத்துக்கூறி இகழ்ச்சிக் குறிப்போடு பொய் படுபு அறியாக் கழங்கு என்று தோழி கூறுகின்றாள். இதனை,

**"பொய் படுபு அறியாக் கழங்கே! மெய்யே**
**……………………**
**ஆண்தகை விறல் வேள் அல்லன் இவள்**
**பூண்தாங்கு இளமுலை அணங்கியோனே"**

**(ஐங்.பா.250)**

என்ற வழி அறியலாம்.

## முடிவுரை

காலம் உணர்த்தல் எனில் எதனையும் உரிய பருவத்தில் செய்து விட வேண்டும். எதனையும் கால் நீடிப்பு இன்றி செய்து விட வேண்டும். அக இலக்கியங்களில் தோழி மிக இன்றியமையாதவள். அவள் தலைவியன் நிழலாகச் செயல்படுவள். தலைவியின் எண்ண ஓட்டத்தை உணர்ந்து அதற்கு ஏற்பச் செயல்படக் கூடியவள்.

தலைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை முதலில் உணர்ந்து கொள்பவள்.

அதன் பொருட்டு தலைவனை இரவுக்குறி, பகற்குறி என்று வரவழைத்து தலைவனை சோதிப்பவள்.

தலைவியினை வரைவு செய்ய வற்புறுத்துவாள். தலைவன் வரைவு நீட்டிப்பான் அவ்வாறு நீட்டிக்கும் பொழுது அதனை கண்டிக்கும் உரிமை உடையவளாகத் தோழி உள்ளாள்.

களவு வாழ்க்கை நீட்டிக்கும் பொழுது தலைவியின் உடலில் மெலிவு ஏற்பட்டு

பசலை படர்கின்றது. இதனால் இற்செறிப்பு நிகழ்கின்றது. வேலன் வெறியாட்டு நிகழ்ச்சி நடை பெறுகின்றது. தலைவிக்கும் தோழிக்கும் மட்டும் தெரிந்த உண்மை வேலனுக்குத் தெரியாது. அவன் பொதுவாக, குறிஞ்சி நிலத்தெய்வமான முருகனால் இந்நோய் வந்தது என்று கூறுவான். ஆனால் முருகனால் அல்ல மலை நாடன் தலைவனால் இது நிகழ்ந்தது என்பது தலைவி மற்றும் தோழி ஆகிய இருவருக்கும் மட்டுமே தெரியும்.

இதன் பின் தோழி செவிலிக்கு அற்த்தொடு நிற்க, செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தமர்க்கும் அறத்தொடு நிற்பதாக இலக்கணம் குறிக்கின்றது. இங்கு காலம் என்பது பருவம் என்ற பொருளில் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. குறித்த காலத்தில் நடக்க வேண்டிய நிகழ்வுகளை நிகழ்த்தி விட வேண்டும். காலம் தவறும் பொழுது உடலில் மனத்தில் பல மாற்றங்கள் நிகழும். இழந்த காலத்தைத் திரும்பப் பெற இயலாது. கடந்தவை கடந்தவையகவே இருக்கும். அது நிகழ்காலத்திற்கு உதவாது. நினைக்கவும் தகாததாக மாறி விடும். அதனால் பருவத்தே பயிர் செய் என்பதை தோழி வழி காலம் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

Vol. 8 Special Issue 1 July 2024 E-ISSN: 2456-5571

# சங்கத்தமிழர் முல்லை நில வாழ்வியல்

**முனைவர் த. கார்த்திகேயன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
அரசு கலைக்கல்லூரி, அரியலூர்

சங்க காலத் தமிழர்களின் வாழ்வு இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வாக இருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலங்களை திணைகளாக பிரித்து வந்த வாழ்வியலில், ஐந்திணைகளில் ஒன்றான காடும் காடு சார்ந்த பகுதியுமான முல்லை நில மக்களின் வாழ்வியல் அந்த நிலம் சார்ந்ததாகவே இருந்தது. முல்லை நில மக்கள் கால்நடைகளை வளர்க்கும் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். ஏறுதழுவுதல் முல்லை நில மக்களின் பண்பாட்டுப் பொருண்மையாக இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட வாழ்வியல் கூறுகளை சங்க இலக்கியங்களின் பாடல்கள் இருந்து பெற முடிகிறது.

## முல்லை நிலம்

தமிழ்நாட்டு நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து வகை நிலங்களைக் கொண்டது. காடும், காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம். முல்லையின் பெரும்பொழுது கார் காலம், சிறுபொழுது மாலைக் காலம். முல்லைத் திணையின் உரிப்பொருள் எனப்படும் அக ஒழுக்கம் பிரிவுத் துயரை ஆற்றியிருத்தல். புற ஒழுக்கம் வஞ்சித் திணை (பகைவரை வெல்ல வஞ்சினம் கூறி வஞ்சிப்பூச் சூடிப் போருக்குப் புறப்படுதல்).

முல்லை நிலத்தின் கருப்பொருள்களுள் முதன்மையான முல்லை நிலக் கடவுள் மாயோன் என்னும் திருமால் ஆவார். மக்களுள் உயர்ந்தோர் - குறும்பொறை நாடன், கிழத்தி; உயர்ந்தோர் அல்லாதோர் - ஆயர், இடையர், ஆய்ச்சியர், இடைச்சியர்; தொழில் - சாமை, வரகு விதைத்தல், ஆநிரை மேய்த்தல் போன்றவையாகும்.

சங்க இலக்கியங்களுள் முல்லைத் திணை பற்றிய பாடல்கள் முல்லைப் பாட்டு, ஐங்குறுநூறு, கலித்தொகை, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது,

ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்ற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

### முல்லை நில மக்கள்

'மாயோன் மேய காடுறை உலகமும்' என்று முல்லைத் திணை தொல்காப்பியரால் முதலில் வைத்து சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது. இயற்கை வளம் நிரம்பிய அக்கால அந்நிலச் சூழலில் மக்கள் ஆநிரைகளை வளர்த்து வந்தனர். அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆயர், ஆய்ச்சியர், இடையர், கோவலர் என்று பல பெயர்களில் அழைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் வாழ்ந்த ஊர்ப் பகுதி ஆய்க்குடி என்று அழைக்கப் பட்டுள்ளது.

எருமை, பசு, ஆடு ஆகிய மூன்று இனங்களையும் வளர்த்து அவற்றின் பயனால் வாழ்க்கை நடத்தும் ஆயர்களையும் மூன்று வகையாக குறிப்பிடலாம்.

கோட்டினத்து ஆயர் எருமை கூட்டங்களை வளர்ப்பவர்களாகவும் கோவினத்து ஆயர் பசு கூட்டங்களை வளர்ப்பவர்களாகவும் புல்லினத்து ஆயர் ஆடுகளை வளர்ப்பவர்களாகவும் இருந்துள்ளனர்.

முல்லை நில மக்களின் வாழ்விடங்கள் பெரும்பாலும் குடிசைகளாகவே இருந்துள்ளன. மண் சுவர் எழுப்பி வரகு தாளால் கூரையை வேய்ந்திருந்தார்கள். இவர்களின் குடிசைகள் குறுகிய கால்களை உடையவனாய் இருந்தன. குடிசை கால்களில் ஆடுகள் உண்பதற்கான தழைகளை கட்டி இருந்தனர். இடையர்களின் முதியவர்கள் தோலினை படுக்கையாக விரித்து படுத்தனர் என்பதை பெரும்பாணாற்றுப் படை பாடல் வரிகள் (148-152) சுட்டிக் காட்டுகின்றன. முல்லை நிலத்தில் வாழும் ஆயர்களின் வாழ்க்கை எளிமையும் அமைதியும் இன்பமும் நிறைந்திருந்தது என்பதை 'கோவலர் வாழ்க்கை ஒரு கொடும்பாடு இல்லை' என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் குறிப்பிடுகிறார்.

### முல்லை நிலத் தொழில்கள்

முல்லை நில மக்களின் முக்கியமான தொழில் ஆடு, மாடுகளை மேய்த்தலாகும். இந்நில ஆயர்கள் ஆநிரைகளை மேய்த்து அதில் வரும் பொருள்களையே

வருமானமாக கொண்டு வாழ்க்கை நடத்தியுள்ளனர். அவர்களின் வாழ்வை காட்சிப்படுத்தும் குறுந்தொகை 221 வது பாடல் 'ஆயற்குடியில் பிறந்த ஆண்மகன் காலைப்பொழுதிலிருந்து பாலைக் கரந்து ஊர் பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று கொடுப்பான். பிறகு அவர்கள் கொடுக்கும் உணவினை வீட்டுக்கு கொண்டு வந்து கொடுப்பான்' என்பதாக பதிவு செய்கிறது.

ஆணின் வாழ்க்கை இப்படி எனில் ஆயர்குல பெண்கள் அதிகாலை நேரத்தில் பறவை எழுவதற்கு முன்பே துயில் எழுந்து, மோர் கடைந்து அருகில் உள்ள ஊரில் சென்று விற்பனை செய்வார்கள். ஆயர் குல பெண்கள் தான் பெற்ற பணத்திற்கு ஈடாக பசுக்களை வாங்கி வளர்ப்பார்கள். மாடுகளே உயர்ந்த செல்வம் என கருதினர் என்பதை,

**"பாலோடுவந்த கூழோடு பெயருமே**
**ஆடுடை இடைமான் சென்னி"**

எனும் குறுந்தொகை (221) பாடல் அடிகளின் வழி உணர்ந்து கொள்ள முடியும். பால் கறந்து விற்கும் தொழிலோடு தயிர் எடுத்து அதன் வாயிலாக வெண்ணை எடுத்து அதிலிருந்து நெய் உருக்குதலையும் கற்று இருந்தனர். ஆடு மாடுகளை மேய்த்து வந்த கோவலர்கள் சீழ்க்கை ஒலி எனும் ஒரு வகை ஒலி எழுப்பி ஆடு மாடுகளை மேய்த்து உள்ளனர் என்பதை பெரும்பாணாற்றுப்படையின் (166) 'மடிவாய் கோவலர்' என்னும் வரி சுட்டுகிறது.

## இடையர் வாழ்க்கை

முல்லை நில மக்களில் ஒருவரான இடையர்களின் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் நற்றிணை 142 ஆவது பாடல் 'மழைக் காலத்தின் இறுதிநாளில் பால் விலைக் கூறும் இடையன் கையில் பலவாகியப் காலிட்டுப் பின்னிய உறியுடன், தீக்கடைக்கோல் முதலானக் கருவிகள் பலவற்றை இட்ட தோற்பை யினையும், ஒருசேர சுருட்டி கட்டினான் அவற்றை பனையோலைப் பாயோடுச் சேர்த்துக் கட்டி முதுகில் சுமந்து சென்றான். நுண்ணியப் பல நாதிவலைகள் அவனுடைய உடம்பில் ஒரு பகுதியை நனைத்தன. கையில் இருந்த கோலை ஊன்றி அதனிடம் ஒரு காலை ஊன்றிய வனாய் ஒடுங்கி நின்ற அவளிடையன் நாவை மடித்தப்படி 'வீளை' ஒலியை எழுப்பினான். அவ்வொலிக் *கேட்ட ஆட்டுக்கூட்டம் வேற்றிடங்களில் திரியாது மயங்கி அவ்வண்ணமே தங்கி

நிற்கும் காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது' தலைவியின் ஊர் என்று தலைவன் பாகனுக்கு கூறும் பாடலின் வழியே பதிவு செய்கிறது.

### வேட்டுவர் வாழ்க்கை

கால்நடை மேய்த்தல் மட்டும் இன்றி வேட்டையாடுதலும் முல்லை நிலத்தின் தொழில்களில் ஒன்று. அவ்வாறு வேட்டையாடுதலை தொழிலாக கொண்ட வேட்டுவர்களின் வாழ்க்கையை பதிவு செய்யும் நற்றிணை (39) 'காட்டில் உடும்பைக் கொன்று, வரிதத தவளையை அகழ்ந்தெடுத்தும்; நெடிய கோடுகளைக் கொண்ட புற்றுகளை வெட்டி ஆண்டு றையும் ஈசல்களை மண்ணைத் தோண்டி எடுத்தும் பகலில் முயலை வேட்டையாடியும் வாழும் வேட்டுவன் இரவின் கண் தன் அழகியத் தோளில் சுமந்து வந்து பல்வேறு வகைப்பட்ட பண்டங்களைப் பொதிந்த மூட்டையுடனே ஏனையக் கருவிகளையும் வீட்டியிலேயேப் போட்டு விட்டு மறந்து மிகுதியான பருகியக் கள்ளின் மயக்கத்தில் செருக்குற்று கிடப்பான்' என்பதாகப் பதிவு செய்கிறது.

நற்றிணையின் 169 ஆவது பாடல் தலைவன் நெஞ்சிற்குச் சொல்வதாக அமைந்து வேட்டுவர்களின் வாழ்க்கையை காட்சிப்படுத்துகிறது. 'முல்லையின் நறுமணம் கமலும் மலரை, ஆடுகின்ற தளையையுடைய ஆட்டை மேய்க்கும் வலிய கைகளை உடைய இடையன் இரவிலே கொய்து வெண்மையாபை பனங்குருத்தின் பொழுவுடனே சேர்த்து மாலையாகத் தொடுத்து அணிவான்' என்றும் பதிவு செய்கிறது.

### ஏறு தழுவுதல்

முல்லை நில மக்கள் வீரம் நிறைந்தவர்களாக இருந்துள்ளனர். முல்லை நில மக்களின் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் ஆகும். நாட்டின் எல்லைப் பகுதிகளான காடுகளில் வாழும் இவர்களே பகைவர்களின் தாக்குதலுக்கு முதலில் ஆட்படுகின்றனர். எனவே நாட்டை பகைவர்களிடமிருந்து பாதுகாக்கவும் விலங்குகளிடமிருந்து ஆடு, மாடுகளைப் பாதுகாக்கவும் இவர்களுக்கு வீரம் முக்கியமானதாக இருந்தது. வீரம் பொருந்திய ஆண் மகனுக்கே மகளை மணம் முடிக்கும் வழக்கம் இவர்களிடம் இருந்தது. இதன் காரணமாக உருவாகியதே ஏறுதழுவுதல் எனும் நிகழ்வாகும்.

ஏறுதழுவுதல் என்பது சீறிப்பாயும் காளைகளைத் தழுவி அடக்குதல் ஆகும்.

ஆயர் ஏறுகளின் கொம்பை கூர்மையாக சீவி பரந்த வெளியான ஏறு தழுவு மிடத்தில் விடுவர். இளைஞர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஏறுதழுவ முயல்வர். ஏறு தழுவிய ஆயனுக்கே தன் பெண்ணை மணமுடித்து தருவர். ஏறுதழுவுதல் கட்சியை நல்லூருத்திரன் பாடிய முல்லைக்கலிப் பாடல் சிறப்பாக காட்சிப்படுத்துகிறது.

அக்காலத்தில் ஒரு ஆண் மகனின் முக்கிய கடமையாக ஏறுதழுவுதல் இருந்தது. கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை ஆய்மகள் மறு பிறப்பிலும் தழுவ மாட்டாள் எனக் குறிப்பிடும் கலித்தொகை 103 ஆம் பாடல் ஏறுகளை நேருக்கு நேர் நின்று அடக்குவதற்கு பயம் கொள்ளும் ஆயனை எந்த ஆய்ச்சியும் விரும்ப மாட்டாள். இப்பிறவி மட்டுமல்ல மறுபிறவியிலும் விரும்ப மாட்டாள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

## முல்லை நில வாழ்வு

முல்லை நில மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் காட்டு நிலப்பகுதி சார்ந்தே இருந்துள்ளது. பெண்கள் வீட்டில் இருத்தல், விருந்து செய்தல், புதல்வனைப் பெற்று வளர்த்தல், தலைவனுடன் கூடுதல், தலைவன் இல்லாத போது அவன் வரும் வரையிலும் வருந்தி காத்திருத்தல், ஆண்கள் பொருளீட்டச் செல்லுதல், போருக்குச் செல்லுதல், தலைவியுடன் கூடியிருத்தல், வேட்டையாடுதல், ஆடு, மாடுகள் மேய்த்தல், பால் விற்றல், புல்லாங்குழல் ஊதுதல், களைப்பு ஏற்படும் போதும் மகிழ்ச்சியாய் இருக்கும் போதும் கள் குடித்தல், என்பதாக வாழ்ந்தார்கள். தலைவியுடன் சேர்ந்து இருக்கும் போது பொழிகின்ற மழையை வாழ்த்துதல், முன் நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தல் என்பதாக சங்க இலக்கியங்களில் வழியே நில மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடிகிறது.

## வழிபாடு மற்றும் நம்பிக்கைகள்

திருமாலை வழிபடும் முல்லை நில மக்கள் எருமைக் கொம்பையும் வழிபட்டுள்ளனர். திருமணம் போன்ற நிகழ்வுகளின் போது மணலை வீட்டின் முன்பக்கம் பரப்பி வைத்தல், செம்மண் கொண்டு பூசுதல் உள்ளிட்ட நிகழ்வுகளோடு எருமை கொம்பை வீட்டில் வைத்து அதை

தெய்வமாக வழிபடுவர் என்பதை கலித்தொகையின் 141 வது பாடல் மூலம் அறிய முடிகிறது.

முல்லை நில மக்களின் நம்பிக்கைகளுள் விருந்தினர் வரக் காக்கை கரைதல், நினைத்தது பலிக்கச் சுவரிலே பல்லி இயம்புதல், புள்ளினச் சகுனம் பார்த்தல் மற்றும் விருச்சி கேட்டல் ஆகியவை முக்கியமானதாகும். இதில் விரிச்சி கேட்டல் என்பது தமிழர்களின் பழைய நம்பிக்கைகளில் ஒன்று. ஏதேனும் ஒரு முக்கியமான வேலை நிமித்தம் வெளியே செல்லும்போது மூத்த பெண்ணீர் வீட்டிற்கு வெளியே வந்து அயலார் பேசிக் கொள்ளும் பேச்சின் வாயிலாக தான் செல்லும் காரியம் நடக்கும் நடக்காது என்பதை உணர்ந்து சொல்வதாக இந்த நம்பிக்கை அமைந்துள்ளது.

நற்சொல் கேட்ட முதுமகள் தலைவியிடம் அதை தெரிவிக்கிறாள். யாரோ ஓர் ஆய்மகள் தான் பிடித்து வரும் கன்றிடம் உன் தாய் இதோ வந்து விடுவாள் என்று கூறிக் கொண்டே செல்கிறாள். அதுதான் இவர்களுக்கு நற்சொல்லாக அமைகிறது. நாங்கள் நற்சொல் கேட்டோம் அதனால் உன் தலைவன் திரும்பி வருவது உறுதி எனவே மகளே உன் துயரத்தை விட்டு விடுவாயாக என்று ஆறுதல் கூறுவதாக செய்திகள் உள்ளன. இதேபோன்று அரசிக்கு ஆறுதல் கூற முனைவதாக நெடுநல்வாடையும் பதிவு செய்கிறது.

## முடிவுரை

காடுகளில் உறையும் வாழ்க்கை முறையை கொண்ட முல்லை நில மக்களான ஆயர், ஆய்ச்சியர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை மட்டுமல்ல வீரம் நிறைந்த வாழ்க்கையையும் வாழ்ந்துள்ளனர். கால் நடை வளர்த்தல் மட்டுமல்ல வேட்டை யாடுதல் தொழிலையும் மேற்கொண்ட இவர்கள் வீர விளையாட்டுகளான ஏறுதழுவுதல் உள்ளிட்ட பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டு வாழ்ந்துள்ளனர். வழிபாடுகள், நம்பிக்கைகள், விழாக்கள் உள்ளிட்ட வாழ்வியல் கூறுகளோடு ஆற்றியிருத்தல் எனும் உயர்ந்த ஒழுக்கத்தை உடையவர்களாகவும் இருந்துள்ளனர்.

## துணை நூற் பட்டியல்

1. சோமசுந்தரனார் பொ. வே, குறுந்தொகை, 2007, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. நச்சினார்க்கினியர், கலித்தொகை, 2007, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

3. நாராயணசாமி ஐயர், நற்றிணை, 2007, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. சோமசுந்தரனார் பொ. வே, பத்துப்பாட்டு மூலமும் உரையும் 1, 2007, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. வேங்கடராமன் கா. கோ, தமிழ் இலக்கிய வரலாறு, 2001, கலையக வெளியீடு, பரமத்திவேலூர்.
6. சண்முகம் பிள்ளை.மு, சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

Vol. 8 Special Issue 1 July 2024 E-ISSN: 2456-5571

# நடந்தாய் வாழி காவிரி

**முனைவர் க. ரவிச்சந்திரன்**
தமிழ் கௌரவ விரிவுரையாளர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

**திறவுச்சொற்கள்**
ஆற்றங்கரை நகரங்கள், புராண வரலாறு, நில வரலாறு, பொன்னி, பொய்யாக்குலக்கொடி, தண்டமிழ்ப்பாவை, நடந்தாய் வாழி காவிரி.

## முன்னுரை

**"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்றி அமையாது ஒழுக்கு."**

என்னும் வள்ளுவனின் வெண் பாவிற்கேற்ப இவ்வுலகம் நீர் இன்றி நிலைபெறாது. அத்தகு நீர் வளம் மிக்க ஆறு காவிரி ஆறு. ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ் என்கிறது ஔவை பிராட்டியின் நல்வழி. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளில் ஆறு பாய்ந்து வளம் பெருக்கிய நிலம் மருத நிலம். மருதம் உயர்ந்த தெங்கும் கமுகும் பலாவும் வாழையும் கரும்பும் நெல்லும் நற்சோலையும் அச்சோலையில் நன்மலரும் பூத்துக் குலுங்கி, இயற்கை கொஞ்சும் அழகிலே, தென்றல் புகுந்து விளையாடும் நந்தவனமாய், பூமித்தாய்க்கு பசுமை போர்த்தி, காணும் கண்களுக்கு குளிரூட்டி விருந்தாக்கியது காவிரி ஆறு. அக்காவிரி தான் நடந்து செல்லும் இடங்களை வளமாக்கி, செல்லும் இடமெல்லாம் சோறாக்கி நிலங்களையும் மனித மனங்களையும் பண்படுத்துகிறது. அத்தகு காவிரியின் புராண வரலாறு, நில வரலாறு, பொன்னி, பொய்யாக் குலக்கொடி தண்டமிழ்ப்பாவை, நடந்தாய் வாழி காவிரி ஆகிய பொருண்மையில் தமிழ் இலக்கியங்கள் காவிரியின் மாண்புகளை எவ்வாறு பாடுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆற்றங்கரை நகரங்கள்

அமெரிக்காவின் தலைநகரான நியூயார்க் பாசேயிக் ஆற்றங்கரையிலும் லண்டன் தேம்ஸ் ஆற்றங்கரையிலும் கல்கத்தா ஊக்ளி ஆற்றங்கரையிலும் அவை போல சோழர்களின் பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினம் காவிரி

ஆற்றங்கரையிலும் அமைந்திருக்கின்றன. காவிரியின் தென்கரையில் 128 சிவாலயங்களும் வடகரையில் 63 சிவாலயங்களும் ஆக 191 சிவாலயங்கள் காவேரி ஆற்றிங்கரையில் உள்ளன. தமிழகத்தின் முக்கிய ஆறுகளான கெடிலம் ஆறு 112 கிலோமீட்டர் தொலைவும் பொருநை ஆறு 120 கிலோ மீட்டர் தொலைவும் கொள்ளிடம் ஆறு 147 கிலோ மீட்டர் தொலைவும் வைகை ஆறு 124 கிலோமீட்டர் தொலைவும் பாலாறு 368 கிலோமீட்டர் தொலைவும் தென்பெண்ணை ஆறு 400 கிலோமீட்டர் தொலைவும் பயனிக்கின்றன. அதேபோன்று காவிரி ஆறு 800 கிலோ மீட்டர் தொலைவு பாய்ந்து செல்கின்றன.

**புராண வரலாறு**

கவேரன் என்னும் மன்னனுக்கு மகளாய் பிறந்தவள் காவேரி. இவள் அகத்தியரை மணந்து கொண்டாள். அகத்தியனின் மனைவியான உலோபமுத்திரை என்பவளே காவேரி. அகத்தியர் தன் மனைவியைத் தண்ணீராக்கி கமண்டலத்தில் அடக்கி வைத்திருந்து தவம் மேற்கொண்டார். அச்சமயத்தில் இந்திரன் அசுரனுக்கு அஞ்சி சீர்காழியில் ஓடி ஒளிந்து வாழ்ந்து வந்தவன், ஒரு மலர்த்தோட்டத்தை உருவாக்கி காத்து வருகையில், தோட்டத்திற்கு தண்ணீர் வேண்டி விநாயகப்பெருமானிடம் வேண்ட, அவர் காகம் உருவம் கொண்டு அகத்திய முனிவர் வைத்திருந்த கமலகுண்டத்தை இடரிவிட தண்ணீர் விரிந்து சென்றதனால் அது காவிரி எனப் பெயர் பெற்றது. இதனை,

> **"ஆதி மாதவ முனி அகத்தியன் தரு**
> **பூத நீர் கமண்டலம் பொழிந்த காவேரி"** (1)

என கம்பராமாயணம் குறிப்பிடுகிறது. காந்தமன் என்னும் அரசன் வேண்ட அகத்தியர் கமண்டலம் கவிழ்க்கப் பட்டதாக மணிமேகலை,

> **"கஞ்ச வேட்டையின் காந்தமண் வேண்ட**
> **அமர முனிவன் அகத்தியன் தானாஅது**
> **கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை"** (2)

என மணிமேகலை குறிப்பிடுகிறது. அருணகிரிநாதரும்,

> **"கனகுடகில் நின்ற குன்றம்**
> **திருசங்கரன் குறுமுனி**
> **கமண்டலம் கொண்டு"** (3)

எனப் பாடுகிறார். காவிரிக்கு சங்க அமலத் தீர்த்தம், சங்கத் தீர்த்தம் எனப் பெயரிடு கின்றனர். வடவர்கள் காவிரியைக் காவேரி என அழைக்கின்றனர். கம்பர் தன் மகளுக்கு காவேரி என்று பெயர் சூட்டியுள்ளார். காவிரியை சித்திரதன்வன் என்ற சோழன் கொண்டு வந்தான் என

சிங்காரவேலனாரின் அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது. இதனை ஜெயங்கொண்டார்,

**“காலனுக்கு இது வாழ்க்கென உரைத்த அவனும் காவிரிப் புனல் கொணர்ந்த அவனும்” (4)**

என்று குறிப்பிடுகிறார்.

## நில வரலாறு

கர்நாடகாவின் குடகு மலையின் சையம் மலையில் பிறந்து தலை காவிரியில் வீழ்ந்து ஹாசன், மைசூர், மாண்டியா, பெங்களூர், சாம்ராஜ் ஆகிய நகரங்களின் வழியாக எழுந்து, தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், முசிறி, குளித்தலை, கரூர், திருச்சி, திருவரங்கம், தஞ்சாவூர், திருவையாறு, நாகப்பட்டினம் ஆகிய நகரின் வழியாக நடந்து, காவிரிப் பூம்பட்டினத்தில் ஓடி கடலில் கலக்கிறது. தமிழ்நாட்டில் ஓமலூர் திருச்செங்கோடு மாவட்டங்களில் வடக்குத் தெற்காக ஓடும் காவிரி, சோழவள நாட்டில் தென்கிழக்காக ஓடுகிறது. இதனை அகநானூறு,

**“சிறைபறைந் துரைஇச் செங்குணக்கு ஒழுகும் அந்தண் காவிரி போல”** (5)

என்று குறிப்பிடுகிறது. பதிற்றுப்பத்தும்,

**“செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிதிரைக் காவிரி யன்றியும்” (6)**

என குறிப்பிடுகிறது. காவிரி பறந்து விரிந்து செல்வதை பாவேந்தர் பாரதிதாசனும்,

**“பூவிரிந்து வானெங்கும் தேன் விரிந்து பொன் விளைந்தாற் போலும் நறும்பொடிவிரிந்து காவிரிதல் போலெங்கும் விரிதலாலே காவிரி என்றார்கள்” (7)**

என்று குறிப்பிடுகிறார்.

## பொன்னி

காவிரிக்கு பொன்னி என்ற பெயரும் உண்டு. காவிரி ஆற்றின் நீரிலும் நிலத்தின் மண் துகளிலும் பொன் துகள் காணப் படுவதால் அதற்கு பொன்னி என்னும் பெயர் ஆயிற்று. இதனைப் பட்டினப்பாலை,

**“புனல் பரந்து பொன் கொழிக்கும் விளைவறா வியன் கழனி”** (8)

என்று குறிப்பிடுகிறது. முதற்காலத்தில் காவிரி ஆற்றில பொன் துகள்கள் இருந்ததால் அதனை பொன்னி என்றனர். இதனை பாரதிதாசன்,

**“பொன் விளைந்தாற் போலும் நறும்பொடி விரிந்த காவேரி” (9)**

என்று பாடுகிறார். குலசேகர ஆழ்வார் பொன்னி ஆற்றினை,

**“திருவரங்கத்துப் பெருநகரில் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையால் அடிவருடிப் பள்ளி கொள்ளும் கருமணி” (10)**

என்று பாடுகின்றார். திருஞானசம்பந்தரும் பொன்னிநதியை,

**“வளர்பொன்னி வளந்தரும்நாடு” (11)**

என்கிறார். சேக்கிழாரும்,

**"போலும் நான்முகனையும் பொன்னிநதி" (12)**

**"செம்பியர் பொன்னி நாடு" (13)**

**"சோழர் பொன்னித் திரு நாடு" (14)**

என்று பாடுகிறார்.

## பொய்யாக் குலக்கொடி

வற்றாத வளம் தரும்தென்னாட்டின் கங்கையான காவேரி இன்று வறண்டு வருவது வேதனையிலும் வேதனை. தமிழ்நாடு இன்று தண்ணீர்க்காக கர்நாடகாவிடமும் ஆந்திராவிடமும் கேரளாவிடமும் கையேந்தி நிற்கக் கூடிய அவல நிலையைக் காண முடிகிறது. காவிரியின் சிறப்பை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள் பல்வேறு போற்றி புகழ்ந்து பாடியுள்ளன. கதிரவன் நான்கு திசையில் தோன்றினாலும் வடக்கு தோன்றும் வெள்ளி தெற்கு நோக்கி சென்றாலும் சூழ்நிலை மாறினாலும் காவேரி வற்றாது. அதைப்போன்று சோழன் குளமுற்ற துஞ்சிய கிள்ளி வளவன் வீற்றிருக்கிறான் என்பதை நாகனார்,

**"அலங்கு கதிர் கனலி நால்வயின் தோன்றினும் இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும் அந்தண் காவிரி வந்து கவர் பூட்டத் தோடு கொள் வேலின் தோற்றம் போல ஆடுகனக் கரும்பின் வெண்பூ நுடங்கும் நாடெனப் படுவது நினதே" (15)**

என்று பாடுகின்றார். கோடைக்காலம் ஆயினும் குன்றாமல் நீர் தரும் காவேரி ஆறு. அத்தகைய காவிரிஆறு மன்னனைக் காப்பதாக நல்லிறையனார்,

**"கோடையாயினும் கோடா ஒழுக்கத்துக்**
**காவிரி புரக்கும் நல்நாட்டு பொருந" (16)**

என புறநானூறு பாடுகிறது. கூடலூர் உருத்திரங்கண்ணனார் விண்மீன் வடதிசையில் இருந்து தென்திசை மாறினும் வானம்பாடி மழை நீரை உண்ணாது வருத்தி மழை பொய்த்தாலும் கடல் வற்றினாலும் காவிரி தன் வளத்தால் பொன் கொழிக்கும் என்கிறார். இதனை,

**"வசையில் புகழ் வழங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்**
**தற்பாடிய தளி யுணவின்**
**புள்தேம்பிப் புயல் மாறி**
**வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைத் தலைய கடற் காவிரி" (17)**

எனக் குறிப்பிடுகிறார். காவிரி ஆறு சோழர்களின் குலத்தெய்வமாகவும் குலக் கொடியாகவும் போற்றியதை மணிமேகலை,

**"கோடாச் செங்கொல் சோழர்தம் குலக்கொடி" (18)**

என்று சீத்தலைச்சாத்தனார் பாடுகிறார்.

## தண்டமிழ்ப்பாவை

குடகு மலையில் உதயமாகும் காவிரி ஆறு வானம் வறண்டாலும் வளம் தரும். சனி கிரகம் புதைந்தாலும் தூமகேது தோன்றினாலும் வெள்ளி தெற்கு சென்றாலும் இடியுடன் மழை பெய்து வளம் தரும் காவிரி என்பதை,

**"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும் விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும் கால்பொரு நிவப்பிற் கடுங்குரல் ஏற்றொடு சூல்முதிர் கொண்மூப் பெயல் வளஞ் சுரப்ப காவிரிப் புதுநீர்" ( 19)**

என்று காவிரியைப் புதுப்புனல் என்கிறது சிலப்பதிகாரம். மணிமேகலைக் காப்பியமும்,

**"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்**
**தான்நிலத் தெரியாத தண்டமிழ்ப்பாவை" (20)**

என காவிரி ஆற்றினைத் தண்டமிழ்ப் பாவை என்கிறது. மேலும் பட்டினப் பாலை பொய்யா மரபின் வழி தோன்றியதாகக் குறிப்பிடுவதை,

**"பொய்யா மரபின் பூமலி பெருந்துறை**
**மாஆ காவேரி மணம் கூட்டும்" (21)**

என குறிப்பிடுகிறது. சிலம்பதிகாரமும்,

**"தெய்வக் காவிரி தீதுதீர் சிறப்பும்**
**பொய்யாவானம் புதுப்புனல் பொழிதலும்" (22)**

காவிரி புதுப்புனல் ஓடியதாகக் குறிப்பிடுகிறது. காவேரி ஆறு ஆழம் காணாத அளவுக்கு ஓடியதை அகநானூறு,

**"பிண்ட நெல்லின் உறந்தை யாங்கன்**
**"கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தம்" (23)**
**"கழை யளந்தறியாக் காவி" (24)**

என குறிப்பிடுகிறது. ஐங்குறுநூறு,

**"காவிரி மலிர் நிறை யன்னநின் மார்பு" (25)**
**"காவிரி மல்லல் நன்னாடு" (26)**
**"பொன்னி அளக்கும் புனல் ஒரு பெரிபு" (27)**
**"காவிரி நாடனை பாடுதும் பாடுதும்"(28)**

என இலக்கியங்கள் பாடுகின்றன.

**நடந்தாய் வாழி காவிரி**

குடகுமலையில் உற்பத்தியாகும்

**"கரசம் கவிழ்த்த காவிரிப்பாவை" (29)**

பரந்து விரிந்த "பரப்பு நீர்க் காவிரிப்பாவை"(30) ஹோரங்கி, ஹேமாவதி, லட்சுணத்தீர்த்தம், கபினி, சொர்ணாவதி, சிம்சா, அர்க்கவதி, மேகதாட்டு, ஒகேனக்கல், பாலாறு, சென்னாறு, தொப்பாறு, ஆகாய கங்கை, பவானி கொடுமுடி, நொய்யல், அமராதி, கொள்ளிடம், முக்கொம்பு ஆகிய சிற்றாறுகள் காவிரியோடு இணைந்து ஒய்யார நடைநடந்து, காண்பவரைப் பரவசப் படுத்தி, இதயத்திற்கு இதமளித்து, இருகரைகளையும் நிறைத்து, பல்வேறு மூலிகைகள், தாதுக்கள், நறுமணப் பொருட்கள், இன்னபிற செல்வங்களை கைகளால் அரவணைத்து, பச்சை உடுத்தி அணிந்து, கண்ணிய விழா நடக்கின்ற பெண்ணாக நடந்து வருவதை,

**"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப**
**மணிப்பூ ஆடை அது போர்த்துக்**
**கருங்கயற்கண் வழித் தொல்கி**
**நடந்தாய் வாழி காவிரி" (31)**

என்று பாடுகிறார் இளங்கோவடிகள். மேலும், பூக்கள் நிறைந்த சோலையில் மயில்கள் கூட்டம் கூட்டமாக ஆடவும், அதற்கேற்ப குயில்கள் பாடவும், மகளிர் தீபங்காட்டி காவிரியை வரவேற்றதை,

**"பூவார் சோலை மயிலாலப்**
**புரிந்து குயில்கள் இசைப்பாடக்**

**காமர் மாலை அருகசைய**
**நடந்தாய் வாழி காவிரி" (32)**

என காவிரித்தாயை வாழ்த்தி வரவேற்கிறார் இளங்கோவடிகள்.

**முடிவுரை**

காவிரி, தென்பெண்ணை, பாலாறு பொருநை வைகை என பல ஆறுகள்தமிழ்நாட்டில் ஓடினாலும் குன்றாத சிறப்பினைப் பெற்றது காவிரி ஆறு. தென்னாட்டு கங்கை என்று போற்றப்படும் காவிரி ஆறானது மக்களின் அன்றாட தேவைக்கும் பாசனத்திற்கும் மின் உற்பத்திக்கும் பயன்படுகின்றன. காவிரி ஆற்றின் தென்கரையில் 128 சிவாலயங்களும் வடகரையில் 63 சிவாலயங்களும் உள்ளன. ஓமலூர், திருச்செங்கோடு பகுதிகளில் வடக்கு தெற்காக ஓடும் காவேரி, சோழநாட்டில் தென்கிழக்காக ஓடுகின்றன. காவேரி ஆற்றுக்கு தண்டமிழ்ப்பாவை, பொன்னி, காவிரிப் பாவை போன்ற பெயர்களும் உள்ளன. சித்திரவர்த்தன் என்னும் சோழ மன்னன் காவிரியாற்றினை உருவாக்கியதாக இலக்கியங்கள் பேசுகின்றன. வானம் வறண்டாலும் விண்மீன் திசை மாறினாலும் தான் பொய்யாது வளம் தரக்கூடியது காவிரி ஆறு என சங்க இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் பறைசாற்றுகின்றன. 800 கிலோ மிட்டர் பயணித்து சோழ நாட்டை சோறுடைத்த நாடாக மாற்றியது காவிரியின் சிறப்பாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. சிலம்பு-நாட்டுச்சிறப்பு -2 ,
2. மணிமேகலை. பதிகம் -10-13. ,
3. திருப்புகழ்-930;10.
4. கலிங்கத்துப்பரணி- 192
5. அகம் -76;11,12 ,
6. பதிற்றுப்பத்து-50:5,
7. பாரதிதாசன் கவிதைகள் -29.
8. பட்டினப்பாலை-7,8 ,
9. பாரதிதாசன் கவிதைகள் -29.
10. பெருமாள் திருமொழி.-1
11. சம்மந்தர் தேவாரம். 1020
12. சம்மந்தர் தேவராம் - 54.
13. சம்மந்தர் தேவாரம்-502.
14. சம்மந்தர் தேவாரம்-1022
15. புறம்-55
16. புறம்-393
17. பட்டினப்பாலை-1-6
18. மணிமேகலை.பதிகம் -23
19. சிலம்பதிகாரம் -10;101-106
20. மணிமேகலை-24,
21. பட்டினப்பாலை-
22. சிலம்பு.கட்டுரை.8,9

23. அகநானூறு -6:6,7
24. அகநானூறு-32;10
25. ஐங்குறுநூறு-7:4
26. புறநானூறு-173
27. பெரியபுராணம்-1211
28. சிலம்பதிகாரம்-2915
29. பதிற்றுப்பத்து-12:4
30. சிலம்பு.நாடுகாண்.48
31. சிலம்பு.காணல்வரி-25
32. சிலம்பு.கானல்வரி-26

# சங்க சான்றோர்களின் ஆற்றுநீர் மேலாண்மை

**முனைவர் க. கோவிந்தராஜி**

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாதனூர், வேலூர்

## முன்னுரை

மனிதனது வாழ்தல் கோட்பாட்டினால், அவனால் நிகழ்த்தப்பட்ட இயற்கை அழிப்பையும் மனித அழிப்பையும் நியாயப்படுத்தும் நிலை சமூகத்தில் இன்று வரை நிகழ்ந்து வருகிறது. இயற்கையின் மாறுபாட்டுத் தன்மையினாலும் மனிதனது ஆளுகை வேட்கையினாலும் நிகழ்ந்த பேரழிவுகளை, சங்ககால மக்கள் பேரழிவுகள் நிகழ்வதற்கு முன்பும் நிகழ்ந்தப் பின்பும் தங்களைத் தற்காத்துக் கொள்ள மேலாண்மை வழிமுறைகளை மேற் கொண்டனர். அக்காலமானது, மனிதத் தோற்றம் பெற்று அறிவியல் வளர்ச்சி என்பது முறைப்படுத்தாத காலமாகவே கொள்ளப்படுகிறது. அவ்வாறு இருந்தும் நீரினால் ஏற்படும் பேரிடர்களை தடுத்து மேலாண்மை செய்துள்ளனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறியலாம்.

## சங்கத்தமிழரின் நேரிய வாழ்க்கை

இனக்குழு வாழ்வின் எச்சமாக சங்ககாலம் திகழ்ந்தாலும், அரசர்களின் ஆளுமைப் போக்கினையே பெரும் பான்மையும் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. இருப்பினும், முடிவேந்தர்கள் ஆளுமை செலுத்தியப் போதிலும் தம் வாழ்வியல் நெறியில் இருந்து தவறவில்லை.

> **“கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது”**
>
> **(பட்.210)**

தாம் கொள்ளும் பொருள்களைத் தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும் வாங்கும் பொருள் களுக்குக் குறைவாகக் கொடுப்பதுமில்லை. இவ்வாறு மக்கள் நேர்மையுடன் வாழ்ந்த செம்மையான இல்லற வாழ்வினைக் காணமுடிகிறது. இத்தகைய நல்நெறி கொண்ட சங்ககாலத்தில்,

> **“உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்**
> **அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்**
> **தமிய ருண்டலு மிலரே முனிவிலர்**
> **துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்**
> **புகழெனி னுயிருங் கொடுக்குவர்**
> **பழியெனின் உலகுடன் பெறினுங் கொள்ளர**
> **யர்விலர் அன்ன மாட்சி யனைய ராகித்**

**தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென**
**முயலுந ருண்மை யான" (புறம்.182)**

என்ற புறப்பாடலில் தேவர்கள் உண்ணும் அமிழ்தம் தமக்குக் கிடைப்பினும் அதனைத் தனித்து உண்டு தாம் மட்டும் வாழும் இயல்புடையவர்கள் அல்லர். யாரொடும் வெறுப்பிலர். அனைவரிடத்தும் அன்புடையவர். பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்கு அஞ்சி, அது தீர்த்தற் பொருட்டு சோம்பி இருத்தலும் இலர். புகழ் கிடைப்பின் தம் உயிரையும் கொடுப்பர், பழியெனின் உலகம் முழுவதும் பெரினும் கொள்ளார். மனக்கவலை இல்லை. அத்தகு மாட்சிமைப்பட தன்மையராய் தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் சான்றோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இருக்கின்றது. தமக்கு ஏற்படும் துன்பத்தைப் போன்றே, பிறர்க்கு ஏற்படும் துன்பத்தைப் போக்கும் தன்மை உடையவர் என்பதன் காரண மாகவே, இவ்வுலகம் அழியாமல் உள்ளது என்றும் காரணம் கூறப்பட்டுள்ளது. இதில் சங்க சான்றோர்கள் சிறந்த மேலாண் மையாளர் என்பதற்கான இலக்கணம் படைக்கப் பட்டுள்ளது.

**ஆறுகளை உருவாக்குதல்**

நீரின் அவசியத்தை நன்குணர்ந்து மழைப் பெய்யும் காலங்களில், பிற்காலத்தின் நீரின் தேவையைப் போக்கும் விதமாகச் சங்ககால மக்கள் நீரியல் மேலாண்மை செய்தன. ஆறுகளை உருவாக்குதல், கால்வாய்களை அமைத்தல், ஏரி மற்றும் குளங்களை ஏற்படுத்துதல், நீர் நிலைகளைப் பாதுகாக்க காவல் ஆட்களை நியமனம் செய்தல் என்று தொடர் நிகழ்வாக மேலாண்மை செய்துள்ளனர்.

மலையில் பிறந்த ஆறுகள், மலையை விட்டு அகன்று நில எல்லையை அடைந்து, அங்குள்ள நிலங்களை வளம்பெறச் செய்து பின்பு கடலில் கலந்த செய்தியை,

**"மலையி னிழிந்து மாக்கட னோக்கி**
**நிலவரை யிழிதரும் பல்யாறு"**

**(புறம்.42)**

என்ற பாடலடியும், ஆறுகளை வெட்டு வித்து வறட்சியைப் போக்கி மக்களை வளம் கொள்ள செய்யும் நீரியல் மேலாண்மை மாண்பு சங்க மன்னர்களுக்கு அமைந்திருந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் 'பஃறுளி' ஆற்றை உருவாக்கியதை,

**"முந்நீர் விழவி னெடியோன்**
**நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"**

**(புறம்.10-11)**

என்ற பாடலடியும் விளக்குகிறது.

பாண்டிய மன்ன முந்நீராகிய கடலின் செல்வத்துக்கு விழா எடுத்தான் என்றும், பஃறுளி ஆற்றை உண்டாக்கினான்

என்பதையும் ‘முந்நீர் கடற்றெய்வத்திற் கெடுத்த விழாவினையுடைய நெடியோனால் உருவாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளியென்னும் ஆற்றின் மணலினும் பல காலம்’ என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை வழங்குகிறார். இதன்மூலம், பஃறுளியாறு கடல்கோளால் அழியப்பட்டதற்கு முன்பு வாழ்ந்த நெடியோன் இவ்வாற்றை உருவாக்கினான் என்று பொருள் கொள்ளலாம். இது மிகப்பெரிய பேரிடர் மேலாண்மைச் சிந்தனை ஆகும். இன்றையக் கால கட்டத்தில், நதிநீர் இணைப்புத் திட்டம் என்ற ஒன்றை முன் வைத்திருப்பதன் காரணம், ஒரு பகுதியில் வளங்கள் அதிகம் பெற்று மறு பகுதியில் நீரின்மையால் ஏற்படும் வறட்சியைப் போக்குவதற்கே ஆகும். சங்க சான்றோர்கள் இத்தகு வறட்சியால் ஏற்படும் பேரிடரைப் போக்கும் வகையில் ஆறுகளை அமைத்து, தங்கள் நாட்டில் வறட்சிப் போக்கும் வகையில் மேலாண்மையுடன் ஆட்சி செய்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

## ஆற்றுநீரால் பேரிடர் மேலாண்மை

குடகு மலையில் பிறந்த குளிர்ந்த காவிரி ஆறு, மிக்க ஆழத்தையுடைய புகார் கடலிலே சென்று கலக்கும் முன்பு, தான் வரும் இடைப்பட்ட பகுதிகளில் வளங்களை அளித்து மக்களுக்கு வறட்சி மற்றும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து பேரழிவிலிருந்து பாதுகாவலை மேற்கொள்கின்றது என்பதை,

> **“குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி**
> **கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப”**

**(மலை.527)**

என்னும் அடிகளும், வறட்சியிலிருந்து மக்களை மீட்டு வளம் கொடுக்கும் பணியைக் காவிரியாறு செய்கின்றது என்பதை,

> **“……………. பன்மாண்**
> **எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்**
> **குல்லை கரியவுங் கோடெரி நைப்பவும்**
> **அருவி மாமலை நிகழ்த்தவு மற்றக்**
> **கருவி வானங் கடற்கோள் மறப்பவும்**
> **பெருவற னாகிய பண்பில் காலையும்**
> **நறையு நரந்தமு மகிலு மாரமும்**
> **துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி”**

**(பொருநர்.232)**

கதிரவன் மிகுதியாகக் கதிர்களைப் பரப்புவதால் அக்காலத்தில் பெரும் வறட்சி ஏற்பட்டது. ஆனாலும், அவ்வறட்சியைப் போக்கும் அளவிற்கு காவிரி நீரை மேலாண்மை செய்து, நீரில்லாத வறட்சிக் காலங்களில் அதனை பயன்படுத்தி பயனடைந்தனர் என்பதை அறிய முடிகிறது. மேலும், வறட்சி காரணமாகப் பேரழிவுகள் ஏற்படாத வண்ணம் காவிரியாற்றின் நீர் பெற்று நீரியல் மேலாண்மை செய்தனர் என்பதை,

> **“கோடை யாயினுங் கோடே வொழுக்கத்துக்**
> **காவிரி புரக்கும்”**

**(புறம்.393)**

என்றும், தோட்டங்களையும் நெல் விளையும் கழனிகளையும் கொண்ட அம்பர் எனும் ஊர் காவிரியாற்றினால் செழிப்பாக இருந்ததை,

**"காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை**
**நெல்விளை கழனி யம்பர்"**

**(புறம்.385)**

என்ற பாடலடியும் விளக்குகின்றன.

### வளங்களைக் காத்தல்

நீர் வளத்தைப் பெருக்க வேண்டுமானால், இயற்கை வளங்களான மலைகளையும் காடுகளையும் காத்தல் அவசியம். மலையிலிருந்து வரும் மழைநீரானது தான் செல்லும் அனைத்துப் பகுதிகளையும் வளப்படுத்திவிட்டு இறுதியில் கடலில் சென்று கலப்பதை,

**"இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை**
**வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுகோட்டுப்**
**பொண்கோழித் திழிதரும் போக்கருங்**
**கங்கைப் பெருநீர் போகும் இரியல் மாக்கள்**
**ஒருமரப்**
**பாணி" (பெரும்.429)**

நெடிய சிகரத்தினின்றும் பொன்னைக் கொழித்துக் கொண்டு குதிப்பதும், மக்கள் கடத்தற்கு அரிதாகவும் உள்ள கங்கை யாற்றைக் கடந்து செல்ல விரும்பும் மக்கள் தோணியைப் பயன்படுத்தினர். கங்கையின் செழிப்பையும் வெள்ளம் வரும் காலங்களில் அதனைக் கடக்க மக்கள் தோனியைப் பயன்படுத்தி, அதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டதையும் உணரமுடிகிறது.

ஒரு நாட்டின் வளம் என்பது, அந்நாட்டில் இயற்கை அன்னையால் உருக்கொண்ட ஆற்றின் வளத்தை முதன்மையாகக் கொண்டே அமைகிறது என்பதை,

**"………………. மலி புகழ்**
**வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்"**

**(புறம்.71)**

என்னும் வையை ஆற்றின் வளத்தைக் காட்டுவதிலிருந்து அறியலாம்.

### அணைகள் கட்டி நீரைத் தேக்கும் நீரியல் மேலாண்மை

இயற்கை சீற்றமான பெரு வெள்ளத் திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அணைகள் பயன்பட்டுள்ளதை,

**"மழைநீங்கிய மாவிசும்பின்**
**மதிசேர்ந்த மகவெண்மீ**
**னுருகெழுதிற லுயர்கோட்டது"**

**(பட்டின.34)**

என்னும் பாடலடியில் வெண்ணிற நாள் மீனின் தோற்றம் போன்று கரைகளை அமைத்துள்ளனர் என்று சுட்டுகிறது. மேலும்,

**"வருபுனல் கற்சிறை"**

**(மதுரை.725)**

**"வருவிசைப் புனலை"**

**(தொல்.புறம்.7)**

**"கொல்புனற் சிறையின் விலங்கியோன்"**

**(புறம்.263)**

என்னும் அடிகளிலும் கரையை உடைத்துச் செல்லும் பெரு வெள்ளத்தைத் தாங்கி நிற்கும் அணையைப் போன்று, வீரன் செயல்பட்டான் என்று வீரத்தின் அடையாளத்தைக் குறிப்பதாயினும் ஆற்றின் இடையே அணைக்கட்டிய நிலையைப் புலப்படுத்துகின்றன.

பாறைக் கல்லிணையுடைய நிலம் போன்று அசையாத பரந்த கல்லணையால் தடுக்கப்பட்டு, தேக்கி வைத்த நீர் என்று நீரினைத் தேக்குவதற்குத் திடமான பாறை போன்ற கல்லினைக் கொண்டு அணைக்கட்டி நீரைத்தேக்கினர் என்பதை,

**“பாறைப் பரப்பின் பரந்த சிறைநின்று” (பரி.12)**

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

ஆற்றுநீரை அணைகள் கட்டி தேக்கிய நிலையில், அளவிற்கு அதிகமான வெள்ளப் பெருக்கு எற்பட்டு தடுப்புகள் உடைந்தது. அவ்வுடைப்பினால் பேரழிவு ஏற்படாமல் உயிர்களைக் காக்கும் பொருட்டு ‘பறை’ முதலிய கருவிகள் கொண்டு அணைக் காவலன், மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வெள்ள எச்சரிக்கை விடுத்ததை,

**“வரைச்சிறை யுடைத்ததை வையை வையைத் திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை அறைகெனும் உரைச்சிறைப் பறையெழ வூரொலித் தன்று” (பரி.6)**

என்ற பாடலில் வையையில் ஏற்பட்ட வெள்ளத்தினால், சிறகுகளாகிய அலைகள் காவலையுடைய மலை போன்ற அணைகளை உடைத்தன. உடைந்த கரைகளை அடைப்பதற்கு ஆள் எழுந்து வருக! என்று கூறும் கரை காப்பாளரின் சொல்லாகிய ஒலியொடு, பறையின் ஒலியும் எழுந்திட அவ்வொலிகளுடன் கிளர்ந்து எழும் ஊர் மக்களின் ஆரவாரமும் சேர்ந்து ஒலித்தன என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

சிறந்த மேலாண்மையினால் பசியினால் இறப்பு, அன்பின்றி போரினால் இழப்பு, இயற்கையால் ஏற்படும் பேரழிவில் பிறர் துன்பத்தைப் போக்குதல் முதலானவை மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் ஏற்படும் பேரழிவுகளிலிருந்து முறைசார் மேலாண்மை செய்துள்ளனர். மற்றும் மழை பெய்யும் காலத்தே மிகுதியான நீரினை, அணைகள் கட்டி தேக்கி வைத்த தோடு அணைகளுக்குக் காவலாக ஆட்கள் நியமித்து பாதுகாத்தனர் என்பதும் புலப்படுகிறது. அணை உடைந்ததை மக்களுக்கு அறிவித்து, மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கரையை அடைக்க முற்பட்டனர் என்பதன் மூலம் சங்ககால மக்கள் ஒன்றிணைந்து அணைகளை உருவாக்கியிருக்கலாம் என்பதை அனுமானிக்க முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரிஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. பதிப்பு – 2004.

# சங்க இலக்கியத்தில் கடலலையின் பேரிடர் மேலாண்மை

**திருமதி போ. சித்ராதேவி**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

தமிழ்த்துறை. த.கி.மு. மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சாயிநாதபுரம், வேலூர்

## முன்னுரை

இந்த உலகத்தில் கடவுள் வரைந்த மிகச்சிறந்த, அழகான ஓவியம் எதுவென்றால் அது இயற்கை ஆகும். மனித வாழ்வின் அடிப்படை ஆதாரமாக விளங்குவது. அத்தகைய இயற்கையானது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாக உலகம் தோற்றம் பெற்ற காலத்திலேயே உருக்கொள்ள ஆரம்பித்தது. ஆனால் இயற்கையானது மழை, கடல், காற்று, தீ, காடு, மலை போன்ற தன்னிகழ்வில் தோற்றம் பெற்ற அனைத்தும் மனித வாழ்விற்குத் தேவையான வளங்களை வழங்குகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு இயற்கை வளர்ச்சி நிலையைக் கொடுக்கின்றதோ, அதே அளவுக்கு அழிவையும் ஏற்படுத்துகின்றது. இவற்றுள் கடல் மூலம் ஏற்படும் பேரிடர்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இயற்கை அமைவு

இந்தியாவின் நான்கு எல்லைகளில் மூன்று பக்கம் கடல், ஒரு பக்கம் மலை என அமையப்பெற்றுள்ளது. உலகத் தோற்றத்தில் அனைத்து நிலங்களும் ஒன்றுபோல் படைக்கப் பெறவில்லை. ஒரு பகுதி மக்கள் வாழ்வதற்கு ஏற்றதாகவும், ஒரு பகுதி அடர்ந்த காடுகளாகவும், ஒரு பகுதி பள்ளமாகவும், ஒரு பகுதி மேடாகவும் பல்வேறு நிலைகளில் அமையப் பெற்றிருந்தது. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாறிய நிலமானது காடுகளாகக் காலப்போக்கில் உருப் பெற்றது. மனிதத் தோற்றத்திற்குப் பின்பு, தங்கள் வாழ்வினை நிலை நிறுத்துதலின் காரணமாக நிலத்தைச் சமன்செய்து காடுகளைத் திருத்தினர். உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் நிலங்களைப் போன்று, நில வளங்களும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.

அந்நிலப்பகுதியின் தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ப வளங்களும் மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது என்பதை,

> **“மாயோன் மேய காடுறை உலகமும்**
> **சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

**(தொல்.அகம்.5)**

என்னும் நூற்பாவால் அறியலாம்.

கடல், வளி, வான், மண் இவையனைத்தும் ஒன்றிணைந்தது உலகம் என்பதனை,

**"நளியிரு முந்நீ ரேணி யாக**
**வளியிடை வழங்கா வானஞ் சூடிய**
**மண்டிணி கிடக்கை"**

**(புறம்.35)**

நீர்ப் பரப்பினை உடைய பெரிய கடலினை எல்லையாகக் கொண்டும் காற்று நுழைந்து செல்லாத அகன்ற பரப்பினையுடைய வானத்துடன் பொருந்தியும் மண் செறிந்ததாகவும் இவ்வுலக அமைப்பானது உள்ளது என்று கிள்ளிவளவனை வெள்ளைக் குடிநாகனார் என்ற புலவர் பாடிய பாடலில் பதிவு செய்துள்ளார். இயற்கைப் பொருட்கள் அனைத்தும் ஒன்று மற்றொன்றின் தொடர்பை உடையதாய் அமைந்துள்ளன.

## இயற்கையின் மாறுபாடு பேரிடர்

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்று ஐம்பூதங்களால் ஆனது இவ்வுலகம். அளவிடற்கரிய பேராற்றல் வாய்ந்த இவ்வைந்தும் தம் நிலைகளில் மாற்றம் ஏற்படும்பொழுது இயற்கை சீற்றமடைகிறது. இதனை,

**"நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்**
**புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி**
**நிலம்புடை பெயர்வ தன்றுகொல் இன்றென**
**மன்னுயிர் மடிந்த மழையா றமையத்"**

**(அகம்:31)**

என்னும் இயற்கை மாறுபாடுகளால் ஏற்படும் பேரிடர்களை விளக்குகிறது.

## கடலின் தோற்றம்

**"பார்முதிர் பனிக்கடல்"**

**(திருமுருகு.45)**

என்ற பாடலடி மண் தோற்றம் பெறாத காலத்திற்கு முன்பே கடல் தோன்றியது என்ற கருத்தினை முன் வைக்கின்றது. உலகில் முதல் உயிரினம் தோன்றியது கடலிலே என்ற அறிவியல் பூர்வமான நிர்ணயத்தை அக்காலத்திலே அறிந்திருந்தனர் என்பதன் மூலம் அக்கால மக்களின் விஞ்ஞான அறிவினை உணரலாம்.

கடல்நீரானது மேகம் முகப்பதால் குறைவுபடாமலும், ஆறுகள் பாய்வதால் மிகுதலைச் செய்யாமலும் கரையை மோதி ஒலிக்கும் கடல் என்று கடலின் தன்மையை,

**"மழை கொளக் குறையாது புனல்புக மிகாது**
**கரைபொரு திரங்கு முந்நீர்"**

**(மதுரை.424)**

என்னும் அடிகளும், கடலால் சூழப்பட்டுள்ள இவ்வுலகம் தண்ணீர்மை குன்றாது

இருப்பினும், கடல்நீரானது பருகுவதற்கும் உணவிற்கும் உரியதன்று என்பதை,

**"திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்**
**அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்**
**சின்னீர் வினவுவர்"**

**(புறம்.154)**

திரை அலைக்கும் கடலின் கரை பக்கத்தே செல்லினும் உண்ணும்நீர் இருக்கும் இடத்தை அறிந்த அறிவாரைக் கண்டால், உலகத்து மக்கள் நீர் வேட்கையைத் தணிக்கும் சிறிய நீரைக் கேட்பர் என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாடலடி கடல்நீரின் தன்மையையும் நன்னீரின் தன்மையையும் ஒப்புமைப் படுத்துவதாக அமைந்துள்ளது.

**கடற்கோளும் சங்க அழிவும்**

சங்ககாலத்தில் கடற்கோளினால் சங்கங்கள் அழிந்த நிகழ்வை இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. முச்சங்கங்கள் பற்றிய செய்திகளை இறையனார் களவியல் உரை, முதற்சங்கம் கடல்கொண்ட மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்திலும் மூன்றாம் சங்கமாகிய கடைச்சங்கம் தற்கால மதுரையிலும் இருந்ததை விளக்குகின்றது. முதல் இரண்டு சங்கங்கள் கடற்கோள்களால் பேரழிவினைச் சந்தித்தன. இதனை சங்ககாலத்திற்குப் பின் வந்த சிலப்பதிகாரம்,

**"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"**

**(சிலம்பு.காடு.19)**

என்று பஃறுளி ஆறு, மலை, குமரிக்கண்டம் என்னும் நிலப்பரப்பு ஆகியன ஆழிப்பேரலை என்னும் இயற்கைப் பேரிடரால் அழிந்ததைக் காட்டுகின்றது.

கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கம், கடல் மலைத்தொடர் நிலச்சரிவு, கடல் எரிமலை வெடிப்பு, கடலில் பெரிய விண்கல் விழுதல் போன்ற காரணங்களால் ஆழிப்பேரலை ஏற்பட்டு, இவ்வலைகள் உருவாகிய சில மணி நேரங்களிலேயே உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதத்தினை விளைவித்து விடுகின்றன என்று வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். சங்ககாலத்தில் இதுபோன்ற ஆழிப் பேரலைகள் ஏற்பட்டுள்ள நிலையை,

**"வேந்துடைத் தானை முனைகெட நெரிதர**
**ஏந்துவாள் வலத்த னொருவ னாகித்**
**தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்**
**காழி யானையன்"**

**(புறம்.330)**

பேரரசனுடைய படைகள், போர்க் களத்தில் பகைவரை அழிக்க முற்பட்டு நெருங்கி வந்தபோது, வாள் ஏந்திய வெற்றியையுடைய தான் ஒருவனேயாகி, அப்படை தன்னைக் கடந்து வராதபடி தடுத்தலால், பெரியகடல் நிலப்பகுதிக்கு

வராமல் காக்கின்ற கரை போல் விளங்கினான் என்று மதுரைக் கணக்காயனார் மன்னன் ஒருவனைக் குறித்துப் பாடியுள்ளார். இப்பாடலில், கடலின் தன்மைப்பற்றி படைவீரர்கள் எவ்வாறு அழிக்கும் நோக்கில் வருவரோ அதுபோல, கடலின் அலை வருவதை **'பெருங்கடல் ஆழி'** என்று ஆழிப்பேரலைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

**"வருவிசைப் புனலை கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை யானும்"**

**(தொல்.புறம்.7-8)**

**"வருபுனல் நெரிதரு மிகுகரை பேரியாற்று"**

**(அகம்.137)**

**"ஊழி பெயரினும்"**

**(குறள்.989)**

என்ற குறிப்புகளின் மூலம், தற்போது நடந்த ஆழிப்பேரலைப் போல பேரழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் என்பதை உய்த்துணர முடிகிறது.

## சீற்றம் கொண்ட கடலலையும் பேரழிவும்

கடலிலே மலை போல அலைகள் பெரியனவாய் எழுகின்றன. இவ்வலைகள் சிறுசிறு துளிகளாக சிதறும் வகையில் காற்றுப் பாய்ந்து அடிக்கிறது என்று கடலானது தன்னிலை மாறும்பொழுது, சீற்றம் கொண்டு மலைபோல பெரிய அலைகளாக உருவெடுக்கின்றது என்பதனை,

**"வரைமருள் புணரி வான்பிசி ருடைய**
**வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூழ்**
**நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி"**

**(பதிற்று.11)**

என்று கூறுவதன் மூலம் சங்ககாலத்தில் சுனாமி போன்ற ஆழிப்பேரலைகள் தோன்றி அழிவை ஏற்படுத்தியுள்ளது தெளிவாகின்றது. கடலின் சீற்றத்தினால் கரை யோரங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த படகுகள் அனைத்தும் பாழாயின. இதனால், கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்வினை மேற்கொள்ளும் பரதவ மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையினை,

**"…………………. கொண்டலொடு**
**குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்**
**பழந்திமில் கொன்ற"**

**(அகம்.10)**

என்ற அகப்பாடல் வழி அறியலாம். மேலும்,

**"எறிதிரைப் பெருங்கட லிறுதிக்கட் செலினும்**
**தெறுகதிர்க் கனலி தென்றிசைத்**
**தோன்றினும்"**

**(புறம்.397)**

என்னும் பாடலில் வீசுகின்ற அலைகளையுடைய பெரியகடல் முடி வெய்தும் ஊழிக்காலம் வரினும், வெதும்புகின்ற கதிர்களையுடைய சூரியன் மாறி தென்திசையில் தோன்றும் காலம் வரினும் என்றும் மன்னனின் புகழ் அழியாது, நாடு வறுமையில் அகப்படாது என்பதை இப்பாடல் வெளிப்படுத்துமாறு

அமைந்துள்ளது. ஆகவே, உலகம் அழியும் காலமாகிய ஊழிக்காலம் என்பது பெரிய கடல் முடிவெய்துவது என்று கடலின் மிகப்பெரிய அழிவை இங்குப் பதிவு செய்துள்ளனர்.

**முடிவுரை**

காடு, மலை, வளமான ஆறுகள், கடல் என்று உலகத்தோற்றத்தின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலப்பிரிவுகள் பிரிக்கப்பட்டு, புவியின் அமைப்பு மற்றும் அந்நிலத்தின் தன்மைக்கேற்ப மக்களின் வாழ்வியல் ஒழுக்கங்களும் வழிபடும் தெய்வங்களும் கட்டமைக் கப்பட்டுள்ளது. அந்த வகையில், நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த நிலமாகும். கடல், பெரும் வளத்தை மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் வழங்கிய நிலையில், அதன் மாறுபாட்டுத் தன்மையால் (சுனாமி) ஆழிப் பேரலைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதையும், குமரிக்கண்ட அழிவும், தமிழ்ச் சங்க அழிவும் இதற்குச் சான்றாகக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. இராசாராம் துரை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி 1,2,3), முல்லை நிலையம், சென்னை. 1996.
2. சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரிஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98. பதிப்பு – 2004.

# சோழர் காலத்தில் நீர் மேலாண்மை

**கு. சரவணன்**
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
முத்துரங்கம் அரசினர்க் கலைக்கல்லூரி(த), வேலூர்

## முன்னுரை

மூவேந்தர்கள் போர், கலை, சமயம், என்று மட்டுமில்லாமல் நீர் நிலைகளையும் போற்றியுள்ளனர். அணைகளிலும் ஆறுகளிலும், மதகுகளைக் கற்களாலும், மரப்பலகைகளாலும் அமைத்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். மூவேந்தர்களின் ஆட்சிக்காலம் பொற்கால ஆட்சி எனப் போற்றுவர். அதிலும் சோழர்களின் ஆட்சி சிறப்புப் பெற்றது என்பர்.

சோழர்கள் நீர் மேலாண்மையில் மிகுந்த கவனம் செலுத்தினர் என்பதற்கு அவர்கள் காவிரியின் குறுக்கே கட்டிய கல்லணையே சாட்சியாகும். காவிரி நதிக்கரையை வேளாண்மைக்கும், மக்களின் தேவைக்கும், கடும் பஞ்சத்திலிருந்து மக்களை மீள்வதற்கும் அணைகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் அமைத்து பயன் படுத்தியுள்ளனர். இந்த வரலாற்றுச் சிறப்புக்களைச் சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. காவிரியின் சிறப்பைப் பட்டினப்பாலை,

**'வசையில்புகழ் வயங்குவெண்மீன்**
**றிசைதிரிந்து தெற்கேனுந்**
**தற்பாடிய தளியுணவிற்**
**புட்டேம்பப் புயன்மாறி**
**வான்பொய்ப்பினுந் தான்பொய்யா**
**மலைத்தலைய கடற்காவிரி**
**புனல்பரந்து பொன்கொழிக்கும்'**

**(பட்டினப்பாலை.8-1)**

என்று எடுத்துக்காட்டுகிறது.

உலகின் மிக பழமையான அணைகளில் ஒன்றான கல்லணையின் தொழில் நுட்பத்தை நோக்கும்போது நம் தலை முறைக்கு மட்டுமல்ல இனிவரும் தலை முறைக்கும் கொடையாகவே திகழ்கிறது.

உழவையே நோக்கமாகக் கொண்ட நம் தமிழ்நாட்டில் **"சோழநாடு சோறுடைத்து"** எனும் சொற்றொடர் சோழர்களின் நீர் மேலாண்மைக்குச் சான்றாகவும் உள்ளது.

## சோழர்களின் நீர் மேலாண்மைத் திறன்

விசயாலயச் சோழன் முத்தரையர்களை வீழ்த்தி சோழப்பேரரசை எழுச்சிப் பெற செய்தான். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் எழுச்சிப் பெற்ற சோழர்கள் வேளாண்மைக்கு நீர் பாசனத்திற்காக மேற்கொண்ட செயல்கள் அனைத்தும் வியக்கத்தக்கது. சங்க காலச் சோழர்களில்

கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கரிகாலனும், பராந்தகன் (907-955), கண்டராதித்தன் (957-955), சுந்தர சோழ (957-973), உத்தமச்சோழன் (985-973), மாமன்னன் இராசராசன் (1014-985), முதலாம் இராசேந்திரன் (1044-1012), வீரராசேந்திரன் (1070-1063), முதலாம் குலோத்துங்கன் (1112-1070), விக்கிரம சோழன் (1135-1118), ஆகிய மன்னர்கள் காவிரிக்கரை மட்டுமல்லாது வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலும் நீர் பாசனத்திற்குப் பெருங்கொடை நல்கினர் .

விசயாலயன் முதல் மூன்றாம் இராசேந்திரன் வரையிலான காலம் பொற்காலம் என்றே கூறவேண்டும். நீர் பாசனத்திற்காகப் பயன்படுத்திய சொல்லுருக்கள் குறிப்பிடத்தக்கன. **அடை, அணைவாய்க்கால், இறை, இறைக்குளம், உடைப்பு, உவன்றி, உட்சிறுவாய்க்கால், கூடைநீர், கேணி, கைவாய், கைவாய்க்கால், சென்னீர் கவிளை, ஊருணி, ஏந்துக்கால், ஊருணி குளம், ஊற்றங்கால், ஊற்றுக் கேணி, ஏரிஓடை, கடைநீர், கரை, கரைவாய்க் கால், தலைவாய், துரவு, துலை, நாற்றுக் கால், பிலாறு, கழணிக்குளம், கிடங்கு, கிணறு, குறங்கு, குரம்பு, குலை, குலைமடை, குளம், குளவாய்த்திவலை, மடை, வாய்த்திவலை, விலங்கு என்பன ஆகும்.(2)**

### வாய்க்கால் அமைத்தல்

மழைநீரை சேமித்து அவற்றை உழவிற்கு உருவாக்கிய முறைகள் தாம் **'வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள்'** என்பன வடி கால்கள் வடக்கு தெற்காக ஓடி நீரை வடியச் செய்து வெளியேற்றுவது ஆகும். கால்வாய்கள் இயற்கையாக உருவாகக் கூடியது கிழக்கு மேற்காக அமையும்.

வாய்க்கால் மற்றும் வடிகால்களுக்குக் கடவுளின் பெயரையும், அரசர்களின் பெயரையும் சான்றாக, **சீபூதி வாய்க்கால், வீரசோழ வாய்க்கால், வீர நாராயண வாய்க்கால், ஸ்ரீ கண்டராதித்த வாய்க்கால், பராந்தகன் வாய்க்கால், சுந்தரசோழ வாய்க்கால், இராசாதித்த வாய்க்கால், இராசகேசரி வாய்க்கால்** என்று அரசர்களின் பெயர்களில் அமைந்துள்ள வாய்க்கால்கள் ஆகும்

**ஆழி வாய்க்கால், வள்ளி வாய்க்கால், கேசவ வாய்க்கால், ஸ்ரீ தேவி வாய்க்கால், பார்வதி வாய்க்கால், சரஸ்வதி வாய்க்கால், தில்லை வாய்க்கால்,** என்று கடவுளின் பெயர்களில் அமைந்துள்ள வாய்க்கால்கள் (3).

வடிக்காலை ''**வதி**'' கள் என்றும் அழைத்தனர். வயலுக்குப் பாய்ந்த நீர் மறுபுறம் மீண்டும் வதிகள் வெளியேறி கால்வாய்களைச் சென்று அடையும். இந்த சுழற்சி முறை நீர்பாசனம் சோழநாடு நெற்களஞ்சியமாகத் திகழ்வதற்கு முக்கியப் பங்காற்றுகிறது.

**அணைகள்**

கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கரிகாலனே பட்டினப்பாலையிலும், பொருநராற்றுப் படையிலும் பாட்டுடைத் தலைவனாக் காட்டப்பட்டுள்ளான். காவிரிக் கரையிலே அவன் எழுப்பிய கல்லணை இன்று வரை டெல்டாப் பகுதி மக்களின் பாசனத்திற்குப் பயன்பட்டு வருகின்றது. கல்லணை எழுப்பிய கரிகால் பெருவளத்தானை ஒட்டகூத்தர் மூவருலாவில்,

> **'கொள்ளுங் குடக்குவடூ டறுத்திழியத்**
> **தள்ளுந் திரைப் பொன்னித் தந்தோனுத் –**
> **தெள்ளருவிச்**
> **சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்**
> **பொன்னிக் கரைகண்ட பூபதியு – மின்னருளின்"**
> (4) **(மூ.உலா.23-26)**

என்று பாடியுள்ளார்.

கரிகால் பெருவளத்தானைப் **'பொன்னிக் கரைக் கண்ட பூபதி'** என்று இந்நூல் புகழ்கிறது.

**கல்லணை**

திருச்சியில் அகண்ட காவிரி என்று அறியப்படும் காவிரியாறு முக்கொம்பில் வடபுறமாகக் கொள்ளிடம், தென்புறமாகக் காவிரி என இரண்டாகப் பிரிகிறது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் திருவரங்கம் ஸ்ரீரங்கம் ஆற்றுத் தீவாக உள்ளது. காவிரியாற்றின் கிளை கல்லணையை வந்தடைகிறது. அங்கு காவிரியாறானது **உள்ளாறு (கொள்ளிடம்), காவிரி, வெண்ணாறு, புதுவாறு,** என நான்காகப் பிரிகிறது. உள்ளாறு மீண்டும் கொள்ளிடத்தில் இணைகிறது இவ்வாறு கல்லணை பிரியுமிடத்தில் கட்டப் பட்டுள்ளது.

எந்தவொரு நவீனத் தொழில்நுட்பமும் இல்லாமல் இருபது ஆண்டுகளாக கட்டி முடிக்கப்பெற்ற கல்லணை ஆங்கில கட்டிட வல்லுநர்களுக்கே சவாலாக உள்ளது. சுமார் 69,000 ஏரிகளுக்குப் பாசனம் வழங்கியதாக நம்பப்படுகிறது. ஆனால் 1 மில்லியன் (13,20,116) ஏக்கர் பாசனம் தற்போது பெறுகிறது 6 அணையின் உயரம் 18 அடி; நீளம் 1080 அடி; அகலம் 66 அடி ஆகும். 12 அடி மணலில் அடித்தளம் அமைத்து அணைக்கட்டிய தொழில்நுட்பம் வியக்கத்தக்கது. சூழலுக்கு ஏதும் தீங்கிழைக்காமல் கற்களாலும்,

களிமண்ணாலும் அமைத்துள்ளனர். கல்லணையின் பொறியியலைக் கண்டு வியந்த **இந்திய நீர் பாசனத்தின் தந்தை** என்று போற்றப்படும் **சர் ஆர்தர் காட்டன் ''கிராண்ட் அணைக்கட்'' (GRAND ANICUT)** என்று பெயர் சூட்டினார்.

19-ஆம் நூற்றாண்டில் காவிரியின் முக்கிய துணை நதியான கொள்ளிடத்திற்கு குறுக்கே கட்டப்பட்ட கீழ்அணை கல்லணையின் அமைப்பைப் பின்பற்றிக் கட்டப் பட்டுள்ளது. (7)

### பாசனப் பயன்பாடு

சோழர் காலத்தில் பாசனக் காலங்களில் காவிரி வெண்ணாறு, புதுவாறு, ஆகியவற்றிலும், வெள்ளக் காலங்களிலும் கொள்ளிடத்திலும் தண்ணீர் கல்லணை யிலிருந்து திறந்து விடப்படும். அதாவது கல்லணைக்கு வரும் நீர் கொள்ளிடத்திற்கு இடதுபுறமாக திருப்பிவிடப்படும். தஞ்சை, நாகை ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது. மேலும், கல்லணையைத் தவிர வேறு அணைகள் சோழர் காலத்தில் எழுப்பவில்லை. ஆனால் ஆறுகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் அமைத்துள்ளனர் .

### ஆறுகள்

காவிரியிலிருந்து பிரிகின்ற கிளைநதிகள் செயற்கை ஆறுகள், என்றும் பெரும் வாய்க்கால் என்றும் வழங்கப்பட்டன. வேளாண் விளைச்சலுக்காக இதனைப் பயன்படுத்தினர் .

**முதலாம் பராந்தகன்** தஞ்சைக்கு வடக்கே ஓடும் **வீர சோழ வடவாறு** காவிரியின் கொள்ளிடப் பேரணையிலிருந்து வடக்கே ஓடும் **'மதுராந்தக வடவாறு'** என்ற இரண்டு செயற்கை ஆறுகளை வெட்டினான்.

**முதலாம் இராசராசன்** – கோனேரி இராசபுரத்திற்குதிற்கு அருகில் ஓடும் **'மண்ணியாறு'** என்ற ஆற்றை வெட்டினான் .

**முதலாம் இராசேந்திரன்** – கடுவாயிலிருந்து சுந்தரப்பெருமாள் கோயில் அருகில் பிரியும் **'முடிகொண்டான் ஆறு'** வெட்டினான்.

**வீரராசேந்திரன்** – மணஞ்சேரிக்கு அண்மையில் காவிரியின்று பிரியும் **வீர சோழன் ஆறு** என்ற ஆற்றை வெட்டினான்.

**விக்கிரம சோழன்** – காவிரியிலிருந்து குத்தாலத்திற்கு வடக்கே பிரிந்து செல்லும் விக்கிரம ஆற்றை வெட்டினான். அரசர்களின் பெயரை வைத்தும் உள்ளனர்.

**விக்கிரமனாறு, வீரசோழவடவாறு, அகளங்கப்பேராறு, மதுராந்தக வடவாறு, தண் பொருத்தமான முடிக்கொண்ட சோழப்பேராறு, சுங்கந் தவிர்த்த சோழப்**

**பேராறு, வீர இராசேந்திர சோழப் பேராறு, (8)** போன்ற ஆறுகளை வெட்டி நீர் பாசனத்திற்குப் பெரும் கொடை நல்கினர்.

**ஏரிகள்**

அணைகள், ஆறுகள், மட்டுமல்லாது ஏரிகளையும் வெட்டி பஞ்சக்காலங்களில் நீரினைத் தேக்கி வைத்து பாசனத்திற்கும், மக்களின் தேவைக்கும் பயன்படுமாறு செய்துள்ளனர் .

**முதலாம் பராந்தகன்** – வட ஆற்காடு மாவட்டம் சோழசிங்கபுரத்திற்கு அருகில் உள்ள **''சோழ வாரிதி ஏரி''**-யையும், தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு 12 மைல் உள்ள **''வீராணத்தான் ஏரி'' (வீர நாராயணன் ஏரி (**இதன் மரூஉவே தற்போது **வீராணம் ஏரி** என்று அழைக்கப்படுகிறது பராந்தகனின் அரசியல் அதிகாரிகளுள் ஒருவன் அருள் நிதிகலியன். இவன் மதுரை மாவட்டத்தில் ஆனைமலைப் பக்கம் உள்ள **'கலியனேரி'** என்ற ஏரியை அமைத்தான்.

1985-களில் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குச் தண்ணீரைக் கொண்டு வர திட்டமிட்டனர். 2004 ஆம் ஆண்டில் தான் சென்னைக்கு வந்தடைந்து பற்றாக் குறையைத் தீர்த்துவருகிறது. முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அண்மையிலுள்ள **'சோழ கங்கப் பேரேரி'** இந்த ஏரியில் அவன் கையாண்ட பணிகள் வியக்கத்தக்கது. வெள்ளம் ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் கட்டுமானப்பணியை மேற்கொண்டான். **"ஜலமய ஜெயஸ்தம்பம்"** இதன் நினைவாக தூண் எழுப்பினான். நீரின் நினைவாக கிடைத்த வெற்றியில் எழுப்பிய தூண். (9)

அரேபிய வரலாற்று ஆசிரியரான **அல்பெருனி** இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். **"எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால் அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அதுப்போன்று ஒன்றை அவர்களால் கட்டவும் இயலாது''**(10). என்று கூறினார்.

**செம்பியன் மாதேவி** – திருச்சி மாவட்டத்தில் **''செம்பியன் மாதேவி பேரேரி''**யை வெட்டினார் .

**கண்டராதித்தச்சோழன்** – தென்னாற்காடு மாவட்டம் உலகா புரத்திலுள்ள **"கண்டராதித்தப் பேரேரி"**யை வெட்டினான் **.**

**சுந்தர சோழன் -** வட ஆற்காட்டு மாவட்டம் பிரம்ம தேசம் என்ற ஊரில் உள்ள **"சுந்தரச் சோழன் பேரேரி''**யை வெட்டினார்.

முதலாம் இராசராசனின் தமக்கை **குந்தவை** பிரம்ம தேசம் என்ற ஊரில் உள்ள ''**குந்தவைப் பேரேரி''யை** வெட்டினார்.

**உத்தமச்சோழன்** – செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள **''மதுராந்தகப் பேரேரியையும்'',** புதுச்சேரியைச் சேர்ந்த திரிபுவனையில் உள்ள **''மதுராந்தகப் பேரேரியையும்''** வெட்டினான்.

**முதலாம் குலோத்துங்கன் –** தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் முனியனூரில்'' **குலோத்துங்கசோழப் பேரேரியையும்'',** சித்தூர் மாவட்டம் புங்கனூரில் உள்ள **இராசேந்திர சோழப் பேரேரியையும்** வெட்டினான்.(11)

சோழ மன்னர்கள் காவிரிக்கரை மட்டுமல்லாது தொண்டை மண்டலம், பாண்டிய நாடு என்று தாம் ஆண்ட நாட்டை நீர் பாசனத்திற்கு முக்கியத்துவம் தந்துள்ளனர் என்று அவர்கள் அமைத்த செயற்கை ஆறுகளையும், ஏரிகளையும், நீர்த்தேக்கங்களையும் பற்றி அறியும் போது தெரிய வருகின்றன.

**''சோழநாடு சோறுடைத்து'', ''மேழிச் செல்வம் கோழைப் படாது'',** போன்ற சொல்லாடல்கள் காவிரி நீரை மிகுந்த நுண்மையான அறிவின் மூலம் சோழர்கள் நீர் வளத்தைக் காத்து விளைச்சலைப் பெருக்கி நாட்டைச் செழிக்க வைத்தனர் என்பதற்கு அடையாளங்களாக உள்ளன.

## நிறைவுரை

சோழப்பேரரசில் காவிரி நதி நீரை முதன்மையாக கொண்டு உழவிற்கும், மக்கள் பயன் பாட்டிற்கும் அணைகள், ஆறுகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் என்று உருவாக்கி நீரினைச் சேமித்து உழுதுண்டு செழித்து வளர்ந்தது மட்டு மல்லாமல் தாம் வெற்றிக்கண்ட நாடுளில் பஞ்சம் மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் தம் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றியுள்ளனர் .

**''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்**
**செல்வரும் சேர்வது நாடு'' குறள்-731)(12)**

எனும் குறள் கருத்திற்கேற்ப சோழ நாட்டின் வளமும் ஆட்சி சிறப்பும் நீர் மேலாண்மைத் திறனும் விளங்குவதைக் காணலாம் .

## அடிக்குறிப்புகள்

1. மறைமலை அடிகள், பட்டினிப்பாலை ஆராய்ச்சியுரை, ராமையா பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2023, ப.15-
2. வெ.இராமமூர்த்தி, இராசேந்திரன் செய்திக்கோவை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, முதல் பதிப்பு, 2012,ப60 -ப.,61,.62

3. வெ.இராமமூர்த்தி, இராசேந்திரன் செய்திக்கோவை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை ,முதல் பதிப்பு, 2012, ப60- ப.,61,.62
4. பண்டித கோபாலையர், மூவருலா, செந்தமிழ் மந்திரம் புத்தகச்சாலை, சென்னை, முதல் பதிப்பு,1914,ப.2-
5. https://icid-ciid.org/award/his_ details/152
6. வெ.இராமமூர்த்தி, இராசேந்திரன் செய்திக்கோவை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை ,முதல் பதிப்பு, 2012,ப60- ப.,61,.62
7. ஆசிரியர் குழு, மேல்நிலை முதலாம் ஆண்டு, வரலாறு, பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், திருத்திய பதிப்பு 2023, ப-176.
8. ஆசிரியர் குழு, மேல்நிலை முதலாம் ஆண்டு, வரலாறு, பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், திருத்திய பதிப்பு 2023,ப.176-
9. வெ.இராமமூர்த்தி,இராசேந்திரன் செய்திக்கோவை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை ,முதல் பதிப்பு, 2012,ப60- ப.,61,.62
10. மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,2014 ,ப.151.

# நீர்வழிப்படூஉம்

நெறியாளர் **முனைவர் க. சிங்காரவேலு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

ஆய்வாளர் **க. ராஜ்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**ஆய்வுச்சுருக்கம்**

நீர் உலக இயக்கத்தின் அடிப்படைக் காரணி. உலகின் பரப்பளவில் நான்கில் மூன்று பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது. நீர் பரப்பளவில் மட்டுமல்ல தமிழர்களின் பண்பாட்டிலும் பெரும்பங்கு வகிக்கிறது. ஒரு மனிதன் குழந்தையாகப் பிறந்தது முதல் வயதாகி இறக்கும் வரை நீருடன் கொண்ட உறவு என்பது தவிர்க்க முடியாதது. குழந்தை பிறந்தவுடன் தண்ணீர் ஊற்றுவது, பெண் குழந்தைகள் பருவமடையும்போது மஞ்சள் நீராட்டு விழா நடத்துவது, இறப்பு சடங்கில் பூதவுடலை குளிப்பாட்டுவது என நீரின் உறவு தொடர்கிறது. இத்தகைய மனிதனுக்கும் நீருக்குமான உறவுமுறை சங்க இலக்கியம் தொட்டு இன்றைய காலம் வரை தொடர்கிறது. நீர், நீரின் பயன்பாடு, மழைநீரை சேகரித்த முறை ஆகிய நீர் குறித்த செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** நீரழுவம், குறுநீர்க்கன்னல், முந்நீர், உறவுமுறிவு, கழிப்பு

## முன்னுரை

நீர் உலக இயக்கத்திற்கும் உலக உயிர்களின் இயங்குவிசைக்கும் காரணமாக அமையும் மூலப் பொருட்களில் முதன்மையானதாகும். தமிழர் பண் பாட்டில் நீருக்கென்று தனி இடம் உண்டு. விருந்தினரை வரவேற்கும் போது நீரைக் கொடுத்து வரவேற்பதும், வழியனுப்பும் போது நீரைக் கொடுப்பதும் என விருந்தோம்பும் பண்பில் நீர் முதன்மை யிடம் பெறுவதை அறியலாம். தமிழ்ப் பண்பாட்டில் நீர், நீர் மேலாண்மை, நீரை சேமிக்கும் முறை, நீர் வழிபாடு,

வழிபாட்டில் நீரின் பங்கு ஆகிய நீர் குறித்த மரபுவழிச் செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**நீர் - உயிர்**

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்று 'உகரங்கள்' தேவை என்பர். முதன்மையானதாகிய உணவு நிலத்திலிருந்து கிடைக்கும். நிலத்தில் வளரும் தாவரங்கள் அல்லது நிலத்தில் உயிர் வாழும் உயிரினங்களின் இறைச்சியே உணவாக உட்கொள்ளப்படும். அத்தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் உயிர்த்தேவையை பூர்த்தி செய்வதற்கு நீர் ஆதாரமாக செயல்படுகிறது. நீர் இருந்தால் தாவரங்கள் வளரும், உயிரினங்கள் உயிர்வாழ நீர் பருக வேண்டும் என்ற அடிப்படை உண்மை புலனாகிறது. இதனை நெல்லிற்கும் உயிர் உண்டு, நீருக்கும் உயிர் உண்டு மோசிகீரனார் குறிப்பிடுவதை,

> "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே"

என்ற பாடலில் நெல்லும் நீரும் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் உயிர்வாழ தேவையானவை என்பதை அறியலாம்.

**நீர்வழிப்படூஉம்**

இந்த உலகம் எல்லோர்க்குமானது என்றும், மனிதனுக்கு நேரும் வினைகள் எல்லாம் தனது வினையின் பயனே தவிர அது பிறரால் வருவது இல்லை எனவும், வாழ்விற்காக பொய் கூறுதல் கூடாது மெய் கூறுவது நம் முன்னோர்கள் கூறும் வாழ்வியல் நெறி என்பதையும், மின்னலுடன் பெய்த மழையானது பெருகி, பெரிய பாறையையே உருளச் செய்து பெரிய ஆறாக உருமாறும். அந்த ஆற்றின் நீரில் அடித்துச் செல்லப்படும் தெப்பத்தைப் போல இந்த மனித உயிரானது விதியின் போக்கில் செல்லும் என்று கணியன் பூங்குன்றன் கூறுவதை,

> "யாதும் ஊரே யாவரும் கேளிர்
> தீதும் கன்றும் பிறர்தர வாரா
> நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
> சாதலும் புதுவது அன்றே! வாழ்தல்
> இனிது என மகிழ்ந்தன்றும் இலமே! முனிவின்
> இன்னாது என்றலும் இலமே! மின்னொடு
> வானம் தண்துளி தலைஇ ஆனாது
> கல்பொழுது இரங்கும் மல்லர்பேர் யாற்று
> நீர்வழிப் படுஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படுஉம் என்பது திறவோர்
> கட்சியில் தெளிந்தனம் ஆதலின், மாட்சியின்
> பெரியோரை வியத்தலும் இலமே
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."
>
> (புறம்.192)

என்ற பாடலில் நீரின் இயல்பை மனித வாழ்க்கையுடன் ஒப்புமைப்படுத்திக் கூறுவதை அறியலாம்.

**முந்நீர்**

முந்நீர் என்பது கடலைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் பெண்கள் கடற்பயணம் மேற்கொள்ளுதல் கூடாது என்பதை,

> **“முந்நீர் வழக்கம் மகடூஉ இல்லை”**
>
> **(தொல்.)**

என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

மன்னன் கடலுக்கு வழிபாடு செய்யும் நிகழ்வை முந்நீர் விழா என்று குறிப்பிடுவதையும், பஃறுளி ஆற்று மணலைவிட புகழையுடையவன் என்பதை,

> **“செந்நீர் பசும்பொன் வயிரியற்கு ஈத்த**
> **முந்நீர் விழவின் நெடியோன்**
> **நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே”**
>
> **(புறம்.9)**

எனும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

**குறுநீர்க்கன்னல்**

குறுநீர்க்கன்னல் என்பது நீரை அளந்து நேரத்தை அறிந்துகொள்ள பயன்படுத்திய கருவி ஆகும். இக்குறுநீர்க்கன்னலின் வடிவமே பிற்காலங்களில் மணல் கடிகாரம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது. குறுநீர்க்கன்னல் முல்லைப்பாட்டில் குறிப்பிடுவதை,

> **“நெடு நா ஒண்மணி நிழற்றிய நடுநாள்**
> **குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப”**
>
> (முல்லை : 50; 58)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**மழைநீர் சேமிப்பு**

நெடுநல்வாடையில் கோபுரங்களின் அமைப்பு குறிப்பிடப்படும்போது மாடங்களில் தேங்கும் மழைநீரை சேமிப்பதற்கு மழைநீர் சேகரிப்புக் குழாயைப் பயன்படுத்தியுள்ளனர். அக் குழாயின் வடிவம் மகர மீனின் வாய் போன்ற வடிவில் இருந்ததை,

> **“நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்து**
> **கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய”**
>
> **(நெடுநல்வாடை.95-96)**

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

**நீரழுவம்**

நீரழுவம் என்பது நீர்ப்பரப்பு ஆகும். நீரினை தேக்கி வைக்கும் இடத்திற்கு நீரழுவம் என்றும் குறிப்பிடுவர். மழை நீர் அதிகமாக பெய்யும்போது நிலம் தெரியாதவாறு நீர் மூடிக்கொள்ளும் இதனை,

> **“நீர் பரந்தொழுகலின் நிலம் காணலரே”**
>
> **(குறுந்.355-2)**

எனும் குறுந்தொகைப் பாடல் மூலம் அறியலாம்.

**நாட்டுப்புற வழக்காற்றில் - நீர்**

நாட்டுப்புறங்களில் நீர் குறித்த பதிவுகள் பல உள்ளன. கிராமப்புறங்களில் பெரும் பாலும் விவசாயம் முக்கியத் தொழிலாகும். நீரின் தேவையை உணர்ந்த மக்கள்

தங்கள் விவசாய நிலங்களுக்கு அருகில் நீரை தேக்கி சேமித்து வேளாண்மைக்கு பயன்படுத்துகின்றனர். தற்போதும் பிற மாநிலங்களிலிருந்தும், நம் மாநில அணைகளிலிருந்தும் நீர் வெளியேற்றம் செய்யப்படும் போது நீரின் வழித்தடங்களிலும், நீரையும் கிராமப்புற மக்கள் வழிபடுகின்றனர். பூக்கள் தூவி நீரை வரவேற்பதும், நெடுஞ்சாண்கிடையாக தாழ விழுந்து நீரை வணங்கி வர வேற்பதையும் காண முடிகிறது. தங்கள் உயிர்க்கு ஆதாரமான தொழிலுக்கு அடிப்படை தேவையான நீர் என்பதால் இந்த வழிபாடுகளை செய்கின்றனர். மேலும் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகாமையிலுள்ள குளம், குட்டை, ஏரி போன்றவை நிரம்பி வழியும்போது ஆடு, கோழிகளை பலியிட்டு தங்கள் மனதின் உணர்வுகளை வழிபாட்டின் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

## நாட்டுப்புற வழக்காற்றில் நீர் - உறவு முறிவு

கிராமப்புறங்களில் மக்கள் தங்களுக்குள் நிகழும் மன வேற்றுமைகளால் ஒருவர் மீது ஒருவர் தூற்றுவது (வாய்ச்சண்டை), சாபமிடுவது, மண்ணை வாரி இறைத்து மண்ணோடு போக என்று தூற்றுவர். பெரும்பாலும் இவை முக்கியமான இரத்த சம்பந்தப்பட்ட உறவினர்களிடையே நடக்கும். மனவேறுபட்ட இரண்டு குடும்பங்கள் ஏதேனும் ஒரு கட்டத்தில் சந்திக்க நேரிடும். அவ்வாறு அவர்கள் நேரிடும்போது முன்னர் சண்டையிடும் போது தூற்றிய வார்த்தைகள், சாபங்கள் ஆகியவற்றை நீக்க நீரினை புனித பொருளாகப் பயன்படுத்துகின்றனர். ஒரு வெள்ளை நிறத்துணி (பெரும்பாலும் வேட்டி) ஒன்றை ஊர்ப்பெரியவர் மற்றும் அந்த குடும்பங்களின் தலைக்கட்டில் மூத்தவர் திரையாக பிடிப்பர். திரைக்கு இரண்டு பக்கமும் இரண்டு குடும்பங்களின் உறுப்பினர்கள் அனைவரையும் வரிசையாக நிற்க வைப்பர். இரண்டு பக்கமிருந்தும் ஒரு சொம்பில் தண்ணீர் மற்றொரு குடும்பத்திற்கு வழங்கப்படும். ஊர்ப் பெரியவர் சொம்பிலிருந்து சிறிதளவு நீரை கையால் அள்ளி மற்றொரு குடும்பத்தின் மீது தெளிப்பார். அதே போன்று மற்றொரு குடும்பத்திலிருந்து கொடுத்த சொம்பிலிருந்த நீரை இந்த குடும்பத்தின் மீது தெளிப்பார். பின்பு இரண்டு சொம்பிலுள்ள நீரும் கை மாறும். அந்த சொம்பிலிருந்த நீரைக் குடித்தால் அந்த நபரின் முந்தைய செயல்களையெல்லாம் மறந்தும், மன்னித்தும் அவர்களை ஏற்றுக்

கொண்டதாக அர்த்தம். மேலும் முன்னர் அவர்கள் தூற்றிய சொற்களும், சாபங்களும் அவர்களை அண்டாமல் இருக்க நீரை தெளித்து அவற்றிலிருந்து கழிப்பு கழித்ததாகவும் நம்புகின்றனர். (இவ்வழக்கம் விழுப்புரம், திருவண்ணாமலை, திருக் கோவிலூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இன்றளவும் நடை பெறுகிறது)

### முடிவுரை

நீர் உலகம் இயங்குவதற்கும், உலக உயிர்களின் இயக்கத்திற்கும் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை நீருடன் கொண்ட உறவு சங்க இலக்கியம் முதல் இன்று வரை தொடர்ந்து வருகிறது. நெல் உயிர் என்பது போல நீரும் ஓர் உயிர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் பதிவு செய்கின்றன.

நீர்நிலைகள் அவற்றின் வேறு பெயர்களையும், நீரை நிலப்பரப்பில் சேகரிக்க பயன்படுத்திய முறைகளையும் அறிய முடிகிறது. மழை நீரினை சேகரிக்க மேற்கொண்ட வழிமுறைகள் பற்றி நெடுநல்வாடை குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

முந்நீர் என்பதை கடல் எனவும், கடலுடன் மக்கள் கொண்ட உறவும், முந்நீர் விழா என்று கடலுக்கு விழா எடுத்ததையும் புறநானூறு குறிப்பிடுவதை அறியலாம்.

பெண்கள் கடல்வழிப் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்பதை தொல்காப்பியம் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

மக்கள் நேரத்தை அறிந்து கொள்ள நீரை அடிப்படையாகக் கொண்ட குறு நீர்க்கன்னல் எனும் கருவியைப் பயன் படுத்தியுள்ளனர். இக்கருவியே மணல் கடிகாரம் போன்ற நேரம் கணக்கிடும் கருவிகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

கிராமப்புறங்களில் மக்கள் நீரை வழிபடுவது, நீரின் வழித்தடத்தை வழி படுவது, பூக்கள் கொண்டு அணையின் நீரை வரவேற்பது, விழுந்து வணங்குவது என்று இன்றுவரை நீரை வழிபாடு செய்வது நீருடன் கொண்ட உறவையும் மதிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

விருந்தினர் ஒருவர் வீட்டிற்கு வரும்போது முதலில் வழங்குவதும் நீர். அவ்விருந்தினர் புறப்படும்போதும் வழங்குவதும் நீர். விருந்தினரை வரவேற்கும்போது வழங்கும் நீர் தம்மீது கொண்ட மனவுணர்வுகள் மாறி சம நிலையடைய உதவுகிறது. விருந்தினர்

புறப்படும்போது வழங்கும் நீர் தம்மீது கொண்ட இந்நிலை தொடரும் பொருட்டாகும்.

மனிதர்களின் மன வேறுபாட்டால் குடும்பங்களுக்குள் நிகழும் முரண்களை நீக்குவதற்கு நீர் புனிதப்பொருளாக கிராமப்புறங்களில் பயன் படுத்துகின்றனர். ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்கு வழங்கிய நீரை ஏற்றுக் கொள்வதென்பது அக்குடும்பத்தையும் மனமார ஏற்றுக் கொள்வது என்பதையும் அறிய முடிகிறது.

மனிதர்கள் வழிவழியாக நீருடன் கொண்ட உறவுமுறைகள் இன்றளவிலும் தொடர்கிறது. இத்தகைய உறவுமுறை பின்வரும் தலைமுறையினர் அறிந்து கொண்டால் நீருக்குரிய மதிப்பும் நீருடனான உறவும் நிலை பெறும் என்பது உண்மையாகும்.

**பார்வை நூல்கள்**


1. பத்துப்பாட்டில் மென் திறன்கள், மேலத்தாங்கல் மு. நளினி, நிலாச் சூரியன் பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை-24. பதிப்பு - 2011.
2. தொல்காப்பியம், நச்சர் உரை, கழக வெளியீடு, சென்னை - 1. பதிப்பு - 1973.
3. புறநானூறு, கு.வெ. பால சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98. பதிப்பு - 2004.
4. நெடுநல்வாடை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98. பதிப்பு - 2004.
5. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98. பதிப்பு - 2011.

# புறநானூற்றில் நீர் மேலாண்மையும் தொழில்நுட்பமும்

**ம. சுகுணா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

பண்டைய தமிழ் மக்கள் இயற்கையின் மீது பேரார்வம் கொண்டு இனிய வாழ்வு வாழ்ந்தனர். சங்க இலக்கியங்களை பாடிய புலவர்கள் ஐம்பூதங்களின் சிறப்புக்களையும் அவற்றின் பண்புகளையும் தம் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர். அவற்றுள் நீர்வள சிந்தனை பற்றிய பாடல்கள் பெரும்பான்மை அமையப் பெற்றுள்ளன. நீர் இல்லையேல் இவ்வுலகம் இல்லை என்பதை உணர்ந்து சங்ககால மக்கள் நீர் வள ஆதாரத்தை பெருக்கி அடுத்த தலைமுறையினருக்கும் வழங்கியுள்ளனர். செயற்கை நீர்நிலைகள் வழியாக இயற்கை நீர்நிலைகளைப் பாதுகாக்கப் பட்ட நிலையை அறியலாம். மனிதன் வாழ்வதற்கு நீர் அவசியம் என்பதை உணர்ந்து பழந்தமிழர்கள் நீர்நிலைகளைப் பராமரிப்பதும் நீர் நிலைகளை மேலாண்மை செய்ததையும் இலக்கியங்கள் வழி அறியலாம்.

சங்ககால மக்களின் வாழ்வியலில் நீர் பெரும் பங்காற்றி அக வாழ்விலும், புற வாழ்விலும் எண்ணற்ற நிகழ்வுகளை நிகழ்த்தி உள்ளது எனலாம். சங்க இலக்கியத்திலுள்ள நீர் மற்றும் நீர் நிலைகள் குறித்த செய்திகளையும் நீர் நிலைகளை மேலாண்மை செய்த பாங்கினையும் எவ்வித அறிவியல் தொழில்நுட்பம் வளராத அக்காலத்தில் கிடைத்த பொருட்களை கொண்டு வலுவான நீர் நிலைகளை அமைத்த தொழில்நுட்பங்களை பற்றி ஆராய்வதற்கு, சங்ககால நீர் மேலாண்மை பற்றிய பொதுமை செய்திகளையும் வேளாண்மையில் மேற்கொண்ட நீர் மேலாண்மை மற்றும் நீர் நிலை பராமரிப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட சங்ககால மக்கள் பயன்படுத்திய தொழில்நுட்ப செய்திகளை புறநானூற்றில் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

## தொல்காப்பியத்தில் நீரியல் சிந்தனை

முதற் பொருள் ஆகிய நிலத்தையும் காலத்தையும் அடிப்படைப் பொருளாகக் கொண்டு பிறப்பவை கருப்பொருள்கள் ஆகும்.தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் கருப்பொருள் வரிசையில்

நீர் என்ற ஒன்று அமையப்பெறுகிறது. இந் நீரே முதற் பொருளையும், உரிப் பொருளையும், கருப்பொருளையும் நிர்ணயிக்கும் காரணியாகவும் விளங்குகின்றது. உலக உயிர்கள் வாழ்வதற்கு காரணியாக திகழ்வது நீரும் நிலமும் ஆகும். ஏனெனில் நிலங்களுக்கு தக்க வகையில் தாவரங்களும் தன் நிலையில் மாறுகின்றன. நீர்வளம் நிறைந்த பகுதிகளில் வளரும் மரம், செடி, கொடி பயிர்கள் போன்றவை கூட நீரற்ற நிலத்தில் வளருவதில்லை. உலகம் நிலைபெற்று இருப்பதற்கு முதல் ஆதாரமாய் விளங்குவது நீரே என்பதை அறிய முடிகிறது.

### நீரின் இன்றியமையாமை

மனித வாழ்க்கைக்கு நீர் அடிப்படையானது. இவ்வுலகில் அனைத்து உயிரினங்களுக்கும் நீரே அடிப்படையானது. நீரின் வழியே தான் முதல் உலக உயிர் தோன்றியது. நீரை வாழ்வாதாரமாக கொண்டுதான் ஏனைய உயிரினங்கள் வாழ்கின்றன. நீர் மனித வாழ்வில் பெரும் முதன்மைக் கருதி இலக்கியங்களும், சமூக வழக்குகளும் நீரின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றனர். இதனை உணர்ந்த திருவள்ளுவரும்,

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு. (குறள் - )**

என்று கூறுவதை அறிய முடிகின்றது.

### நீர் அறிவியல்

அறிவியல் அடிப்படையில் கூற வேண்டு மென்றால் நீர் என்பது $H_2O$. ஓர் உயிர் வளி அணுவும் இரு நீரியல் ஹைட்ரஜன் அணுக்களும் இணைந்ததே எச் 2 ஓ ஆகும். உலகத்தில் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு நீரே அடிப்படையானது. பூமிக்கு தேவையான தண்ணீர் நீரியல் சுழற்சி மூலம் கிடைக்கின்றது என்பதே அறிவியல் உண்மையாகும். கடல் நீர் ஆவியாகி மழையாக பொழிந்து நீர் நிலைகளை அடைகிறது. பிறகு மீண்டும் ஆவியாகி மழையாக உருப்பெறுகிறது. இதுவே நீரியல் சுழற்சி ஆகும். இத்தகைய நீர் சுழற்சி என்பது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்துள்ளது. அதனை பின்வரும் புறநானூற்று பாடல் எடுத்தியம்பு கின்றது.

**உருகெழு ஞாயிற்று ஒன் கதிர் மிசைந்த.**
**முளிபுல் கானம் குழைப்ப, கல்லென.**
**அதிர்க் குரல் ஏறோடு துளி சொரிந்தாங்கு.**
**நீர் சூழ் நிலவரை உயர,நின்**
**சீர்க் கெழு விழுப்புகழ் ஏத்துகம் பலவே.**

**(புறம்; 160;1-3)**

என்று பாடல் வரியின் மூலம் மழைக்கு காரணம் வெப்பக் கதிர்கள் என்பதை அறியமுடிகின்றது.

**மேலாண்மை**

இக்காலக்கட்டத்தில் மேலாண்மை என்ற சொல் பல துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருவதை அறியலாம். மருத்துவத் துறை, தொழிற்சாலை, வணிக நிறுவனம், கல்வி நிறுவனம் உள்ளிட்ட துறைகளில் மேலாண்மை என்பது முக்கிய பங்காற்றுகின்றது. இன்றைய கால கட்டத்தில் நீர் மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை என்ற சொல் பயன் பாட்டில் இருந்து வருவதை காண முடிகிறது.

இன்று மேலாண்மை என்பது என்ன? என்ற வினாவிற்கு கலை சார்ந்ததா? அறிவியல் சார்ந்ததா என்ற வினாவிற்கு விடையாக டெய்லர் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார்." நிர்ணயித்த விதிகள் நெறிகள், கொள்கைகள் ஆகியவற்றை கொண்டு அமைந்திருக்கும் உண்மையான அறிவியல்தான் மேலாண்மை" (டெய்லர் ப.435)

மேலாண்மை என்பதற்கு அறிஞர் பலரும் தரும் கருத்துக்களும் குறிப்பிடத்தக்கது. தொழில் நோக்கத்தை அடைவதற்காக அதன் பல விதம் நடவடிக்கைகளுக்கு வழி காட்டுவதிலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பணியே மேலாண்மை ஆகும் என்று வில்லியம் பிரிகால் கூறுகிறார்.

மேலாண்மைக்கான சிறந்த கொள்கைகளில் முக்கியமானவராக கருதப்படுபவர் ஹென்றி பயல் ஆவார். அவர் மேலாண்மை குறித்து கூறும் கருத்து வருமாறு, திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல், ஒன்று கூட்டுதல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று குறிப்பிடுகிறார்.

**நீர் மேலாண்மை**

நீர்த் தேவையை முழுவதுமாக பூர்த்தி செய்வது என்று எளிதான காரியமல்ல நீரினை உருவாக்கம் செய்ய இயலாது. ஆகையால் கிடைக்கின்ற நீரை எம் முறையில் பராமரித்து பங்கிட்டு அனைவருக்கும் நீர் பற்றாக்குறையை சரி செய்வதே நீர்வள மேலாண்மை ஆகும்.

நீர் மேலாண்மை என்பதற்கு வெ.இறையன்பு அவர்கள் முயற்சியின்றி இயற்கையின் கொடையாக கிடைக்கும் மழை நீரை வீணடிக்காது அளவாக பயன்படுத்தவும் மிகுதியான நீர் தேவையை குறைத்து மிக்க பயன்களை பெறவும் அமைக்கப்பட்ட அறிவியல்

துறையே நீர்வள மேலாண்மை என்று குறிப்பிடுகிறார்.

**மலை தடுப்பு மழை**

சங்க இலக்கியத்தில் தென்மேற்கு பருவ மழையை மலை தடுப்பு மழையாக குறிப்பிடுகின்றனர். அதாவது மேகத்தின் இயக்கமும் மலையினால் தடுக்கப்பட்டு மலை பிரதேசங்களில் மழை வளத்தைக் கொடுக்கும் மலை தடுப்பு மழை பற்றிய குறிப்புகள், சங்க இலக்கியமான புறநானூற்றில் காணப்படுகின்றது.

**ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை**

**(புறம் ;153;14)**

என்று பாடல் வரியின் மூலம் இயங்குகின்ற மேகத்தை தன் உயரத்தால் தடுக்கும் பயன் மிக்க மலை என்று குறிப்பிடுகின்றது. இதன் மூலமும் மேகத்தின் இயக்கத்தை மலை கட்டுப்படுத்துவதை அறிய முடிகின்றது.

**படு என்னும் சொல்**

புறநானூற்றில் படு என்ற சொல் நீர்நிலை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. படும் என்ற சொல்லிற்கு மதுரை தமிழ் பேரகராதி குளம் என்றும் பொருள் விளக்கம் அளிக்கிறது. இது குளம் போன்ற நீர் நிலையாகும். இதனை மடு என்றும் அழைப்பர். ஞா.தேவநேயன் மடுவு என்பதனை அருவி விழும் கிடங்கு என்று குறிப்பிடுகின்றார். இந்நீர் நிலை பற்றிய பாடல் புறநானூற்றில் பின்வருமாறு குறிக்கப்படுகிறது.

**தெண் நீர் படுவினும்**

**(புறம்; 192;1-8)**

தெளிவான நீர் நிலையைக் கொண்டதாக படு என்ற சொல்லில் இருந்தது என்று குறிப்பிடுகிறார்.

**கான் யாறு**

இயற்கை நீர்நிலையாக சுட்ட பெறும் முல்லை நில நீர் நிலை கான் யாறு ஆகும். பருவமழை காலங்களில் மட்டுமே இவ்வாறானது தோன்றும். பருவமழை முடிந்த அடுத்த சில நாட்களிலேயே கான் யாறு வற்றிவிடும். குறிஞ்சி, முல்லை ஆகிய நீர்நிலைகளில் உள்ள ஏனைய நீர்நிலைகளில் இருந்து வரும் நீரானது சிறு சிறு ஓடைகளாக சேர்ந்து இந்த கான் யாறு உருவாகின்றது. பெருக் கெடுத்து வரும் காட்டாறு உயர்ந்து அலைகளோடு விரைந்து வந்து தரையை மோதுவதை.

**பொருதிரை நிவப்பின் வரும் யாறு அஞ்சுவல்.**

**(புறம்; 306; 1-2)**

பெருகி வரும் காட்டாறு மூன்று விதமான முக்கிய பணிகளை செய்கிறது. நிலத்தை அரித்தல், அரித்தப் பொருட்களை கடத்துதல், கடத்திய பொருட்களை படிய செய்தல் போன்றவை ஆகும்.

**கயம் அல்லது குளம்**

செயற்கை நீர் நிலையாக கருதப் பெறும் கயம் என்பது குளத்தை குறிப்பதாகும். பண்டைய தமிழரின் நீர் தேவையை பூர்த்தி செய்வதில் குளத்திற்கு முக்கிய பங்கு இருந்தது. ஏனெனில் மழையற்ற காலங்களில் இந்நீர் நிலையே மக்களுக்கு உதவியது. தங்களுக்கான நீர் தேவையை தாங்களே பூர்த்தி செய்துகொள்ள பண்டைய தமிழர்களால் அமைக்கப்பட்ட செயற்கை நீர்நிலையே குளம் ஆகும்.

**அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண் நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெள் நீர்ச் சிறுகுளம் கீழ்வது மாதோ**

**(புறம்; 299;3-4)**

மேற்கூறிய பாடல் குளத்தின் கட்டுமான அமைப்பினைத் தெளிவாக வரைமுறைப் படுத்துகின்றது. இதில் அறை என்பது பாறையையும் பொறை என்பது சிறுமலையை குறிக்கின்றது. இருபக்கமும், மலையும், பாறையும் எட்டாம் நாள் பிறைச்சந்திரன் போன்ற வளைத்த கரைகளை உடைய தெளிந்த நீரை உடைய சிறு குளமாக காணப்படுகிறது. அவை பாதுகாக்கப்பட இல்லையாயின் உடைந்து போகும் என்று குறிப்பிடுவதன் வழி குளத்தின் கரையானது எட்டாம் நாள் பிறை சந்திரனை ஒத்ததாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

சங்ககால நீர்ப்பாசன கட்டுமான அமைப்புகள்.

**புதவு**

சங்ககால மக்கள் மேற்கொண்ட நீர்ப்பாசன கட்டுமான அமைப்புகளின் தன்மையை அறியலாம். புதவு பற்றிய செய்திகள் புறநானூற்றில் குறிப்புகள் காணப்படுகிறது. அதில் புதவு என்பது நீர் வெளியேறும் அமைப்பு என்கிறது. நீர் மோதக்கூடிய இடமாக சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது.

**இழுமென ஒலிக்கும் புனல் அம் புதவின்.**

**(புறம்;176;5)**

நிறைகுள புதவின் மகிழ்ந்தனென் ஆகி மேற்கூறிய பாடல், வழிப் புதவு பற்றிய செய்திகள் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றது. தமிழகப் பாசன வரலாறு என்ற நூலில் புதவு என்பதற்கு. தண்ணீர் வெளியேறும் சிறிய வழி என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**மதகு**

மதகு சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலும் சொல்லாடல் வழக்கத்தில் இருந்து வருகின்றது. அதாவது தண்ணீர் போனால் தொட்டிக்கு என்ன வாட்டம் என்ற பழமொழி கொண்டு இதன் சிறப்பை உணரலாம். மதகு குறித்த செய்தியினை.

**நுரையுடன் மதகு தொறு இழி தரு புனல்.**

**(புறம்; 131;5-7)**

பாடல் வரியின் மூலம் மதகு வழியாக தண்ணீர் வெளியேறுகிறது என்பதை அறிய முடிகின்றது.

## வேளாண்மையில் நீர் மேலாண்மை

பண்டையத் தமிழர்களின் வாழ்வியலை காட்டும் சங்க இலக்கியங்கள், வேளாண் தொழில் பற்றிய பல்வேறு செய்திகளை தருகின்றன. சங்ககாலத்தில் உயிர் காக்கும் தொழிலாக போற்றப்பட்டுள்ளது. இயற்கையாகவே வேளாண் தொழிலுக்கு தேவையான அனைத்தும் சிறப்பாகவே இருந்துள்ளது. வேளாண்மைக்கு மிகவும் அத்தியாவசியமானதாக கருதப்படுவது நிலமும் நீரும் ஆகும். இவைகளின் இணைப்புச் செயலே உணவுப் பொருள்களின் உற்பத்தியாகும். இக்கருத்தினை.

**உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே**

**(புறம்;18;21)**

புறநானூற்று பாடல் வாயிலாக உணவு எனப்படுவது நிலத்தொடு நீரும் சேர்ந்ததே என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.

## முடிவுரை

1. உலக நிலைப்பேற்றிற்கு முதல் ஆதாரமாகவும், உலக உயிர்கள் தோன்றுவதற்கும் உயிர் வாழ்வதற்கும் நீரே இன்றியமையாதது என்பதனை அறியமுடிகின்றது.
2. குளம் அமைக்க இயற்கையான முறையில் அமைந்த மலைப் பாறைகளைத் தேர்வு செய்திருந்தனர் என்பதும், கற்பாறைகளைக் கரைகளாகத் தேர்வு செய்வதனால் மனித உழைப்பும் குறைவு என்பதும் பொருளாதார சிக்கனம் உண்டு என்பதையும் உணர்ந்து சிறந்த கட்டுமானத் தொழில்நுட்ப வல்லுநர்களாகச் சங்ககாலத் தமிழர்கள் திகழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.
3. அணைகளில் தேக்கிவைத்திருக்கும் நீரினைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திறப்பதற்கும் மூடுவதற்குமான தொழில் நுட்பங்களைக் கண்டறிந்தனர். இதன் விளைவாகவே மதகு,மடை, குமிழி, புதவு போன்ற நீர்த் தொழில் நுட்பக் கட்டுமான அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்பதை அறிய முடிகின்றது.
4. புறநானூற்றில் நீர் மேலாண்மை பற்றியும் அவற்றின் தொழில் நுட்ப வளர்ச்சினையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், முதல் பதிப்பு, 2018, சென்னை.

2. சுப்ரமணியன் ச.வே., புறநானூறு, முல்லை பதிப்பகம், சென்னை.
3. இறையன்பு வெ.,இலக்கியத்தில் மேலாண்மை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2016, சென்னை.
4. தமிழ்ச் சொல்லகராதி, 2011, திருச்சி.
5. மதுரை தமிழ்ப் பேரகராதி, மதுரை தமிழ்ச் சங்கம், மதுரை.

Vol. 8 Special Issue 1 July 2024 E-ISSN: 2456-5571

# திருக்குறளில் நீரும் மரங்களும்

**வெ. சந்தியா**
முதுகலைத்தமிழ் முதலாமாண்டு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

நாட்டின் வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் நீரானது அவசியமான ஒன்றாகும். நீர் இல்லாமல் இவ்வுலகில் புல் முதல் மனிதன் வரை எந்த உயிரினமும் நிலைத்திருக்க முடியாது. பண்டைய காலத்தில் நீரை, நம் முன்னோர் சிறப்பாக மேம்படுத்தி வந்துள்ளனர். நீரை பாதுகாப்பதற்கென்று பல்வேறு வழிமுறைகளை செயல்படுத்தி வந்துள்ளனர். கால்வாய்களை அமைத்தும், குளம் வெட்டியும், கிணறு அமைத்தும், நீரைச் சேமித்துள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரை நீருக்கு வழங்கும் வேறு பெயர்களின் அடிப்படையில், நீரை சேமிப்பதனால் ஏற்படும் நன்மைகளையும், சேமிக்காததனால் ஏற்படும் தீமைகளையும் ஆராய்கிறது. திருவள்ளுவர் நீரை, வேளாண்மை, நிழல் என பலவற்றோடும் ஒப்பிட்டு கூறும் முறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## மழை

ஒரு நாடு செல்வ செழிப்புடன் வாழ்வதற்கு மழையானது அவசியமான ஒன்றாகும். நாகரீக மக்களிடம் ஆற்றங்கரையோரம் தான் முதன்முதலில் தொடங்கியது. மனிதன் வேட்டையாடுவதை விடுத்து வேளாண்மை செய்ய ஆரம்பித்தான். பருவ மழைக்கேற்ப பயிரிட்டு வாழ்ந்து வந்தான்,

**"துப்பார்க்கு துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை (குறள் எண் 12)**

என்ற வரிகளுக்கு ஏற்ப மக்கள் பலவகையான தானிய வகைகளையும், நெல் வகைகளையும், கிழங்கு வகைகளையும், அந்தந்த பருவத்திற்கேற்றவாறு பயிரிட்டான். இவ்வாறு அனைத்து பயிர்களையும் பயிரிடுவதற்கு மழையே முதன்மையாக இருந்திருக்கிறது. பழங் காலத்தில் மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவும் ஒன்றாக இருந்திருக்கிறது. மேலும் மக்கள் நீரினையே உணவாகவும் பருகி வந்துள்ளனர். உணவு இன்றியும்

மக்கள் வாழ்வர், ஆனால் நீர் இல்லாமல் வாழமாட்டார்கள் என்பது உண்மையாகும்.

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை "**

**(குறள் எண்.115)**

என்ற வரிகளுக்கேற்ப, பருவத்திற்கு ஏற்றபடி மழையைத் தந்து இவ்வுலகை பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையச் செய்து வருவது மழையே. உழவர்களின் உணவு உற்பத்தியை பெருக்கி மேலைநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் நல்ல வருவாயை ஈட்ட உதவியுள்ளது. மனிதன் தேவையில்லாமல் காடுகளை அழித்தும், பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தியும் இயற்கையின் அழகை சீர்குலைத்து வருகின்றான். இதனால் ஏற்ற காலத்தில் மழை பெய்யாமல் பருவம் மாறி பொழிகிறது. மக்களின் வாழ்க்கை சுழற்சி பிளவும் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டு துன்பத்துக்கு உள்ளாகிறார்கள்.

**"பருவத்தே பயிர் செய்"**

**(ஆத்திச்சூடி.22)**

என்ற பழமொழிக்கேற்ப நாம் இயற்கையை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். ஏற்ற காலம் அறிந்து, பருவத்தே பயிர் செய்து வந்தால் நமக்கு மட்டும் அல்லாமல் நம்மை சார்ந்தவர்களுக்கும் நன்மை தரும். நாம் இயற்கையை எவ்வாறு பாதுகாத்து வருகிறோமோ அந்த அளவு நாம் நம்பயனை அடைவோம், இல்லாவிடின் பெரும் துன்பத்திற்கு உள்ளாவோம்.

**கடல்**

இயற்கையின் படைப்பில் அரியதொரு, படைப்பாக கடல் அமைந்துள்ளது. கடல்கள் இயற்கையாகவே தன்னிடம் உள்ள நீரை, நீராவி சுழற்சியின் மூலம் ஆவியாக்கி விட அது மேகத்தை குளிர்விக்கிறது. அச்சமயம் மேகங்கள் குளிர்ந்து மழையாக பொழியும். கடல் சார்ந்த பகுதிகளில் மக்கள் மீன்பிடி தொழிலை செய்துவந்துள்ளனர். மேலும் உப்பு விளைவித்தலும் இவர்களின் தொழிலாக இருந்துள்ளது.

**"களர்நிலத்துப் பிறந்து**
**உப்பினைச் சான்றோர்**
**விளைநிலத்து நெல்லின்**
**விழுமிதாக் கொள்வர்"**

**(நாலடியார்.133)**

சான்றோர்கள் நல்ல நிலத்தில் விளைந்த பெல்லாரி எனும், உவர் நிலத்தில் விளைந்த உப்பினையே சிறப்புடையதாகக் கொள்வர். கடல் சார்ந்த பகுதிகளில் மக்கள் மின் பிடித்தொழிலையும், உப்பு விளைவித்தலையும் தொழிலாக செய்து வந்துள்ளனர். மேலும் இதனையே

சான்றோர் சிறப்புடையதானது என்று முன்னோர் கூறியிருப்பதைக் காணலாம். காலத்தில் கடலினையே தன் இறைவனாகவும் வழிபட்டுள்ளனர். தொல்காப்பியர் கடலும் கடல் சார்ந்த பகுதிகளில் வாழும் மக்களை நெய்தல் நில மக்கள் என்று குறிப்பிடுகின்றனர். நெய்தல் நில பகுதியின் இறைவனாக வருணனை வழிபடுகின்றனர்.

**“அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது“**

**(குறள்.10)**

இத்தகைய வருணனை அறக்கடவுளாக வணங்கி, இறைவனின் திருவடியை சேர்ந்தவர்க்கு எல்லா வளமும் கிடைக்கும், மற்றவர்களுக்கு பொருள், இன்பம் கிடைப்பது என்பது நீச்சல் தெரியாதவன் ஆழ்கடலில் சிக்கி கரையேற முடியாத நிலைக்கு தள்ளப்படுவர். மறுபிறவியாகிய பெருங்கடலில், இறைவனின் திருவடியை வணங்குகின்றவர் மட்டுமே இத்தகைய கடலினை கடக்க முடியும். மற்றவர் இதனைக் கடக்க இயலாது என்பதை,

**“நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்” (குறள்.17)**

என்ற வரிகளுக்கேற்ப கடலானது குளம், குட்டை, ஏரி, ஆறு, நதி, அருவி போன்ற எல்லாவற்றிற்கும் தாயாக விளங்குகிறது. மழை பொழியும் போது குளம், குட்டை நிரம்பி வடியும் நீர் ஆறாகவும் பின்பு நதிகளில் கலந்து கடலில் சேர்கின்றன. எங்கு இருந்து நீர் ஆவியாகி மழையாக பொழிகிறதோ இறுதியில் மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்கின்றது. இத்தகைய சுழற்சி இல்லையென்றால் கடலும் தன் வளத்தை இழந்துவிடும்.

**ஊருணி**

ஊருணி என்றால் மக்கள் பயன் படுத்துவதற்காக நீரை சேகரித்து வைக்கும் இடம் ஊருணி என்பர்.

**“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவமாம்**
**பேரறி வாளன் திரு”**

**(குறள் எண்.215)**

இக்குறளில் செல்வமுடையவன் ஒருவன் பிறர் விரும்புமாறு பொருளைக் கொடுத்து உதவுவது போல, ஊருணியும் பலருக்கு நன்மையை பயக்கிறது என்கிறது. மனிதன் முதன் முதலில் ஆற்றங்கரையோரத்தில் தான் நாகரீகம் என்ற ஒன்றைக் கண்டறிந்தான். பின்பு வேளாண்மையைக், கையாண்டான். பருவம் இத்தகைய நிலையில் மாறி மழை பெய்வதால் உலகம் முழுவதும் பசுமை இல்லாமலும், வேளாண் தொழில் நடைபெறாமலும் பெரும் துயரத்தில் இருந்தனர். இதற்காகத்தான் குளம், குட்டை, ஏரி, அணைக்கட்டுகள் போன்றவற்றையும்

மேலும் கோவில்களில் கிணறு வெட்டுதல், கால்வாய் அமைத்தல் போன்றவற்றையும் வடிவமைத்து கட்டி வைத்துள்ளனர் நம் முன்னோர். முன்னோர் செய்த ஒவ்வொன்றுக்கும் காரண காரியம் இல்லாமல் இல்லை. இது நமது வாழ்வின் அடிப்படைக்கு வழி கள்ளது.

**"குளங்கொட்டும் கோடு பத்துவழி சீத்து**
**உளந்தொட்டு உழுவயல் ஆக்கி**
**வளத்தொட்டுப் பாகு படுங்கிணற்ற**
**என்றிவ்ஐம் பாற்படுப்பான்**
**ஏகும் சுவர்க்கத் தினிது"**

**(சிறுபஞ்சமூலம்.64)**

இப்பாடலில் மூலம் சிறு பஞ்சமூலத்தில் நீரை காக்க எவ்வாறு மேம்பாட்டு பணிகள் நிகழ்ந்தது என்பதனை அறியலாம். அகினியல் வளர்ச்சியுறாத அரசர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு முக்கியமான நீரை எவ்வாறு காத்து வந்தனர் என்பது அதிசயத்திற்குரிய ஒன்றாகும். நம் முன்னோர் பண்டைய காலத்தில் நீர் மேலாண்மைக்காகவே ஒரு குழுவை அமைத்து அதனை காத்து வந்தனர். ஆனால் இன்றோ திருவள்ளுவரின் கருத்துக்கு முரண்பாடாக நடந்து வருகிறது.

நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்தில் கட்டிடங்களை எழுப்புகின்றனர். நம் முன்னோர் காட்டிய பாதையை அடைத்து அழிவுக்கு தொடர்ந்து செல்கிறோம். நாம் இன்று எந்த அளவு குளங்களை வெட்டியும், சதுப்பு நிலங்களைப் பராமரித்தும், கிணறுகளையும் அமைத்து வருகிறோமோ அந்த அளவு நம் தலைமுறையினருக்கு நீரைக் கொண்டு செல்லலாம். இல்லை என்றால் நீரே இல்லாத நிலை ஏற்படும்.

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு"**

**(குறள்.396)**

நாம் எந்த அளவு ஆழமாக மணலில் தோண்டுகிறோமோ? அந்த அளவு நீர் ஊறும், அதுபோல ஒருவன் படிக்க படிக்க ஒருவனது அறிவானது ஊற்று நீர் போல சுரந்து கொண்டே இருக்கும். இங்கு திருவள்ளுவர் ஊற்று நீரை ஒருவனின் அறிவுக்கு ஒப்பிட்டு கூறியுள்ளார். இப்பொழுது நீர் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு நமக்கு இல்லையென்றால் 500 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். ஒருவன் வாழ்வதற்கு உணவு இல்லையாயினும் நீர் இருந்தால் போதும் என்கிறவனுக்கு நீரே. இல்லை என்றால் எப்படி ஒருவனால் வாழ முடியும். நமக்கு அடுத்து வரும் தலைமுறையினரை நாமே அழிக்கக் கூடிய நிலைக்கு செல்வோம். முடிந்த

அளவு நீர் பற்றிய விழிப்புணர்வை நமக்கு தெரிந்தவர்களுக்கு கூறியும், நாமே ஊருக்கென்று குளம், குட்டைகளை அமைத்தும் நீர் மேலாண்மையை மேற்கொள்ளலாம். நீர் எவ்வாறு மணலில் ஊருகின்றதோ அதுபோல நம் மனதில் நீர் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு எண்ணம் இருக்க வேண்டும்.

**நீர்**

திருக்குறளில் 'நீர்' என்ற சொல் 32 இடங்களில் வந்துள்ளது. நீர் ஒழுக்கம், உள்ளம், அணி, பசு போன்ற பலவற்றினோடு ஒப்பிட்டும் இதன் மூலம் நன்மை, தீமையை விளக்கியும் கூறப்பட்டுள்ளது, நீர் சார்ந்த செய்திகள் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. நாம் அன்றாடம் பயன்படுத்தும் குடிநீர் அல்லது தண்ணீர்.
2. தலைவன் தலைவியர் கூற்றுகளில் நீர் பற்றிய சொல் 19 இடங்களிலும், தண்ணீர் பற்றிய செய்திகள் 13 இடங்களிலும் தலைவன் தலைவியரின் வருத்தம் பிரிவு, காதல், பிணக்கு, கண்ணின் பார்வை போன்றவை பற்றிய செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**தண்ணீர்**

**"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி"**

**(குறள்.13)**

இக்குறளில் நீர் இல்லையேல் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் பசியால் வருந்தும் என்பது திருவள்ளுவர் வாக்கு. உலகில் உள்ள உயிர்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஓரறிவு புல் முதல் ஆறறிவு மனிதன் வரை எல்லாவற்றிற்கும் இது மூலாதாரமாக விளங்குகிறது. இது மட்டுமல்லாமல் கடலானது நீராவிப் போக்கு என்ற ஒன்றினை நிகழ்த்தாமல் இருந்துவிட்டால் கடல் தன் வளத்தை இழந்துவிடும். எனவே உயிர்கள் மட்டுமின்றி ஏரி, ஆறு, குளம், குட்டை, கடல் என அனைத்தும் நீர் இல்லையேல் அதன் தன்மையை இழக்க நேரிடும்.

**"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு"**

**(குறள்.20)**

நீர் இல்லையேல், மனிதன் ஒருவன் எதனால் நாகரீகம் அடைந்தானோ அதனாலே நாகரீகம் கெட்டு ஒழுக்கம் கெடக்கூடிய நிலை ஏற்படும். நீர் இல்லாத சூழ்நிலையில் செல்வத்தைவிட நீருக்குத்தான் அத்தகைய மதிப்பு இருக்கும்.

மதிப்பு இருக்கும்போதே காத்து பின்னர் பயன்படுத்துவது நமக்கு பயனளிக்கும்.

**"நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்துஇயல்பது ஆகும் அறிவு"**

**(குறள்.452)**

என்று கூறுகிறார் வள்ளுவர். அதாவது நிலம் பலவகை தன்மையை சார்ந்து இருக்கும். அவற்றோடு நீர் சேரும் போது அந்தந்த நிலத்தின் தன்மையை பெறும். அதுபோல தான் அதில் நாம் சேரும் இனத்தைப் பொறுத்து தான் நம் அறிவும் நடவடிக்கையும் இருக்கும். நீரை பலவற்றோடு ஒப்பிட்டுக் கூறி இருக்கின்றனர். இங்கு நீரானது உள்ளத்தோடும், மனிதன் சேரும் இனத்தோடும், உறவினர் பிறருடன் சேர்ந்து பழகாததனால் கரையில்லாது தவிக்கும் நிலையினையும் சோம்பலை விரும்பி ஏற்பவனையும், குறிப்பினை அறியக்கூடியவை பற்றியும், பயிரை பற்றியும், பாதுகாப்பு, போரில் வீர மரணம் அடைந்தவரின் சிறப்பு, உறவினரின் இயல்பு, கள்ளுண்டு இருப்பவனின் நிலை, உழவு, புல்லரிசி கஞ்சி, பசு போன்ற பலவற்றோடு ஒப்புமைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. நீர் நமது வாழ்வில் எவ்வளவு இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது என்பதையும் நமக்கு நீர் இருப்பதால் உண்டாகும் நன்மை பற்றியும் நீர் இல்லாமையால் ஏற்படக் கூடிய தீமை பற்றியும் அக்காலத்தே வாழ்ந்த திருவள்ளுவர் திருக்குறளில் தெளிவாக உணர்த்தி சென்றிருக்கிறார்.

## 2. தலைவன் தலைவியின் கூற்றுகளில் "நீர்" என்ற சொல்

தலைவன் தலைவியர் கூற்றுகளில் "நீர்" என்ற சொல் 13 இடங்களில் கையாளப் பட்டுள்ளது. கண்ணீர் பற்றிய செய்திகள், நீரை ஒப்பிட்டு கூறும் செய்திகள், பிணக்குகளில் நீர் பற்றிய செய்திகள் என வகைப்படுத்தலாம்.

### (I) கண்ணீர் பற்றிய செய்திகள்

**"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர்கொண் டனள்"**

**(குறள்.1315)**

எனும் குறளின் வழியாக "என்னை விட்டு பிரியேன்" என்று கூறிய தலைவன் இப்போது பிரிந்திருக்கும் நிலையில் தலைவியின் வருத்தம் சூழ்ந்துள்ளது. இதனைத் தாங்க முடியாமல் அவளுடைய கண்கள் மேலும் தொடர்ந்து தலைவனை நினைத்து வருந்தும் தலைவிக்கு கண்களை வறண்டு போகும் நிலை குறிப்பிடப்பட்டுள்ளது.

**(||) நீரை ஒப்பிட்டு கூறும் செய்திகள்**

திருவள்ளுவர் நீரைப் பற்றிய செய்தி களையும் அதனை பாதுகாக்கும் செய்தி களையும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இங்கு நீரினை தலைவன் தலைவியோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

> **"நீரும் நிழலினது இனிதே புலவியும்**
> **விழுநர் கண்ணே இனிது"**
>
> **(குறள்.1309)**

இருவரிடையே அடிக்கடி ஏற்படும் ஊடலும், அதனால் இருவருக்கும் இடையே உள்ள புரிதலை வளர்கிறது. மேலும் பிரிவு காலத்தில் தலைவனை நினைவால் தலைவி வருந்தி கொண்டிருப்பாள் இந்த வருத்தத்தை நிலத்தோடும் நிழலோடும் நீரை ஒப்பிட்டு வள்ளுவர் கூறியுள்ளார்.

**(|||) பிணக்குகளில் நீர் பற்றி செய்திகள் (வர்ணனை)**

> **"நினைத்திருந்து நோக்கினும் காயம் அனைத்துநீர்**
> **யார்உள்ளி நோக்கினீர் என்று"**
>
> **(குறள்.1320)**

தலைவி தலைவனிடம் "நீர் யாரையோ நினைத்து என்னை ஒப்பிட்டுப் பார்த்தீரோ" என்று சில நேரம் தலைவனிடம் சினம் கொண்டு பேசும் நிலையை பற்றி திருவள்ளுவர் கூறியுள்ளார். இக்குறளில் நீர் தலைவனைக் குறிக்கிறது.

**முடிவுரை**

திருக்குறளில் நீர் பல பொருள்களுடன் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. பண்டைய காலத்தில் நீர் மேலாண்மை மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருந்துள்ளதை அறியலாம். நீரினை சேமிக்கும் முறை பற்றியும், இக்காலத்தில் நீரை சேமிக் காததால் அடுத்த தலைமுறையினர் சந்திக்கும் பிரச்சினை பற்றியும் கூறப் பட்டுள்ளது.

**மேற்கோள் நூல்கள்**

1. நாலடியார், பாடல் எண் 133, புலியூர் கேசிகன்.
2. சிறுபஞ்சமூலம், பாடல் எண் 64, மூலமும் உரையும்.
3. ஆத்திசூடி, பாடல் எண் 22, ஔவையார்.

# திருக்குறளில் நீர் மற்றும் மரம்

**முனைவர் பீ. ரகமத்பீபி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

பாரதியார் கலை அறிவியல் கல்லூரி, தேவியாக்குறிச்சி, ஆத்தூர், சேலம்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழின் தொன்மையை நமக்கு அடையாளப்படுத்தும் ஏராளமான ஆதாரங்களில் திருக்குறளே முதன்மையானது. அந்தத் திருக்குறளில் சொல்லப்படாத செய்திகளே இல்லை. வாழ்வியல் நெறிகளை விளக்கமாகச் சொல்லும் வள்ளுவர், மனிதம் மற்ற உயிரினங்களுக்குத் தேவையான நீர் வளம் எத்துணை அவசியம், நீரின் வகைகள், நீரின் அவசியம், நீர் இல்லையேல் இவ்வுலகம் இல்லை என்பதை பல குறளில் எடுத்துரைத்துள்ளார். மரங்களைப் பற்றியும் வெகு விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். நல்ல மனிதர்களை பயன் தரும் மரங்களோடு ஒப்பிட்டும், பயனில்லாத மனிதர்களை எதற்கும் உதவாத மரங்களோடு ஒப்பிட்டுள்ளார். இதனை இக்கட்டுரையில் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** தானமிழ்தம் அதுவே நீராகிய அமிழ்தம் மரம் போல்வர், யாருக்கும் உதவும் குணம் இல்லாதவர், நிறைந்த அறிவுடையவர், வற்றல் மரம், காய்ந்த மரம், நச்சப்படாதவன், பிறரால்விருப்பப்படாதவர்.

## முன்னுரை

இன்றைய காலச் சூழலில் மரமும் நீரும் வெகுவாகக் குறைந்துள்ளது. எங்கு பார்த்தாலும் வறட்சி, மழையில்லை, விளைச்சல் இல்லை, மரங்கள் அனைத்தும் நீண்ட நெடும் சாலைகள் போடவும் மேம்பாலங்கள் கட்டவும், நான்கு வழிப்பாதைகள் அமைக்கவும் வெட்டப் படுகின்றன மேலும் காடுகள் அழிக்கப் படுகின்றன. மனிதர்களில் சிலருக்கு யார் எப்படிப்போனால் என்ன? நம்மிடம் இருக்கும் பணம் பெருக விளை நிலங்களையும், காடுகளை வாங்கி உல்லாச விடுதிகள், வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டி விடுகிறார்கள். இதனால் ஏராளமான மரங்கள் அழிக்கப்படுகின்றன. மரங்கள்

அடர்ந்து இருந்தால் தானே காற்று உண்டாகும். காற்றினால் மழை உண்டாகும். மழை பெய்தால் தானே ஆறு, ஏரி, குளம், குட்டை, வாய்க்கால், அருவி, கிணறு இவைகளில் நீர் நிறைந்து வழியும். நீர் இருந்தால் தானே மக்கள் விவசாயம் செய்ய இயலும். மனித உயிர் ஆதாரமான நீரை நம்பியே உயிர் வாழ்கின்றனர். நீர் இல்லையேல் உலகில் எந்த உயிருமே இருக்க முடியாது. நீரின் அவசியத்தையும், மரங்கள் பற்றிய சிந்தனையும் வள்ளுவருக்கு இருந்தது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

### திருக்குறளில் மரங்கள் பற்றிய சிந்தனை

திருவள்ளுவர் மரங்களில் பயனில்லாத மரங்களை மண்ணில் மனிதராய்ப் பிறந்தும் பொறுப்பில்லாமல் தான் தோன்றியாகத் திரியும் மனிதர்களை எதற்கும் உதவாத மரங்களோடு ஒப்பிட்டுள்ளார்.

**'உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்**
**மரமக்கள் ஆதலே வேறு'**[1]

எந்த மக்களை மரங்களோடு ஒப்பிடுகிறார். ஊக்கம் இல்லாதவரை, கண்ணோட்டம் இல்லாதவரை மனிதப் பண்பே இல்லாத கருணையிலாதவரை ஒப்பிடுகிறார். அறிவைப் பயன்படுத்தத் தெரியாமல் அறிவிலியாய் இருப்பதைவிட மரமாக இருப்பதே மேல் என்கிறார்.

**'மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு**
**இயைந்துகண் ணோடா தவர்'2**

என்ற குறளில் மண்ணில் வேர்விட்ட மரம் தனக்கு முன் எது நடந்தாலும் அப்படியே தான் இருக்கும். அதேபோல் கண் முன் நடக்கும் அநியாயத்தைக்கண்டும் ஏதும் தெரியாததைப் போலிருப்பர் அப்படிப்பட்ட மனிதர்களை மரம் என்கிறார்.

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட் பண்புஇல்லா தவர்'3**

என்ற குறளில் மிகுந்த அறிவை உடையவராக இருத்தல் சிறப்புதான். ஆனால் மிகுந்த ஊக்கம் உடையவராக இருத்தல் ஆபத்தானது. ஆகையால் மனிதப் பண்பு உடையவராக இருத்தலே மனிதருக்குச் சிறப்பு. மனிதப் பண்பு இல்லாமல் இருப்பதைவிட மரமாக இருப்பது சிறந்தது என்கிறார்.

### பயன் மரம்

மரங்களில் பயனுள்ள மரங்கள் ஏராளம். ஒரு ஊரின் நடுவில் மரம் நன்கு உயர்ந்து வளர்ந்து, இனிய கனிகளைக் கொண்டு பழுத்துக் குலுங்கும். இம்மரம் எத்துணைப் பேருக்கு பயன்படுகிறது. பறவைகள், அணில், குரங்குகள், வௌவால்கள்,

இவைகளுக்கும் கனிகள் பயன் தந்திடும். அதேபோல்,

**‘பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயன்உடை யான்கண் படின்’4**

என்ற குறளில் நிறைந்த செல்வம் நல்லவர்களுக்குக் கிடைத்தால் அவர்கள் எல்லோருக்கும் கொடுத்து உதவுவார்கள். வள்ளலார், கர்ணன், பாரி, அதியன், கடையேழு வள்ளல்கள் இவர்களைப் போல் மற்றவருக்கு உதவிடுவார்கள். மா, பலா, வாழை, தென்னை, கொய்யா, நாவல், போன்ற பழ மரங்களை யார் வேண்டுமானாலும் பறித்திடுவர். குழந்தைகளும் கல்லெறிந்து பழங்களைக் கொண்டு சென்றாலும் மரம் கனிகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். அது போல் நல்லவரும் பிறருக்கு உதவுவதை விரும்புவார்கள் என்கிறது குறள்.

## திணையும் பனையும்

தம்மிடம் உள்ள குறைகளை, தாவர வகைகளுள் மக்களுக்குப் பயன் படுவனவற்றில் சிறியது திணை. பெரியது பனை. இரண்டையும் நல்லவர்கள் எப்படி நினைப்பர் என்பதை திருவள்ளுவர்,

**‘தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்’5**

என்ற குறளில் சிறிய திணையளவு குற்றம் நேர்ந்தாலும் சிறியது தானே பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட மாட்டார்கள். ஐயோ நம்மால் இப்படி நேர்ந்து விட்டதே என்ன செய்வது, தெரியாமல் தவறிழைத்து விட்டேனே என்று நல்லவர்கள் திணையளவு குற்றத்தை பனையளவு பெரியதாகக் கருதி வருந்துவார்களாம். என்னே வள்ளுவரின் ஒப்புமைத்திறன்.

## வற்றல் மரம்

காய்ந்த மரம், வள்ளுவருக்கு எல்லா வளமும் நிறைந்திருந்தும் மனிதர்களில் பலர் இரக்கம், கருணை, அருள் இன்றி இருக்கின்றனர். அவர்களை,

**‘அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கன்**
**வற்றல்மரம் தளிர்த் தற்று’6**

என்ற குறளில் அன்பு சிறிதும் மனதில் இல்லாத மனிதர்களை பட்டுப்போன மரம் தளிர்க்காது அதுபோல மனதில் ஈரம் இல்லாதவரிடம் உதவியை எதிர்பார்க்க இயலாது என்கிறார்.

## நச்சு மரம்

யாருக்கும் உதவாத நச்சு மரத்தை வள்ளுவர் கஞ்சத்தனம் உடையவரிடம் எத்தனை செல்வம் இருந்தாலும் அவனுக்கும் உதவாது, மற்றவருக்கும் உதவாது. எட்டி மரம் போன்ற நச்சுமரம் ஊரின் நடுவில் இருந்தாலும் அதனால் யாருக்கும் பயன் கிட்டாது என்பதை,

**நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று'7**

என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு குறளில், பகை உருவாகிக் கொண்டிருக்கும் காலத்திலேயே களைந்து விட வேண்டும், மரத்திலும் முள்மரம் இளையதாக இருக்கும்போதே வெட்டிவிட வேண்டும். இல்லையெனில் அது முதிர்ந்தால் உங்களை குத்திக் கிழிக்கும் என்கிறார்.

**'இளையதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைக்கொல்லும் காழ்த்த இடத்து'8**

என்ற குறளில் பகையையும் முள் மரத்தையும் முளையிலேயே களைந்து விட வேண்டும், இல்லையாயின் பின்பு துன்பம் தான்.

## ஊடலில் மரம்

திருவள்ளுவர் மரத்தை எதற்கெல்லாம் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் குறிப்பிட்டுள்ளார். யாரும் நினைத்திராத ஊடலுக்கும் மரத்தைப் பயன்படுத்தி நம்மை வியக்க வைக்கிறார். இதற்கும் மரத்தைப் பயன்படுத்த இயலுமா? என்று நினைத்தால் நகைப்பு உண்டாகிறது. திருவள்ளுவரால் எதையும் ஒப்பிட முடியும் என்பது புலனாகிறது.

**'தினைத்துணையும் ஊடாமைவேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்'9**

என்ற குறளில் வள்ளுவர் கணவனிடம் சண்டையிடாமல் இன்பமாக இருக்க எண்ணியத் தலைவி தன் நெஞ்சுக்கு சொல்வதாவது, கணவனிடம் தினையளவு பிணக்கு ஏற்பட்டாலும் சிறிது சிறிதாக வாய்ச்சண்டை முற்றிப் பனையளவு பெருகிவிடும் இன்பமான பொழுது துன்பமாக மாறிவிடும் என்று கருதுகிறாளாம். என்னே வள்ளுவரின் தமிழ்ப் புலமை.

## நீர்பற்றி திருவள்ளுவர்

அகண்ட பரந்த உலகமானது, அதில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் நீர் இன்றி உயிர் வாழ்வது அறிது. நீரே உலக உயிர்கள் வாழ இன்றியமையாதது. நீரின்றி எதுவும் இல்லை என்பதை,

**'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரறு பாற்று'10**

என்ற குறளில் நீரே உலகிற்கு ஆதாரம், அந்த நீரைத் தருவது வானம், வானத்தில் இருந்து வரும் மழையை அமிழ்தம் என்று கூறுகிறார். (சாவா மருந்து. 84), (கரும்பு .1078), (கள்.92), பால், 922, 924), (நெய், 1121,1000), (தேன்.1121) என்றெல்லாம் நீரைப் புகழ் மொழிகளால் குறிப்பிட்டு நீரைப் புகழ்ந்துள்ளார்.

**நீரின் வகைகள்**

திருவள்ளுவர் நீரைப் புகழ்வதோடு நில்லாமல் அதன் வகைகளைப் பலவாறாக குறிப்பிட்டுள்ளார். நீரை அதன் தன்மை களுக்கேற்ப அதன் அடர்த்தி, பரப்பு, ஆழம் ஆகியவற்றிற்கு ஏற்ப வகைப் படுத்துகிறார்.

நீரினுடைய அவசியம், அதன் தேவைகளை வள்ளுவர் எத்துணை உணர்ந்துள்ளார் என்பது தெளிவாகிறது. (நீர்.20), (கிணற்று நீர்.116), (ஊருணி. 26), (ஊற்றுநீர்.116), கீழ்நீர், தரை மட்டத்திலுள்ள நீர்,929), நிழல் நீர்.881, மரத்தடியில் உள்ள நீர்,1309, அட்டிய நீர் பாய்ச்சிய நீர். 1098, குளம். 216, பாத்தியுள் நீர் சொரியும் நீர்.718, மணி நீர் தெளிந்த நீர்.742, மாண்டார் நீர், 278, கோடில்ல நீர், கரை இல்லா இடத்து நீர், 52, 37, குளத்து நீர் 523, இருபுனல் நீர்த்தேக்கம்.737, வருபுனல் ஆறு, அருவி, நீரோட்டம் 737, புனல் 1237, உய்த்தல் புனல் அ)ச் செல்லும் நீர்.1287, ஊறும் மணற்கேணி.396, தண்ணம்துறை குளிர்ந்த நீர்த்துறை.1277, வெள்ளம்.1232, பனி.1232 என்ற பெயர் களால் வள்ளுவர் குறித்துள்ளது வியப்பைத் தருகிறது.

**'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு'11**

என்ற குறளில் விவசாயத்திற்கு மிகவும் அவசியமானது ஏர் உழுதல், எருது விடுதல் அதன்பின் நீர் விடுதல் இவையும் வேளாண்மைக்கு உகந்தது என்று குறிப்பிடுகிறார். இவ்வுலகில் முக்கால் பாகம் நீரால் சூழப்பட்டுள்ளது. கால்பாகம் தான் நிலம். ஆனாலும் வானம் மழையைப் பொழியா விடின்,

**'நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்'12**

பரந்த கடல் நீரும் தன் நீர்மைக் குறைந்து அவதிக்கு உள்ளாகத்தான் வேண்டும் என்கிறார் வள்ளுவர். அவர் நீரின் மேலாண்மையை உணர்ந்த்தால் வான் சிறப்பு அதிகாரத்தில் நீரின் தேவை மழையினால் ஆகுமென்று உணர்ந்து மழையை புகழ்ந்திருக்கிறார். அதனால் தான் கடவுள் வாழ்த்துக்கு அடுத்ததாக வான் சிறப்பை வைத்து மழையின் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறார்.

வான் பொழியவில்லையானால் இந்த பெரிய உலகத்தில் பிறர்பொருட்டு செய்யும் தானமும், தவமும், யாகமும், பூசைகளும், விழாக்களும் நடத்த இயலாததாகிவிடும். தானம் என்பது அறநெறியால் நேர்மையாக சேர்த்த செல்வத்தைத் தேவை யானவர்களுக்கு உள்ளன்போடு கொடுத்தலாகும். தவம் என்பது மனம் அடக்கி ஐம்பொறிகளை அடக்கி,

விரதங்களால் உண்டி சுருக்குதல் ஆகும். இப்படிப்பட்ட தானம், தவத்தையும் கூட நீர் இல்லையானால் செய்ய இயலாது என்பதை,

**'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்காது எனின்'13**

என்ற குறளின் மூலம் வள்ளுவர் விளக்குகிறார்

**'தெய்வம் தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'14**

என்ற குறளில் கணவனைத் தொழுது சரியாக இல்லறம் நடத்தும் பெண்கள் சொன்னால் மழையும் பணிந்து பெய்யும். மழையையும் கற்புள்ள பெண்ணையும் மதித்துள்ளது என்பதை வெகு அழகாக உவமித்துள்ளார்.

**முடிவுரை**

இன்றைய உலகில் நீரின் அவசியம் திருவள்ளுவருக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்திருக்கிறது. நீரை காசு கொடுத்து வாங்குவோம் நீராதாரம் தான் மண்ணில் உள்ள உயிர்களைக் காக்கும். நீர் வளம் பெருக மரம் மிகவும் அவசியம் ஆகும். மரங்களும் பட்டுப்போகாமல் பசுமையாக இருக்க வேண்டும் மரங்கள் இருந்தால் தான் மழை வளம் பெருகும். மக்கள் நலமாக வாழ முடியும். வேளாண்மை பெருகும். பசிப்பிணியின்றி வாழ முடியும். மக்கள் நலமாக இருந்தால் நாடு செழிக்கும். நாடு செழித்தாலே மன்னனுக்குப் பெருமை என்பதை வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

**சான்றெண் விளக்கம்**


1. குறள் -600
2. குறள் -576
3. குறள் -997
4. குறள் -216
5. குறள் -433
6. குறள் -78
7. குறள் -1008
8. குறள் -879
9. குறள் -1282
10. குறள் -11
11. குறள் -1038
12. குறள் -17
13. குறள் -19
14. குறள் -55

# இலக்கியங்களில் நீர் மேலாண்மை

**முனைவர் P. ஜெமிமா ஜெபசெல்வி**

பேராசிரியை, தமிழ்த்துறை

கொடைக்கானல் கிறிஸ்தவக் கல்லூரி, கொடைக்கானல்

## முன்னுரை

வான், மண், ஞாயிறு, திங்கள், மழை, காற்று, ஆறு, கடல் முதலிய இயற்கைப் பொருள்களையும், ஆற்றல்களையும் குறித்து வள்ளுவர் என்ன நினைத்தார் இத்தனையும் இருந்தாலும் இவற்றுள் 'வான் மழையை' மட்டும் சிறப்பித்துக் கூற காரணம் என்ன? என்பதை பின் வருமாறு ஆய்வோம்.

## மழையும் இறையருளும்

மழையில் இறையருளைக் கண்டனர் மக்கள் பலர் மழையை இறையருளுடன் ஒப்பிடுவதும் பக்தி இலக்கியங்களில் இறையருளை மழைக்கு ஒப்பாகக் கூறுவதும் பண்டு தொட்டு தமிழ்க் கவிஞர்களின் மரபாக இருந்து வருகிறது. இளங்கோவடிகள் அரசனை மழைக்கு உவமையாக குறிப்பிடுகின்றார்.

**'மழை நாமநீர் வேலியுலகுக்கு அவன்(சோழ மன்னன்)**
**அளிபோல் மேல் நின்று சுரப்பது என்றார்"**

**(சிலம்பு: 18-9) (ஆய்ச்சியர் குரவை)**

கடுவெனிளவெயினார் என்னும் புலவர் திருமாலைக் குறித்துப் பாடுகின்றார்.

**'உன்திருவருட் பெருக்கும் கொடையும்**
**முகிலிடத்தே யுள்ளன'**

**(பரி- 4.27)**

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் மழைக்கு உமையம்மையின் அருளை உவமையாக்கியுள்ளார்.

**"நந்தம்மையாளுடையாள்**
**தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு**
**முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே**
**என்னப்பொழியாய் மழையேலோர் எம்பாவாய்"**

**(திருவெம்பாவை-16)**

இங்கு மழை பொழிய வேண்டும் என்றால் உமையம்மை தானே செய்யும் இன்னருள்போல் மழை பொழிய வேண்டும் என இங்கு விளங்கி கொள்ள முடிகிறது.

**"வெந்தியர் கோடை மாத்தலை சுரப்ப**
**நீடெழிற் றேன்றி வாளொளி மிளிர**
**எந்தம் பிறவியிற் கோபமிகுத்து**
**மரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்**
**பூம்புரை யஞ்சலி காந்தள் காட்ட**
**தொண்ட உழவராரத் தந்த**
**அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க"**

**(திருவெம்பாவை. அண்டப்பகுதி .71-77.88,91,95)**

கடும் வெப்பத்தை தருகின்ற கோடைக்காலம் தணிய இந்திரனை வேண்டும் பொழுது, அவனுடைய கருணை வேண்டி நிற்கும் பொழுது நமது கரங்கள் காந்தள் மலர் போல் சிவந்து நிற்கும் அப்போது இந்திரனின் அருள் பெற்று மழை வெள்ளமாய் ஓடி குளம், குட்டை யெல்லாம் பெருகி நிற்க நாம் வயலில் விதை விதைத்து பயன் கொள்ளுமாறு அருளைத் தருகின்றன. இறைவனை மேகமாக நினைத்து வாழ்த்திப்பாடு வோம் என்கிறார்.

மழை கடவுளின் கருணையால் உண்டாவது மழை கடவுளின் கருணைக்கு அடையாளமாக விளங்குகின்றது. மழை இறையருள் போன்றது என்றெல்லாம் கவிஞர்கள் பாடினார்கள்.

நம்மாழ்வார் மழையைக் கடவுளின் வடிவங்களுள் ஒன்றாகக் கருதி,

**'நன்று பெய்யும் மழைகாணில் நரெணன்**
**வந்தான் என்றாலும்'**

**(திருவாய்மொழி)**

நன்றாக மழைபொழிந்தால் நரெணன் வந்தான் என்று பாடுகின்றனார்.

## மழையின் சிறப்பு

மழையின் பண்பைப் பாருங்கள் அது! தன்னையே உணவாகக் கொடுக்கிறது. அது போதாமல் பிற உணவுப் பொருள்களையும் கொடுக்கின்றது. விளைவித்த உணவுப் பொருட்களைச் சமைக்கவும் உதவுகின்றது. மழை சிறிது குறைந்தாலும் பசித் துன்பம் உயிர்களை வாட்டி வதைக்கிறது.

மழையின்றி உழவு இல்லை. உழவின்றி மக்கள் இல்லை. சமுதாயம் இல்லை. மழைக்கு அழிக்கவும் முடியும், ஆக்கவும் முடியும். ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை எல்லாம் மழையில் உண்டாகும் நீரினால் தான் வாழ்கின்றது.

அறங்களும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்ப்பது மழையே நீர்வளம் நீடித்து இருந்தால், நாட்டில் அறங்களும் நற்செயல்களும் நீடிக்கும் நீர்வளம் குன்றின் நிலவளம் குன்றும் மக்கள் மனவளமும் குன்றும்.

## நீர்வளமும் அறச்செயல்களும்

நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ, போன்ற ஐம்பூதங்களையும் அறத்தின் சார்பாய் நிற்கின்றன. இவற்றுள் மழையும் அறம் சார்ந்ததே. அரசம் மக்களும் அறத்தோடு நின்றால் மழை பொழியும் அறம் இல்லா இடத்து மழைவளமும் நிலவளமும் குன்றும்.

**தெய்வந் தொழாஅள் கொடுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'**

**(குறள் - 55)**

**'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு'**

**(குறள் - 545)**

**'முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒவ்வாது வானம் பெயல்'**

**(குறள் - 559)**

குடும்பத்தில் தலைவி எப்போதும் தன் கணவன் நினைவாக இருந்து அன்பும் நன்மதிப்பும் பெற்று ஒத்த அன்பு உடையவளாய் இருந்தால் குடும்பம் தழைத்து ஓங்கும், நல்லறம் நிலைத்து நிற்கும், இல்லறம் செழிக்கும், இத்தகைய பண்பு கொண்டவள் மழை வேண்டுமாறு வேண்டினாள் மழை பொழியும்.

அதைப் போல நல்ல அறம் நாட்டி நன் மக்கள் வாழுகின்ற ஊரை ஆளுகின்ற மன்னன் ஊரிலையும் நீர்வளம் பெருகும், நிலவளம் பெருகும், மனவளம் பெருகும் என்கிறார் வள்ளுவர்.

ஒருசிறைப் பெரியனார் என்ற புலவர் அரசன் ஆட்சி நத்திறம் வாய்ந்ததாக இருந்தால் அந்நாட்டில் மக்கள் சான்றோராய் சிறந்து விளங்குவர். விளைநிலம் கெடாது. நீர்வளம் குன்றாது என்கிறார். இதனை,

**'கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது**
**மழைக் கரும்பின் ஒலிக்குந்து**
**கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்**
**கண்ணன்ன மலர்ப்பூக் குந்து'**

**(புறம்-137-5-8)**

இத்தகைய மனம் படைத்த மன்னன் நாட்டில் மக்கள் பள்ளத்தில் விதைத்த விதை கூட சாவாது. கரும்பு போலத் தழைக்கும். கோடை காலத்திலும் மழை மும்மாரி பொழியும் நீர் நிரம்பி இருப்பதால் கண் போன்ற குவளை மலர்கள் பூத்துக் குலுங்கும், அம்மன்னன் மிக மகிழ்வுடன் வாழ்வான் மக்கள் அவனை வாழ்த்துவர் என்கிறார்.

## முடிவுரை

நீரின் இன்றியமையாத தன்மைகளையும், நீரினால் உணவு விளைவதையும், தொழில் பெருவதையும் மக்கள் மனம் வளம். நில வளம் போன்றவற்றையும் மழையினால் அறங்கள் தழைப்பதையும்,

**'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்'**

**(குறள் - 19)**

என்ற கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# நீர் மேலாண்மை

**தலைசால் கவிஞன் அரிமா முனைவர் ச. அய்யர்**
அரசு பள்ளி பட்டதாரி ஆசிரியர் (பணி நிறைவு)
125, அறிவாலயம், அமைதிச்சோலைநகர், திருநகர், மதுரை

## முன்னுரை

இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு, உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது நமது பொறுப்பு. எனவே நீர் மேலாண்மையின் தேவையை உணர்ந்தே ஆகவேண்டிய காலக்கட்டம் இது.

## நீரின் முக்கியத்துவம்

வான்சிறப்பு என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களைப் பாடிய வள்ளுவரையும், மாமழை போற்றுதும் மாமழை போற்றும் என்று இயற்கையை வாழ்த்திப் பாடிய இளங்கோவடிகளையும் வணங்கி நினைவு கூர்வோம்.

ஒவ்வோர் ஆண்டும் சூன் 5ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது. இயற்கை வழங்கிய **தண்ணீரின் இன்றியமையாமை** குறித்து எல்லாரும் சிறப்பிக்க வேண்டும்.

**நீரின்று அமையாது உலகம்** என்னும் தம் கருத்தைத் தெளிவாக பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர். நீரே மனித வாழ்வின் என்பதால் அடிப்படை, நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர்நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

ஒவ்வோர் ஆண்டும் பெய்கின்ற **மழையின்** அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். ஆனால், மழை வழங்கிய நீரை இத்தகைய நீர் நிலைகளே பாதுகாத்துத் தருகின்றன.

மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

**மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாக பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழ வேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன** என்று **மாங்குடி மருதனார்** கூறியதை புரிந்து கொள்ள வேண்டும்.

**நீர் மேலாண்மை**

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் இவற்றுள் முதலிரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை வேளாண்மை யோ நீரை அடிப்படையாகக் கொண்டது.

மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர் நிலைகளில் சேகரிக்க வேண்டும். அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் திட்டமிட்டு செய்தனர்.

ஒவ்வொரு வட்டாரத்தின் நில அமைப்பு, மண்வளம், மக்கள்தொகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே நீர்நிலைகளை வடிவமைத்தனர். இதில் **ஏரிகளும், குளங்களும்** பாசனத்திற்கான அமைப்புகளாய் பெருமளவில் பயன்பட்டன.

பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் **கண்மாய்** என்று அழைப்பர். "**கம்மாய்**" என்பது வட்டார வழக்குச் சொல்லாகும்.

மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு **உறைகிணறு** என்றும் மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு **ஊருணி** என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகால் சோழன் காலத்தில் கட்டப்பட்ட **கல்லணை**யே விரிவான பாசன திட்டமாக இருந்துள்ளது. கல்லணையின் நீளம் 1080 அடி ஆகும். அகலம் 40 முதல் 60 அடியாகவும், உயரம் 15 முதல் 18 அடியாகவும் இருக்கிறது. அது வலுவான கட்டுமான தொழில் நுட்பத்தால் இன்றும் பயன்படுவதோடு நமது வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக நிலைத்து நிற்கிறது.

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்** (குறள் 742)

என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த பாதுகாப்புகளுள் **நீருக்கே முதலிடம்** தருகிறார் திருவள்ளுவர்.

**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே**
(புறம் 18)

என்று நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

இவ்வாறு தமிழர்கள் தண்ணீரின் தேவையை நன்றாக புரிந்து கொண்டு, நீர் மேலாண்மையை அறிவியல் நோக்கில் கட்டமைத்தனர். அவற்றை இன்றைய காலச்சூழலுக்கு ஏற்ப வளப்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும்.

**தமிழ் மக்களும் தண்ணீரும்**

நாம் வாழும் தமிழ்நாடு **வெப்ப மண்டலப் பகுதி**யில் உள்ளது. எனவே நீர் சார்ந்த தன்னுணர்ச்சி தமிழ் மக்களுக்கு மிகுதி.

**தாயைப் பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே** என்பது சொல்வாக்கு.

தமிழ் மரபில் **நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப் பட்டவையாக விளங்குகின்றன. என்பார்** பேராசிரியர் தொ. பரமசிவன். **குளித்தல்** சொல்லைக் குறித்து கூறும் கருத்துக்கள் நமக்கு புதிய சிந்தனைகளை தருகின்றன.

**குளித்தல்** என்ற சொல்லுக்கு **உடம்பினை தூய்மை செய்தல்** அல்லது **அழுக்கு நீக்குதல்** என்பதல்ல பொருள். சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலை குளிர வைத்தல் என்பதே அதன் பொருள் ஆகும்

**குளிர்த்தல் என்பதே குளித்தல்** என்று ஆயிற்று என்பது அவரது விளக்கம். **குள்ளக் குளிரக் குலைந்து நீராடி** என்கிறார் **ஆண்டாள்.** தெய்வச்சிலைகளை குளிக்க வைப்பதை **திருமஞ்சனம் ஆடல்** என்று கூறுவர்.

சிற்றிலக்கியமாகிய **பிள்ளைத்தமிழில் நீராடல் பருவம்** என்று ஒரு பருவம் உண்டு. நாட்டுப்புறத் தெய்வீக கோயில் களில் சாமியாடிகளுக்கு மஞ்சள் நீர் கொடுத்து அருந்த செய்வதும் நீராட்டுவதும் இப்போதும் நடை முறையில் உள்ளன.

திருமணம் முடிந்தபின் அதன் தொடர்ச்சியாக **கடலாடுதல்** என்பதை மேற்கொள்ளும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகிறது. இறப்புச் சடங்கிலும் உடலை நீராட்டுவதற்காக நீர்மாலை எடுத்து வருதல் என்பதும் நடைமுறையில் உள்ளது.

அம்மை நோய் கண்டவர்கள் குண மடைந்த பின் தலைக்கு **தண்ணீர் ஊற்றியாகி விட்டதா?** என்று கேட்பது வழக்கம்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் வாரந்தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பதை தமிழர்கள் மரபாக வைத்திருந்தனர். **சனி நீராடு** என்பது ஔவையின் வாக்கு.

அதிகாலையில் வேளாண் நிலத்திற்கு உழைக்க செல்வோர் **நீராகாரம்** குடிப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அன்பான **வரவேற்பின் அடையாளமாக** நீரே வழங்கப்படுகிறது .

இவ்வாறு தமிழக மக்களின் குடும்பம் தொடங்கி சமூகம் வரை அனைத்திலும் தண்ணீர் முதன்மை பங்காற்றுகிறது.

### இன்றைய வாழ்வில் தண்ணீர்

அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந் தோங்கிய இன்றைய வாழ்வில் தண்ணீர் நிலை குறித்து ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையதாகும்.

உலகம் முழுவதும் **தண்ணீர் பஞ்சம்** உருவாகத் தொடங்கிவிட்டது. அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் **நிலத்தடி நீர்வளம்** குறைந்து வருகின்றது. குறிப்பாக நமது நாட்டில்

இராஜஸ்தான் மாநிலத்தில் பத்தாண்டு களுக்கு முன்பே 700 அடிவரை ஆழ்குழாய்கள் இறக்கியும் நீர் கிடைக்கவில்லை. சிறு நகரங்களிலும் கூட நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. கோடை காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை மக்களுக்கு பெரும் வாழ்வியல் நெருக்கடியாக மாறி உள்ளது.

**உலகச் சுகாதார நிறுவனம்**, உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

குடிநீரை விலைகொடுத்து வாங்கும் அவலம் தொடங்கும். தொடரும் இந்நிலையை மாற்றியமைக்க திட்டமிட வேண்டியது உடனடி தேவையாகும். ஆண்டுதோறும் பெய்கின்ற **மழைப் பொழிவை ஆக்க நிலையில்** பயன்படுத்தும் செயல் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

அறிவியல் அணுகுமுறையில் மழை நீரைத் தேக்கி வைத்து பாசனத்திற்கு பயன்படுத்த ஊர்தோறும் ஏரிகளை உருவாக்கினர் நம் முன்னோர். அவற்றை **தூர்வாரி** முறையாக பராமரிப்புப் பணிகளை செய்தல் வேண்டும். ஒரு மக்கள் இயக்கமாக மழைக்காலத்திற்கு முன்பே செய்ய வேண்டும்.

இயற்கை நமக்குத் தரும் தண்ணீர் கொடையை திட்டமிட்டு பயன் படுத்துவதே நீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் சிறந்த வழியாகும்.

**முடிவுரை**

உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்து பயன்படுத்த வேண்டும். நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த **மரபார்ந்த அணுகு முறைகளைப்** பின்பற்ற வேண்டும். குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்பு குறித்த **விழிப்புணர்வை** மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.

பணம் கொடுத்தால் உணவை விலைக்கு வாங்கிவிடலாம் என்னும் மேலோட்டமான கருத்தோட்டத்தை மாற்றிக்கொள்வோம். உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே. அதுமட்டுமின்றி நீரே உணவாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

> **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
> **துப்பாய தூஉம் மழை**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளதை கருத்தில் கொண்டு செயல்படுவோம். அடுத்த உலகப்போர் ஒன்று உருவானால், அது தண்ணீருக்காகத் தான் உருவாகும் என்னும் நிலைமைக்கு முடிவுரை எழுதுவோம்.

**துணைநூல் பட்டியல்**

1. தண்ணீர் தேசம். கவிஞர் வைரமுத்து. பாடலாசிரியர்.

2. மகாகவிதை. கவிஞர் வைரமுத்து. பாடலாசிரியர்.
3. சங்க இலக்கிய புறப்பாடல்
4. திருக்குறள் புத்தகம்
5. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்
6. கரிகால வளவன் - பட்டதாரி ஆசிரியர் சூரியமூர்த்தி
7. குளித்தல் - தொ பரமசிவன்.
8. சிற்றிலக்கியம் பிள்ளைத்தமிழ்

# நான்மணிக்கடிகை காட்டும் நீர் மேலாண்மை

**ச. இனிதா**

*முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு, தமிழ்த்துறை*

*முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்*

## முன்னுரை

ஐம்பூதங்களுள் ஒன்றான நீரில்லாமல் இவ்வுலகம் இயங்காது என்பதனை வள்ளுவர் **"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே பசும்புல் தலைகாண்பதறிது"**[1] என்கிறார். பூமியானது எழுபத்தொன்பது விழுக்காடு தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. அதில் தொண்ணுற்றேழு விழுக்காடு கடல்நீராக உள்ளது. எஞ்சியிருக்கும் மூன்று விழுக்காடு மட்டுமே நன்னீராக உள்ளது. அதிலும் மூன்றிலொரு பங்கு பனிக் கட்டிகளாக உள்ளன. அதனாலேயே மண்ணில் வாழும் உயிர்களெல்லாம் மழையை நம்பி வாழ வேண்டியிருக்கிறது.

நம் தமிழர்கள் நீரின் இன்றியமையாமைக் கருதியே பல்வேறு நிலையில், தொழில்நுட்பகளைக் கொண்டு நீர் மேலாண்மையைக் கடைபிடித்து வந்தனர் என்பதைச் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை எடுத்துக் காட்டுகின்றன. அந்த வகையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான **நான்மணிக்கடிகையில்** பதிவாகியுள்ள நீர் மேலாண்மைச் சிந்தனையை இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

## வான்மழை

உலகத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் நீர் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. குறிப்பாக மனிதனின் அன்றாட வாழ்வில் நீரின் தேவை மிக அத்தியாவசமான ஒன்றாகும். நீரின் முக்கியத்துவத்தை அறிந்தே நம் முன்னோர்கள் நீரினைச் சேகரிக்க பல்வேறு நுட்பங்களை அறிந்து கையாண்டுள்ளனர். வறண்ட கோடைக் காலத்தில் மழையை வேண்டி தெய்வங்களுக்குச் சில விழாக்களையும் சடங்குகளையும் நம்பிக்கைகளின் அடிப்படையில் செய்து வந்துள்ளனர். நீரின் முக்கியத்துவத்தை அறிந்த வள்ளுவரே வான்சிறப்பு அதிகாரத்தில் **"நீர் இன்று அமையாது உலகு"**[2] என்று குறிப்பிட்டுள்ளார். மழைநீரைக் கொண்டே மண்ணுலகம் இயம்புகிறது என்பதை,

**“கோல்நோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப் பால்நோக்கி வாழுங் குழவிகள் - வானக் களிநோக்கி வாழும் உலகம் உலகின் விளிநோக்கி இன்புறுங் கூற்று"**

**(நாண்.29)**

என்று நான்மணிக்கடிகையும் குறிப்பிட்டுள்ளது.

**“குடிகள் அரசனது ஆட்சியால் உயிர் வாழும். குழந்தைகள் தாயினது முலைப்பாலால் உயிர்வாழும்; உயிர்கள் மழைத்துளியால் உயிர்வாழும், கூற்றுவன் உயிர்களின் சாக்காட்டை எதிர் நோக்கியிருப்பான்“[3].** உலகத்து வாழும் உயிர்கள் அனைத்தும் வானத்திலிருந்து விழும் மழைத்துளியை நோக்கியே உயிர் வாழும் என்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது.

கடல்நீரை முகந்துக் கொண்டு மேகம் மழையைப் பொழியும் என்பது அனைவரும் அறிந்ததே. இதனையே, **“கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி"[4]** என்று கார் நாற்பது குறிப்பிடுகிறது. அவ்வாறு மழைப்பொழியும் கார்காலத்தில், அந்த பருவத்திற்குரிய மலர்களும், மரங்களும் துளிர்விட்டு மலரும் என்பது சங்க இலக்கியங்களில் பல பாடல்களால் அறிய முடிகிறது. மேகம் முழங்கும் கார்காலத்தின் அடையாளத்தை வெளிப்படுத்த குருக்கத்தி மரத்தில் இலைகள் தளிர்விடுவதைப் பற்றி விளம்பிநாகனார் குறிப்பிட்டுள்ளார். இதைப் போன்று பருவத்திற்கேற்ப தாவரங்கள் அடையாளங்களாக இருப்பதை **”பருவத்தே பயிர் செய்"** என்ற பழமொழியும் குறிப்பிட்டுள்ளது. இதனை,

**"மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் மாலிருள்
நெய்யால் துளிர்க்கும் நிமிர்சுடர் - பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குடுகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல்”**

**(நாண்.38)**

என்று நான்மணிக்கடிகையும் வெளிப் படுத்துகிறது.

**“கண்கள் மையிடுதலால் விளங்கும், விளக்கு நெய்யாலெரியும்; குருக்கத்தி மழை முழக்கத்தால் இலை தளிர்க்கும்; அடுத்தாற்கு வழங்குதலால் ஆன்றோர் தளிர்ப்பர்”[5]**

மழையில்லாமல் இந்த உலகத்தில் வாழும் மக்களுக்கு எந்தவித நலமுமில்லை. மனிதன் உயிர்வாழ இன்றியமையாத ஒன்று நீராகும். மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிர்தம் போன்றது என வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"[6]**

மழையில்லாமல் மக்கள் நலமாக வாழ முடியாது என்பதை,

**‘மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலார் இல்வழி இல்லை தவமும்
அரச னிலாவழி இல்லை அரசனும்
இல்வாழ்வார் இல்வழி யில்"**

**(நாண்.49)**

என்று நான்மணிக்கடிகையும் குறிப்பிடுகிறது.

**“மழையில்லாவிட்டால் உலகத்து மக்கட்கு நலமில்லை; அம்மழையும் தவமுடையார் இல்லாதவிடத்தப் பெய்தவில்லை, அத்தவஞ் செய்தலும் முறையான அரசனில்லாத நாட்டில் நிகழ்தலில்லை; அவ்வரசனூங் குடிகளில்லாத இடத்தில் இருப்பதில்லை”7.**

எனவே மண்ணுயிர்கள் எல்லாம் இன்புற்று வாழ்வதற்கு அடிப்படையானது மழை என்பதையும், அதனைச் சரியாகச் சேமித்துப் பயன்படுத்த வேண்டியது நாட்டின் கடமை எனவும் நான்மணிக்கடிகைக் குறிப்பிட்டுள்ளது.

**உழவு**

உலகத்து மக்களுக்கு உணவு அளிக்கக் கூடிய உழவுத் தொழிலானது நீர் இல்லாமல் நடைபெறாது. நிலத்தைப் பண்படுத்தி உழுவது முதல், விதையை முளைக்க வைத்தல், பயிரிடுதல், அறுவடை செய்தல் என எல்லாப் படிநிலைகளிலும் நீரின் தேவை இன்றியமையாததாகும். மழை இல்லா விட்டால் உழவு செய்ய முடியாது என்பதை,

**“ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி விளங்குன்றிக் கால்”8**

என்று திருக்குறளும் குறிப்பிடுகிறது.

**“கைத்துடையான் காமுற்ற துண்படாகும் வித்தின்**
**முளைக்குழாம் நீருண்டேல் உண்டாந் திருக்குழாம்**
**ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும் மற்றவள் துன்புறுவாள் ஆகிக் கெடும்."**

**(நாண்.67)**

என்று நான்மணிக்கடிகையில் காணலாம்.

**“கைப்பொருள் உள்ளவன் விரும்பிய பொருள் கிடைக்கும்; நீர்ப்பாய்ச் சலுண்டானால் விதைகளில் முளைக்கூட்டம் தோன்றும்; விளக்கமுடைய திருமகள் அருள் செய்யின் பொருட்டிரன் பெருகும்: அத்திருமகள் அருவருப்பாளானால் உள்ள செல்வமும் அழியும்”.9**

எனவே நீர்வளம் நான்மணிக்கடிகையில் திருமகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப் பட்டருப் பதை அறிய முடிகிறது.

போதுமான நீர் இருந்தால்தான் பயிர்களின் வளர்ச்சியும் செழிப்பும் சரியானதாக இருக்கும். நீர் வளம் இல்லையெனில் பயிர்கள் செழிப்பாக வளராது. அதனால் விளைச்சலின் மகசூல் குறையும் என்பதை,

**”பொறி கெடும் நாணற்ற போழ்தே - நெறிப்பட்ட**
**இவரால் தானே வினைகெடும்- பொய்யா**
**நலம்கெரும் நீரற்ற பைங்கூழ் - நலமாறின்**
**நண்பினார் நண்பு கெடும்"**

**(நாண்.46)**

என்றும் நான்மணிக்கடிகையால் அறிய முடிகிறது.

ஒருவனுக்கு நாணமென்பது நீங்கின போதே செல்வம் அழியும், தன்வழிப்பட்ட ஐம்பொறிகளால் தீவினைகள் தாமாகவே ஒழியும். நீரைப்பெறாத பசும்பயிர்கள் பொய்க்காத விளைவின் நன்மை கெட்டொழியும், நண்பின் நலம் மாறினால் நண்பரின் நட்பியல்பு கெட்டுப்போகும்.10

**நீர் தேக்கல்**

மழை பொழியும் போது மழைநீரைக் கடலில் சென்று வீணாகாமல் தடுப்பதற்கு நம் தமிழர்கள் நீரினைத் தேக்கி வைத்துக்கொள்ள பல்வேறு முறைகளைக் கையாண்டனர். குளம் வெட்டுதல், ஆறு, ஏரி, கிணறு, வாய்க்கால், மடை போன்ற பல்வேறு கட்டமைப்புகளில் நீர் மேலாண்மையைச் செழிப்படையச் செய்தனர் என்பதை,

> **"போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த**
> **வேரின்றி வாடும் மரமெல்லாம் - நீர்பாய்**
> **மடையின்றி நீள்நெய்தல் வாடும் படையின்றி**
> **மன்னர்சீர் வாடி விடும்."**
>
> **(நாண்.44)**

எனும் பாடலால் அறிய முடிகிறது.

போர் வீரரின் பிறப்பு போரில்லாவிடின் குன்றும் எல்லா மரங்களும் நிலத்துள் இறங்கிய வேர் அறுந்துவிடின் பட்டுப் போகும், நீண்ட நெய்தல் மலர்கள் நீர்பாயும் மடையில் நீர் அற்றுவிட்டால் உலரும்; அரசரது செல்வம் படையில்லாவிடின் அழிந்து போகும்.[11]

நீரினைத் தேக்கி வைத்துக் கொண்டு தேவைப்படும்போது அவற்றைத் திறந்துப் பயன்படுத்திக் கொள்ளும் முறைக்கு "மடை" எனும் சொல்லை தமிழர்கள் பயன்படுத்தியதாக நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

**குளம் அமைத்தல்**

நீரானது குழிக்கப்பட்ட இடத்தில் நிற்கும் இயல்புடையது. சாலையோரம் உள்ள பள்ளங்களிலும், தேங்காய் சிரட்டைகளிலும் மழைநீர் நிற்பதை நீங்கள் காணலாம். இதனடிப்படையிலேயே மழைநீரையும், ஆற்று வெள்ளப்பெருக்கினால் வெளியேறும் நீரினையும் தேக்கி வைத்துக்கொள்ள நம் முன்னோர்கள் குளத்தை வெட்டி நீரைச் சேகரித்துள்ளனர். இவ்வாறு நீரின் இயல்பையும், குளத்தின் இயல்பையும்,

> **குழித்துழி நிற்பது நீர்த்தன்னைப் பல்லோர்**
> **பழித்துழி நிற்பது பாவம் - அழித்துச்**
> **செறிவுழி நிற்பது காமந் தனக்கொன்று**
> **உறுவுழி நிற்பது அறிவு."**
>
> **(நாண்.31)**

எனும் பாடலால் அறியலாம்.

தண்ணீர் குழிக்கப்பட்ட இடத்தில் நிற்கும் இயல்புடையது. சான்றோர் பலரும் தன்னைப் பழித்தவிடத்தில் தீவினையென்பது நிற்குமியல்புடையது. தவ நெறியைக் கெடுத்துத் தீயநெறியில் வயப்பட்ட இடத்துக் காமவியல்பு நிற்பதாகும். அறிஞனொருவனுக்கு ஓரிடர் உண்டான காலத்தில் அவனது கல்வியறிவு துணையாய் நிற்குமியல்புடையது[12] என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**மதகு அல்லது நீர்க்குமிழித் தூம்பு**

குமிழித் தூம்பு என்பது ஏரிகளில் தேக்கிவைக்கும் நீரை பாசனத்திற்காகத்

திறக்க அறிவியல் பூர்வமாக அமைத்த ஓர் அமைப்பு ஆகும். இது தேவையான அளவு மட்டும் தண்ணீரை வெளியேற்ற உதவும். எனவே நீர் மேலாண்மையிலும், பாசன நீர் நிர்வாகத்திலும் நம் தமிழர்கள் சிறந்து விளங்கினர் என்பதை அறியலாம். இதனை,

**"உளர்ந்தான் வகைய கலினமா – தேர்ந்தொருவன்**
**ஆற்றல் வகைய வறஞ்செய்கை தொட்ட**
**குளத்தனைய தூம்பின் அகலங்கள் தத்தம்**
**வளத்தனைய வாழ்வார் வழக்கு"**

**(நாண்.73)**

கடிவாளம் பூண்ட குதிரைகள் அவற்றை ஏறிச் செலுத்துவானது திறத்துக் கொத்தன. அறச்செயல்கள் இசைந்த ஒருவனது ஆற்றலைப் பொறுத்தன. நீர்க்காலின் பரப்புக்கள் தோண்டப்பட்ட குளங்களின் அளவின. இல்வாழ்வாருடைய வாழ்க்கைச் செய்கைகள் அவரவரது வருவாய்ச் செழுமையை ஒத்தன.[13] என்றும் பாடல் மேலும் இதனை உறுதி செய்கிறது.

## வறட்சியைப் போக்கல்

நீரின்றி இவ்வுலகம் இயங்காது என்ற நீரின் முக்கியத்துவத்தை அறிந்த நம் தமிழர்கள் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர். நீரில்லாவிட்டால் வரும் துன்பத்தை ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை அனைத்துமே அறியும் என்பதை,

**'நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்**
**குலனுங் குடிமையுங் கல்லாமை கீழ்ச்சாம்**
**வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாம்**
**பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு"**

**(நாண்.83)**

எனும் பாடல் உணர்த்துகிறது.

அழகும் இளைமையியல்பும் வறுமைக்கண் மங்கும். குலத்துயர்வும் குலத் தொழுக்கமும் கல்லாமைக்கண் கெடும். நீர் வருவாயில்லாத ஏரியின் கீழ் விளையும் நெற்பயிர் சாகும். சுமத்தலாற்றாத சுமைப்பொருளின் கீழ்த்தாங்கும் எருதுகள் சாகும் என குறிப்பிடுகிறார்.[14]

## முடிவுரை

"நீர் இன்றி அமையாது உலகு" என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் கூறியுள்ளார். நீரின் முக்கியத்துவத்தை அறிந்தே நம் முன்னோர்கள் எவ்வாறெல்லாம் நீரைச் சேகரிக்கலாம் என்ற நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நம் முன்னோர்கள் ஆற்றுநீர், ஊற்று நீர், மழைநீர், சுனை நீர், அருவி நீர், குளத்து நீர், கிணற்று நீர் என எல்லாவற்றையும் தயங்காமல் கையில் முகந்துக் குடித்தனர். ஆனால் இன்றைய நிலையில் நாம் **அக்யூவா, பிஸ்லெரி, பியூரீபை வாட்டர்** என்று

நிறுவனங்களின் பெயரைக்கொண்டு நீரை அருந்திக் கொண்டிருக்கிறோம்.

ஏரிகளையும், ஆறுகளையும் தூர் வாராமல் பிளாட் போட்டு விற்று வீடு கட்டி குடியமர்ந்து வெள்ளம் போர் வருமானால் தண்ணீர் பஞ்சத்திற்காகவே வரும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்றவாறு வறட்சி நிலவாமல் இருப்பதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அற இலக்கியங்களில் ஒன்றான நான்மணிக்கடிகை நீர் மேலாண்மைச் சிந்தனையை இந்தத் தமிழுலகத்திற்கு இட்டுச் சென்றிருப்பதை நாம் நன்றியுணர்வோடு நினைக்க வேண்டியிருக்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை குறள். 16, ப.5
2. மேலது. குறள்.20, ப.5
3. கௌமாரீஸ்வரி (பதி), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2018, ப.240
4. மேலது. கார் நாற்பது, 33, ப.5
5. கௌமாரீஸ்வரி (பதி), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், பாடல் 38, ப.240
6. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, ப.5
7. கௌமாரீஸ்வரி (பதி), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், பா.49 ப.254
8. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, குறள் 14, ப.5
9. கௌமாரீஸ்வரி (பதி), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், பா.67, ப.266.
10. மேலது.பா.46, ப.252
11. மேலது.பா.44, ப.251
12. மேலது.பா.31, ப.243
13. மேலது. பா.73, ப.270
14. கௌமாரீஸ்வரி (பதி), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், பா.83, ப.276.

# தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை

**செ. தர்மசீலன்**

முனைவர் பட்ட ஆய்வாளர்

ஜெயராஜ் அன்னபாக்கியம் சி.எஸ்.ஐ

கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லூர், தென்காசி

## முன்னுரை

உலகம் செழிக்க அடிப்படையாக விளங்குவது நீராகும். மனிதர்கள் உணவு உண்ணாமல் கூட இருந்திட இயலும் நீரினைப் பருகாமல் இருப்பது என்பது எளிதான செயல் அல்ல. உலகம் உய்யவும் உயிர்கள் வாழவும் மிக மிக அவசியம் நல்ல நீர். பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஆறு, ஏரி, குளம், வாய்க்கால் போன்ற நீர் நிலைகளில் கைகளாலேயே நீரினை அள்ளிக் குடிக்கக்கூடிய நிலை அப்பகுதி மக்களிடையே இருந்து வந்தது. இன்று அப்படியல்ல. பாட்டில்களில் அடைக்கப் பட்ட தூய்மைப்படுத்தப்பட்ட நீரினைப் பாலின் விலையை விடக் கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நம் முன்னோர்கள் மிகவும் போற்றி பாதுகாக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு வந்த நீரை நாம் மதிக்கதவறியதால் ஏற்பட்ட விளைவு தான் இன்றைய நிலை.

> **“விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
> **பசும்புல் தலைகாண்பு அரிது”**
>
> **(குறள் -16)**

என்கிறார் திருவள்ளுவர்.

## நீரை சேமிப்பது கடமை

வான் பொழியும் நீரே உயிர்ப்பு என்பதற்கு அடிப்படையாய் அமைகிறது. அத்தகைய நீராதாரத்தை மக்கள் தொன்றுதொட்டு உயிரினும் மேலானதாக போற்றி உள்ளனர். நீரை சேமித்தும் சேமித்த நீரைத் திறம்பட பயன்படுத்துவதன் மூலமே தமிழரின் வேளாண்மை பெரிதும் நடைபெற்றது. இந்த மழை நீரினை ஏரிகள், குளங்களில் சேமித்து வைப்பது பற்றி இளங்கோவடிகள் தம் படைப்பான சிலப்பதிகாரத்தில் மிக அழகாக குறிப்பிடுகின்றார்.

> **“இடிஉடைப் பெருமழை எய்தா ஏகப்**
> **பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப**
> **மழைபிணித்து ஆண்ட மன்னவன்”**
>
> **(காடுகான் காதை. 27- 29)**

இப்பாடல் அடியில் மழை பிணித்து ஆண்ட மன்னவன் என்பதன் பொருள் முறையாகப் பெய்யும் மழை நீரினை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றைத் தக்கமுறையில் பயன்படுத்தி நாட்டை வளம் பெறச் செய்யும் மன்னன் இவன் என்பதாகும்.

இதே போல மழை நீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாயக் கடமை என்று புறநானூற்றுப் பாடலில் புலவர் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனை பார்த்து பாடுகின்றார்.

**நிலன் நெறிமருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோரம்ம இவண்தட் டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே**

**(18: 28 - 30)**

இதன் பொருள் நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நீர் நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாத புகழ்பெற்று விளங்குவர் என்பதாகும்.

மேலும் இனியவை நாற்பது, திரிகடுகம், பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களில் குளம் வெட்டுவித்தல் என்பது மிக பெரும் அறச்செயல் என்று போற்றப்படுகின்றது.

**'காவோடு அரக்குளம் தொட்டல் மிக இனிதே'**

என்ற வரி இனியவை நாற்பது சுட்டுவதாகும்.

## நீர்நிலைகள்

மழை பொழிவினை தேக்கி வைத்து பயன்படுத்த ஏரிகள் குளங்கள் வெட்டி வைக்க வேண்டும் என்று கூறும் தமிழ் நூல்கள் அவற்றோடு நில்லாமல் அவைகள் எந்த வடிவில் அமைந்தால் நல்லது என்ற அறிவியல் உண்மையினை புறநானூற்றுப் பாடலில் கபிலர் எடுத்து இயம்புகிறார்.

**“அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ”**

**(118: 1 - 3)**

ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்று பாடுகின்றார். ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிக நீர் கொள்ளளவு கொண்டதுமான பிறை வடிவில் ஏரி அமைப்பு இருக்கும். இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும். இன்றும் இத்தகு வடிவமைப்புடன் திகழும் ஏரிகளைக் காணலாம். திங்கள் போன்றே இருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

இதுபோல சிறுபஞ்சமூலத்தில் குளம் அமைக்கும் முறை பற்றி காரியாசான் கூறுகின்றார். அதில் பொதுகிணறு அமைத்தல், வரத்துக்கால், மதகுகள், மிகை நீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவைகள் அமைப்பவர் சொர்க்கத்துக்கு போவார் என்று குறிப்பிடுகின்றது.

## நீர் நிலைகளைப் பாதுகாத்தல்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திரிகடுகத்தில் நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியினை,

**“வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்**
**தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்**

கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்" (84)

என்று தாய்ப்பால் அருந்தாத குழந்தையும் கல்வியற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ அதுபோல தண்ணீர் புகும் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

## நீரை சேமித்தல்

மிகுதியாக வரும் ஆற்று நீரை அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டிற்கு சிறப்பு தரும் என்பதை,

"யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்"

என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகின்றது. இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர் நீர் மேலாண்மை திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும். பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரினை உரிய முறையில் சேமித்து நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக்கூடிய நிகழ்வை இச்சொற்றொடர் எடுத்துக் காட்டுகின்றது. ஆற்றின் மிகுதி நீரை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய பேரேரிகள் உரிய ஆழ அகலத்துடன் இருக்குமாயின் வெள்ளக்காலங்களில் வரும் அதிகப்படியான நீர் வீணாகக் கடலில் கலக்காமல் முழுவதையும் சேமித்து பயன் கொள்ள முடியும். இத்தகைய கண்மாய்களையும், குளங்களையும் காத்து நின்ற அதாவது முறையாக பராமரித்த செய்தியினை, பெருங்குள காவலன் போல

அருங்கடி அன்னையும் துயில் மறந்தனவே
(அகம்.252:13-14)

நக்கண்ணையார் பாடிய அகநானூற்றில் அறியலாம். அதாவது பனியிலும் மழையிலும் அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியை காக்கும் காவலன் போல குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருளாகும். சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணினை இமைக் காப்பது போல காத்த செயலும் நீர் நிலைகளை காக்கும் செயலும் ஒன்றாகவே கருதப்பட்டது.

## கலிங்கு

பழம் தமிழ் நூல்களில் இத்தகு நீர் நிலைகளில் இருந்து மிகுநீரை வெளியேற்ற கலிங்கு எந்த அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஏரியின் முழு கொள்ளளவு நீர்மட்டத்தைக் கணக்கிட்டு இயற்கையாகவே பள்ளமாக உள்ள கரையின் ஒரு பகுதியில் அந்த உயர அளவில் ஒரு சிறு வடிகால் அமைப்பை ஏற்படுத்தி

அதன் மூலம் மிகும் நீரை வெளியேற்றி வந்தனர். இந்நீர் வெளியேற ஒரு கால்வாய் ஏற்படுத்தி அடுத்த ஏரியிலோ அல்லது ஆற்றிலோ கலந்து விடும்படி செய்திருந்தனர். இதனால் நீர் வீணாவது தடுக்கப்படுவதோடு எவ்வளவு வெள்ளம் வந்தாலும் ஏரியின் கொள்ளளவை தாண்டிய நீர் இக்கலுங்கு வழியே வெளியேற்றப் படுவதால் ஏரியின் கரை உடைப்பதும் தடுக்கப்பட்டது. இத்தகு தொழில்நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. மேலும் ஏரிக்கரையின் உயரம் அகலம் ஆகியவை எவ்வளவு இருக்க வேண்டும் கரைக்கு வெளியே குறிப்பிட்ட தூரம் வரை உள்ள நிலத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. கரையில் மரங்களை நட்டு பராமரித்தல், மரங்களை வெட்டுதல் கூடாது. போன்ற பல மேலாண்மை தொடர்பான செயல்களையும் ஏரிகளைப் பராமரிக்க ஒரு தனி நிர்வாக அமைப்பாக ஏரி வாரியம் அமைக்கப்பட்டிருந்த செய்திகளையும் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது. தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான எண்ணற்ற பேரேரிகள் இருந்தன அவற்றை பராமரிக்க குளப்பட்டி என்ற பெயரால் நிலம் அமைத்து அதன் வருவாயிலிருந்து ஏரிகளைக் காக்க வகை செய்தனர்.

**சுருங்கை**

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் அறவணர் தொழுத காதையில் புத்ததேவன் தோற்றம் பற்றிக் கூறிவரும் கூலவாணிகன் சாத்தனார்,

> **"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி**
> **இரும்பெரு நீத்தம் புகுவது போல**
> **அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்**
> **உளமலி உவகையோடு உயிர்கொளப் புகூம்"**
> (79:82)

என்கிறார்.

சுருங்கை என்பது பூமிக்கு அடியில் செல்லும் சிறிய குழாய் அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன் தரும். அதுபோல செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துக்கள் உள்ளத்தைச் சென்றடையும் என்பதே இதன் பொருளாகும்.

## குமிழித்தூம்பு

பல நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் ஏரிகளிலும், குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. இந்த மதகு அமைப்பே குமிழித்தூம்பு என்பதாகும்.

பழந்தமிழர்களின் நீர் மேலாண்மைச் செயல்பாட்டில் இந்த குமிழித்தூம்பு அறிவியல் சார்ந்த மிக நுட்பமான நேர்த்தியான பயன் பாட்டுடைய படைப்பாகும். நீர் வெளியேறுவதற்கான துளையும் பக்கவாட்டில் வண்டல் சேறு வெளியேறுவதற்கு சேறோடித்துறை என்ற மூன்று சிறிய துளைகளையும் அமைப்பர். கல்பெட்டியின் இருமருங்கும் ஏரியில் சேர்க்கப்படும் அதிகப்படியான நீரின் கொள்ளளவு உயரத்தை விட சற்று உயரமான அளவில் கருங்கல் தூண்களை நிறுத்துவர். இருவர் குறுக்கு விட்ட கற்களை தூண்களுடன் இணைப்பர். நீரோடு துளைக்கு நேராக இரு குறுக்கு விட்ட கற்களில் துளையிடுவர் நீண்ட கம்பி அல்லது மரக்கழியினை துளை வழியே செலுத்தி அதன் அடிமுனையில் கல்பெட்டியின் மதகு வாயில் (துளையில்) சரியாக பொருந்தும் அளவுக்குரிய அடைப்புகள் ஒன்றிணைத்து இணைப்பர். கம்பி அல்லது மரக் கழியினை மேலிருந்து இயக்குவதன் மூலம் நீர் செல்லும் தூம்பு துளையினை மூடுவதும் திறப்பதும் இயலும். கல்பெட்டி மற்றும் தூண் அமைப்புகளை குமிழி என்றும், இவைகளுக்குக் கீழாக செல்லும் நீர் வெளியேறும் வழியினை சுருங்கை தூம்பு என்றும் குறிப்பிடுவர். இந்த மதகு அமைப்பில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாக வழங்குவது சேறோடித் துளைகளே ஆகும்.

பெருவெள்ளப்பெருக்குகளால் ஏரியை வந்தடையும் நீரில் வண்டல் இருப்பதால் ஆண்டுதோறும் ஏரியின் தரைமட்ட பகுதியில் வண்டல் அதிகமாகிக்கொண்டே இருக்கும். அவற்றை வெளியேற்றாமல் விட்டுவிட்டால் சில ஆண்டுகளில் ஏரி தூர் படிந்து மேடிட்டு விடும். ஆண்டு தோறும் நீர் முழுவதையும் வெளியேற்றிவிட்டு தூர்வார்தல் என்பது இயலாத ஒன்று. மேலும் தூர் வார்வதற்கு செலவும் அதிகமாகும். இவ்வாறு இல்லாமல் அவ்வப்போது ஏரியின் தரைமட்டத்தில் சேகரமாகும் வண்டலை நீரோடு கலக்கி வெளியேற்றிவிட்டால் வண்டல் படிந்து மேடாகாது. இதற்கென தனி கருவிகள் ஏதும் தேவையில்லை. இதனை செய்வது குமிழித்தூம்பின் வேலை ஆகும். நீர்ப்பாசனத்திற்காக குமிழியின் அடைப்புக்கள் திறக்கப்படும் போது நீர் மிக வேகமாக சுழித்துக் கொண்டு கல்பெட்டி வழியே நீர் தூம்புக்குள் செல்லும் அதே நேரத்தில் நீர் சுழல் மூலம் கலக்கப்படும் நீரில் வண்டல் கரைந்து சேறாகி வெளியேற்றப்படும். நீரின் வேகத்தால் சேறோடித்துளை மூலம் தரைமட்டத்தில் கட்டப்பட்டு படிந்திருக்கும் சகதி உள்ளே இழுக்கப்பட்டு பாசன

நீரோடு கலந்து சென்று விடும். இதனால் 90 விழுக்காடு நல்ல நீரோடு பத்து விழுக்காடு சேறும் கலந்து வெளியேறுவதால் ஏரியின் தரைமட்டத்தில் வண்டலும் படியாது. அதே நேரத்தில் பாசன நீரில் வண்டல் கலப்பதால் வயல்களுக்கு நல்ல உரமாகி பயிர்களுக்கு பயன்படும். இத்தகைய மேலைநாட்டவர் அமைத்த திருகு தொழில்நுட்ப உத்தி பெரும்பாலான ஏரிகள் காலப்போக்கில் மேடிட்டு அழிந்தன. மேலும் அத்தகைய மதகுகளின் உதவியால் ஏரியின் முழு கொள்ளளவு நீரையும் சேமிக்க இயலாது.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நீர் மேலாண்மைச் செய்திகள் ஏதோ கற்பனையான ஒன்று என்று யாரும் எண்ணிட முடியாது. அதில் கூறப்படும் செய்திகள் அறிவியல் சார்ந்தவையாக இருப்பதை கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு உறுதி செய்ய முடிகின்றது. இதன் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளும்போது இன்றளவும் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் பழைய எச்சங்களுடன் சில அணைகள், ஆறுகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவற்றை காண முடிவது வியப்பிற்குரிய ஒன்றாகும். கவிஞர் ஒருவர் இவ்வாறு பாடியுள்ளார்,

**என் தாத்தா ஆறு குளங்களில்**
**தண்ணீரைப் பார்த்தார்...**
**என் தந்தை கிணறுகளில்**
**தண்ணீரைப் பார்த்தார்...**
**நான் பிளாஸ்டிக் பாட்டில்களில்**
**தண்ணீரைப் பார்க்கிறேன் ...**
**என் குழந்தைகள் ?**

என்று கேள்விக்குறியுடன் கவிதையினை முடித்துள்ளார்.

இத்தகைய நிலை நம் எதிர்கால தலைமுறையினருக்கு ஏற்படாத வகையில் பழைய தொழில்நுட்பங்களுடன் புதிய வைகளையும் இணைத்து நீரை சேமித்து நீர்நிலைகளைக் காப்போம்.

## பார்வை நூல்கள்


1. திருக்குறள்
2. சிலப்பதிகாரம்
3. புறநானூறு
4. திரிகடுகம்
5. நான்மணிக்கடிகை
6. அகநானூறு
7. மணிமேகலை

Vol. 8 Special Issue 1 July 2024 E-ISSN: 2456-5571

# அகநானூற்றில் காட்டு வளம்

**நெறியாளர் முனைவர் ம. செந்தில்குமார்**
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

**ஆய்வாளர் சி.விஜயன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் சங்க கால மக்களின் வாழ்வியலை உள்ளடக்கியுள்ளன. சங்கப் பாடல்களைப் படிக்கும்போது பெரும்பான்மையும் இயற்கை சார்ந்த தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றிலும், காடுகள், தாவரங்கள் முதலான பல்லுயிரிய வளமைக்குச் சான்றான பாடல்கள் அதிகம் உள்ளன. இவற்றுள் இடம்பெறும் காடுகள் பற்றிய பாடல்கள் வர்ணனைக்காக மட்டும் பயன்படுத்தப் பட்டவையென கூற இயலாது. இவை சங்கப் புலவர்களால் உற்றுநோக்கப்பட்டு அவற்றுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர்களின் பதிவுகளாகவே உள்ளன. பெரும் சூழல் அழிவை காடுகளும் நிலப்பரப்பும் சந்தித்து வரும் இன்றையக் காலக்கட்டத்தில் சங்க காலத்து காடுகள் குறித்த தகவல்களை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## காடுகள் உருவாக்கமும் அழிவும்

காடுகள் இயற்கையாக உருவாகக் கூடியவை. இயற்கையாக உருவாகிய காடுகள் குறித்த வர்ணனைகள் சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன. அவை மட்டுமல்லாமல், கோடை வெப்பத்தால் வறண்டு அழியும் காடுகள் மழையின் காரணமாக மீண்டும் தோற்றம் பெற்றுள்ளதையும் அவற்றின் வழி அறிய முடிகிறது. சூரியனின் வெப்பத்தால் பசுமை இழந்து, வளமானது குன்றி, காய்ந்து, அழகு கெட்டு, எங்கும் வெடித்துக்கிடக்கும் நிலப்பரப்பானது, திடீரென பெய்த மழையின் வருகையால் அழகடைந்த நிகழ்வை,

> **“காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்**
> **பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுடன்**
> **நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற**
> **வெறியேன் றன்றே வீகமழ் கானம்”**

**(அகம்.மணிமிடை.164:4-7)**

என்ற பாடல் விளக்குகிறது. கடும் வெயில், காட்டுத்தீ, காட்டாற்று வெள்ளம், காட்டு விலங்குகள் முதலானவற்றால் காடுகள் ஏராளமான அழிவைக் கண்டுள்ளன. தழைத்த மூங்கில் ஒன்றோடொன்று உரசி தேய்த்ததால் அம்மூங்கிலால் உருவான தீயானது காற்றின் மூலம் காடு முழுவதும் பரவியதை,

> "ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி
> யொண்பொறி
> படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
> முளிபுல் மீமிசை வளிசுழற் றுறாஅக்
> காடுகவர் பெருந்தீ யோடுவயின் ஓடலின்"
> (அகம். களிற்றி. 39:6-9)

எனும் பாடலால் அறியலாம். இவ்வாறு, காடுகளின் உருவாக்கம் மற்றும் அழிவு சார்ந்த பதிவுகள் அகநானூற்றில் பதிவிடப்பட்டுள்ளன.

## காடுகளும் தாவரங்களும்

சங்க இலக்கியங்கள் காடுகளைக் குறிப்பிட கானகம், புறவு, மிளை, அரண், இறும்பு, சுரம், பாலை, முளி, கடிகா, பறந்தலை, வன்புலம், புன்புலம், கயறு, விளை, கா, கான், அடவி, வனம், அரணம், மு, பொதி, அரில் முதலான பல பெயர்களை வழங்கியுள்ளன. பல்வேறு உயிரினங்களுக்குப் புகலிடமாக காடு உள்ளது என்பதை,

> "முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
> பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
> இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
> பரலவல் அடைய இரலை தெறிப்ப
> மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
> கருவி வானம் கதழுறை சிதறிக்
> கார்செய் தன்றே கவின்பெறு கானம்"
> (அகம்.களிற்றி. 4:1-7)

எனும் பாடல் கூறுகிறது. பல்லுயிரிய சூழலமைந்ததாகக் காடு இருந்தாலும், தாவரங்களின் பங்கு காட்டு வளத்திற்கு அடித்தளமாக உள்ளது. அகநானூற்றில் தாவரங்கள் பற்றிய சில தகவல்கள் காணக் கிடைக்கின்றன.

காலமாற்றத்திற்கேற்ப இயற்கையிலும் சிலமாற்றங்கள் ஏற்படும். கால சுழற்றியில் ஒவ்வொரு காலத்திலும் பல வகையான தாவரங்கள் துளிர்விட்டு வளர்கின்றன. அகநானூற்றுப் பாடலில் உடன்போக்கில் தலைவன் தலைவியை கூட்டிச்சென்ற பாதையைக் குறித்து பேசும்போது கோடைக்காலத்தில் உயரமாக வளர்ந்திருக்கும் மூங்கில்களின் நெல் விளைவது கூறப்படுகிறது. இதனை,

> "சேணுயர்ந் தோங்கிய வானுயர்
> நெடுங்கோட்டுக்
> கோடை வெவ்வளிக் குலமரும்
> புல்லிலை வெதிர நெல்விளை காடே"
> (அகம்.நித்திலம். 397:15-17)

எனும் பாடல் வழி அறிய முடிகிறது.

"பராரை நெல்லி அம்புளித் திரள்காய்
கான மடவரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னா தேமுற்று"

(அகம்.களிற்றி. 69:7-9)

என்ற பாடல் வரிகள் சிறிய இலைகளையும், பருத்த அடி மரத்தையும் கொண்ட புளிக்கும் சுவையையுடைய நெல்லிக்காய்கள் கோடைக்காலத்தில் இருந்ததை தெளிவுபடுத்துகின்றன.

முன்பனிகாலத்தில் பூத்த அவரைப் பூ கால மாற்றத்தால் உதிர, அதே நேரத்தில் வளைந்த துளையினையுடைய பவளத்தைப் போன்ற பூக்கள் ஈங்கை மரத்தில் பூக்கின்றது. ஈங்கை மரத்தின் பூக்களின் நிறம், வடிவம் ஆகியவற்றை,

"அவரை ஆய்மலர் உதிரத் துவரின
வாங்குதுளைத் துகிரின் ஈங்கை பூப்ப
இறங்குபோ தவிழ்ந்த ஈர்ம்புதல் பகன்றை"

(அகம்.மணிமிடை. 243:1-3)

எனும் பாடல் வரிகள் மூலம் காண முடிகிறது.

தாவரங்களின் முக்கியமான செயல்பாடுகளில் ஒன்று மகரந்தச் சேர்க்கை. அந்த மகரந்தச் சேர்க்கைக் குறித்த செய்தியானது அகநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது. முருக்கம் பூவின் தாதையும், மாந்தளிர்களையும் உண்கின்றது குயில். குயிலின் அலகில் இருக்கும் மகரந்தம் பிறிதொரு பூவில் ஒட்டுவதன் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவது,

"பாசரும்பு ஈன்ற செம்முகை முருக்கினப்
போதவிழ் அலரி கொழுதித் தாதருந்து
அந்தளிர் மாஅத்து அலங்கன் மீமிசைச்
செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்"

(அகம்.மணிமிடை. 229:17-19)

எனும் பாடல் வரிகள் மூலம் நமக்கு புலப்படுகிறது. நீரின்றி வறட்சியான காலங்களில் யானையானது மரத்தின் பட்டையை உரித்து அதிலிருந்து வெளியேரிய நீரைப் பருகிய செய்தியை,

"மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக்
களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்"

(அகம்.மணிமிடை. 257:14-16)

எனும் பாடல் வரிகளின் மூலம் காணலாம்.

## அகநானூற்றில் காட்டின் நிலைப்பாடு

அகநானூற்றில் காடு என்ற சொல் 26 இடங்களில் கையாளப்பட்டுள்ளது. இதனை திணை வாரியாகப் பகுக்கும்போது, பாலைத்திணையில் 20 இடங்களிலும், முல்லைத்திணையில் 4 இடங்களிலும், குறிஞ்சித்திணையில் 2 இடங்களிலும் பதிவாகியுள்ளது. பொதுவாக, முல்லை நிலத்திற்குரிய 'காடு' எனும் பகுதி அகநானூற்றில் பாலை மற்றும் குறிஞ்சியிலும் குறிப்பிடப்பட்டுள்ளதை

காண முடிகிறது. முல்லைத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள காட்டினை 'கவின் காடு' என்று குறிப்பது வழக்கமாயுள்ளது. இதனை,

**"காடு கவின் பெற்ற தண்பதப் பெருவழி"**

**(அகம்.மணிமிடை. 154:10)**

**"காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்"**

**(அகம்.மணிமிடை. 164:4)**

என்பதால் அறியலாம். காட்டின் தோற்றம் குறித்த முழுமையான பதிவையும் இங்கு காணமுடிகிறது (அகம்.நித்திலம். 364). குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெறும் காடு விலங்குகள் வேட்டையாடும் காட்டின் தோற்றத்தையும், முருகன் உறையும் காடு என்பதாயும் அமைகிறது.

தலைவியும் தோழியும் உரையாடும் இடங்களில் தலைவனைக் குறிப்பிட 'காடு இறந்தோரே' எனும் குறிப்பு இடம் பெற்றுள்ளது. இதனை,

**"கடல்போல் தோன்றல காடிறந் தோரே"**

**(அகம்.களிற்றி. 1:19)**

**"கன் மிசை அருவிய காடிறந் தோரே"**

**(அகம்.களிற்றி. 25:22)**

**"திரிமருப்பு இரலைய காடிறந் தோரே"**

**(அகம்.மணிமிடை. 133:18)**

**"காடிறந் தனரே காதலர் அடுபோர்"**

**(அகம்.மணிமிடை. 135:10)**

**"கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே"**

**(அகம்.மணிமிடை. 151:15)**

**"காடிறந் தகன்றோர் நீடின ராயினும்"**

**(அகம்.மணிமிடை. 177:12)**

**"பெருங்கா டிறந்தன ராயினும் யாழநின்"**

**(அகம்.நித்திலம். 357:10)**

**"கோடுகாய் கடற்ற காடிறந் தோரே"**

**(அகம்.நித்திலம். 395:15)**

ஆகிய பாடல்களால் அறிய முடிகிறது. இக்கூற்றை தலைவி தோழியிடம் கூறும் காட்சியையும், தோழி தலைவியிடம் கூறும் காட்சியையும் காணலாம். காட்டு வழிப் பாதையின் நிகழ்வுகளை முன்னரே அறிந்த இவர்கள் அவ்வழியில் சென்ற தலைவனின் நிலையை எண்ணி வருந்துகின்றனர். இப்பாடல்கள் பாலைத் திணையில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. பாலை நிலத்தின் வெம்மை, வறட்சியினை இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

காடுகளில் செடிகள், கொடிகள், மரங்களுடன் விலங்குகள் பறவைகளும் வாழ்கின்றன. நீர் வற்றிய வாகையின் முதிர்ந்த நெற்றுகளைக் கொண்ட கொத்துகள் பறையைப் போல ஒலிக்க, கோடைத் தன்மை மிக்க பெரிய குன்றினிடம், நீரில்லாத அரிய சுரநெறியில் ஓங்கிய களிற்றைக் கொன்று புலி திரிந்துக் கொண்டிருக்கும் காட்டை அகநானூறு,

**"டாளில் அத்தத் துழுவை உகளும்**
**காடிறந் தனரே காதலர் மாமை"**

**(அகம்.களிற்றி. 45:5-6)**

என்று கூறுகிறது. மேலும், மிளை நாட்டின் பாலை வழியில் வரி களையுடைய மரலைக் கடித்து உண்ணும், மடப்பமுடைய பெண்மானுடன் கூடிய முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண் மான்களையுடைய காடு,

**“மிளைநாட்டு அத்தத்து ஈர்ஞ்சுவல் கலித்த**
**வரிமரல் கறிக்கும் மடப்பிணைத்**
**திரிமருப்பு இரலைய காடிறந் தோரே”**

**(அகம்.களிற்றி. 133:16-18)**

என்ற பாடலால் அறிய முடிகிறது. ‘காடு’ எனும் சொல் மிகுந்த வெப்பத்தையுடைய பாலைவெளியைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**“களிறுபுறம் உரிஞ்சிய கருங்கால் இலவத்து**
**அரலை வெண்காழ் ஆலியில் தாஅம்**
**காடுமிக நெடிய என்னார் கோடியர்”**

**(அகம்.நித்திலம். 309:7-9)**

எனும் பாடலில் இலவ மரத்தின் விதைகள் ஆலங்கட்டி போல கொட்டிக்கிடக்கும் பாலைவெளி என்று காடு குறிப்பிடப் பட்டுள்ளது.

தலைவன் கடந்து சென்ற காட்டின் பாதையைக் குறிப்பிடும் இடங்களில் அக்காலத்திய காட்டின் காட்சி கண்முன்னர் கொண்டு வரப்படுகிறது. காட்டில் சோதிடம் கூறும் வாயையுடைய பல்லிகள் இருந்துள்ள காட்சியை,

**“உறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்**
**மணியோர்த் தன்ன தெண்குரல்**
**கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே”**

**(அகம்.மணிமிடை. 151:13-15)**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.

**முடிவுரை**

அகம் சார்ந்த செய்திகளை எடுத்துரைக்கும் அகநானூறு நூலின் வழி சங்க காலத்தின் காட்டு வளம் சார்ந்த தகவல்களை அறிய முடிந்தது. இயற்கையாகவே, காடுகள் அழிக்கப்பட்டதும் மீண்டும் அவை உருவாக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. காடுகளின் பல்லுயிர்த் தன்மைக்கு சான்றாக பல பாடல்கள் கிடைத்துள்ளன. காட்டின் நிலைப்பாடு குறித்தும் இந்த கட்டுரை மூலம் அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. திரு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை, அகநானூறு களிற்றியானை நிரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 522, டி.டி.கே.சாலை, சென்னை – 18. 2009.
2. திரு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை, அகநானூறு மணிமிடை பவளம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 522, டி.டி.கே.சாலை, சென்னை – 18. 2007.
3. திரு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம்

பிள்ளை, அகநானூறு நித்திலக்கேவை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 522, டி.டி.கே.சாலை, சென்னை – 18. 2008.

4. பெ. மாதையன், சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 613 010. 2007.

# திருக்குறளில் குன்றி மணி மரமும் பனை மரமும்

**தா. சலீலா**

ஆய்வாளர், தமிழ்த்துறை

நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்

## ஆய்வுச் சுருக்கம்

உலகம் உய்வதற்கு ஏற்ற வழிகளைக்காட்டியவர்கள் பலர் தாம் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளையே அவர்கள் மற்றவர்களுக்கு கூறினர். அவ்வாறு வாழ்ந்து காட்டி அதனை மற்றவர்களுக்கு எடுத்துரைத்தவர்களுள் முதன்மையானவராகத் திகழ்பவர் திருவள்ளுவர் ஆவார். வாழ்வில் தாம் சந்தித்த பலதரப்பட்ட மனிதர்களை அவர் தனது குறட்பாக்களின் வழி நமக்கும் அடையாளம் காட்டுகின்றார் அவர் காட்டுகின்ற மனிதர்கள் உலகில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் வள்ளுவர் காட்டும் மனிதர்களும் மரம் போன்ற மனிதர்கள். குன்றுமணி பனை ஆகிய இரண்டு மரங்களை குறித்த கருத்துக்கள் இவற்றியில் காண முடிகிறது.

## முன்னுரை

மனிதனுக்கு மிகவும் முக்கியமானது நிலம் நீர் காற்று தீ விசும்பு ஆகியவை ஒரு மனிதன் உயிர் வாழ காற்று மிக அவசியம் காற்று கிடைக்கப் பெற வேண்டும் என்றால் மரங்கள் மிகவும் கட்டாயம் அப்படிப்பட்ட மரங்களை நாம் வெட்டி சேதப்படுத்தாமல் மரங்களை பேணி காப்போம் திருக்குறளில் கூறப்படும் குன்றுமணி பனை ஆகிய மரங்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டன என்று இவ்கட்டுரையில் காண்போம்.

## குன்றிமணி மரம்

தமிழகத்தில் குன்றிமணி மரங்கள் அழிந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் தமிழகத்தின் தொன்மையான மரங்களில் ஒன்று குன்றிமணி

> **“புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங் குன்றி**
> **மூக்கிற்கரியார் உடைத்து”**

**(குறள் எண் 277)**

புறத்தில் குன்றிமணி போல் செம்மையானவராய் காணப் பட்டாராயினும் அகத்தில் குன்றிமணியின் மூக்கு போல கருத்திருப்பவர் உலகில் உண்டு என்பதாகும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை

தமிழகத்தில் பரவலாக காணப்பட்ட குன்றுமணி மரங்கள் வேகமாக அழிந்து வருவது விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

ஆனைக் குன்றுமணியின் விதைகள் பவளநிறம் உடையது 18 மீட்டர் உயரம் வரை உயர்ந்தது வளரக்கூடிய கிளைகள் விரிந்து 10 மீட்டர் அளவில் பரந்திருக்கும் இதனிடையில் உதிர்ந்திருக்கும் சிவப்பு நிற ஆனை குன்றுமணிகளைக் கொண்டு இம்மரத்தை எளிதாக அடையாளம் கண்டு கொள்ளலாம் இதன் இலைகள் வாகை இலைகளைப் போன்று இரட்டைக் கூட்டிலை அமைப்புடையது ஆயுர்வேத மருத்துவர்கள் இதன் இலையை பயன்படுத்துகின்றனர் திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை குன்றுமணி மட்டுமே ஆகும் மேலும் குப்பையில் எறிந்தாலும் குன்றுமணி கருக்காது என்ற பழமொழியும் இதற்கு உண்டு.

ஆனைக்குன்றிமணியின் விதை முழுவதுமாக சிகப்பு நிறத்தில் இருக்கும் ஆனால் குன்றிமணியின் விதையில் சிவப்பாகவும் சிறிது திட்டாகக் கருப்பு நிறமும் இருக்கும் பண்டைய காலத்தில் தங்கம் மற்றும் வைரங்களின் அளவு அறிய குன்றிமணியின் விதைகள் எடைகளாக பயன்பட்டன மேலும் ஆபரணங்கள் செய்வதற்கும் சிறுவர்கள் பல்லாங்குழி விளையாடுவதற்கும் பயன்படுவதுண்டு. தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட குன்றிமணி மரங்கள் வெப்ப மண்டல பகுதிகளிலும் வேலி மற்றும் புதர்களிலும் வளரும் தன்மை கொண்டது. தமிழகத்தில் அரிதாகி கொண்டுவரும் குன்றிமணி மரங்களை பாதுகாக்க அரசு புதிதாக மரங்களை நட்டும் இருக்கிற மரங்களை பாதுகாக்கவும் வேண்டும் என்றார்.

**பனைமரம்**

ஒரு பொருளை மிகப்பெரியது என்று சொல்வதற்கு பனையளவு என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார் வள்ளுவர். சிறிய பொருளை சொல்லும் போது தினையளவு என்கிறார். திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப் பால் என முப்பாலிலும் பனை வருகிறது ஒவ்வொரு பாலிலும் ஒவ்வொரு குறளில் பனை இடம் பெறுகிறது மூன்று பால்களிலும் பால இடம்பெற என்ன காரணம்? திருவள்ளுவரின் நன்றியுணர்ச்சி தான் காரணமாக இருக்க வேண்டும் என்று எண்ணத்தோன்றுகிறது.

திருவள்ளுவர் பனைமரத்திடம் நன்றியுணர்ச்சி கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறதல்லவா? அந்த காலத்தில் அவர் தாம் எழுதிய திருக்குறள் முழுவதையும் எழுத்தாணியைக் கொண்டு பனை ஓலையில் தானே எழுதியிருப்பார் பனை மரத்தில் பனை ஓலை மட்டும் இல்லாதிருந்தால் இன்று நாம்

திருக்குறளை. தெரிந்திருப்போமா? நாமும் கூட பனை மரத்திற்கு நன்றி கடன் பட்டிருக்கிறோம் பனையால் தான் உலகப் பொதுமறையானவள்ளுவம் கிடைக்கப்பெற்றோம் அறத்துப்பாலில் 14வது குறளிலும் பொருட்பாலில் 433வது குறளிலும் இன்பத்துப்பாலில் 1282வது குறளிலும் பனை குறிக்கப்படுகிறது.

**"தினைத்துணை நன்றி செயினும்**
**பனைத்துணையாக்**
**கொள்வர் பயன் தெரிவார்"**

**(குறள் எண். 104)**

தினை அளவாக மிகச் சிறிய உதவியேசெய்யப் பெற்றிருந்தாலும் உதவியின் பயனை நன்கு அறிந்தவர் அதை பனை அளவு மிகப்பெரிய உதவியாய் கருதுவார்கள்.

**"தினைத் துணையாங்குற்றம் வரினும்**
**பனைத்துணையாக்**
**கொள்வர் பழி நாணுவார்"**

**(குறள்எண் 433)**

பழி பாவங்களுக்கு அஞ்சி நானும் பெரியோர் தினை என மிகச் சிறிய அளவே குற்றம் வந்தாலும் கூட. அதனைப்பனை என மிகப் பெரிய அளவாக கொள்வார்கள்.

**"தினைத் துணையும் ஊடாமை வேண்டும்**
**பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்"**

**(குறள்எண் 1282)**

காதல் பனையளவுமிகப் பெரியதாகுமானால் வாழ்க்கைத் துணையோடு தினையளவு மிகச் சிறிதாகக் கூட ஊடல் கொள்ளாமல் இருக்க வேண்டும் திருவள்ளுவர் காலந்தொட்டே பனைத் தமிழர்களின் வாழ்வோடு கலந்து விட்டது.

பனை ஓலைகளால் குடில் அமைத்துக் கொண்டு வாழும் வழக்கம் இன்றும் இருக்கிறது பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறி உத்திரங்கள் தூண்கள் ஆகியவை எனலாம். பனை சார்ந்த பொருட்கள் பல வகை அவையாவன கருப்புக்கட்டி கற்கண்டு அக்கானிகிழங்கு ஆகியவை பற்பல குணங்கள் படைத்தவை. பனைமரம் கற்பக விருட்சம் என்றே போற்றப்படுகிறது.

ஏரிகளையும் குளங்களையும் கரையில் மண்அரிப்பு ஏற்படாமல் காலம் காலமாய்க் காத்து நிற்பது பனை மரங்கள் தான். நுங்கு பனம்பழம் பனைநார் பனைமரத்தின் எல்லா பாகங்களும் நமக்கு பயன் தருவதால் தான் அது தமிழகத்தின் மாநில மரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

குன்றுமணி பனை ஆகிய இரண்டு மரங்களும் மனிதர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய ஒன்றாகும். இரண்டுமே மருத்துவ குணம் உடையது. இரண்டு மரங்களும் மனிதனை வாழ வைக்கிறது.

**பார்வை நூல்**

1. திருக்குறள் பேராசிரியர். பா .முருகன்.

# தமிழரின் தொழில்களும் சுற்றுப்புறச் சூழலும்

**முனைவர் ந. தர்மராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை அறிவியல் கல்லூரி, கோவூர், சென்னை

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தொழிலை உயிராகப் போற்றி வந்தனர். மேலும், ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு தொழிலில் ஈடுபட்டனர். சுற்றுச் சூழலையும் பாதுகாத்தனர். பண்டைத்தமிழர்கள் தொழில் செய்வதில் கடும் உழைப்பு, பொறுப்புணர்ச்சி, சுதந்திர மனப்பான்மை மற்றும் நேர்மையுடன் செயல்பட்டனர். இக்கட்டுரை பண்டைத் தமிழர்கள் செய்த தொழில்களும் அவர்கள் ஏற்படுத்திய சுற்றுச் சூழல் பற்றியும் கூற விழைகின்றது.

## பண்டைத் தமிழரின் தொழில்கள்

மக்களின் வளமான வாழ்விற்கும், வசதிக்கும் தொழில்கள் இன்றியமையாத பங்கு வகித்தன. மக்களுடைய தொழில்களான உழவுத்தொழில், நெசவுத் தொழில், தச்சுத் தொழில், மட்சுத் தொழில், கால்நடைகளை பேணல், உப்பு விளைவித்தல், திணைப்புணம் காத்தல் போன்றவற்றைக் கூறலாம்.

## உழவுத் தொழில்

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது உணவு அக்காலத்தில் உழவுத்தொழில், தலைமைத் தொழிலாகவும் உயிர்த் தொழிலாகவும் போற்றப்பட்டது. உழவுத்தொழில் செய்யும் உழவர்கள் **"வேளாண் மாந்தர்"** எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களின் அடிப்படைத் தொழில் பயிர்த்தொழிலை ஒப்பிக் காத்து பெருக்குவதாகும். பயிர்த் தொழில் செய்பவர்களுக்கு அவர்களது முழு கவனம் தொழில் செய்வதிலேயே இருக்கும் என்பதை தொல்காப்பியர்,

> **"வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது**
> **இல்லென மொழிப் பிறவகை நிகழ்ச்சி"**
> **(தொல்.1581)**

என்று குறிப்பிடுகின்றார்.

உழவுத் தொழிலுக்கு அடிப்படையாக அமைவது நிலமும் நீரும். இதனை,

> **"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
> **உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே**
> **உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
> **உணவெனப் படுவது நிலத்தோடு நீரே"**
> **(புறம்.18)**

என்று குறிப்பிடுகின்றது.

## உழவுத் தொழிலின் முறைகள்

உழவுத் தொழில் உழுதல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், விதைத்தல், களை கட்டல், காத்தல், அறுவடை, பதப்படுத்தல் என பல கூறுகளாய் அமைகின்றன.

## உழுதல்

பண்டைத் தமிழர்கள் அக்காலத்தில் நிலத்தை உழுவதற்கு எருதுகளைப் பயன்படுத்தி உள்ளனர். அதோடு மட்டுமல்லாமல் எருமைகளையும், பயன்படுத்தியுள்ளனர். இதனை,

"எருமை உழவ" (நற்.60)

என்ற பாடல் வரியால் அறியலாம். அக்காலத்தில் நிலம் நல்ல வளத்துடன் காணப்பட்டது. சுற்றுப்புறச் சூழலும் நன்கு அமைந்தது. ஆனால் இன்று உழுவதற்கு டிராக்டர் என்ற இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றனர். அது வெளியிடும் புகையும், இரைச்சலும் வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றன. சுற்றுச்சூழல் சீர்கேட்டினையும் உண்டாக்குகின்றன.

## எருவிடுதல்

"தொடிப்புழுதி கசா உணக்கின் பிடித்து எருவும்
வேண்டாது சாலப்படும்"

(குறள்.1037)

என்று திருக்குறள் எடுத்து இயம்புகின்றது. விளை நிலங்களில் நல்ல உரமிட்டால் நல்ல விளைவைப் பெறலாம் என்பதை உணர்ந்து கால் நடைகளின் சாணத்தையும், உலர்ந்து விழுந்த இலை தழைகளையும் எருவாகப் பயன்படுத்தினர். நல்ல விளைச்சல் இருந்தது. காய்கறிகள் சத்தானதாகவும், நோய்க்கிருமிகள் இல்லாமலும் இருந்தது. ஆனால் இன்று பெரும்பாலும் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதில்லை, மாறாக செயற்கை உரங்களைத் தான் அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுகின்றது. இந்த மண்ணில் விளையும் காய்கறிகளும் நச்சுத்தன்மை உடையனவாக மாறுகின்றன.

## அறுவடை செய்தல்

நெற்பயிர்களில் தோன்றும் களைகளையும், பிறஉயிர்களால் பயிர்கட்கு உண்டாகும் இடையூறுகளையும் களைந்து பாதுகாத்து வளர்த்த நெல்லை அறுவடை செய்வர். அறுவடை செய்த பின்னர் நெல்லறுத்த வயலில் மறுபடியும் உழுது ஈரமுடைய சேற்றில் மீண்டும் பயிர் செய்வர். இதனை,

"அரிகால் மாறிய ஆங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்"

(நற்.210)

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு மீண்டும் பயிரிடும்போது பயறுகளை விதைப்பர்.

**புன் செய்ப் பயிர்கள்**

புன்செய்ப் பயிர்களாக வரகு, உழுந்து, கொள், பயறு, எள், அவரை, பருத்தி, கரும்பு போன்றவற்றை விதைப்பர்.

நீர்வளம் குறைந்த வறட்சி மிகுந்த இடங்களில் பருத்தி விளையும், தினைப்புனத்தில் தினையின் இடையிடையே பருத்தியை விதைத்தலும் உண்டு. இதனை,

**"பரீஇ வித்திய ஏனல்"**

**(குறுந்.72)**

**"பருத்தி வேலிச் சீறூர்"**

**(புறம்.299)**

என்பனவற்றால் அறியலாம்.

இவ்வாறு உழவுத் தொழில் இயற்கையான முறைகளில் சிறப்பாக நடைபெற்றது. ஆனால் இன்று பல்வகையான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை ஈடுபடுத்தி சுற்றுச் சூழலை மாசுபடுத்திவிடுகின்றனர்.

**தினைப்புனம் காத்தல்**

தினைக்கதிர்கள் முற்றி அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ண வரும். அங்ஙனம் பறவைகளால் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்து இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் காப்பர். இச்செய்தியை சங்க இலக்கியங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுகின்றன.

மலையிடத்திலுள்ள சிறிய தினைப்புனத்தை நாடிவரும் சிவந்த வாயையுடைய பசுங்கிளிகளின் கூட்டத்தை ஒட்டும் பொருட்டு தலைவியை தினைப் புனத்திற்கு செல்க என்று தன் அன்னையே அனுப்பி வைத்தாள். இதனை,

**"துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்**
**நல்கோட் சிறுதினைப் படுபுள் ஒப்பி,**
**எல்பட வருதியர் என நீ விடுத்தலின்"**

**(குறிஞ்.39)**

என்று குறிப்பிடுகின்றது.

அக்காலத்தில் நிறைய பறவைகள் இருந்தன. ஆனால் இன்று சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் பறவைகளும் அதிகமாக இல்லை. அவைகள் தினைகளை உண்ண வருவதுமில்லை. தலைவிக்கும் தினைப்புனம் காக்கும் வேலை இல்லாமல் போய்விட்டது.

**கால்நடை வளர்த்தல்**

**"ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பாடு இல்லை "**

**(அடைக்கலக்காதை.120)**

அதாவது ஆடுமாடுகளை வளர்ப்பவர்களுடைய வாழ்க்கையில் எந்தவித தீங்கும், தீமையும் நேராது என்று சிலப்பதிகாரம் எடுத்து இயம்புகின்றது. அக்கால மக்கள் ஆடுமாடுகளை வளர்ப்பதை பெருஞ் செல்வமாக கருதினர். ஓர் அரசன்

மற்றொரு அரசனின் செல்வத்தைக் கவர்ந்து கொள்ள விரும்பினால் முதலில் அவன் பசுக்களையே கவர்வான். இதனை வெட்சி, கரந்தை முதலிய திணைகளின் மூலம் அறியலாம். உழவுத் தொழிலைப் போலவே கால்நடைகளை வளர்ப்பதும் வேளாண்மைத் தொழிலின் ஒரு கூறாகவே இருந்தது.

நெடுநல்வாடையில் இடையர்கள் தங்களுடைய பசு, ஆடு, எருமை முதலிய விலங்குகளை வருத்தும் கோலினை எப்பொழுதும் வைத்திருப்பார். தங்கள் மேய்ச்சல் தொழிலுக்கு இடையூறாக இருப்பதால், மழை நீரால் தோன்றும் பெருவெள்ளத்தை அவர்கள் வெறுத்தனர் என்று கோவலர்களின் நிலையை,

> **"ஆர்கலி முனைஇய கொடுங்கோற் நிலையை,**
> **ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்**
> **புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்"**
> **(நெடுநல்.3)**

என்று குறிப்பிடுகின்றது. இன்று பெரும்பாலும் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் கால்நடை வளர்ப்பு என்பது குறைந்து கொண்டே வருகின்றது. அப்படியே ஆடுமாடுகள் இருந்தாலும் அவைகள் உண்பதற்கு நிலங்கள் இல்லை. நிலங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு வீடுகளாக மாறிவருகின்றன. அதனால் விலங்குகள் அனைத்தும் சாலையோரங்களில் திரிகின்றன.

### தச்சுத் தொழில்

இயற்கை தந்த செல்வம் பலவகையான உயர்ந்த மரங்கள், தகுதியுள்ள மரங்களை அறுத்து வீடமைத்தற்கும், வண்டி, தேர் முதலியன செய்தற்கும் வழிகண்ட பெருமை தச்சர் என்னும் தொழிலாளர்க்கே உரியதாகும்.

தமிழ்நாட்டுத் தச்சர்கள் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையும் வசதிக்குத் தேவையான வண்டிகளையும், தேர்களையும் செய்து கொடுத்தனர். தேர்களை விரைவாக செய்து கொடுத்தலை,

> **"வைகல் எண்தேர் செய்யும் தச்சன்**
> **திங்கள் வலித்த கால்அன் னோனே"**
> **(புறம்-206)**

என்று விளக்குகின்றது. அக்காலத்தில் தச்சுத்தொழில் சிறப்பாக இருந்தது. ஆனால் இன்று அதில் நிறைய தொழில்நுட்பக் கருவிகளை பயன் படுத்துகின்றனர். அதனால் சுற்றுச் சூழலில் இரைச்சலை உண்டாக்கி சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துகின்றன.

### மட்கலத் தொழில்

மக்கள் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க மண்பாண்டங்களைச்

செய்து கொண்டனர். மண்பாண்டங்கள் தண்ணீர், உணவுப் பொருள்கள் முதலியவற்றைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் உதவும்.

மக்கள் உணவு சமைக்க மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களைப் பயன் படுத்தினர் என்பதை.

**"முரவுவாயக் குழிசி முரியடுப் பேற்றி**

**வாரா தட்ட வாடுன் புழுக்கல் " (பெரும்.99)**

என்பனவற்றால் அறியலாம்.

இன்று நாம் உணவுகளை உண்பதற்கு பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த பிளாஸ்டிக் மண்ணிற்குள் புதைத்து வைத்தாலும் அழிவதே இல்லை. மாறாக சுற்றுச்சூழல் சீர்கேட்டையே உண்டாக்குகின்றன.

## முடிவுரை

பண்டைத் தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கை மற்றும் செய்யும் தொழில் முதலியவற்றில் இயற்கையான முறையையே பின்பற்றினர். மக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தி வாழ்ந்தனர். ஆனால் இன்று நாம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் விளைவாக இயற்கையை அழித்துக் கொண்டிருக்கிறோம். சுற்றுச்சூழல் சீர்கேட்டை உண்டாக்கி வருகின்றோம். அதனால் நாம் இயற்கையைக் காப்போம். சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடுவோம்.

## துணை நூல்கள்

1. திருக்குறள் தெளிவுரை, மு.வரதராசன்.
2. பண்டைத் தமிழர் தொழில்கள், வி.சி. சசிவல்லி.
3. சங்கத் தமிழர் வாழ்வியல், மு. சண்முகம்பிள்ளை.
4. சங்க இலக்கியத்தில் நடைமுறை வாழ்க்கை. க. இராசாராம்.
5. தொல்காப்பியம் தெளிவுரை, ச. வே. சுப்பிரமணியன்.
6. சிலப்பதிகாரம் தெளிவுரை, ஞா. மாணிக்கவாசகனார்.

# திருக்குறளில் நீர் மற்றும் மரம்

**புலவர் சோணா மதியழகன்**
தமிழாசிரியர்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, குறிச்சி, நாகப்பட்டினம்

**"வானின் றுலகம் வழங்கி வருதலாற்**
**றானமிழ்த மென்றுணரற் பாற்று"**

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாடு சிறந்த நாடாக திகழவேண்டுமென்றால் நீர்,நிலம்,காற்று,ஆகாயம்,நெருப்பு இந்த பஞ்சபூதங்கள் நிறைந்த நீதி வழுவாத மன்னனும், செழிப்புடன் வாழும் குடிமக்களும், வளம் பொங்கிய நாடுமே சிறப்புடையதாகும். ஐயன் வள்ளுவன் திருக்குறலென்ற அரிய பெரிய நூலில் நீரின் அவசியம் பற்றியும் அதனால் கிடைக்கபெறும் நன்மைகள் பற்றியும், சொற்செறிவுடனும் பொருட்பொலிவுடனும் எடுத்துக்கூறுகிறார். உலக வாழ்வில் தண்ணீர் இல்லையானால் மக்களின் வாழ்வு சிறப்படையாது. மழைவளம் இல்லாத பொழுது நல் ஒழுக்கம் நிலைபெறாமல் போய்விடும் என்றும் இப்பெரிய உலகத்தில் வானம் மழை பெய்யாவிட்டால் அறம் செய்தலும், தவம் செய்தலும் நடைபெறாது என்றும் மழையினால் கிடைக்கபெறும் நீரும் அவற்றினால் செழிப்படையும் மரங்களும் நிறைந்திருக்கும் நாடே ஒரு சிறந்த நாடாக அமையுமென்றும்,

**" அணுவைத் துளைதேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறிக்கக் குறள்"**
**"பழகுத்தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"**
**"கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்தகுறள்"**

எழுதிய ஐயன் வள்ளுவன் திருக்குறள் நீரின் மகத்துவத்தையும் அதனால் விளையும் காடு பயிர்களை பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச் சொற்கள்** :வாரிவளம் - நீர்வளம், வீழின் அல்லால் –விழுந்தால் அல்லாமல், எழிலி –மேகமானது விரிநீர், விசும்பின் துளி – ஆகாயத்தின் மழைத்துளி, வானம் வறக்கு மேல் – பெய்யாமல் வறண்டு போனால்

## முன்னுரை

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று”**

சங்க இலக்கியங்களிலும், இக்கால இலக்கியங்களிலும் நீர் மேலாண்மை முக்கியத்துவம். நாட்டிற்கு மரங்கள் வளர்ப்பதால் ஏற்படும் பயன்கள் பற்றியும் மிக விரிவாக விளக்குகிறது. குறிப்பாக, திருக்குறள் பரிமேலழகர் உரையில் நாடு செழிப்புற வேண்டு மானால் மழையும், காடு மற்றும் பயிர் வளங்களும் மிக அவசியத்தை வலியுறுத்துகிறார்.

**“விசும்பிற் துளிவீழி னல்லான்மற் றாங்கே**
**பசும்புற் றலைகாண் பரிது”**

திரு.வி.க அவர்கள் கூறும் கருத்துரையில், நீர் பசையுடன் ஈரமுள்ள பொருள்தான் உதவும் மழைத்துளி விழாமல் பச்சைப்புல் பூண்டு கூடத் தலைக்காட்டாது என்றும் அப்படி இருக்க மரம்,செடி, கொடிகள் தாம் ஏது? எதைத்தின்று உயிர் வாழ முடியும் என்பதை திரு.வி.க அவர்கள் நீரின் இன்றியமையாத காடுகள் வளர்ப்பதால் காடுகளினால் நீரின் வளம் பெருகும். குடிமக்கள் மாசற்ற காற்று சுவாசிப்பதால் இயற்கையான வாழ்க்கை வாழ முடியும் என்றும் சங்ககால இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றனர்.

**“ஒரு னுழாஅ ருழவர் புயலென்றும்**
**வாரி வளங்கின்றிச் சால்”**

நாமக்கல் கவிஞர் கூறும் கூற்றுப்படி உழுதுபயிர் செய்யாமல் உணவுப்பொருள் கிடைக்காது உழவுத்தொழில் நீர் வளமில்லாமல் முடியாது. ஆகையினால் உள்நாடுகளில் உழவு நடக்காது, அதனால் பசி உயிர்களை வதைக்கும் என்பதை உணர்த்துகிறார்.

**“நீர் உயர நெல் உயரும்”**

என்ற பழமொழிக்கிணங்க நீர்வளம் வேண்டுமெனின் காடுகள் வளர்க்கப்பட வேண்டும். காடுகள் செழித்தால் மழை மும்மாரிப் பெய்யும். அதனால் குடிமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

## வறுமை நீக்கி வளம் தரும் நீர்

**“நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு”**

எப்படிப்பட்ட வல்லரசான நாடாக இருந்தாலும் நீர்வளமோ, காடுகள் நிறைந்த நிலமே இல்லை எனில் அந்நாடு அது வளமிக்க நாடாக அமையாது. உயிர்கள் நன்றாக வாழ்வதற்கு வளம் வேண்டும். வளத்துக்கு மழை வேண்டும். மழையில்லை என்றால், வளமிருக்காது. வளமில்லை என்றால் நல்வாழ்வு இருக்காது. நல்வாழ்வு இல்லாவிட்டால் நல்லொழுக்கம்

இருக்காது. வாழ்வில் போராட்டம் எங்கு எழுகிறதோ, அங்கு நல்லொழுக்கம் இடம்பெறாது வறுமையால் பசியும், பிணியும் மக்களை வருத்தும். மக்கள் என்ன செய்வார்கள். வறுமை போக்கி வளம் தரும் ஆற்றல் மழைக்கு உண்டு. மழைபெய்து வளம் பெருக்கினால் மக்களின் வாழ்க்கை போராட்டம் தணியும் அது தணிந்தால் தீயொழுக்கம் அருகி நல்லொழுக்கம் பெருகும். ஆகவே, நல்லொழுக்கத்திற்கு மழைநீர் இன்றியமையாத்தென்பது வெள்ளிடை மலை. இதற்கு விரிவுரை வேண்டுவதில்லை. இதைத் திருவள்ளுவர்,

**"மழையின்றியமையா தொழுக்கு"**

என்கிறார்.

மானிடர் வாழ்விற்கு மகத்தான காடுகளும் மிக முக்கியமாக திகழ்கிறது. காடுகள் வளர்ந்தால் தான் நீரும் பெருகும் நீர்பெருகினால் காடுகள் செழித்து வளர முடியும். இவை இரண்டும் மனித குலத்திற்கு மிக முக்கியப் பங்கினை வகிக்கிறது. எப்படி மனித குலத்திற்கு இல்லறம் அவசியமோ அதுபோல், நீரும் காடும் அவசியமாகிறது. நம்பிக்கையூட்டும் இந்திரவிழா,

**"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"**

நாடு வளம் பெறவும், நாட்டு மக்கள் இன்புற்று வாழவும், நம்பிக்கையூட்டும் வகையில் இந்திரவிழா காமன் விழா என்று குடிமக்கள் தொன்றுத்தொட்டு விழா எடுப்பது ஒரு வழக்காகவே இருக்கிறது.

வானத்தில் சஞ்சரிக்கின்ற மேகங்களை மின்னலுடன் மழையாகப் பெய்யச் செய்கிறவர்கள் வானத்தில் உள்ள தேவர்கள் தான் என்பதும் தேவர்களுக்கு தலைவனான இந்திரன் மின்னல் என்கிற தன்னுடைய வயிர ஆயுதங்களால் மேகங்களை இடித்து மழையாக பெய்ய செய்வதாகவும் நம்பிக்கை. அதனால், மழைக்காக மக்கள் இந்திர விழா கொண்டாடி பூசைகள் செய்வதுண்டு. மழையில்லாவிட்டால் அந்த சிறப்பும் பூசையும் நடக்காது. வானத்திலிருந்து மழை வருவதால் அதைப்பெய்ய செய்யும் தேவர்களை வானோர் என்று வணங்குகின்றோம். மழை இல்லாவிட்டால் வானவர்களுக்கு சிறப்பு பூசையும் நடக்காது என்பது மட்டுமல்ல மழையில்லாவிட்டால் புண்ணியம் செய்வதும் இருக்காது. மழை பெய்து உணவுப்பொருட்கள் மலிந்து நிம்மதி ஏற்பட்ட பிறகு தான் புண்ணிய எண்ணமும் ஆன்ம எண்ணமும் உதிக்கும். ஆதலால், மழை இல்லாவிட்டால் தானங்கொடுப்பதும் தவம் செய்வதும் உலகத்தில் நடைபெறாது என்பது கருத்து.

**இயற்கையோடு இயைந்து வாழ்தல்**

அழகிய இயற்கையில் குடிமக்களின் வாழ்க்கை முறையும் அவர்களுடைய பண்பாட்டின் நாகரீகங்களையும் சங்க இலக்கிய நூல்கள் விரிவாக கூறும் போது, வாழ்க்கைக்கு உதாரணமாக கல்கிணறு, ஆறு மற்றும் நீர் அருவி போன்ற இயற்கையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டனர். அதன் பயனாக காடுகளையும், பயிர்களையும் விளைவித்து கொண்டனர். மலைகள் போன்ற இயற்கை நிலங்களில் உள்ள தாவரங்களை கண்டறிந்து பயன்படுத்திக் கொண்டனர்.

அறியத்தக்க மூலிகைகள் மற்றும் திணைப் பயிர்களையும் பயிரிட்டு தங்களின் உணவிற்கு பயன்படுத்திக் கொண்டனர். தமக்கு நோய் நொடிகள் வந்தாலும் அதைத் தடுப்பதற்கு மூலிகை செடிகளையும் சித்த மருத்துவமுறைகளையும் அவர்கள் கையாண்டனர். அவர்கள் இயற்கையிலேயே வாழ்வதால் அனைத்து தட்ப வெப்பங்களையும் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு அவர்களின் உடல் அமைப்பை காத்து வந்தனர். இதன் காரணமாக இயற்கையான வாழ்விற்கு இன்பமான மழை பெய்தது. விளைவு மரம், செடி, கொடி என்று எங்கும் செழித்து வளர்ந்தது. காடுகள் வளர்ந்து சோலையாக மாறியது. மும்மாரி மழை பெய்து நாட்டின் வளம் பெருகி செழிப்புடன் மக்கள் வாழ்ந்தனர்.

**இல்லற வாழ்வியலில் நீரின் பங்கு**

**“தெய்வம்தொழாஅள், கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய் எனப்பெய்யும் மழை”**

வாழ்க்கை துணையாகிய பெண்கள் இல்லற வாழ்வில் இன்பத்திலும், துன்பத்திலும் பங்கெடுத்து சிறப்பைத் தருகிறாள். நல்ல கணவருடன் சேர்ந்து வாழும் பெண்ணின் பெருமைகளையும், தகுதிகளையும் எடுத்துரைப்பதாக மனைவியானவள் தெய்வங்களைத் தொழாமல் தன் கணவனையே வணங்கும் இயல்புடைய பெண் மழைப் பெய்யட்டும் என்று சொன்ன அளவிலேயே இயற்கை பெய்யும் என்று சங்க இலக்கியங்களில் ஒன்று இக்கால இலக்கியம் வரை மழையின் அவசியத்தையும் அதனால் விளையும் நீரின் பயன்பாட்டையும் எடுத்துக் கூறுகிறது.

**திருக்குறள் வெண்பாவில் நீரின் பங்கு**

**“தேர்கொண்ட வசந்த வீதிச் சிவபிராண் திருவெண்ணீற்றின்**
**ஏர்கொண்ட அடியார்சங்கம் எனப்பரந்துஏகி**

**வேலை**

**நீர்கொண்டு தன்பால் வெண்பால் நிறங்கொண்டு”**

**(திருக்குறள்.குமரேசவெண்பா.)**

கடல் நீரைக் கவர்ந்துகொண்டு மேகங்கள் உலகிற்கு மழைப்பொழிகிற

நிகழ்வை இவை எடுத்துக்காட்டியுள்ளன. வாணனின் சிறப்போடு மருவி வந்துள்ள கலையின் சுவைகளையும் பொருளின் துறைகளையும் கருதியுணர்ந்து கொள்ள வேண்டும்.

விண்ணிலிருந்து மழை பொழிந்தால் இம் மண்ணுலகிலுள்ள நதிகள் எல்லாம் நல்ல வெள்ளங்கள் பெருகி ஓடி கடலை அடைகின்றன. பருவங்கள் தோறும் வந்து பாய்கின்ற அந்த புதிய நீர்ப்பாய்ச்சல்களால் கடலில் படுகின்ற திரவியங்கள் அலவிடலரியபடி வளம் பெறுகிறது. அவ்வாறு மழை பெய்யவில்லை என்றால் அது கட்டுக்கடையாய் நின்று இழிவுறும். அதனால் "நீர்மை குன்றும்" என்றார்.

## வளம் குன்றிய மூவேந்தர் நாடு

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்னும் இம்மூன்று நாடுகளும் ஒரு காலத்தில் மழைவளம் குன்றி வறுமை மிகுந்திருந்தன. அதனால் துயர்கள் பல தொடர்ந்தன. பல உயிர்கள் மாண்டன. அந்நாட்டு அரசர் மூவரும் நிலையாமையை நினைத்து மிக நொந்தனர். ஒன்று சேர்ந்தனர் நின்று சூழ்ந்தனர். பின்பு அகத்திய முனிவரை அடைந்து உற்றதை உரைத்து உறுதி நலங்களைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து தெளிந்தார். சூரியன், செவ்வாய், வெள்ளி, வியாழன் என்றும் இந்த நான்கு கிரகங்களும் வான மண்டபத்தில் மாறுபட்டு நிகழ்கின்றமையால் இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பெய்யாது. ஆயினும், வானுக்குத் தலைவன் ஆன இந்திரனிடம் நீவீர் மூவரும் நேரே முறையீடு செய்யுங்கள் என்று உபதேசம் கூறி அருளினார். அவ்வாறே அமரர் கோனைக்கண்டு யாவும் கூறி மழையை வேண்டினார். மண்ணுலக மன்னரான இவருடைய மாண்புகளை அறிந்து விண்ணுலக வேந்தன் விரைந்து மழைப்பொழியச் செய்தான். மாரிப் பெய்யவே வெய்ய துயர்கள் யாவும் நீங்கி நாடுகள் நன்கு செழித்தன. யாவரும் இவ்வேந்தரை வியந்து புகழ்ந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

மழையால் நிலம் வளம் அடைந்தது போல் நெடிய கடலும், குறைநீங்கி நலம் அடைந்தது.

> **"எழிலி நல்காவிடின் நெடுங்கடலும்**
> **நீர்மைக் குன்றும்"**

என்பதை உலகம் இவர்மூலம் அன்று நன்கு உணர்ந்து கொண்டது.

## முடிவுரை

> **"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
> **வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

தமிழகம் வள்ளுவப் பெருந்தகையாரைப் பெற்றெடுத்து. உலகத்திற்கே தந்தது என்றும் அந்த செயலுக்கு கைமாறாக வான் புகழைத் தமிழகம் உலகத்திடமிருந்து பெற்றுக் கொண்டது என்றும் புதுமைக் கவிஞர் பாரதியார் பெரிதும் வியந்து போற்றுகிறார். மக்களின் வாழ்வியலைப் பற்றி கூறவந்த வாழ்வியல் நூல் என்றும் சிறப்புடையது எல்லா மக்களும் வழிகாட்டி நூல் என்றும் பெருமை பெற்ற நாம் அறிவோம். சங்க இலக்கியங்களில் இருந்து திருக்குறள் வரை நாம் அறிவோம். மனிதர்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து வந்தனர். அதற்கு அடிப்படை நீரும் காடுகளும் அவர்களுக்குத் துணை புரிந்தனர். மனிதர்களுக்கு பயன் தரக்கூடிய இயற்கை வளங்களான நாடுகளும் மலைகளும் அந்த விரிந்த நீர்நிலைகளும் மனிதகுலத்திற்கு மிகவும் அவசியம் என்பதை வள்ளுவப் பெருந்தகை திருக்குறளின் மூலம் நீர்காடுகளின் அவசியத்தை மிக நுட்பமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத் திருக்கின்றார். இதன் அவசியத்தைப் புரிந்து கொண்டு வாழ்வோமாக.

**“காடுகளை வளர்ப்போம்”**

**“நீரை சிக்கனமாக பயன்படுத்து வோம்”**

**துணைநின்ற நூல்கள்**

1. நூற்பெயர்: திருக்குறள் நாமக்கல் கவிஞர் உரை, ஆசிரியர் பெயர்: நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார். பதிப்பகம் பெயர்: பூம்புகார் பதிப்பகம், 127(ப.எண். 63) பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை 600 108. பதிப்பு ஆண்டு: முதற்பதிப்பு ஏப்ரல் 2004.
2. நூற்பெயர்: தனித்தமிழின் மொழி ஞாயிறுவின் திருக்குறள் பொருட்பால் மரபுரை, ஆசிரியர் பெயர்: மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர், பதிப்பகம் பெயர் : ஹெம் பப்ளிகேசன்ஸ்,எண் 72, கோகுலம், மூவரசன்பேட்டை. சென்னை-91. பதிப்பு ஆண்டு: முதற்பதிப்பு - ஆகஸ்டு-2016.
3. நூற்பெயர் திருக்குறள் வள்ளுவர் கண்ட: தத்துவம், ஆசிரியர் பெயர்: தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பதிப்பகம் பெயர்: காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிராஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024. பதிப்பு ஆண்டு – முதற்பதிப்பு : ஆகஸ்டு 2005.
4. நூற்பெயர் .உ.திருக்குறள் வ: சிதம்பரனார் உரை, ஆசிரியர்

பெயர்: சிதம்பரனார் .உ.வ, பதிப்பகம் பெயர்: பாரிநிலையம், 90, பிராட்வே சென்னை – 108 பதிப்பு ஆண்டு – முதற்பதிப்பு: ஆகஸ்டு 2008.

5. நூற்பெயர் : திருக்குறள் ஆராய்ச்சி குறிப்பு, ஆசிரியர் பெயர் .மு.வை: கோபாலகிருஷ்ணமாச்சாரியார்,

6.

பதிப்பகம் பெயர் உமா பதிப்பகம்: 18/171 பவளக்காரத்தெரு, மண்ணடி சென்னை – 600 001. பதிப்பு ஆண்டு: ஜீலை – முதற்பதிப்பு 2009.

# சோழர்களின் ஆட்சியில் நீர் மேலாண்மை

**கா. தாமரைச்செல்வி**

முதுகலைத்தமிழ் முதலாண்டு

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

## முன்னுரை

தமிழர் சமூகம் நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டப் பழமையான சமூகம் நாகரிகத்தின் உறைவிடம் தமிழ்க்குடி எனில் மிகையன்று. உலக நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள். மலைகளிலும் காடுகளிலும் நாடோடிகளாக அலைந்து திரிந்து கொண்டிருந்த மக்களினம் சமவெளியை நோக்கிப் பயணித்த போது ஆங்கே ஆற்றுநீரையும் அந்நீரினால் ஏற்பட்ட வளத்தையும் கண்டு அந்நீரினைப் பயன்படுத்தி உழுதுண்டு வாழும் பண்பாட்டினை ஏற்படுத்தினர். இந்த நாகரிகமே உலகின் முதல் நாகரிகமாக விளங்குகின்றது. இங்ஙனம் பல்வேறு நாகரிகங்களுக்கு வித்தாக அமைவது நீரே. இந்நீரை தமிழர்கள் எங்கனம் கையாண்டனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## சோழர்களின் நீர் மேலாண்மை

**நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு**

எனும் வள்ளுவனின் வாக்கின்படி, தமிழகத்தை ஆண்ட சோழர்கள் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே மிகச்சிறந்த நீர் மேலாண்மை கோட்பாட்டினைக் கொண்டிருந்தனர். அவ்வகையில் காவிரியில் இருந்து மாயனூர் உய்யகொண்டான் ஆற்றில் கால்வாய் வெட்டி அதன் வழியில் ஆயிரம் ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்தனர். காவிரி நீரை வீணாக்காமல் சேமிப்பதற்காக வீராணம் ஏரியை பராந்தகசோழன் வெட்டினார்.

## குமிழித்தூம்பு

தமிழகத்தில் பெரிய ஏரிகளில் குமிழித்தூம்பு என்னும் நீர் அமைப்பை திறம்பட நீர் மேலாண்மை செய்தவர்கள் தான் தமிழர்கள். இந்த குமிழித்தூம்பு அமைப்பின் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் கொடுத்தது மட்டுமல்லாமல் ஏரிகளில் வண்டல் படிந்து தூர்ந்து போகாமலும் தடுத்தார்கள் குமிழி நீரை வெளியேற்றுவதொடு இடுக்கில் ஏரி குளம் கால்வாய்களுக்கு வந்து வீழ்கிற

வண்டல்களையும் குமிழிகள் அகற்றிடும். ஏரிக்கரைகளில் மதகு போல அமைக்கப்படுவதில்லை. ஏரிக்கரைகளில் இருந்த 300 அடி தள்ளி ஏரிக்குள்ளே அமைக்கப்படுகின்றன. ஏரியின் தரை மட்டத்தில் வலிமையான கல் நளம் அமைத்து அதன் அடியில் கருங்கற்களால் ஆன தொட்டியை அமைத்தனர். இது குமிழித்தூம்பு எனப்படுகின்றது. திருமானூர் ஒன்றியத்தில் கொல்லிடம் வடகரையில் இருக்கின்ற கண்டராடிட்டம் என்ற கிராமத்தில் செம்பியன் மாதேவி என்று ஒரு பெரிய ஏரி இருக்கின்றது. இப்பேரேரியும், குமிழித்தூம்பு அமைப்பில் அமைந்துள்ளது.

## இலக்கியத்தில் குமிழித்தூம்புகள்

மணிமேகலையில் “அறவணர் தொழுத காதை” என்ற பகுதியில் “சுருங்கை" என்ற வார்த்தை குறிப்பிடப்படுகின்றது. சுருங்கை என்றால் பூமிக்கு அடியில் செல்லும் குழாய் என்று பொருள். குமிழித்தூம்பு, திருக்குறுங்குடி, திருநெல்வேலி, ஓசூர், ராமநத்தம் என்ற ஏரியில் குமிழி போன்ற இடங்களில் குமிழிகள் இருக்கின்றது.

உலகிலேயே ராஜராஜசோழன் நீர் மேலாண்மை செய்த அளவிற்கு வேறுயாரும் செய்யவில்லை எனலாம். மாயனூர் என்ற இடத்தில் காவிரியின் வடகரையும், தென்கரையும் ஒரே மட்டத்தில் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு மதகை அமைத்து தென்கரையில் ஒரு பெரிய கால்வாய்கள் வெட்டி அதற்கு உய்யகொண்டான் என்ற பெயர் சூட்டினான் ராஜராஜன். ராஜராஜனின் பட்டப்பெயர் உய்யகொண்டான் ஆகும். தஞ்சாவூரில் மழை பெய்தால் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோவிலில் கோபுரத்தில் விழக்கூடிய மழை தேங்கிக் கொண்டிருக்கும். 10 நிமிடங்களுக்கு பிறகு சென்று பார்த்தால் நீர் வற்றிவிட்டு இருக்கும், ஏனென்றால் அங்கு சேரும் தேங்கிய தண்ணீர் முழுவதும் பூமிக்கு செல்லும் வண்ணம் மழைநீர் சேமிப்பு முறையினை அக்காலத்திலேயே ஏற்படுத்தியிருந்தார்கள். நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய நம் முன்னோர்கள் மழை நீரை வீணாகாமல் இருக்க கோயில்தோறும் குளங்களை அமைத்தனர்.

சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை நகரை சுற்றிலும் நான்குபுறமும் தொடர்ச்சியாக தன்னீர் பயணிக்கக்கூடிய அகழிகள் அமைக்கப்பட்டது.

**தமிழர்களின் நீர் மேலாண்மை**

மழை பெய்யாக் காலங்களில் ஏரிகளில் இருக்கின்ற தண்ணீரை மதகுகள் வழியாக வயலுக்கு கொண்டு வரும்போது நீர் இழப்புகள் ஏற்படும். அதனால் உருவாகின்ற தண்ணீர் பஞ்சத்தை போக்குவதற்காக கட்டப்பட்டது தான் கிணறு இதற்கு உண்டான சான்றுகள் அகநானூற்றுப் பாடல்களிலும், பெருபாணாற்றுப்படை பாடல்களிலும் இருக்கின்றது.

**கட்டுக்கிணறு**

நிலத்திற்கு அடியில் இருக்கின்ற நீரை எடுக்க தோண்டப்படுக்கின்ற ஒரு குழிதான் கிணறு. கிணறு ஆழமாக போகும் போது கல், செங்கல்களால் ஆன உட்சுவரை எழுப்பி இக்கிணற்றை கட்டுவார்கள் நிலத்தின் ஆழம் பொறுத்து தான் கிணற்றின் ஆழம் அமையும்.

**உறைகிணறு**

மணல் அதிகமாக இருக்கின்ற இடங்களில் கிணறுகள் தோண்டப்படும்போது மண் சரிவு ஏற்பட்டு கிணறுகள் மூடுவதற்கு உண்டான வாய்ப்பு, இருக்கின்றது. இன்றைக்கு சிமெண்டு வளையங்களை பயன்படுத்துகிறோம். ஆனால் அக்காலத்தில் சுட்டக்களிமண் பயன்படுத்தி இருக்கின்றார்கள். இதற்கு சான்று பட்டினப்பாலை இவற்றை நிரூபிப்பதற்கு தொல்லியல் அகழ்வாராய்ச்சி நடந்த போது கொற்கை, அரிக்காமேடு, மாமல்லபுரம், செங்கமேடு, நெல்லை மாவட்டத்தில் இருக்கக் கூடிய மாங்குடி, காஞ்சி, கீழடி போன்ற இடங்களில் உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**குமிழி [குடைக்கிணறு]**

பாறைகளைக் குடைந்து அடியில் இருக்கும் ஊற்றை மேலே வரச்செய்து கட்டப்படும் கிணறுதான். குடைக்கிணறு எனப்படும்.

**பொங்குகிணறு**

ஊற்றுக்கால் பொங்கிக் கொண்டே இருக்கும். ஏனென்றால் இரண்டு பாறைகளுக்கு இடையில் நிலத்தடி நீர் தேங்கிக்கொண்டிருக்கும். அந்நீர் வெளியேறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் அழுத்தத்தில் இருக்கும். அழுத்தத்தில் இருந்த நீர் பொங்கி மேலே எழும்பும். அதனால் தான் இதற்கு பொங்குகிணறு எனப் பெயர் பெற்றது.

**ஆழிக்கிணறு**

கடலிற்கு பக்கத்தில் தோன்றிய கிணறு ஆழிக்கிணறு. இக்கிணற்றில் நல்ல நீர் தான் இருக்கும்.

**கேணி**

அகலமாகவும் ஆழமாகவும் தோண்டப்படும் கிணறு, கோவில்களிலும், ஊர்களிலும் குடிநீருக்காக பயன்படுத்தினார்கள்.

**நீர்ப்பாசனம்**

போதுமான தண்ணீர் கிடைக்கச் செய்வதன் முக்கியத்துவத்தை தென்னிந்தியாவில் உள்ள அரசர்கள் பண்டையக் காலத்திலிருந்தே உணர்ந்தார்கள். இயற்கையான ஓடைகளும், அவற்றிலிருந்து பிரியும் வாய்க்கால்களும் குடிநீர் மற்றும் பாசன வசதிக்காக பயன்படுத்தப்பட்டது. சோழநாட்டின் வளம் அனைத்தும் காவிரியால் ஏற்பட்டது என்பதற்கு வான் பொய்ப்பினும் தான் பொய்யா கடற்காவிரி என்பது போன்ற இலக்கியச் சான்றுகளை அடுக்கடுக்காகச் சொல்லலாம். நீர் வளம் நிறைந்த இப்பகுதி காவிரி. ஆறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றின் பெயர்களை சோழர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இயற்கையான ஓடைகள், ஆறுகள், இல்லாத இடங்களில் ஏரிகள் வெட்டப்பட்டன. ஒரே சமதளத்தில் நிலம் இல்லாததால் மேட்டு நிலங்களுக்குப் பாசன வசதி பெறுவதற்காக தண்ணீர் இறைக்க காளைமாடுகள் கூடைகளைப் பயன்படுத்தி நீரிறைத்து பாசனம் செய்தனர். இதைப்பற்றி எந்த கல்வெட்டுகளிலும் சொல்லப்படவில்லை. ஆயினும் நாட்டார் வழக்காறுகளில் இந்நிகழ்வு அதிகமாகப் பேசப்படுகிறது.

பிற்காலச் சோழர்கள் நீர் மேலாண்மை

பிற்காலச் சோழர்கள் கி.பி.250 முதல் கி.பி.1280 வரை ஆண்டனர். சோழப்பேரரசுக்கு நடுநாயகமாக காவிரி கழிமுகப்பகுதி திகழ்ந்தது. தஞ்சை ஏரிகளையும், வாய்க்கால்களையும் பற்றி பண்டைய கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டுகள் பிற்காலச் சோழர் காலத்தை சேர்ந்தவை ஆகும். ஆர்க்காடு மாவட்டம் சோழிங்கபுரத்தில் வாரிதி என்ற ஏரியை இராஜராஜசோழன் உருவாக்கினான் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதைப்போல மற்ற அரசர்களின் பெயால் அமைந்த பாசன அமைப்புகள் கண்டராதித்தன் கி.பி. 949 – 957 சுந்தரச் சோழன் கி.பி. 957-973 இராஜராஜன் கி.பி. 985 – 1014 ஆகியோரின் பெயரால் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முடிவுரை**

> **விசும்பின் துளிவிழின் அல்லால் மாற்றாங்கே**
> **பசும்புல் தலைக்காண்பு அரிது.**

என்பதை நன்கு அறிந்திருந்த சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் நீர்நிலைகளைத் தோற்றுவித்ததோடு

அவற்றைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் செய்தனர். சோழவரம், காவேரிப் பாக்கம், மதுராந்தகம், உய்ய கொண்டான் போன்ற பேரேரிகள் சோழர்களின் நீர் மேலாண்மைக்கு சான்றாக விளங்குகின்றது. மழை பெய்யும் காலத்து அதனை வீணாக்காமல் சேமிக்கும் முறையினை தஞ்சைப் பெரிய கோயில் அமைந்திருப்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சோழர்களின் நீர் குறித்த விழிப்புணர்வை புலப்படுத்துகின்றது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்பு**

1. திருக்குறள். புலியூர் கேசிகன் உரை.
2. சோழர்கள் கே.ஏ., நீலகண்டசாஸ்திரி (நீர்பாசனம்)
3. தமிழ் வளர்ச்சித் துறை தமிழ் பல்கலைக்கழகம். தஞ்சாவூர். மா. இன்பக்கனி தலைப்பு. [அறிமுக நோக்கில் நீர் மேலாண்மை பிப் [2 - 2024 உலகலாவியல் இதழ்.

# குறள் தரும் மழை

**முனைவர் சு. அந்தோணி செல்வகுமார்**

பேராசிரியர், தமிழ்த்துறை

நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி, பிள்ளையன்மனை, தூத்துக்குடி

## முன்னுரை

**'வான்புகழ் தமிழ் பெற வகை செய்த முத்து**
**வள்ளுவன் எனும் வளமான வித்து**
**தேன்குறள் அமுதினும் தெவிட்டா தென்றோ?'**

நிஜமின்றி நிழல் இல்லை, நீரின்றி மீனில்லை, கலையின்றி அழகு இல்லை, கவிஞன் இன்றி பாடல் இல்லை, திருக்குறளைப் புகழாத மேனாட்டு அறிஞருமில்லை, மொழி பெயர்க்காத உயர்ந்த மொழியும் இல்லை. உலகப் பொதுமறையாம் திருக்குறள் எக்காலத்தும், எக்கருத்தையும் உணர்த்தக்கூடிய இலக்கியம். இவ்விலக்கியம் சுட்டும் ஐம்பூதங்களில் ஒன்றான நீர் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கு.

## இயற்கை

**"இயற்கை எங்கும் இறைவன் ஆட்சி**
**இனிமை பொங்கும் எழுமிகு காட்சி**
**மனதில் தருவது இன்பமாம் எழுச்சி"**

இறைவன் மனித இனத்திற்குத் தந்த வரப் பிரசாதம் இயற்கை. மலை, அருவி, சோலை, மரங்கள், மழை எல்லாம் நம் எண்ணச் சிறகை விரிக்க உதவும் கருவிகளாக அமைந்து மனத்திற்கு இதமளிக்கின்றன. ஐம்பூதங்களில் ஒன்றான நீரினைப் பற்றி குறிப்பிடுகின்றது திருக்குறள். நீர் எவ்வாறெல்லாம் கிடைக்கிறது என்பதைக் கூறுகிறது. குளம், ஏரி, ஆறு, கடல் இவற்றின் மூலம் பெறப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மூலாதாரமாய் இருப்பது மழை. மழை இல்லையேல் இவ்வுலகு இல்லை. முந்நீருள் முதலாவதாகப் போற்றப்படுவது மழை நீரே.

## மழை

இயற்கையில் அமைந்த அனைத்துப் பொருட்களிலும் மழை சிறப்பானது. மழையில்லையேல் இவ்வுலகு இல்லை. மழை பெய்து உலக உயிர்களை நிலைபெறச் செய்து வருகிறது. அதனால் அது அமிர்தனெப்படும். மழை உயிர்களுக்குச் சாவா மருந்து (அமிழ்தம்) என்று போற்றப்படுகின்றது. இதனை வள்ளுவர்,

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று"**

**(குறள்.11)**

என்று குறிப்பிடுகிறார்.

### மழையும் செல்வமும்

கடலில் முத்து, மீன் முதலான வளம் குன்றாமல் இருக்க செய்வது மழை. மேகம் தன்னைக் குறைத்துக் கொண்டு மழை பொழிகின்றது. மேகம் கடலின் நீரை முகந்து கொண்டு மீண்டும் அந்நீரையே மழையாக பெய்யவில்லை எனில் கடலில் உள்ள செல்வங்கள் குறையும். இதனை வள்ளுவர்,

**"நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான் நல்கா தாகிவிடின்"**

**(குறள் 17)**

என்று செல்வங்களுக்கு இணையாக மழையைக் குறித்துள்ளார்.

### மழையும் பசியும்

மழை பெய்யாமல் நின்று பொய்த்து விடுமானால் உலகம் பசித்துன்பதால் வாடும். பசியின் கொடுமை சமுதாயக் கொடுமையாக மாறிவிடும். வறுமையுடன் வாழ்வது மிகப்பெரிய கொடுந்துன்பம் என்று கூறி இதன் பெருமையை உணர்ந்தே கடவுள் நிலைக்கு அடுத்ததாகப் பசிப்பிணிப் போக்கும் வான் சிறப்பைப் போற்றுகின்றார் .

**"விண்இன்று பொய்ப்பின் விரிநீர்வியன் உலகத்து**
**உள் நின்று உடற்றும் பசி"**

**(குறள் 13)**

மேலும் வாழ்வின் ஆதாரமாக விளங்குவது மழையாம். இம்மழை, புல் முதலிய ஓரறிவு உயிர்களை தோன்றச் செய்கிறது.

### நீரும் உணவும்

உண்ணும் உணவாலும் பருகும் நீராலும் உயிரினங்கள் வாழ்கின்றன. உணவிற்கும் நீருக்கும் உயிரானது மழையே. உயிர்களும் பயிர்களும் வாழ மழையே துணை. உண்பவருக்குத் தக்க உணவுப் பொருட்களை விளைவித்துத் தருவதோடு மட்டுமின்றி பருகுவோர்க்குத் தானும் உணவாக இருப்பது வான்மழையே என்பதனை,

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை"**

என்கிறார்.

### மழையும் விழாவும்

ஊரும் நாடும் உவகையில் திகழும் போது தான் வீடெங்கும் விழாக்கள் பெருகும். தேரும் திருவிழாவும் சிறக்கும். தாளமும் தவமும் பெருகும். மழை இல்லையென்றால் வளம் குறைந்துபோம். வான் பொய்த்தால் மண்ணவர் விண்ணவரையும் மறப்பர். தேவர் சிறப்பு இழப்பார். இறையருளோடு மழை பெய்த போது வளம் பெறுகிறது. இறை வழிபாடும் பெருகின. விளைநிலங்கள் சிறந்து விளங்கின. விண் பொய்த்தால் மெய்யறங்களும் பொய்க்கும் என்பதனை,

**"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு"**

**(குறள் 18)**

**"தானம் தவமிரெண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்"**

**(குறள் 19)**

இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**மழையும் ஒழுக்கமும்**

உலகம் நிலை பெறுவதற்கு மட்டுமின்றி ஒழுக்கம் நிலை பெறுவதற்கும் மழை மிக இன்றியமையாதது. உலகம் நிலை பெறுவதற்கு இறையருள் வேண்டும். ஒழுக்கம் நிலை பெற மழையருள் வேண்டும்.

**"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையா தொழுக்கு"**

**(குறள்.20)**

உலகில் நீர் இடையறாதொழுகும் ஒழுக்கத்திற்கும் அற ஒழுக்கத்திற்கும் கூட மழை காரணமாகும். எவ்வகையால் உயர்ந்தவரும் நீரின்றி இவ்வுலகில் வாழ முடியாது. அதுபோல தண்ணீரின் இடையறாத ஓட்டமும் மழை பெய்யவில்லை எனில் நடைபெறா என்கிறார்.

**அரசாட்சி**

மழை பெய்யாவிடில் வேந்தன் அருள் இல்லாத நாடு போல் உலகம் துன்புறும். மழை இல்லாமல் உலகத்து உயிர்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்படுமோ, அரசன் குடிகளிடத்தில் இரக்கம் இல்லாதிருந்தால் அத்தகைய துன்பம் உண்டாகும் என்கிறார் வள்ளுவர். நாட்டில் ஆட்சியிலிருக்கும் அரசனுக்குக் குடிகளிடத்தும் சமுதாயத்தில் சான்றோருக்கும், பிற மக்களிடத்தும், குடும்பத்தில் தலைவனுக்குத் தலைவியிடத்தும் இருக்க வேண்டிய அருள், ஆதரவு, அன்பு ஆகியவற்றை மழையுடன் ஒப்பிடுகிறார் வள்ளுவர். உலகெல்லாம் வான் மழையை நோக்கி வாழும் குடிகளோ, அரசனின் செங்கோலை நோக்கியே வாழ்வர் இதனை,

**"வானோக்கி வாழும் உலகெல்லாம் மற்றவன்**
**கோனோக்கி வாழும் குடி"**

**(குறள் 542)**

மழையும் அறத்தின் வழியதே, அரசும் மக்களும் அறத்தொடு பொருந்த வாழும் இடத்தில் மழை உரிய காலத்தில் பொழிய நிலமும் வளம் தரும். முறை தவறிச் செய்யும் அரசனது நாட்டில் பருவ மழை குன்றிப் போகும் என்கிறார் வள்ளுவர்.

**மழையும் தெய்வக்கொழுநனும்**

குலமகளுக்குத் தெய்வம் கொழுநனே ஆவான். வேறு தெய்வத்தை தொழாது கணவனையே தெய்வமாக கற்புடைய மகளிர் கொண்டனர் தெய்வத் தொழாதவளாய்த் தன் கணவனை தெய்வமாக நினைத்து அவனை தொழுது காலையில் எழுகின்றவள் பெய் என்று சொல்ல மழை பெய்யும் என்கிறார்.

**"தெய்வம் தொழாஅள் கொழுந்தனும் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

**(குறள் 55)**

### மழையும் செல்வரும்

புகழுடைய செல்வந்தர் சிறிது காலம் வறுமைப்பட்டிருந்தால் மேகம் சிறிது காலம் வறண்டது போன்ற தன்மையுடையது,

**"சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறங்கூர்ந் தனையது உடைத்து"**

**(குறள் 1010)**

என்று வள்ளுவர் சான்று பகர்கின்றார்.

### மழையும் உழவும்

வேளாண்மைத் தொழில் செய்வதற்கு அடிப்படைத் தேவையாக அமைவது நீர். அந்நீரினை மழை பொழிவதன் மூலமே பெற முடியும். சமுதாயத்தில் வேளாண் தொழில் செய்யும் மக்கள் உரிய காலத்தில் மழைப் பொழிவு நிகழவில்லை என்றால் வானை நோக்கித் தனது பார்வையைச் செலுத்துவர். அத்தகைய இன்றியமையாத் தேவையுடன் இருக்கும் மழையினை,

**"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்".**

என்று கூறுவதன் மூலம் மழை உழவர்க்கு வருவாய் ஆகவும், இது குன்றினால் உழு தொழில் நடைபெறா என்கிறார். உழவுத் தொழிலுக்கு மழை தேவையான ஒன்றாக இருப்பதை அறியலாம்.

### மழையும் கொடுங்கோன்மையும்

நாட்டை ஆளும் அரசன் குடிமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவனாக இருக்க வேண்டும். மக்களுக்காக மன்னன் பொதுநலத்தோடு வாழ வேண்டுமே தவிர சுயநலத்தோடு வாழக்கூடாது. பெரும்பாலும் இன்று நாட்டை ஆள்பவர்கள் சுயநலமாகவும் கருணை இன்றியும் வாழ்வதைச் சமூகத்தில் காண முடிகிறது. இங்கு கருணை இல்லாது நடக்கும் கொடுங்கோன்மைக்கு மழை பின்புலமாகக் கூறியிருப்பதை,

**"துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்**
**அளியின்மை வாழும் உயிர்க்கு"**

மழை இல்லையானால் வரும் துன்பம் எத்தன்மைத்தாகின்றது நாட்டை ஆளும் மன்னன் என்றால் அவன் அருளுடையவனாக இருத்தல் வேண்டும்.

### முடிவுரை

மழை உலகத்திற்கு எந்த ஒரு சூழலில் பெய்யும் என்பதையும் எப்பொழுது பெய்யாமல் போகும் என்பதும் உணர்த்தப்படுகிறது. மன்னனின் செங்கோலுக்கு ஏற்ப நாட்டில் பருவமழையும், கற்புடை மகளிர் இருக்கின்ற இடத்தில் மழை தவறாது பொழியும் என்பதும் தெளிவாகிறது. மேலும் நல்லோர் செயலும் செல்வர்களின் செயலும் மழையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மழை உலகத்திற்கு ஆதாரமாய் உலகம் இயங்குவதற்கு இன்றியமையாத ஒன்று என்பது தெளிவாக உணர்த்தப் பட்டுள்ளது.

**பார்வை நூல்**

1. திருக்குறள் பரிமேலழகர் உரை.

# WATER AND SANITARY PRACTICES IN INDIA FOR SUSTAINABILITY

**Dr. S. Meenakshi**
*Assistant Professor (C), Department of History*
*Tamilnadu Open University, Chennai*

## Abstract

*Sustainability practices encompass a wide range of actions aimed at ensuring the long-term well-being of both present and future generations while preserving the environment, conserving resources, and promoting social equity. Promoting water conservation practices is essential to ensure the sustainable use of water resources. This includes measures such as water-efficient irrigation techniques, fixing leakages in water supply systems, promoting water-saving appliances, and creating awareness about the importance of water conservation among the public. Despite these efforts, challenges remain, including increasing water demand due to population growth, pollution of water bodies, inefficient water use practices, and climate change impacts. Therefore, ongoing efforts and innovative approaches are required to ensure the sustainable management and conservation of water resources in India. By integrating a few effective and efficient sustainability practices into policies, strategies, and everyday actions, individuals, communities, businesses, and governments can work together to achieve a more sustainable and resilient future for all.*

**Keywords:** *Sustainability, Conservation, Innovative Approach, Awareness, Community Participation*

## Introduction

India is the seventh largest country in the world. The country of India is a peninsula. It is surrounded by water on three sides and covered by mountains in the north. India is a region of abundant natural resources. Agriculture is the main occupation of the nation. Soon after gaining its independence in 1947, conservation of water resources became a crucial aspect of national development due to the country's rapidly growing population and agricultural needs. Though the Constitution of India does not explicitly mention water conservation, it contains several articles that empower the government to enact laws and policies related to water management and environmental conservation.

## Water Resources in India

India is blessed with a diverse range of water bodies, including rivers, lakes, reservoirs, wetlands, and coastal areas that contribute to India’s natural beauty, biodiversity, and socio-economic development.

Some of the major water bodies in India are mentioned below:

**Rivers**

- Ganges (Ganga): The Ganges is one of the most sacred rivers in India, originating in the Himalayas and flowing through several states before emptying into the Bay of Bengal. It is not only a lifeline for millions of people but also plays a crucial role in religious and cultural practices.
- Yamuna: The Yamuna is a major tributary of the Ganges, flowing through the northern plains of India. It passes through states such as Uttarakhand, Haryana, Delhi, and Uttar Pradesh.
- Brahmaputra: Originating in Tibet, the Brahmaputra flows through the northeastern states of India, including Arunachal Pradesh, Assam, and Meghalaya, before entering Bangladesh and eventually draining into the Bay of Bengal.
- Godavari: The Godavari is the second-longest river in India, originating in the Western Ghats and flowing through states such as Maharashtra, Telangana, Andhra Pradesh, and Odisha before draining into the Bay of Bengal.
- Krishna: The Krishna River flows through the states of Maharashtra, Karnataka, Telangana, and Andhra Pradesh before emptying into the Bay of Bengal. It is an important source of irrigation and hydropower generation.
- Narmada: The Narmada River originates in Madhya Pradesh and flows through Gujarat before emptying into the Arabian Sea. It is known for its scenic beauty and plays a crucial role in providing water for irrigation and drinking purposes.

**Lakes and Reservoirs**

- Wular Lake: Located in Jammu and Kashmir, Wular Lake is one of the largest freshwater lakes in India. It serves as a key habitat for migratory birds and supports local livelihoods.
- Dal Lake: Situated in Srinagar, Jammu and Kashmir, Dal Lake is renowned for its picturesque beauty and houseboats. It is an important tourist attraction and plays a vital role in the local economy.
- Chilika Lake: Located in Odisha, Chilika Lake is the largest brackish water lagoon in India. It is a biodiversity hotspot and supports a rich variety of flora and fauna, including migratory birds.
- Tehri Dam Reservoir: Tehri Dam, located in Uttarakhand, forms the reservoir on the Bhagirathi River. It is one of the tallest dams in the world and serves multiple purposes, including hydropower generation and irrigation.
- Hirakud Reservoir: Hirakud Dam, built across the Mahanadi River in Odisha, forms one of the largest artificial lakes in Asia. It provides irrigation water, flood control, and hydropower generation.

**Wetlands**

- Keoladeo National Park (Bharatpur): This wetland in Rajasthan is a UNESCO World Heritage Site and a haven for migratory birds, especially during the winter season.
- Sundarbans: The Sundarbans is a vast mangrove forest located in West Bengal and extends into Bangladesh. It is home to diverse flora and fauna, including the Bengal tiger, and is recognized as a UNESCO World Heritage Site.

**Coastal Areas**

India has a vast coastline spanning over 7,500 kilometers, with the Arabian Sea on the west, the Bay of Bengal on the east, and the Indian Ocean to the south. Coastal areas play a crucial role in supporting marine biodiversity, fisheries, trade, and tourism.

**Constitutional Laws and Provisions Pertaining to Water Conservation**

In India, water conservation is primarily addressed through various laws, policies, and constitutional provisions at both the central and state levels. Here are some constitutional articles that are relevant to water conservation in India:

- Article 48-A (Directive Principles of State Policy): This article states that the State shall endeavor to protect and improve the environment and safeguard the forests and wildlife of the country. While it does not specifically mention water conservation, it underscores the importance of environmental protection, which includes the conservation of water resources.
- Article 51-A (Fundamental Duties): Clause (g) of this article imposes a fundamental duty on every citizen to protect and improve the natural environment, including forests, lakes, rivers, and wildlife, and to have compassion for living creatures. This implies a responsibility for individuals to contribute to water conservation efforts.
- Article 252 (Power of Parliament to legislate for two or more States by consent and adoption of such legislation by any other State(s)): This article empowers the Parliament to legislate on matters of water conservation that affect two or more states with their consent.
- Article 253 (Legislation for giving effect to international agreements): This article allows Parliament to legislate on matters concerning water conservation to fulfill India's international obligations under agreements or treaties related to water resources.
- Entry 17 (Water) and Entry 56 (Regulation and development of inter-state rivers and river valleys) of List II (State List) and List I (Union List) of the Seventh Schedule: These entries delineate the distribution of legislative powers between the Union and the States concerning water resources.

While the States have the primary responsibility for water management within their territories, the Union government has authority over inter-state rivers and river valleys, which are crucial for water conservation and management.

**Initiatives for Promoting Water Conservation in India**

Some of the key initiatives and strategies related to water conservation in India:

- Efficient Water Use in Agriculture: Initiatives were launched to promote efficient water use in agriculture, such as the adoption of drip and sprinkler irrigation systems, crop diversification, and promoting water-efficient crops.
- Major Irrigation Projects: India embarked on large-scale irrigation projects such as the Bhakra-Nangal Project, Hirakud Dam, and the Indira Gandhi Canal. These projects aimed to enhance agricultural productivity by providing water for irrigation, particularly in regions prone to drought.
- Water Management Policies: The Indian government formulated policies and established institutions to manage water resources effectively. The Central Water Commission (CWC) was established in 1945 to develop and regulate water resources, and later the National Water Policy was formulated to provide a comprehensive framework for water management.
- Rainwater Harvesting: Traditional practices of rainwater harvesting were revived and promoted, especially in regions with erratic rainfall patterns. Techniques such as building check dams, rooftop rainwater harvesting, and construction of percolation tanks were encouraged to recharge groundwater and mitigate water scarcity. Encouraging rainwater harvesting practices helps recharge groundwater levels and reduce reliance on unsustainable groundwater extraction. Both traditional and modern rainwater harvesting techniques are being promoted through government programs and community initiatives.
- Water Pollution Control: Efforts were made to control pollution in water bodies through legislation such as the Water (Prevention and Control of Pollution) Act, 1974. Various measures were implemented to treat industrial effluents and sewage to prevent contamination of water sources.
- Inter-State Water Sharing Agreements: With the sharing of water resources among different states being a contentious issue, various inter-state water sharing agreements were negotiated and implemented to ensure equitable distribution of water.
- Awareness and Education: Awareness campaigns and educational programs

were conducted to sensitize people about the importance of water conservation and the need for sustainable water management practices.

- Water and sanitary practices in India are essential for achieving sustainability in terms of public health, environmental conservation, and socio-economic development. Here are some key aspects of water and sanitation practices in India for sustainability:
- Access to Clean Water: Ensuring universal access to safe and clean drinking water is crucial for public health. India has undertaken various initiatives to improve access to clean water, including the implementation of piped water supply schemes, construction of community water points, and installation of hand pumps in rural areas.
- Sanitation Infrastructure: Building adequate sanitation infrastructure, including toilets and sewage systems, is essential to prevent waterborne diseases and ensure environmental hygiene. The Swachh Bharat Mission launched in 2014 aimed to achieve universal sanitation coverage by constructing millions of toilets across the country and promoting behavior change towards open defecation-free communities.
- Wastewater Treatment: Proper treatment of wastewater is critical to prevent water pollution and protect water resources. Efforts are being made to improve wastewater treatment infrastructure, especially in urban areas, to reduce the discharge of untreated sewage into rivers and water bodies.
- Integrated Water Resource Management: Adopting an integrated approach to water resource management involves considering the entire water cycle and addressing competing demands for water from various sectors such as agriculture, industry, and domestic use. Policies and programs focusing on integrated water resource management help balance water allocation and ensure equitable access to water resources.
- Community Participation: Engaging communities in water and sanitation initiatives is crucial for their success and sustainability. Empowering local communities to participate in decision-making, planning, and implementation of water and sanitation projects fosters ownership and ensures the sustainability of infrastructure and practices. Additionally, raising awareness about the importance of hygiene, sanitation, and water conservation through education and behavior change campaigns is essential for promoting sustainable practices. Community-based approaches were promoted for water management and conservation. Programs like the 'Watershed

Development Projects' aimed to involve local communities in sustainable management of water resources by promoting soil and water conservation measures.

## Conclusion

The Indian Constitution provides a broad framework for water management and conservation, specific laws and policies are enacted by the central and state governments to address the diverse water challenges faced by the country. These may include acts related to water resources management, environmental protection, and watershed development, among others. Additionally, various institutions and agencies at both the central and state levels are responsible for implementing and enforcing these laws and policies to ensure effective water conservation efforts across the country. By focusing on these aspects of water and sanitation practices, India can work towards achieving sustainability in water management, public health, and environmental conservation. Continued investment, innovation, and collaboration among stakeholders are key to addressing the challenges and achieving sustainable development goals related to water and sanitation in India.

## References

1. https://legislative.gov.in/constitution-of-india/
2. https://www.ohchr.org/en/statements-and-speeches/2023/03/water-common-good-not-commodity-un-experts#:~:text=Water%20is%20a%20human%20right,managed%20as
3. "human_right_to_water_and_sanitation_media_brief.pdf"

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

### Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

### Hosted by

திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
**THIRUVALLUVAR UNIVERSITY**
(State University Accredited with "B+" Grade by NAAC)
Serkkadu, Vellore - 632 115, Tamil Nadu, India.



Impact Factor 4.650

Articles should be mailed to
bodhijournal@gmail.com

**BODHI**
**International Journal of Research in Humanities, Arts and Science**
www.bodhijournals.com

Powered & Published by
**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**
www.crrps.in